அடமானக் என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com

# தாய் வீடு

THAIVEEDU நவம்பர் 2009 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




படம்: டிஜி கருணா

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

MORTGAGE AND FINANCIAL SERVICE
Guaranteed Lowest rate
Considered as your mortgage is done
Please call @ 416-939-8789
Theven Kankesu
Mortgage intelligence

PMCI MORTGAGE CANADA
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை


For all your Real Estate needs...
First Prize
2009
Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**
• Buy • Sell • Lease
▪ Residential ▪ Commercial
▪ Business ▪ Investment
▪ Recreational ▪ Vacant Land
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416.858.4828
Justin William
Real Estate Broker
Direct: 416.803.7344
$ 269,000
Warden/Finch
• Spacious Town House
• 3 Bedrooms, 2 Washrooms
• Finished Walk-Out Basement
• Steps To TTC, Mall, Schools..
• High Demanded Area ...
$ 389,900
SOLD
Brimley/Steeles
• Well Kept 4-Bdrm Home
• Great Location
• Hrdwd Flr On Main Flr. Stairs
• Walk To Ttc,School,Park,Shopping Mall
• Separate Entrace Finished Bsmt ...
$ 619,888
Brimley/Steeles
• Spotless 4+3 Bedroom House
• Super Location
• Double Door Entrance
• Short Walk To Ttc (Steeles)
• Fin Basement With 3 Bedrooms
$ 545,000
Markham/Bur Oak
• Absolutely Gorgeous House
• 6 Months New Fieldgate Built
• Over $25K Upgrades
• 2700Sf Great Floor Plan
• Steps To Schools,Shopping,Go-Station
$ 429,900
Meadowvale/Ellesmere
• Well-Maintained 4 Bedroom Home
• Original Owners
• Updated Kitchen With Walkout To Deck
• Stainless Steel Kitchen Appliances
• Walk To School, Park & Ttc.
$ 349,900
Victoria / Bayside
• Desirable Whitby Shores Area
• Only 6 Years Old
• 5 Pc Ensuite With Jacuzi
• Lakefront Trails
• Steps To Go
$ 389,900
Salem/ Tauton
• 4 Bedroom Detached House
• 1 Year New. Tribute Built
• Premium Lot
• 9Ft Ceilings On Main Floor
• Close To Parks, Shopping & Transit
$ 29,900
Dry Clean Business For Sale
Middlefield/Finch
• Profitable Business For Sale
• Dryclean / Laundry
• Inside The GTA Square Mall
• Perfect For Family Business
• Don't Miss This Opportunity...
$ 329,000
Meadowvale/Sheppard
• Immaculate House
• 4 Bedrooms & 4 Washrooms
• Best For Large Families
• Laminated Flooring On Main Floor
• Close To Highway, School...
$ 149,900
Restaurant For Sale
Middlefield/Finch
• Excellent Opportunity To Own A Business
• Well Established Business
• One And Only Restaurant In This Mall
• Good Weekly Sale
• Inside The GTA Square Mall
$ 379,900
Williams Pk/Chinguacousy
• Gorgeous. Detached House
• Over 200 Sq Ft
• Loaded With Quality Features
• Basement With Separate Entrance.
• Don't Miss This..
$ 365,000
Westney/Taunton
• Only 3 Yrs Old
• Great Gulf Home 2280 Sq. Ft
• 4 Big Bdrms, 3 Baths
• Family Rm W Gas Fp
• Close To Schools, Park, 401 & 407.
$ 539,900
Markham/Steeles
• 4 Bedroom Detached House
• Less Than 5 years Old
• More than 3000 Sq. Ft
• Back Onto Ravine
• Walk-Out Basement...
$ 629,900
Riverwalk/9th Line
• Beautiful 4 Bdrm Family Home
• The High Demand Box/Grove Community
• Approx 3000 Sq Ft.
• Over 60K In Upgrades
• Close To Shopping Malls And Amenities.
$ 3,295,000
North Of Bloor
• Business With Property
• Gas Station W/Convenience Store, Plaza
• Excellent Opportunity For Entrepreneur W/Vision.
• Worry Free Income
$ 159,900
Dixie/Bloor
• 3 Bedroom Condominium
• Prime Location,
• One Bus To Subway,
• Bright And Spacious Unit,
• Walk To Public Transit, Schools And Shopping.
HOMELIFE
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969
This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## தமிழகமும் அகதி முகாம்களும்

இலங்கை அரசினால் சட்ட விரோதமாக அடைக்கப்பட்டு சித்திரவதைக்கும், பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலத்தைப் பற்றி நாம் மட்டுமல்ல - உலகமே அறிந்துள்ளது.

ஆனால், சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக இந்தியாவிற்கு - தமிழ் நாட்டுக்கு - அகதிகளாக சென்ற, சென்றுகொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழர்கள் பலர். அவர்களும் இதே முறையில் இந்திய அரசின் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்ற உண்மையை எவரும் கருத்தில் கொள்வதில்லை.

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட நூற்றுக்குமேற்பட்ட அகதி முகாம்களுக்குள் இவ்வாறான இலங்கைத் தமிழ் அகதிகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள்.

இவற்றுள் சில முகாம்கள் மிகமிக மோசமான முறையில் அமைந்திருக்கின்றன.

இவர்கள் முகாம்களை விட்டு வெளியேற முடியாது, இந்த முகாம்களுக்கு எந்த பத்திரிகையாளர்களோ, மனித உரிமையாளர்களோ, நண்பர்களோ, உறவினர்களோ செல்ல முடியாது. உண்மையில், அங்கு எந்த வகையில் அவர்கள் இருக்கின்றார்கள், எவ்வாறான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பனபோன்ற விடயங்கள் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்படாமலேயே எம்மவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இருபது வருடங்கள் கடந்தும் இதுவே நிலைமை.

இவர்களுக்கு போதுமான உணவு இல்லை. பள்ளிக்கூடம் இல்லை. தண்ணீர் வசதி இல்லை. தொழில் வாய்ப்பு இல்லை. கழிப்பிடம் இல்லை.

இவர்களுக்கு இடப்பட்டுள்ள சட்டத்தை மீறி, இந்த அகதிகள் முகாமுக்குள் புகுந்து உறவினரை சந்தித்தால் "க்யூ" பிரான்ச் உடனடியாக அதிரடி நடவடிக்கை எடுக்கின்றது. சந்திக்கப்பட்டவர்களில் பலர் விசாரணைக்கும், சித்திரவதைக்கும் ஆளாகின்றார்கள்.

இவர்களுக்கு தேவையான பொருளாதாரம் இல்லை. இதனால் சில இடங்களில் பெண்கள் தமது உடலை விற்கின்ற அவல நிலைமை ஏற்பட்டு பல வருடங்களாகிவிட்டது.

நாலு வயதில், இந்த அகதிகள் முகாமில் புகுந்த குழந்தையொன்று, இன்று எந்த விதமான பள்ளிப்படிப்பும் இல்லாமல் கல்யாணம் ஆகி குழந்தைகளை பெற்று எடுக்கின்ற நிலை.

இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக தமிழகத்தில் இருந்து குரல் கொடுக்கின்ற அரசியல் தலைவர்களும் "இந்தியாவே தஞ்சம்" என்று போன இந்த அநாதரவான தமிழர் பற்றி ஏன் எந்த விதமான கரிசனையும் கொள்ளவில்லை?

ஏன் எம்மவர் ஊடகங்கள் மற்றும் தமிழக ஊடகங்கள் இவர்களைப்பற்றி சற்றேனும் சிந்தித்துப் பார்ப்பது இல்லை?

உள்ளும் புறமுமாக பலவகையிலும் துன்பங்களுடன் வாழும் நம் இலங்கை "அகதி"த் தமிழர் இவையெல்லாவற்றையும் அனுசரித்துத்தான் ஆகவேண்டும் என எதிர்பார்க்கிறார்களா?

III

அட்டைப்படத்தில் (மாதிரிக்காக)
நேருஜி ஆர்த்திகா இணையர்கள்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

ஓவியம் : K. கிருஸ்ணராஜா (இங்கிலாந்து), மு.சு.சிவகுமாரன் (ஜேர்மனி)

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0


Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

உடலின் வெப்பம் தலை வழியாகத்தான் அதிகம் இழக்கப்படுகின்றது.

# குளிரில் விளையாடலாம்; குளிரோடு...?

- கந்தசாமி கங்காதரன்



05

கோடை காலத்தில் அணிந்த பருத்தி நூல் (Cotton) காலுறைகளையே வாட்டிவதைக்கும் குளிரிலும் அணிகின்றோம். இந்தப் பருத்தி நூற் காலுறைகள் ஈரலிப்பை உள்வாங்கிவைத்துக்-கொள்ளும். வெப்பத்தை வைத்துக்கொள்ளாது. அதிகம் ஈரமாகும்போது பாதத்திற்கும் காலுறைக்கும் இடையே ஒரு மெல்லிய நீர்த்திரையைப் போட்டுவிடும்.



### ஊமத்தை (Datura - Moon Flower)

செல்லையா சந்திரசேகரி


குப்பைக்குள்ளும் புதரிலும் முளைக்கும் ஊமத்தை மேலைநாடுகளில் வீட்டுப் பூந்தோட்டத்தில் காணப்படுவது அதிசயமாக இருக்கின்றது. 14



### வேகமாகப் பரவி வரும் H1N1 வைரஸ்

- சிவா சுப்ரா

இதுவரை ஒன்டோரியோவில் 28பேரும், கியூபெக்கில் 27, பேருமாகக் கனடாவில் 86 பேர் அளவில் இறந்துள்ளனர். 20



### சத்தமின்றி வெளிவந்த விண்டோ 7

- ஜிப்றி உதுமாலெப்பை

நல்ல தெளிவான விம்பங்களைத் தரக்கூடிய video Card drivers இணைக்கப்பட்டுள்ளதால் கண்ணிற்கு குளிர்மையான நிறங்களைத் தரக்கூடியது. 31



### வீடு புதுப்பித்தலுக்கான வரிச்சலுகை

- சுகுமாரன் சின்னையா

வீட்டு உடைமை மாற்றும் மற்றும் வீடுகள் புதுப்பித்தலுக்கான கனடிய அரசின் வரிச்சலுகை 01-02-2010ல் காலாவதியாகவுள்ளது. 42

தென்னாசியத் தடுப்பு வலய நாடுகளின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக் குறியுடன் 04
அ. கணபதிப்பிள்ளை

கோடைகால, விடுமுறைக் கால வதிவிடங்கள் 07
மகேன் சிங்கராஜா

மகப்பேறு 09
கந்தையா செந்தில்நாதன்

"வீடு" வினாவும் விடையும் 11
கருணா கோபாலபிள்ளை

விலையும் பிழையும் 13
சிவாஜினி பாலராஜன்

இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு 19
வேலா சுப்ரமணியம்

வீடு விற்பதற்கான காரணங்கள் 22
S.K. பாலேஸ்

புதின்ம முன்வயது... 24
சிவவதனி பிரபாகரன்

ஆரைக்கீரை, புதினாக்கீரை, முளைக்கீரை 27
உதயணன்

மருத்துவக் கேள்வி பதில் 28
இராஜசேகர் ஆத்தியப்பன்

அந்தரத்தில் தூங்கும் ஒரு தமிழனின் அமெரிக்கக் கனவு 33
ராகுலன்

வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு எடுக்கும் காலம் 37
வி. சிறி

உரிமை காப்புறுதி (Title Insurance) 41
சிவ பஞ்சலிங்கம்

வெப்பமான விடுமுறைச் சொத்து 45
மாறன் செல்லையா

காப்புறுதியில் குழப்பமா? 46
சக்திவேல்

மாகோசா கிரெடிட் யூனியன் 48
கல்யாணி நாதன்

சிமலாக்றா இண்டிக்கா (simulacra indica) 53
மாமூலன்

13ம் பக்கம் பார்க்க...

# தென்னாசியத் தடுப்பு வலய நாடுகளின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக்குறியுடன்

- அ. கணபதிப்பிள்ளை -

தென்னாசியத் தடுப்பு வலய நாடுகளின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக் குறியுடன் தொடர்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் மிகப் பெரிய வல்லரசாகத் தன்னை உருவாக்க முயன்று கொண்டிருக்கும் இந்தியா தனக்கும் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளுக்குமிடையில் சுமுகமான உறவினைப் பேணுவதன்மூலமே தனது எண்ணக் கருத்தைச் செயலாற்றிக் காட்டமுடியும் என்ற நம்பிக்கையில் இன்னமும் தளர்ந்துவிடவில்லை.

தென்னாசியாவை ஏனைய நாடுகளிலிருந்து பிரிக்கும் எல்லை நாடுகளான சிறிய நாடுகளின் தலைவிதியினை நிர்ணயிக்கின்ற உரிமையினை மிகப் பெரிய வல்லரசுகள் எடுத்துக்கொள்ளத் துடிக்கின்றன. சிறிய எல்லை நாடுகள் தடுப்பு வலயமாக இருப்பதுடன், இந்திய வல்லரசு மேலாண்மைத் தன்மைக்கு உதவிபுரிவதாகவும் இருக்கவேண்டும் என்பது இந்தியாவின் குறிக்கோளாக இருக்கிறது.

இந்தியாவின் இத்தகைய குறிக்கோளுக்கு எதிராக சீனா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எதிர் நடவடிக்கைகள் எடுப்பதிலும் அவற்றினூடாக இந்தியாவின் முதன்மைத் தன்மையினைத் தடுத்து நிறுத்தவும் இவ்வல்லரசுகள் முனைந்து நிற்கின்றன.

இந்திய, இரஷ்யக் கூட்டின் வளர்ச்சியானது குளிர் யுத்தகாலத்திலிருந்து முக்கியத்துவம் பெற்றதாக இருந்ததுடன், இந்தியாவின் தென்னாசிய வல்லரசு மேலாண்மைக்கு உயிர் கொடுப்பதற்கான நீண்டகால நண்பன் என்ற நிலைப்பாட்டினையும் பாதுகாத்து வந்திருக்கிறது.

தென்னாசிய எல்லை நாடான ஆப்கானிஸ்தானில் இந்திய நலனைப் பேணச்செய்யும் முயற்சியில் சோவியத் குடியரசு படையெடுத்தமையும், அதனை முறியடிப்பதற்காக அமெரிக்க, சீன, பாகிஸ்தானிய கூட்டு முனைப்பாகச் செயற்பட்டிருந்தமையினையும் வரலாறு தெளிவுபடுத்துகிறது. ஆப்கானிஸ்தானைப் பலவீனப்படுத்தி, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன்மூலம் பாகிஸ்தானின் வளர்ச்சியினையும் கட்டுப்படுத்த முடியும் என்பது இந்திய மேலாண்மைத் தத்துவத்தின் அடிப்படை இலக்காகவே இருந்தது.

சோவியத் இரஷ்யாவின் பிளவும், அமெரிக்கா ஏனைய தென்னாசிய நாடுகளான பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய வற்றுடன் கொண்டிருந்த தொடர்பும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் அமெரிக்க ஆதரவுச் சாயல் வெளிவரக் காரணமாயிற்று. உலகப் பொருளாதார ஒழுங்கில் இந்தியாவின் வளர்ச்சியால் அமெரிக்கா தனது வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவின் நட்பு மிக முக்கியம் என்றதனை உணர்ந்திருந்தாலும், வளரும் புதிய பொருளாதார உலகில் சீனாவின் வளர்ச்சியும் அதன் புதிய காலனித்துவ உத்திகளும் சீனாவைச் சுற்றியுள்ள நாடுகளில் திணிக்கப் படுவதனால் ஆசிய அரசியல் பொருளாதாரச் சமநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்திவிடும் என்பதில் அமெரிக்கா தனது கரிசனையினைக் காட்டியிருந்தது. அதற்குப் பொருத்தமானதும் நம்பிக்கையானதுமான பிராந்திய வல்லரசின் துணை தேவைப்பட்டது. பாகிஸ்தான் சீனாவின் நண்பனாக இருப்பதுடன் சீனாவின் கைப் பொம்மையாக இருப்பதும் ஒரு தடங்கலாக இருந்தது. ஆமெரிக்கா தனது குளிர்யுத்த கால நண்பனை கைவிடவேண்டியேற்பட்டது.

இதனை கருத்திலெடுத்த பாகிஸ்தான் தனது பாதுகாப்புகாக சீனாவிடமிருந்து அணுசக்தித் தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொண்டதாக ஆய்வு ஊகங்கள் தெளிவு படுத்துகின்றன.

தென்னாசியத் தடுப்பு வலய நாடுகளில் சீனாவின் ஊடுருவற் செயற்பாடுகள் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்திருக்கின்றன. இந்த ஆண்டின் தொடக்கப் பகுதியிலிருந்து இலங்கையின் அரசியல் பொருளாதாரச் செயற்பாடுகளில் தன்னை இணைத்துக்கொண்ட சீனா புதிதாக ஒரு அரசு தோற்றம் பெறுவதனையும் அது இலங்கையின் பிரிவுக்குக் காரணமாக இருக்கும் என்பதனையும் மிகுந்த கரிசனையுடன் பார்த்தது. ஆயுத உதவியும் பண உதவியும் செய்து இலங்கை அரசின் விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றிக்குத் துணை நின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இலங்கையின் அரசியலில் குறிப்பிடத்தக்கதொரு இடத்தைப் பெற்றுக்கொள்ளவும் சீனா முயன்றுகொண்டிருக்கிறது.

> “இந்தியாவின் வடக்கு எல்லை வரையறை செய்யப்பட்டதில் திருப்திப்படாத சீனாவும் இந்தியாவும், தடுப்பு வலய நாடுகளில் ஆதிக்கம்செலுத்த முற்படுகின்ற நிலைமைகள் அந்த நாடுகளிலும் நல்லுறவுக்குப் பங்கம் ஏற்படுத்துவதுடன், உள்நாட்டு இயக்கங்களினூடாக ஏற்படுத்தப்படும் குழப்பங்களுக்கு வழிசெய்து கொடுப்பதாகவும் அமைந்திருக்கிறது.”

தென்னாசியாவின் வடக்கிலிருக்கும் தடுப்புவலய நாடுகளில் காஷ்மீர் மிக முக்கியமானது. நீண்ட வரலாற்றுடனும், முற்றுப்பெறாத சிக்கலுடனும் இருக்கும் காஷ்மீரில் சீனாவின் உதவிகள் கொண்டுவரப்படுவது இந்தியாவின் மேலாண்மையினைக் குறைத்துவிடக்கூடியதொரு செயற்பாடாகக் கொள்ளப்படுவதால், அதில் இந்தியாவின் கரிசனை மேலோங்கியிருக்கிறது. காஸ்மீரில் கரிசனை கொண்ட மூன்று அணிகளில், சீனாவும் காஸ்மீரின் ஒருபகுதியைத் தன்னுள் இணைத்துக்கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முறுகல்நிலை தொடர்ந்தும் வருவதற்குச் சீனாவின் பங்கு அளப்பரியது என்ற கருத்து மேலோங்கியிருக்கும் இந்த நேரத்தில், பாகிஸ்தான் பகுதிக் காஷ்மீரில் சீனாவின் உதவித் திட்டங்கள்பற்றிய சர்ச்சைகள் வலுவடைந்து கொண்டிருக்கின்றன.

இந்தியா எல்லை மாகாணமான அருணாசலப் பிரதேசம் சீனாவுடன் 4,000 கி.மீ. எல்லைப் பகுதியினைக் கொண்டிருக்கிறது. 1950களின் கடைசியில் இந்திய சீன எல்லைத்தகராறில் சீனாவின் முறுகல் நிலை வலுவடைந்து, 1962இல் இந்திய சீனப் போராக பரிணமித்தது. 38,000 சதுரக் கி.மீ. அளவை இப்போரில் இந்தியா இழந்தது. குளிர் யுத்தகாலத்தில் எந்த வல்லரசுகளின் உதவிகளினால் யுத்தம் தொடங்கப்படுகிறதோ அவற்றின் மூலமே யுத்தம் முடிவுக்கும் கொண்டுவரப்படுவது வழக்கமாக இருந்தது. இதன்மூலம் 1962 ஒக்டோபர், நவம்பர் காலப்பகுதியில் போர்நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆயினும் இந்தியாமீது சீனா கொண்டிருந்த எல்லைபற்றிய சர்ச்சையில் தொடர்ந்தும் சீனாவுக்கு திருப்தி ஏற்பட்டதற்கான சாத்தியமிருக்கவில்லை.

அண்மையில், அருணாசலப் பகுதியில் ஊடுருவியிருந்த சீனப் படைகள் அங்குள்ள மக்களைத் துன்புறுத்துவதாக வெளிவந்த செய்திகளினால் இந்தியா மீண்டும் படைக்குவிப்பில் ஈடுபட்டிருந்தது. மொத்த மலைப்பிரதேசத்தில் 90,000 சதுர கி.மீ.பரப்புக்கு உரிமை கோரும் சீனா ஆரம்பத்தில் வரையப்பட்ட 550 மைல் நீழமான மக்மாகன் எல்லை வரைவினை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. சூரிய உதயப் பிரதேசமாகவும், உதயத்தை உருவாக்கும் மலையாகவும் கொள்ளப்படும் அலுணாசலப் பிரதேசம் மியன்மாரிலிருந்து இந்தியாவைப் பிரிக்கும் பகுதியாகவும் இருக்கிறது. 2ம் உலக யுத்தகாலத்தில் சீனாவிலிருந்து பர்மாவுக்குச் செல்லும் பெருந்தெருவின் கிழக்குப் பகுதியில் நிலை கொண்டிருக்கிறது. வடக்காக திபெத் நாடு இருப்பதும், அருணாசலப் பிரதேசத்துக்கும் தீபெத்துக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதும், அருணாசலப் பிரதேசத்தின் மீது சீனாவின் உரிமைகோருவது வலுடைந்திருந்தது.

தீபெத்தின் ஆறாவது தலைலாமா இங்கு பிறந்தார் என்பதும், சீனா தீபெத்தில் தனது உரிமையினை நிலைநாட்டியிருப்பதும் தீபெத்திலிருந்து பெரும்பாலான அகதிகள் அருணாசலப் பிரதேசத்தினுள் தஞ்சம்கோரியிருப்பதும் சீனாவின் நிலக் கோரிக்கைக்கு வலுச் சேர்த்திருக்கிறது. இவைபோன்ற பல காரணங்களுக்காகவே மக்மகான் எல்லை உடன்பாட்டை ஆரம்பத்திலிருந்து சீனா எதிர்த்திருந்தது,

சிம்லா ஒப்பந்தத்தின் மூலம் 1907இல் வரையப்பட்ட இந்த எல்லைக் கோடானது முதலில் இந்தியாவால் எதிர்க்கப்பட்டாலும் இரஷ்ய பிரித்தானிய கூட்டு அதனை ஏற்கவைத்திருந்தது. அத்துடன் 1959இல் தீபெத்தின் அரசு சீனாவால் பறிக்கப்பட்டதும் சீனா தீபெத்தின் முழுக் கட்டுப்பாட்டினையும் தன்னுள் கொண்டு வந்திருந்தது. இப்போதைய தலைலாமாவின் இந்திய வருகையும், தீபெத்தின் நாடுகடந்த அரசாங்கத்துக்கு இந்தியா அனுமதி வழங்கியமையும் இந்திய சீன முறுகல் நிலையினை வலுப்படுத்தியது எனலாம்.

திபெத்தின் தென் எல்லையான மக்மாகன் எல்லைக் கோட்டினை தென் எல்லையாக ஏற்றுக்கொண்டிருந்த தீபெத் அரசு அதிகாரமற்றிருக்கும் நிலையில் சீனாவின் கோரிக்கையினைக் கேள்வி கேட்க ஒருவருமிருக்கவில்லை.

அண்மையில் தீபெத்துக்குத் தனியாட்சிக் கோரிக்கை வலுப்பெறவும், அதனை சீனா எதிர்ப்பதுடன் அருணாசலப் பிரதேசத்தில் உரிமை கோருவதனை அருணாசலப் பிரதேச அரசு வன்மையாகக் கண்டித்திருக்கிறது. மொழியால் இந்தியாவுடன் இணைந்திருக்கும் மக்கள், தலைலாமாவுக்குக் கொடுக்கும் ஆதரவும், தலைலாமா இவ்வருடம் நவம்பரில் மேற்கொள்ளும் அருணாசலப் பிரதேசப் பயணமும் சீனாவின் கோபத்தைக் கூட்டியிருந்தது. தீபெத்தின் தனியாட்சிக் கோரிக்கைக்கு இந்தியா கொடுக்கும் ஆதரவுக்கு முறியடிப்பாக காஷ்மீர் தனி நாடாக்கப்பட வேண்டுமென்ற சீனாவின் கருத்தானது வெறுமனே விதண்டாவாதத்துக்காக வெளியிட்டதாகத் தெரியவில்லை. காரக்கோரம் நெடுஞ்சாலைக்கும் காஷ்மீர் நீர் மின் திட்டங்களுக்கும் சீனா அளிக்கும் உதவி பாகிஸ்தானை மீண்டும் பலப்படுத்தி, கிழக்கிலிருந்த சீன இந்திய முறுகலை மேற்கேயும் இந்திய - பாகிஸ்தான் முறுகலாகத் தோற்றுவிக்க எடுக்கப்படும் நடவடிக்கையாகவே எண்ணத் தோன்றுகிறது.

அருணாசலப் பிரதேசத்தின் மேற்காக இருக்கும் நாடு பூட்டான். இது நேபாளம் போன்று இரண்டு பெரிய வல்லரசுகளின் எல்லைப் பிரதேசம். பூட்டானின் சுதந்திரம் தீபெத்தினாலும் இந்தியாவாலும் புவியியல் ரீதியில் உரிமை கொண்டாடப்படுவதாக இருந்துள்ளது. பௌத்த மதப் பின்னணியில் தீபெத்துடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்கும் பூட்டான், தீபெத் அகதிகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மிருக்கிறது. ஜுலை 1958இல் சீனா 300சதுர மைல் பரப்பளவுக்குப் பூட்டானிடம் உரிமை கோரியிருந்தது. இதனை இந்தியா எதிர்த்திருந்தது,

இந்தியாவின் வடக்கு எல்லை வரையறை செய்யப்பட்டதில் திருப்திப்படாத சீனாவும் இந்தியாவும், தடுப்பு வலய நாடுகளில் ஆதிக்கம் செலுத்த முற்படுகின்ற நிலைமைகள் அந்த நாடுகளிலும் நல்லுறவுக்குப் பங்கம் ஏற்படுத்துவதற்கு உதவிசெய்வதுடன், உள்நாட்டு இயக்கங்களினூடாக ஏற்படுத்தப்படும் குழப்பங்களுக்கு வழிசெய்துகொடுப்பதாகவும் அமைந்திருக்கிறது.

1960களில் பூட்டானின் வீதிப் போக்குவரத்துக்கு இந்தியா உதவ முயற்சித்தமை சீனாவின் கோபத்தினைக் கூட்டியிருந்தது. இறுதியாக சீனா - பூட்டான் எல்லை இணக்கப்பாடு 1966இல் செய்யப்பட்டதன் பின்பாகவும் இப் பிரச்சினைக்கு முடிவு கிடைத்ததாக எண்ணப்படவில்லை.

தென்னாசியாவின் எல்லைப் பகுதிகள் சுற்றியிருக்கும் வல்லரசுகளின் தடுப்பு வலயங்களாக இருப்பினும் அந்த நாடுகளின் அரசியலில் ஏற்படும் தாக்கங்கள் இந்திய பாகிஸ்தான் நல்லுறவினைக் குழப்புவதாக இருப்பதுடன், தடுப்பு வலய நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்தி, ஆட்சி மாற்றத்துக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் கிளர்ச்சிகளுக்கும் வழியேற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

எல்லையில் இருக்கும் தடுப்பு வலய நாடுகளில் நேசத்தன்மையினை ஏற்படுத்துவதில் இரண்டு பக்க நாடுகளும் தமது கரிசனையினைச் செலுத்துவதுடன், ஒன்று மற்றைய நாட்டுக்கு உதவி வழங்குவதாகவும் குழப்பத்தினை ஏற்படுத்த முனைவதாகவும் குற்றச்சாட்டுக்களைத் தொடுத்துக் கொண்டிருக்கின்றன. அண்மையில் இந்தியா தலிபான்களுக்கு உதவுவதன் மூலம் பாகிஸ்தானில் குழப்பத்தினை ஏற்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குப் பதிலாகத் தொடர்ந்தும் முறுகல் நிலையில் இந்தத் தடுப்பு வலயங்களை வைத்திருப்பது அரசியல் லாபம் தேடும் வல்லரசுகளின் சிறந்த உத்தியாகக் கொள்ளப்படுகிறது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

# குளிரில் விளையாடலாம்; குளிரோடு...?



கந்தசாமி கங்காதரன்

அவ்வப்போது மழை பொழிந்தாலும் பன்னிரண்டு மாதங்களும் கோடைகாலமாக இருக்கும் காலநிலைதான் எம் தாயகத்தில். பருவகால மாறுதல்களுக்கேற்ப ஆடைகளை மாற்றிக்கொண்டிருக்கும் தேவையிருந்திருக்கவில்லை. மலையகத்திற்கூட குளிர்காலமென்பது சுவெற்றர் அணிந்தாலே தாக்குப்பிடிக்கக்கூடியதாயிருக்கும். கொளுத்தும் வெயிலிலும் ஜாக்கெட் (Jacket) அணிபவர்கள் தமிழ்ப்படக் கதாநாயகர்கள் மட்டுமே.

இப்போது நாமிருப்பது வட துருவத்துக்கருகே.

வசந்தமாய் மரஞ்செடிகளில் இலைகளும் பூக்களும் தளிர்த்து அரும்பிக் காய்த்து முற்றுங்காலத்திற் கோடை வெயில் சுட்டெரிக்கும். முற்றியவை கனியுங்காலத்தில் மரங்களில் இலையுதிருங் காலத்தைத் தொடர்வது வானத்திலிருந்து பனியுதிருங்காலம்.

இந்தப் பனியுதிரும்காலந்தான் எங்கள் அன்றாட வாழ்வைப் பலவழிகளிலும் தீர்மானிக்கின்றது. காலையில் எழுந்து பனி அகற்றுவதிலிருந்து நிறையச் சம்பளமில்லா Overtime கிடைக்கும் காலமிது.

மாறும் காலநிலையென்பது நாம் அணியும் ஆடைகளையும் அடியோடு மாற்றிவிடுகின்றது. எல்லோரும் ஓடியோடி குளிர்கால ஆடைகளையும் காலணிகளையும் வாங்குகின்றோம். ஆனால், அவற்றை வாங்கும் விடயத்தில் எவ்வளவு தூரம் கவனம் செலுத்துகின்றோம்...?

குளிர்கால ஆடைகள் என்றால் எல்லோருமே முதலில் நினைப்பது Jacket தான். கனடியக் குளிர்காலமென்பது பொல்லாதது. அடிக்கடி பனிப்புயல் வீசும் குளிர்காலம். பனிப்புயல் வீசாத காலத்திலும் ஓரளவு காற்று வீசும். குளிரைக் குளிராக உணரச் செய்வது வீசும் காற்றுத்தான்.

Jacket வாங்கும்போது மெலிதாக, தடிப்பாக என்று பார்ப்பது மட்டும் போதாது. காற்று உட்புகாத (Wind Breaker) வகையாக இருப்பது மிக அவசியம். வெளிப்புறம் நீர் உட்புகாததாக, ஊறாததாக இருப்பது நலம். அதிக நேரம் வெளியே நிற்கவேண்டிய தேவையிருப்போர் இடுப்போடு முடிந்துவிடும் Jacketகளைத் தவிர்ப்பது மிக நன்று. ஒரு கொஞ்சம் நீளமாக இடுப்புக்கும் கொஞ்சம் கீழே இறங்கி நிற்கும் வகையிலானவை முழங்காலுக்கும் இடுப்புக்கும் இடையே நிற்கக்கூடிய நீளத்தைக் கொண்டவையாக வாங்குவது நல்லது.

ஒவ்வொரு தடவையும் சுத்தம் செய்ய 35-70 டொலர் செலவழிக்கத் தயாராயிருந்தால் நல்ல தோலால் ஆன Leather Jacket வாங்கலாம். என்ன... மற்றைய Jacketகளிலும் கொஞ்சம் பாரம் அதிகம் அவ்வளவுதான்.

சில நாடுகளில் Leather Jacket அணிந்துகொண்டு போனால் எந்தக் குளிராயிருப்பினும் ‘உருவிக்கொண்டு’ போய்விடுவார்கள். அந்த ஆபத்து கனடாவில் இல்லையென்றே தோன்றுகின்றது.



என்னத்தை வாங்கியென்ன? உள்ளே அணிந்திருக்கும் T. Shirt அல்லது சுவெற்றரின் கலரைக் காட்ட எண்ணி Jacketஇன் Zipஐ இழுத்து மூடாமற் போனால்... அடுத்த குளிர் காலத்தின் போது Jacketஐ மூடிக்கொண்டு போவதா மூடாமற் போவதாவென்று யோசிக்க நீங்கள் திடகாத்திரமாக இருக்காமலும் போகலாம்.

யாரோடும் எதற்காகவும் எப்போதும் விளையாடலாம். ஆனால், எதற்காகவும் எப்போதும் யாருமே குளிரோடு விளையாடக்கூடாது. குளிரோடு விளையாட முனைந்தால் Knock out தான்.

அடுத்து, ஒரு மெல்லிய ஷேர்ட், ரீ-ஷேட்டுக்கு மேலே Jacket அணிபவர்களைப் பார்த்திருக்கின்றோம். ஒரு ரீ-ஷேர்ட், அதற்கு மேலே இன்னொரு ரீ-ஷேர்ட் அதற்கு மேலே நல்ல தடித்த Sweater என ஒழுங்காக அணிபவர்களையும் பார்க்கின்றோம்.

Sweaterகள் எமது உடல் வெப்பத்தைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. Acrytic Material Sweater மலிவானது. பெண்கள் Cashmereஐ விரும்புவார்கள். மிக மென்மையானது. பார்வைக்கும் அழகானது. விலை அதிகமானது ஆனால், சுத்தம் செய்ய கொஞ்சம் கடினமானது.

மிக மலிவான ஒரு வகை உண்டு. Fleece எனப்படும் தனிவகை. நிறை மிகக் குறைந்தது. மெத்தென்றிருக்கும்.

கண்டபடி சலவை இயந்திரத்திலும் போட்டுத் துவைக்கலாம். உடனேயே காய்ந்துவிடும். மின் அழுத்தி (Iron) தேவையில்லை. Fleece உடலை நல்ல கதகதப்பாக வைத்திருக்கும். உடலுக்கு இதமாகவும் இருக்கும்.

Fleeceஇல் கையுறை, தொப்பி, Muffler, நீளக்காற்கட்டை போன்றவையும் கிடைக்கின்றன. குழந்தைகளுக்கு அதிகம் Fleece ஆடைகளைப் பயன்படுத்துவதில் கவனம் தேவை. தகுந்தவர்களின் ஆலோசனையும் உதவியாயிருக்கும். ஒரு குறை - மிக எளிதில் தீப்பற்றக்கூடியது.

குளிர்காலமென்றதும் தடிப்பாயிருக்கின்ற ஒரே காரணத்துக்காகப் பலரும் Denimஐ நாடுவர். Denim முற்றுமுழு பருத்திநூலால் ஆனது. ஈரத்தை உள்வாங்கும். அத்தோடு டெனிம் காற்று உட்புகக்கூடியது. கடும் காற்று வீசும் போது Denim அணிந்து கொண்டு ஒரு கொஞ்சத்தூரம் பொடிநடையாய் நடந்து பாருங்கள். எல்லாப் பக்கத்தாலும் காற்று உள் நுழைந்து பாடாய்ப் படுத்தும். Denimஇல் உள்ளே காற்றுப்புகாத Lining வைத்துத் தைக்கப்பட்டவை உள்ளன. சாதாரண Denim காற்சட்டைகளிலும் கொஞ்சம் விலை அதிகம்.

பொதுவாக ஈரலிப்பு ஆகாத, காற்றுப்புகாத துணியால் ஆன காற்சட்டைகள் உசிதமானவை.

என்னதான் நல்ல Jacket அணிந்தாலும் கடும் காற்று வீசும்போது கழுத்து வழியாகக் காற்று உள்ளேபோய் நடுங்கவைக்கும். நல்ல Muffler அவசியம்.

குளிர்காலத்தில் உச்சந்தலை வழியாக எமது உடலின் வெப்பம் அதிகம் இழக்கப்படுகின்றது. வெளியே செல்லும் போது நல்ல குளிர்காலத்திற்கேற்ற தொப்பியோடு வெளியே சென்றால் வெப்ப இழப்பைக் குறைக்கலாம். அதிக நேரம் வெளியே இருக்கவேண்டிய தேவையைச் சமாளிக்கலாம்.

கையுறைகள் கைகொடுக்கும். இதிலும் Fleece வகை சிறப்பானது. ஒவ்வொரு விரலையும் ஒவ்வொரு குழாய்க்குள் நுழைப்பதுபோன்ற அமைப்பில் உள்ள கையுறையிலும்பார்க்க பெருவிரல் தனித்தும் மற்றைய 4 விரல்கள் சேர்த்து ஒன்றுடனொன்று தொடுகையோடிருக்கும் வகையிலான கையுறைகள் (Mittens) கைகளில் வெப்ப இழப்பை வெகுவாகக் குறைக்கின்றன.

“இந்த Mittens குழந்தைகளுக்கானவை; அவற்றை அணியமாட்டேன்” என்று அடம்பிடிப்பீர்களாயின், சரி... உங்கள் இஷ்டம். உங்கள் விரல்களுக்குக் குளிர் பிடிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கும்போது யாரால் அதைத் தடுக்க முடியும்.

காலுறைகளில் நாம் பெருந்தவறு செய்கின்றோம். இரசாயன ஆயுதமோ என்று நினைக்குமளவுக்கு நாற்றம் அடிக்கும் காலுறைகளை நான் சொல்லவில்லை. பொதுவாகவே கோடை காலத்தில் அணிந்த பருத்தி நூல் (Cotton) காலுறைகளையே வாட்டிவதைக்கும் குளிரிலும் அணிகின்றோம். இந்தப் பருத்தி நூற் காலுறைகள் ஈரலிப்பை உள்வாங்கிவைத்துக்கொள்ளும். வெப்பத்தை வைத்துக்கொள்ளாது. அதிகம் ஈரமாகும்போது பாதத்திற்கும் காலுறைக்கும் இடையே ஒரு மெல்லிய நீர்த்திரையைப் போட்டுவிடும். இது இன்னமும் அதிக குளிரைப் பாதத்திற்குத் தரும். எனவே பருத்தி நூல் காலுறைகளுக்கு ஒரு பெரிய கும்பிடு. தூய Wool அதிக வெப்பத்தைத் தருவதால் சௌகரியமாக இருக்காது. காலில் சொறியவேண்டும் போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

Wool கலந்த காலுறைகள் நன்மை பயக்கும். விளையாட்டுப்பொருட்கள் விற்கும் இடங்களில் கிடைக்கும் Hiking Socks அற்புதமான தேர்வு.

மேற்சொன்ன எல்லாவற்றையும் கவனமாக அணிந்துகொண்டு Half Shoeஐ அணிந்து கொண்டு சென்றால் எல்லோரும் ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். எனவே குளிர் பாதத்திற்கு ஏறி அங்குமிங்குமாகத் தொங்கித் துள்ளிக்குதித்துக்கொண்டு திரியாமலிருக்க நல்ல காலணிகள் அவசியம். அதுவும் நீர் உட்புகாத, காற்று உட்புகாத, பாதத்தை முழுவதும் மூடி கணுக்காலைத் தொடும்வகையிலான காலணிகள் நீண்டநேரம் பாதங்களைக் குளிரிலிருந்து பாதுகாக்கும். -20$^{c}$ வரையில் தாக்குப்பிடிக்கும் என்று லேபல்களிலும் விளம்பரங்களிலும் சொல்லப்படுபவற்றைக் கண்ணை மூடிக்கொண்டு நம்பாதீர்கள். -10$^{c}$இலேயே பாதம் விறைத்துப்போகுமளவுக்குப் போய்விடுபவை இப்படியானவை. கேட்டால் காற்று வீசாத போது..., நீங்கள் நல்ல Winter Socks அணிந்திருக்கும்போது... என்று பல்வேறு நிபந்தனைகளின் பேரிற்றான் அவை விளம்பரத்திற் சொல்லப்பட்டது போல இருக்கும் என்று மழுப்புவார்கள்.

எனவே, பாதத்திலிருந்து உச்சந்தலை வரை நீங்கள் அணியும் பொருத்தமான ஆடை அணிகள் தாம் குளிரிலிருந்து உங்களைப் பாதுகாக்கப்போகின்றன.

சரியான ஆடை அணிகளை அணியாமல் நல்ல குளிரில் வெளியே போய், நடுநடுங்கி, வெடவெடத்துக்கொண்டு குளிரைத் திட்டியபடி வீடுவந்து சேருவது பலருக்குப் பழகிப்போய் விட்டது.

இயற்கையோடு நாம்தான் இயைந்துபோகவேண்டும்.

இந்தக் குளிர்காலத்தைத் தைரியத்தோடு வரவேற்போம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

## கைக்குழந்தைகளும் குளிர்காலமும்

- சிறுவர்களிலும் பார்க்க விரைவாகக் கைக்குழந்தைகள் வெப்ப இழப்பினாற் பாதிக்கப்படுகின்றனர்.
- குளிரினாற் பெரியவர்கள் நடுங்குவது போன்று குழந்தைகள் நடுங்குவதில்லை. நடுக்கம் இல்லையென அசட்டையாக இருந்துவிடக்கூடாது.
- எமது உடல் இழக்கும் வெப்பத்தில் பாதியளவுக்குமேல் தலை வழியாகத்தான் இழக்கப்படுகின்றது.
- குழந்தைகளுக்குத் தலைமுடி குறைவாக இருப்பதனால் உடல் வெப்பம் மிக விரைவாக இழக்கப்படும்.

  நல்லதொரு தொப்பி மிக அவசியம்.
- உடல் வெப்பம் அதிகரித்தால் குழந்தையின் முகம் சிவந்து காணப்படும்.

  குளிரால் குழந்தை பாதிக்கப்பட்டிருப்பின் உள்ளங்கைகளும் பாதமும் குளிர்ந்து காணப்படும்.
- குழந்தை களைப்படைந்தது போன்று காணப்பட்டாலோ அசைவின்றிக் காணப்பட்டாலோ - இது மிக ஆபத்தானதாகலாம்.

  கவனம். நிலைமையைப் பொறுத்து அவசர உதவிகோரத் தயங்காதீர்கள்.
- குழந்தைக் கைகளுக்கு Glovesஇலும் Mittens மிகமிகச் சிறந்தது.

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Broker
Direct: 416-843-8585






**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: 416-625-2870




**Ellesmere / Pharmacy**
3 Bedrooms 2 Washroom
Finished Basement




Davis Dr / Yonge

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor



# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | CALL |
| 5 Yrs Fixed | CALL |
| Variable Closed | CALL |
| Variable Open | CALL |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Main Office**
4544 Sheppard Ave E
Suite #208
Scarborough, ON
M1S 1V2

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC

**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct 416-526-4996
Email: ram.krish@rbc.com



# கோடைகால, விடுமுறைக்கால வதிவிடங்கள்

# Buying & Renting Cottages



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

## கோடைகால விடுமுறைக்கால வதிவிடங்களை வாங்குதலும், வாடகைக்கு பெற்றுக் கொள்ளுதலும் (Buying & Renting Cottages)

கனடாவில் கோடைகாலம் பொதுவாக மிகவும் குறைவான மாதங்களை மட்டுமே கொண்டதாயினும், அக்குறுகிய காலத்தை கனேடிய நீரோட்த்தோடு கலந்து நாமும் Cottages, Cabins போன்ற விடுமுறைக் கால வதிவிடங்களை நோக்கி நகர்வதால், அவை ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இயந்திரமயமான வாழ்வில் இருந்து விடுபட்டு சிறிது காலம் ஒய்வு பெறுவதற்கு இவ்வகையான வதிவிடங்கள் எமக்கு பெருமளவில் உதவுகின்றன என்பதே இதற்கான காரணம். நம்பவர் மத்தியில் அநேகர் கோடைகால விடுமுறைக்கால வதிவிடங்களை வாங்கியோ அல்லது வாடகைக்கு எடுத்தோ கோடை காலத்தினை கொண்டாடுகின்றனர். கோடைகால வதிவிடத்தை வாடகைக்கு எடுப்பதாக இருந்தால் பொதுவாக ஒரு வருடத்திற்கு முன்னதாக உங்கள் பதிவினை செய்தால், நீங்கள் விரும்பும் இடத்தினை விரும்பிய நாட்களுக்கு விரும்பிய இடத்தில் எடுக்கக் கூடியதாக இருக்கும். எனவே நான் கீழ் தரும் விடயங்கள் அடுத்த வருட கோடை காலத்தினை சிறம்பட கழிக்க இது உதவும் என்ற நம்பிகையோடு இம் மாதத்தில் தொடர்கின்றேன்.

## கோடைகால வதிவிடத்தை வாங்குவதற்கு முன்பு கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

### வதிவிடம் அமைந்துள்ள இடம் (Location)

நகர்ப்புறத்தின் எந்த பகுதியில் நீங்கள் வாங்க விரும்பும் விடுமுறைக் கால வதிவிடம் அமைய வேண்டும். அது ஒரு வாவியின் அருகில் அல்லது ஒரு ஆற்றுக்கு அருகே அமைந்திருக்க வேண்டுமா, தனியான கடற்கரை பகுதியில் அல்லது பொதுவான கடற்கரைப் பகுதியில் அமைந்திருக்க வேண்டுமா ஆகியவற்றை நீங்கள் முதலில் முடிவு செய்து கொள்ளுங்கள்.

### தூரம் (Distance)

உங்களது வீட்டில் இருந்து, கோடைகால வதிவிடத்திற்கு வாகனம் செலுத்தி சொல்ல வேண்டிய நேரத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதே சமயம் அந்த வதிவிடத்திற்கு மிகவும் சமீபமாக உள்ள நகரம் எது என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

### கொள்முதல் விலையின் வீச்சம் (Price Range)

சட்டத்தரணிக்கான செலவு உட்பட, உங்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய தொகை எவ்வளவு என்பதை நீங்கள் தெளிவாக முடிவு செய்ய வேண்டும்.

### பிரதானமான நோக்கம்

அந்த வதிவிடந்தை நீங்கள் வருடம் முழுவதும் பயன்படுத்த விரும்புகிறீர்களா அல்லது கோடைகாலத்திற்கு மட்டும் பயன்படுத்த எண்ணுகிறீர்களா என்பதை முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும்.

### இலகுவில் சென்றடையக் கூடியதாக இருந்தல்

நீங்கள் வாங்க விரும்பும் வதிவிடத்தை இலகுவாகச் சென்றடையக் கூடியதாக, சீரமைக்கப்பட்ட வீதி உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுவது பயன் தரும்.

### கட்டிடத்தின் வாழ்வாதாரத்திற்கான தரம் (Standard of Living)

நீங்கள் வாங்குவதற்கு எண்ணியுள்ள வதிவிடம் தரமான நிலையில் உள்ளதா? குறிப்பாக கழிவகற்றல் தொகுதி அமைப்பு (Septic System) சிறந்த முறையில் இயங்கிறதா என்பதை உறுதிப் படுத்துவது அவசியம்.

அந்த வதிவிடத்திற்கான நீர் விநியோகம் அல்லது கிணற்று நீர் இருந்தால் அந்நீரினை சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும், Indoor Plumbing, மின்சாரம், வெப்ப மேற்றல் என்பன சீரான முறையில் உள்ளதா என்பதையும் அறிந்து உறுதிப்படுத்த வேண்டும்.

அந்த வீட்டின் வதிவிடப் பிரதேசம் நிண்ட காலம் தங்குவதற்கு ஏற்ற தன்மையானதா அல்லது இடைக்கிடையே வார இறுதி நாட்களில் மட்டும் தங்குவதற்கு ஏற்றதாக உள்ளதா என் அறிந்து கொள்வது நன்று. (அது உங்களது தேவையைப் பொறுத்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்).

### வதிவிடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு

இது பற்றிய விபரங்களையும், அதே சமயம் உங்களது அயலவர்கள் எவ்வளவு அருகில் உள்ளார்கள் என்பதையும் அறிந்திருப்பது பயன் தரக் கூடியது.

### Shoreline.

உங்களது வதிவிடத்திற்கு அருகே உள்ள ஏரி அல்லது கடற் கடற்கரைப் பகுதியின் நீரின் ஆழம் என்ன? அது பருவ கால மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுமா? என தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்களும், உங்களது பிள்ளைகளும் அதனை பயன்படுத்த முடியுமா என்பன தொடர்பான விபரங்களையும் அறிந்து கொள்வது நன்று.

### வீட்டின் அருகே உள்ள நீர் பரப்பின் தன்மை

இந்த நீர்பரப்பின் மிது படகோட்டுதல், (Canoeing), நீர் விளையாட்டுகள் (Water Sports) போன்றவற்றை செயல்படுத்த முடியுமா?

### சேவைகள் (Services)

### பின்வரும் விடயங்களைப் பற்றி அறிந்து வையுங்கள்

- தொலைபேசி, செல்லிட தொலைபேசி, கணினிவலை என்பவற்றை பயன்படத்த முடியுமா?
- ஒழுங்கான கால இடைவெளியில் வதிவிடக் கழிவுப் பொருள் சேகரிப்பு நடைபெறுகிறதா?
- சுகாதார சேவைகள், Ambulance சேவைகள் என்பவற்றை அப்பகுதியில் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமா?
- தீயணைப்பு சேவை உட்பட, ஏனைய அவசரகால சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா?
- நாளாந்த பாவனைக்குரிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியுமா?

## ஒரு கோடை கால வதிவிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு முன்பு கருத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்.

கோடைகால வதிவிடத்தை (Cottage), வாங்குவதற்கான செலவு தொடர்பாக அதிகரித்து வருகின்றது. எனவே இதற்கு மாற்று வழியாக எம்மில் பலர் இவ்வகையான வதிவிடத்தை வாடகைக்கு பெறுவதற்கு முயல்கின்றனர். இது தொடர்பான சில ஆலோசனைகள் கீழே குறிப்பட்ப்பட்டுள்ளன.

### நேர காலத்துடன் செயற்படுங்கள்

பொதுவாக ஒரு வருடத்திற்கு முன்னதாக வாடகை வதிவிடத்தை பதிவு செய்வது நன்று.

### புவியியல் பரப்பை கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் வாடகைக்கு பெற விரும்பும் கோடைகால விடுமுறை வதிவிடம் கடற்கரைக்கு அருகில் அல்லது ஓர் ஏரிக்கு அருகில் இருக்க வேண்டுமா, இந்த வதிவிடம் உங்களது வீட்டிற்கு ஓரளவு குறுகிய தூரத்தில் இருக்க வேண்டுமா என்பதை கவனத்தல் கொள்வது சிறந்தது.

### நீங்கள் அங்கு தங்குவதற்கு விரும்பும் காலத்தின் அளவு

கோடைகாலம் முழுவதும் தங்குவதற்கு எண்ணியுள்ளீர்களா அல்லது இரண்டு அல்லது ஒரு வாரகாலம் மட்டும் அங்கு செலவிட விரும்புகிறீர்களா என்பதனைப் பொறுத்து நீங்கள் விரும்பும் வதிவிடத்தை தெரிவு செய்யவும்.

### உடற் ரீதியான பலவீனங்கள் (Physical Disabilities) தொடர்பாக உங்களது விஷேட தேவைகள் என்ன?

உங்களது முழுங்காலில் நோவு உள்ளதாயின் அநேக படிக்கட்டுக்களில் ஏறுவதைத் தவிர்க்கக் கூடியதான வதிவிடத்தை தெரிவு செய்வது விரும்பத்தக்கது.

### மருந்துவ சேவை நிலையத்திற்கு அருகில் இருக்க வேண்டிய தேவை உள்ளதா?

உங்களது தேக ஆரோக்கியம் காரணமாக, உங்களது வதிவிடம் ஒரு மருத்துவ சேவை நிலையத்திற்கு அருகே இருக்க வேண்டும் என்று நிங்கள் விரும்பினால் அதனை நிச்சயப்படுத்திக கொள்ளவேண்டும்.

### அமைதி

நீங்கள் அமைதியை விரும்புவராயின், அவ்வாறான சூழ்நிலையில் அமைந்துள்ள ஒரு வதிவிடத்தை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

### நீங்கள் எவ்வளவு வாடகை செலுத்த விரும்புகிறீர்கள்?

ஒரு கோடைகால வதிவிடத்தை வாடகைக்கு பெறுவதற்கு முன்பு உணவு, வாகன எரிபொருள், உங்களது ஏனைய தேவைகள் என்பவற்றிற்கான விலை ஆகியவற்றை உள்ளடங்கலாக நிதித்திட்டமிடுதல் பயன்தரக் கூடியதாக அமையும்.

### வதிவிடப் பிரதேசத்தின் பரப்பளவு

பொதுவாக கோடைகால வதிவிட இல்லத்தினுள் உள்ள வதிவிடப் பகுதியின் அளவு உங்களது வீட்டின் வதிவிடப் பகுதியின் பரப்பளவை விட குறைந்தாகவே அமையும். எனவே அந்த வதிவிடத்தில் வசிப்பவர்களது எண்ணிக்கை, நீங்கள் எதிர்பார்க்கும் விருந்தினர்களின் எண்ணிக்கை என்பவற்றை கணக்கில் எடுத்து அதற்கு ஏற்றதான விடுமுறைக்கால வதிவிடத்தை வாடகைக்கு ஒழுக்கு செல்வது நன்று.

### குளியலறை (Bathroom)

இந்த வதிவிடத்தில் சகல வசதிகளையும் கொண்டதான குளியலறை இருக்க வேண்டுமா அல்ல வதிவிடத்திற்கு வெளியே அமைந்துள்ளதான குளியலறை உங்களுக்கு வசதியாக அமையுமா என்பதையும் கவனத்தில் கொள்வது பயன் தரும்.

### நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரின் ஆலோசனை

கோடை விடுமுறைக்கால வதிவிடங்களை ஏற்கனவே வாடகைக்கு பெற்ற அனுபவமுடைய நண்பர்கள் உறவினர்களின் ஆலோசனைப் பெறுவது உங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசகைளின் அடிப்படையில் நன்கு திட்டமிட்டு செயற்பட்டால் உங்களது தேவைக்கு மிகவும் பொருந்தமான ஓர் கோடைகால வதிவிடத்தை கொள்ளவு செய்யவோ அல்லது வாடகைக்கு பெறவோ முடியும்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business

Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# All your Real Estate needs

ஞானி நரசிங்கம்
Sales Representative
**416-937-8090**



ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
**416-629-9797**


## "வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க"

**Office: 416-321-6969**

## CHANCE TO WIN ..... Buy or Sell Through Us

**BMW 3 SERIES** | **TRIP TO CUBA** | **PLASMA TV**

### Markham / Steeles




**$1.2 Million**
0.90 Acres Land
Convenient Location,Just east of Markham road, please call for zoning information

### Warden/Finch




**$349,000**
Semi detached Bangalow with Separate entrance in mail level
3 bedrooms with two full washrooms
Hardwood floor through out in main floor/walkout Basement apt easy to rent. Step to TTC,bridlewood mall

### McCowan/Highglen




**$499,000**
Detached 2 Storey Brick Home
Well Maintained 4 Bedroom with 2 Full Washroom & ½ Washroom
Basement Apt with Sep. Entrance
Location.. Location... Location...

### Simcoe / Taunton



**$499,000**
Attention Investors and Devolopers
Detached Bungalow with two Bedroom
Located Across UOIT Durham College
It has Mixed Use Potential
Also Listed for LEASE
Finished Basement with Three rooms

### Barrie/Angus



**$2,690,000**
20 years established excellent
Petro Canada gas staion
Sale of Business with Property located Angus (Barrie). Please call for more information

### Middlefield/Finch





**$335,000**
Detached 2 Storey Brick Home
4bedroom and 3 fully washrooms
Part. Finished Basement
Superb Location.....
Close to all amenities

### Simcoe / Conlins



**$289,900**
Brand New Detached brick 2 Storey
4 bedrooms/ 2 full washrooms
5 Mins walk to UOIT Durham College
Approx 2000 square feet
Close to all Amenities

### Kennedy/14th Ave



**$649,900**
Detached 2 storey Brick Home in demand area/Approx 3300 Sq ft
Finished basement apatment with separate entrance, Hardwood floor through out, oak stair case, library room many more, Convenient location.

### Marmora




**$648,000**
Business Plus Building
Great Family Business with Property
Econo Gas Station with Convenient Store
2 Apartment and 2 Bay Garage
Extra income about $3000 Except Gas Bar

### Markham / Lawrence




**$339,500**
Detached Bangalow house
3 bedroom and 2full W/Rs
Basement apt with separate entrance, convenient location step to TTC,Reno. Kitchen

### Downtown Toronto




**$359,900**
Luxury Condo in Scarborough DownTown
1+1 bedrooms/ 1 full washrooms
More facilities than any other Condo
Close to Town Center
Fast Moving Condo in Scarborough

### Warden / Sheppard



**$154,900**
2 bedroom Condo Full & ½ washrooms
Location Location Location.......
Step toschool & shopping, Minute to 401
Carry Cheaper than Rent
First Time Buyer Opportunity

### Kennedy / Ellesmere



**$2.95 Million**
Commercial Retail Plaza
10,800 Sqft/ over ½ acre land
Free standing Building
Fully leased property
Prime spot in Toronto

### McCowan/Highglen




**$499,900**
Detached 2 Storey Brick Home
Well Maintained 4 Bedroom with 3 Full Washroom & ½ Washroom
Basement Apt with Sep. Entrance
Location.. Location... Location...

### Any Location

*Your Listing*

**Call Gnani & Judy**

HOMELIFE HIGHER STANDARDS

**Toll Free: 1888-306-6669 Ext 5**

**HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3**

This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# மகப்பேறு

## இதயம் மலர்கிறது - 17



கந்தையா
செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

பிள்ளைப்பாக்கியம், சந்தான விருத்தி, மகப்பேறு என்று எமது மக்கள் சந்ததி விருத்தியைப் பலவாறாக எடுத்து இயம்புவார்கள். குழந்தைச் செல்வத்தை ஒரு பெரும் பேறாகவே கருதுவார்கள்.

மணவறையில் மணமக்களைப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்தும் பொழுது அந்தப் பதினாறு செல்வங்களில் ஒரு செல்வம் குழந்தைச் செல்வமாக இருக்கின்றதைக் காணலாம்.

ஒளிபடைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், ஏறு போன்ற நடையும் உடைய மகவை பெற்றெடுப்பதற்குத் தாயும், தந்தையும் தம்மை நன்கு தயார்படுத்தியிருப்பது அவசியம்.

எமது உடல் ஆரோக்கியமாக இருக்கும் பொழுது பிறக்கும் பிள்ளையும் ஆரோக்கியமாகப் பிறக்கின்றது.

### பெண் எப்படித் தன்னைத் தயார் செய்து கொள்ளலாம்?

ஆரோக்கியம் பிரதானமானது. ஆரோக்கியம் என்னும் பொழுது உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் இரண்டும் பிரதானமானது. இவை இரண்டும் சேரும் பொழுது குடும்பத்தில் மன மகிழ்வு, வளமான வாழ்வு, தெய்வீக சிந்தனைகள் என்பன இயல்பாகவே அமைவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

உடல் ஆரோக்கியம் அமைவதற்கு சமபல உணவு, உடற்பயிற்சி என்பனவும் பிரதானமானவை. சமபல உணவில் உடலுக்குத் தேவையான புரதம், கொழுப்பு, மாப்பொருள் சத்துக்கள் சரியான விகிதாசாரத்தில் இருப்பதுடன் விற்றமின்கள், கனிப்பொருட்கள், நீர் என்பனவும் தேவையான அளவு அடங்கியிருக்கின்றன. கனேடிய உணவு அட்டவணையில் எல்லாவித உணவுகளும் எப்படி, எந்த அளவு உட்கொள்ள வேண்டும் என்ற பிரமாணங்கள் அடங்கியிருக்கின்றன. புதிய அட்டவணையில் ஆசிய நாட்டு மக்களின் உணவு வகைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

கர்ப்பம் தரிப்பதற்கு ஆயத்தமாகும் பெண்களுக்கு விசேடமாக விசேடமாக போலிக் அமிலம் (Folic Acid) சற்று கூடுதலாகக் கொடுக்கப்படும். உணவில் போலிக் அமிலம் குறைபாடுடைய தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளின் நரம்புக் குழாய்களில் குறைபாடு ஏற்பட்டு, முள்ளந்தண்டு பகுதியிலோ அல்லது தலையை அண்டிய பகுதிகளிலோ பாதிப்பு ஏற்படலாம்.

உங்கள் குடும்ப வைத்தியரிடமோ, மகப்பேற்று வைத்திய நிபுணரிடமோ அல்லது மகப்பேற்று தாதிமாரிடமோ இதுபற்றி ஆலோசனைகளைக் கேட்டு அறியலாம். இதனால் நாங்கள் உண்ணும் மாவில் போலிக் அமிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

பெண்ணின் கர்ப்பம் தரிக்கும் உறுப்புக்கள் நல்ல நிலையில் திறம்படச் செயற்படுவதற்கு மேற்கூறிய காரணிகள் சிறப்பான பங்கை அளிப்பதுடன், தாயின் கர்ப்பத்தில் வளரும் சிசுவிற்கும் போதிய ஊட்டங்களை கொடுக்கக்கூடியதாகவும் அமைகின்றன.

பாலியல் உறுப்புக்களில் ஏற்படும் நோய்கள் பற்றியும், அத்தகைய சந்தர்ப்பங்களிலோ அல்லது வேறு ஏதாவது நோய்களிற்கோ உட்கொள்ளும் மருந்துகள் பற்றியும் விழிப்பாக இருத்தல் அவசியம். குடும்ப வைத்தியரிடமோ மருந்தாளரிடமோ மருந்துகளின் பக்க விளைவுகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

பாலியல் நோய்கள் கர்ப்பந்தங்குவதில் பிரச்சினைகளையும் பிறக்கப்போகும் சிசுவில் குறைபாடுகளையும் ஏற்படுத்தக்கூடுமாகையால் வைத்திய ஆலோசனைகள் இங்கு பிரதானமாக வேண்டப்படுகின்றன.

### ஆண் எப்படித் தன்னைத் தயார் செய்து கொள்ளலாம்?

> “ ஆணும், பெண்ணும் சேர்ந்து
> கர்ப்பம் தரிப்பதற்கு ஏதுவான சூழலை
> ஏற்படுத்திய பின்பு,
> மகவைப் பெற்றெடுப்பதற்குரிய செயலில்
> ஈடுபடுத்தல் வேண்டும்.
> வயதும் ஒரு பிரதானமான காரணியாக
> அமைவதனால்
> காலம் தாழ்த்தாது அச்செயலில் ஈடுபடுவது
> நல்லது. ”

பெண்கள் போல் ஆண்களும் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் இரண்டையும் கவனத்திற் கொள்வதுடன் நல்ல வளமான வாழ்வை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் கண்டறிந்து அவற்றைச் செயற்படுத்துதல் வேண்டும். உடற்பயிற்சி, சமபல உணவு, பற்றி அறிந்திருத்தலுடன் அவற்றை நடைமுறையில் கைக்கொள்ளுவதை முக்கியமாகக் கருதுதல் வேண்டும். பாலியல் நோய்கள் பற்றி விழிப்பாக இருத்தல் வேண்டும்.

பெண்களில் ஒவ்வொரு மாதவிடாய்ச் சுற்றின் பொழுதும் சூலகத்தினால் ஒவ்வொரு முட்டை வெளிவிடப்பட்டு அது பலோப்பியன் குழாயின் விரல் போன்ற அந்தங்களினால் உள்வாங்கப்பட்டு, பலோப்பியன் குழாயூடாக கர்ப்பப்பையை நோக்கி குழாயினுள் உள்ள மயிரிழைகளின் அசைவுகளால் நகர்த்தப்படுகின்றன. இக்காலகட்டத்தில் பெண்ணானவள் ஆணுடன் கலவியில் ஈடுபட்டிருந்தால் ஆணினால் யோனியினுள் விடப்படும் இலட்சக்கணக்கான விந்துகள் கருப்பப்பையின் இரு மருங்குகளிலும் உள்ள பலோப்பியன் குழாய்களூடாக நீந்திச் செல்கின்றன. அப்பொழுது முதன் முதலாக நீந்திச் சென்று பெண்ணின் முட்டையை ஒரு விந்து அடையுமாயின், அவ் விந்தானது முட்டையின் கலத்தோலைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்றுவிடும்.

முட்டையினுள் ஒரு விந்து சென்றவுடன் அதன் புறத்தோல் மாற்றமடைந்து மேலும் அதை நோக்கி வரும் விந்துகளை நுழைய விடாது தவிர்த்து விடும். சில சமயங்களில் இருவிந்துகள் முட்டையினுள் நுழைந்து விடுகின்றன. அப்பொழுது ஒத்து உருவங்கள் அற்ற இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு விந்து ஒரு முட்டையுடன் சேர்ந்த பின்பு ஏதோசில காரணங்களால் அவை இரண்டாகப் பிளவடைகின்றன. அப்பொழுது ஒத்த உருவமுடைய இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.

### பலோப்பியன் குழாயினுள் கருக்கட்டிய முட்டைக்கு என்ன நிகழ்கின்றது

அடுத்ததாகப் பலோப்பியன் குழாயினுள் கருக்கட்டிய முட்டைக்கு என்ன நிகழ்கின்றது எனப் பார்ப்போம். கருக்கட்டிய முட்டை மயிரிழைகளால் நகர்த்தப்பட்டு கர்ப்பப்பையை வந்து சேர்கின்றது. கருக்கட்டிய முட்டை தங்கியிருந்து வளர்வதற்கு ஏற்ற முறையில் கருப்பையின் உட்பகுதி நன்கு பதப்படுத்தப் பட்டு வளம்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாதவிடாயச் சுற்றின் பொழுதும் இச் சுழற்சி ஏற்படுகின்றது. அதாவது மாதவிடாய் ஏற்பட்டு 3 தொட்டு 5 நாட்கள் வரையில் கருப்பையின் உட்பகுதியில் வளம்படுத்தப்பட்ட படை உதிர்க்கப்பட்ட பின்பு புதிய படை உருவாகின்றது. மாதவிடாய்ச் சுற்று வழக்கமாக 28 நாட்களுக்கு ஒரு தடவை ஏற்படும். சராசரியாக மாதவிடாய் வந்தநாளில் இருந்து 11ம் நாள் முதல் இந்த உட்படையானது கருக் கட்டிய முட்டையை ஏற்கக் கூடிய அளவு விருத்தியடைந்து குருதிக்கலன்கள் செறிந்த படையைக் கொண்டிருக்கும்.

முட்டையானது கருக்கட்டப்பட்டு இருந்தால் அது விருத்தியடைந்த இந்தப் பகுதிக்கு நகர்த்தப்பட்டு அங்கே சிசுவாக வளரும்.

சிசு வளரும் பொழுது தொப்புள் கொடியின் ஒரு அந்தம் தாயின் கருப்பையில் ஆணிவேர் போன்று ஊன்றி சிசுவளர்வதற்குரிய போசாக்குகளையும், பிராண வாயுவையும் தொப்புள் கொடியினூடாக சிசுவிற்குக் கடத்திச் செல்லும். சிசுவின் வயிற்றுப் பகுதியில் தொப்புள் கொடியின் மறு அந்தம் ஒட்டியிருக்கும். இக்கொடியினூடாகச் செல்லும் குருதி நாடிகளும், நாளங்களும் இத்தொழில்களைச் செய்கின்றன. இத்தொப்புள் கொடியில் உள்ள குருதி நாடி, நாளங்களில் குறைபாடுகள் ஏற்படும் பொழுது சிசுவிற்குப் போதியளவு குருதி போகாமல் சிசுவின் வளர்ச்சி தடைப்படலாம். சில சமயங்களில் கருக்கட்டிய முட்டை கருப்பையின் நடுப்பகுதியில் வளர்ச்சியடையாமல் கருப்பையின் கழுத்திற்கு அருகாமையில் சென்று வளர்ச்சியடையும் பொழுது அது கருப்பைக் கழுத்தை அண்டிய கொடியாக (Placenta Praevia) இருப்பதனால் சிசு வளரும் பொழுது அப்பகுதி விரிவடைய நேரிடும். இதனால் கர்ப்ப காலத்தின் கடைசிக் காலத்தில் உதிரம் அடிக்கடி படுதல் நிகழ்வதுடன், சிசு பிறக்கும் நேரங்களில் அது ஒரு பெரிய தடையாக இருப்பதனால் மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் சிசுவை சத்திர சிகிச்சை மூலம் எடுப்பதற்கு ஆயத்தமாவார்கள். சில தாய்மார்களுக்கே இப்படியான சிக்கல்கள் ஏற்படுகின்றன. அநேகமாக மகப்பேறும், பிரசவமும் மிகவும் இலகுவாகச் சம்பவிக்கக்கூடியவையே. எதிலும் எச்சரிக்கையுடனும், விழிப்பாகவும் இருக்கும் பொருட்டு மேற்கூறிய சில பிரசவச் சிக்கல்களைக் குறிப்பிட்டுள்ளேன். இவற்றை வாசிக்கும் பொழுது தாய்மார்கள் வைத்தியசாலைக்குச் சென்று தமது சிசுவின் நிலையை பரீட்சித்துக் கொள்வார்கள். இதன் மூலம் பல சிக்கல்களை, ஆபத்துக்களை முற்கூட்டியே தவிர்க்கலாம்.

மணம் முடித்துப் பலகாலமாகப் பிள்ளைப் பேறு இல்லாதவர்கள் தம்மைப் பரீட்சித்துக் கொள்வதன் மூலம் அதற்குரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆண்கள் தமது சுக்கிலத்தில் உள்ள ஆண் விந்தின் எண்ணிக்கையைப் பரீட்சித்துக் கொள்ளலாம். ஆண் விந்தின் எண்ணிக்கை சரியாக இருந்தாலும் அவற்றின் சுறுசுறுப்புள்ள நல்ல அசைவாட்டமுள்ள விந்தின் எண்ணிக்கை 85%ற்கு மேற்பட இருத்தல் வேண்டும். இத்தகைய விந்துகள் யோனியினுள் நீந்திச் சென்று பலோப்பியன் குழாய்களூடாக முட்டையை அடையும் வலுவைக் கூடுதலாகக் கொண்டிருக்கும். சுறுசுறுப்பான விந்தின் அளவு குறைவாக உள்ளவர்களின், பெண்கள் சம்போகத்தின் பின்பு மல்லாக்காக சில நிமிட நேரங்கள் படுத்திருப்பதன் மூலம் யோனியினால் உள்வாங்கப்பட்ட விந்து வழிந்து போகாது கூடுதலான அளவு கர்ப்பப்பைக் கழுத்தினூடே பலோப்பியன் குழாய்களை அடைவதற்கு உதவுகின்றனர். இதனால் கர்ப்பம் தரிக்கும் வாய்ப்புகள் அதிகமாகின்றன.

பெண்ணின் முட்டை வெளியான நாளில் இருந்து 24 மணித்தியாலங்கள் தான் உயிர் வாழும், ஆனால், ஆணின் விந்து பெண்ணின்

38ம் பக்கம் பார்க்க...

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி

**Dr. Kandiah Senthilathan**

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

**647-801-9252, 416-502-9252**

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# வீடு வாங்கவும், விற்கவும்.......




**Ajax**
4 Bedrooms, 3 Washrooms
2400 Sq Feet As Per Builder's Plan, Lots Of Upgrades




**Markham / Bur Oak**
3 Bedrooms, 3 Washrooms
Bright Open Concept Design
Minutes To The 407




**Brampton**
4 Bedrooms, 3 Washrooms
Prime Location, Bright And Spacious With Lots Of Natural Light




**Mccowan/Brimorton**
6+2 Bedrooms, 2 Washrooms
One Of The Biggest House In The Neighbourhood

சகல விதமான படிவங்களும் நிரப்பிக் கொடுக்கப்படும்

இரஞ்சன் *or* செல்வா
**416.816.1220**




**Neilson / Ellesmere**
4+2 Bedrooms, 4 Washrooms
Bright Spacious 4 Br Home.
Renovated Washrooms, Kitchen.




**Kennedy/Ellesmere**
3+2 Bedrooms, 3 Washrooms
Freshly Painted, Very Spacious
3 Bedroom Unit.




**Morningside/Meadowvale**
3 Bedrooms, 3 Washrooms
Location!Location!End Unit Like
A Semi-Detached Home




**Warden/Finch**
3+1 Bedrooms, 2 Washrooms
End Unit Townhouse In Prestige Area. Kitchen W/Eat In Area



RED CARPET® Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services

**RANJAN** FRANCIS XAVIER
Sales Representative
**Cell: 416.816.1220**
**Office: 416.284.5555**
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

**வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......**

# எமக்கென்று ஒரு தனிக்குடில்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

**Fax: 416 438 1612**

RBC Financial Group

**1421 Kennedy Rd,**
**Scarborough, ON. M1P 2L6**

# “வீடு” வினாவும் விடையும்

விடாமுயற்சியும், கடின உழைப்பும் இன்றைய இளம் கனேடிய தமிழ் சமுதாயத்தினை மேம்படுத்தியுள்ளது மட்டுமன்றி சமுதாய சீர்கேடுகளும் குறைந்து நாம் புலம்பெயர் நாடுகளில் ஒன்றுபட்டு இருப்பது எமது ஒற்றுமையை பறைசாற்றி நிற்கின்றது. ஆங்காங்கே சில சம்பவங்கள் இன்றும் நடைபெற்றாலும் எமது குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் வேளைகளில் வேற்றினத்தவரின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தமிழர்களின் வளர்ச்சி அபாரமானது. பாடசாலைகளில் எம் சிறார்கள் பெறும் புள்ளிகள் ஈறாக எத்துறை சார்ந்தும் நாம் வியாபித்து இருப்பது என்னவோ பெருமைப்படவேண்டிய விடயங்கள்தான்.

தொழிற்துறையில் வலுவான அதாவது நுகர்வோரையும் பாதிக்காது, அதேவேளை வியாபாரிகளையும் பாதிக்காது இருப்பது அவசியம். நாம் அதிகம் அறிவது பல வியாபார ஸ்தாபனங்கள் மூலைக்குமூலை முளைப்பதும் பின்னர் காணாமல் போவதும்தான். அந்த வகையில் ஒவ்வொரு துறைசார் வியாபாரிகளும் தங்களுக்குள் ஓர் ஒருங்கிணைப்பை பேணுவதன் மூலம் தரமான பொருட்களை சந்தைப் படுத்துவது மாத்திரமின்றி தரமான சேவைகளையும் வழங்க முடியும். அதேவேளை வேற்றினத்தவர்களையும் உள்வாங்கிக் கொள்வதற்கு ஏதுவாகும். தகவல்களை உள்வாங்கிக் கொள்பவர்கள் பலன்பெறுவர் என்று எண்ணி, இம்மாதம் கிடைக்கப்பெற்ற கேள்விகளை ஆராய்வோம்.


**தொடர்ச்சியான வேலைப்பழு, கடமைகள் என்று காலத்தை கடத்திய பின் இன்று வீடொன்றை வாங்கும் எண்ணத்தில் உள்ளேன். எவ்வாறு ஆரம்பிப்பது, ஆராயவேண்டிய விடயங்கள் எவை போன்ற குழப்பத்தில் உள்ளேன். இது சம்பந்தமாக விபரங்கள் பெற முடியுமா?..**

ஆதவன். க. Scarboragh.

‘எண்ணித்துணிக கருமம்’ என்பதற்கு நீங்கள் ஓர் எடுத்துக்காட்டு, நன்றி. ஒரு வீட்டை வாங்குவது என்பது முக்கியமான முடிவாகும். வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஓர் தடவைக்கு பல தடவை யோசித்துப் பார்க்கவேண்டும். முதலில் நீங்கள் எங்கு குடியிருக்கப்போகின்றீர்கள், மற்றும் எந்தவகையான வீட்டில் நீங்கள் இருக்க விரும்புகின்றீர்கள் என்பதை தீர்மானிக்க வேண்டும். முதன்முதலில் வீடு வாங்குறீர்களோ இல்லையோ, வீட்டு அடமானக்கடன் சம்பந்தமான அனைத்து செயல்முறைகளையும் நன்கு தெரிந்து கொள்ளுங்கள். வீடொன்றை வாங்குவதற்கு நிதி உதவி பெற பல எண்ணிக்கையிலான தகுதியுள்ள மற்றும் அங்கீகாரம் பெற்ற வீட்டு அடமான கடன் பிரதிநிதிகள் உள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் ஊடகங்கள் வாயிலாகவோ அன்றி உங்களின் வீட்டு முகவரின் உதவியுடனோ அறிந்து கொள்ளுங்கள்.

இன்றைய உலகில் தகவல்களை உடனுக்குடன் பெறமுடியும் என்பதால் நீங்கள் வாங்க விரும்பும் சொத்துக்களை மிக சுலபமாக தேடிக்கண்டுபிடிக்கமுடியும். வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் மற்றும் எண்ணங்களையும் பூர்த்திசெய்யும் வண்ணம் செய்தித்தாள்கள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், சிறு வெளியீடுகள் மற்றும் இணையதளம் கூட அனைத்து விபரங்களையும் தந்து உதவுகின்றன. வாடிக்கையாளர்கள் ஒரு வீட்டை வாங்குவதற்கு முன் இது போன்ற தகவல்களை சேகரித்து உங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு ஒரு சிறந்த முடிவினை எடுக்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வீட்டை வாங்குவதற்கு முன் உங்கள் நிதி நிலமையை பரிசோதித்துக்கொள்ளுங்கள். உங்கள் கடன் வாங்கும் தகுதி குறித்த சமீபகால அறிக்கையை (Credit Report) பெற்று உங்களை தயார்படுத்திக்கொள்ளுங்கள். உங்களிடம் எவ்வளவு பணம் உள்ளது மற்றும் ஒரு வீட்டை வாங்க உங்களால் எவ்வளவு பணம் செலவிடமுடியும் என்பதை மிக சரியாக நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் முதன்முதலில் வீடு வாங்குபவர் என்பதால் அனுபவமற்றவர் செய்யும்



தவறுகளை நீங்களும் செய்யாதீர்கள். இது போன்ற சூழ்நிலையில் வீடு வாங்கிய அடுத்தவரின் அனுபவ பாடத்திலிருந்து கற்றுக் கொள்ள முடியும். இதனால் வீட்டினை வாங்கிய பின்னர் வருந்தவேண்டியதில்லை.

தேவைகள் மற்றும் விருப்பங்கள் ஆகிய இரண்டையும் உங்களால் பெறமுடியுமானால் அவை இரண்டிற்கும் இடையே மனதைப்போட்டு குழப்ப வேண்டியதில்லை. வீட்டினை வாங்குவதற்கு தகவல் சேகரிக்கும் போது, பல்வேறு வகையான வீடுகளை பற்றி யோசியுங்கள். மேலும் அவற்றை சொகுசு அடிப்படையில் தரம்பிரித்து எதனை விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்யுங்கள். முதன்முதலில் வீடு வாங்குபவர்கள், வீடு சம்பந்தமான விபரங்கள் அடங்கிய ஒரு பட்டியலை எப்போதும் தயார்படுத்துதல் அவசியம். இப்பட்டியல் மிகவும் உதவிகரமானதொன்று. ஏதாவது முக்கியமான விடயத்தை தவறவிட்டோமோ என்பதனை உறுதிசெய்வதற்கு இது உதவும். வீடு சம்பந்தமான தகவல்களையும் உதவிகளையும் பெறுவதற்கு வேகமாகவும் தகுந்த முகவர் ஒருவரை தெரிந்தெடுங்கள். அவர் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை வேகமாகவும் அனுபவத்துடனும் செயற்பட்டு உங்கள் தேவையினை பூர்த்தி செய்வார்.

வீடொன்றினை தெரிவு செய்வதற்கு முன்னர் அது பற்றிய அனைத்து காரியங்களையும் எண்ணிப்பாருங்கள். வீட்டை வாங்கிய பின் வேறொருவருக்கு அதை மீண்டும் விற்கும் போது எவ்வளவு விலை கிடைக்கும் என்பதை முன்கூட்டியே ஆலோசியுங்கள். வாங்கும் வீட்டில் நீங்கள் நீண்டகாலம் தங்குவதற்கு இப்போது திட்டமிடலாம். ஆனால் அதுபற்றி திட்டவட்டமாக இப்போது கூறமுடியாமல் இருக்கலாம். உங்களது வேலை, பிள்ளைகளின் தேவை மற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றின் மாறுதலுக்காக, நீங்கள் எதிர்பார்காமலே மாறுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரலாம்.

வீடு விற்பவர்களும், வாங்குபவர்களும் இணைந்துகொள்ளும் அல்லது பொருந்திக் கொள்ளும் விலையே விற்பனை விலை. இதில் ஏமாற்றங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதால் முறையான முகவரின் உதவியுடன் சந்தை விலையினை அறிந்துகொள்வதன் மூலம் பேரம்பேசி முடிவினை எடுக்கலாம். இறுதிமுடிவினை எடுப்பதற்கு முன்னர் அவ்வீடு சம்பந்தமான அனைத்து விபரங்களையும் கவனமாக மதிப்பிடுங்கள். நீங்கள் விரும்பும் உங்கள் கனவு இல்லத்தில் உள்ள அனைத்தும் அதில் அடங்கியுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

‘கலியாணத்தைக் கட்டிப்பார், வீட்டினை கட்டிப்பார’’ என்பார்கள். இவையிரண்டும் எமது வாழ்நாளில் முக்கியமான விடயங்கள். அது மட்டுமல்ல தெரிவுகள் மேற்கொள்வதற்கு விரக்தியும் அதிக நேரமும் விரயமாகும். ஆனால் பின்னால் வரும் நலன்களை நினைத்தால் அது பயனுள்ள காரியம்தான். வீட்டிற்கு அதிகம் பேர் உரிமையுள்ளவர்களாக இருந்தால் சிக்கல்களும் நிறைந்து காணப்படும். தம்பதிகள் தங்களுக்கிடையே உள்ள சட்ட பூர்வமான உரிமையை நன்கு அறிந்தபின் இணைந்து வாங்குவது நன்று. உங்கள் தேவைகளும் மற்றும் விருப்பங்களும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை முதலிலேயே இருவரும் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம். உங்கள் வாழ்க்கைத்துணையின் உள்ளத்தின் உணர்வுகளுக்கும் மற்றும் உங்கள் உறவு முறைக்கும் உரிய மதிப்பை நீங்கள் கொடுக்க வேண்டியது மிக அவசியம். வீடு வாங்கும் போது நீங்கள் அளிக்கப்போகும் ஒரு பெரிய முதலீடு உங்கள் உறவுமுறையில் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பறைசாற்றும் ஓர் சிறந்த செயலாக அமையும். எனவே மேற்கூறிய காரணிகளை மனதில் வைத்து செயலில் இறங்குங்கள்.



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

**நீண்டகாலமாக ஒரு வீட்டில் குடியிருக்கும் நான் எனது சமையலறையினை மறுசீரமைப்பு செய்வதற்கு திட்டமிட்டுள்ளேன். எவ்வாறு மாற்றி அமைப்பதன் மூலம் வீட்டின் விலையினையும் அதிகரிக்க முடியும்?**

ரேவதி. வ. Brampton.

பொதுவாக வீட்டில் மிகவும் சுறுசுறுப்பாக செயற்படும் இடங்களில் சமையலறையும் ஒன்று. ஒவ்வொரு வீட்டு சொத்தக்காரரும் தங்கள் சமையலறையை ஒரு முறையாவது புதுப்பித்து அதற்கு ஒரு புதுப்பொலிவினை கொடுக்க விரும்புவர். இப்புனர்நிர்மானம் உங்கள் விவேகம் சார்ந்ததே. உங்கள் சமையலறையை புதிப்பிக்க நீங்கள் தீர்மானிக்கும் போது அனேகரைப் போல் நீங்களும் அதன் முக்கியமான அம்சங்களை பற்றி மட்டும்தான் நினைத்துப் பார்ப்பீர்கள். புதுப்பித்தலின் மிகவும் வெளிப்படையான அம்சங்கள் மீது சுலபமாக அலைந்து திரிவது உங்கள் கண்களுக்கு எளிது. அலுமாரிகள் மற்றும் தரை போன்றவைதான் புதுப்பிக்கப்படவேண்டும் என்று உங்கள் மனதில் தோன்றும். ஆயினும் சமையலறையில் பல விடயங்களை கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

தரை மற்றும் அலுமாரிகள் மாத்திரமின்றி சுவர்களுக்கும் புதிய கவர்ச்சிகரமான தோற்றத்தை அளிக்க வேண்டியது அவசியம். சமையலறை சுவர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் மிக முக்கியமான இடங்களில் ஒன்று. அழகான படங்கள் கொண்ட Tileகள் மூலம் சுவர்களையும் வடிவமைக்கலாம்.

அடுத்தாக Counter Top. இவை பல வண்ணங்கள், பல அமைப்புகள் எனப் பெற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் அலுமாரிகளுக்கு பொருந்தும் வண்ணம் தெரிவுகள் இருப்பது அவசியம். ஒரேசீரான எழிலுடன் சமையலறை காட்சி அளிக்கவேண்டும் என்பதை மனதில் வையுங்கள். Sink(தொட்டிகள்) தெரிவு, சமையலறையின் தேவையையும் அளவையும் பொறுத்து அமைதல் வேண்டும். அதேபோல் தண்ணீர் குழாய்களும் புதுப்பொலிவுடன் காணப்பட்டால் பார்ப்பவர் கண்களைக் கவரும்.

செலவினை குறைத்துக் கொள்வதற்காக அலுமாரிகளை மாற்றாமல் கதவுகளை மட்டும் மாற்றிக்கொள்வதும் உண்டு. இரண்டிற்கும் இடையேயான வேறுபாட்டினை தயாரிப்பாளர்களிடம் தெரிந்துகொள்ளுங்கள்.


நன்றி. தாய்வீடு வாசகர்களே மீண்டும் தொடரும் இதழ்களில் உங்கள் கேள்விகளோடு இணைந்துகொள்வோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■




வீடு வாங்க, விற்க
அழையுங்கள்...
Vasanthy Niranjan
Real Estate Broker
416-845-8272
Staines & Finch
$425,000
4+2 Bedroom, 4 Washroom
Warden & Hwy 7
$238,000
1+21 Bedroom, 1 Washroom
Markham & 14th
$399,000
3+2 Bedroom, 4 Washroom
Markham & Steeles
$349,900
3 Bedroom, 3 Washroom
Hwy 7 & 9th Line
$329,900
3 Bedroom,3 Washroom
Bur Oak & McCowan
$359,000
3+1 Bedroom, 4 Washroom
Markham & Denison
$279,000
3 Bedroom, 2 Washroom
Mccowan & Hwy 7
$389,000
3 Bedroom, 2 Washroom
Markham & Sheppard
$289,000
3+2 Bedroom, 2 Washroom
Neilson & Finch
$279,900
3+1 Bedroom, 4 Washroom
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd.
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR


Buying or Selling Homes
Selling Commission , As Low As 1%
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Landmark
Realty Inc. Brokerage
Call Nada
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093
Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative
Award Winner Since 1996
Over 14 Years of Experience
SOLD
Markham/Lawerence
Detached Bungalow
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement
SOLD
Galloway/Kingston Rd.
Detached Backsplit
4+4 Bedrooms - 5 Washrooms
Finished Basement Apt.
$308,000
New Listing
Audley/Taunton
2-Storey Detached
3 Bedrooms - 3 Washrooms
Approx. 1800 Sq. Ft
$79,000
New Listing
Tapscott/Finch
Industrial Condo
Approx. 800 Sq. Ft
$199,900
New Listing
Keele/Grandravine
Condo Townhouse
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement
$479,900
New Listing
Victoria Park/Eglinton
1 1/2 Storey Detached
4 Bedrooms - 3 Washrooms
Finished Basement
$195,000
Tapscott/Finch
Multi-Level Industrial Unit
Well Maintained Complex
Approx. 1550 Sq. Ft
Lease
$1400
McCowan/Denison
2 Storey Linked
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் பங்கு 54
கரினி சுரேன்

வாகனத் திருட்டும் பாதுகாப்பும் 56
மஞ்சுளா ராஜலிங்கம்

ஆனந்தம் 58
சத்குரு வாசுதேவ்

நம் வீட்டுக் கொண்டாட்டங்கள் 60
கௌரி சதானந்தன்

சேமமான சாரதி 62
செந்தூரன் புனிதவேல்

சிறிலங்காவில் போர்க்கால குற்றங்கள்! 64
சிவாலிங்கம்

குறுகியகால முடிவுகளும் அதன் விளைவுகளும் 69
அலன் சிவசம்பு

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை 70
ஜீவா திசைராஜா

நகரங்களும் சட்டங்களும் 73
சொக்கலிங்கம் பிரபாகரன்

மடையன் 74
பொன் குலேந்திரன்

ஸ்கால்ப் மசாஜ் 75
சசி நரேன்

படுவான்கரைப் பயணம் 76
குமார் புனிதவேல்

உச்சி குளிரவைத்தல் 79
K.S. பாலச்சந்திரன்

இருள் அசைந்து உள்ளே நகர்ந்தது 80
தேவகாந்தன்

பெற்றோர் தெரிந்திருக்க வேண்டிய இணைய சங்கேத வார்த்தைகள் 83
விவேகநாதன்

தமிழ் மொழியும் தமிழர் தாயகமும் 87
முருகேசு பாக்கியநாதன்

என் குதிரை நல்லது 88
அ.முத்துலிங்கம்

நிரந்தர வதிவிட உரிமையும் அடையாள அட்டையும் 90
குரு அரவிந்தன்

கணவனைப் பேணும் மனைவி 92
வி. கந்தவனம்

அரியாலை ச. உருத்திரேஸ்வரன் 94
ப. ஸ்ரீஸ்கந்தன்

மெல்லிசைப் பாடகர் எஸ்.கே.பரராஜசிங்கம் 94
கே. எஸ். பாலச்சந்திரன்

நிதித் திட்டமிடலும் ஆயுட் காப்புறுதியும் 98
சிறீதரன் துரைராஜா

# விலையும் பிழையும்

சிவாஜினி பாலராஜன்

பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், தொலைக் காட்சிகள், வானொலி அனைத்திலும் எப்போது கேட்டாலும் மலிவு விற்பனை மலிவு விற்பனைதான். அதுமட்டுமல்ல பெரும்பான்மையாக ஒரு கிழமையில் ஆகக் குறைந்தது மூன்று தடவைகளாவது வீடு தேடி flyer வந்துவிடும். இவற்றைப் பார்த்து கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குவோர் பலர் இருந்த போதிலும் கடைகளில் சாமான் வாங்கிய பின் flyerஇல் போட்டிருந்த மலிவு விலைதான் தங்களுடைய விலைச் சிட்டையில் அடிக்கப்பட்டு இருக்கின்றதா என்பதை கவனிப்போர் மிகச் சிலரே.

நாட்டில் ஒவ்வொரு விதமான சட்ட ஒழுங்கு அமைப்புக்களையும் நிலைநாட்ட அரசினால் வெவ்வேறு வகை அரச அமைப்புக்கள் இயக்கப்பட்டு வருகின்றது. அதில் The Competition Bureau எனப்படுவது Competition Act, the Consumer Packaging and Labelling Act, the Textile Labelling Act, Precious Metals Marking Act என்னும் விடயங்கள் சம்பந்தப் பட்ட சட்ட ஒழுங்கினை நிலை நாட்டுவதுடன் வெவ்வேறு வர்த்தக நிறுவனங்களுக்கு இடையில் மிகவும் நியாயமான (மலிவு விற்பனை அல்லது விலைக் கழிவு போன்றவற்றில்) போட்டியினை கடைப்பிடிக்கவும் கனடிய மக்கள் இவ்வகையான போட்டிகளினால் வெவ்வேறு வர்த்தக நிறுவனங்களுடைய விலைகளினால் பயன் பெறுவதையும் நிச்சயப்படுத்திக் கொள்கின்றது.

The Competition Bureau நிறுவனமானது collaborative efforts of the Retail Council of Canada (RCC), the Canadian Association of Chain Drug Stores (CACDS), the Canadian Federation of Independent Grocers (CFIG), and the Canadian Council of Grocery Distributors (CCGD). என்னும் நிறுவனங்களுடன் சேர்ந்து Scanner price accuracy voluntary code எனப்படும் ஒரு செயற்பாட்டு வழிமுறையினை அறிமுகப்படுத்தி உள்ளது. இது 2002ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறையானது வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் பொருட்களில் அதாவது scanned Universal Product Code (UPC), bar coded, அல்லது Price Look Up (PLU) முறையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களுக்கு உரியதாகும். இம் முறையின் சில முக்கிய அம்சங்களாவன:

- மக்களுக்கு சுலபமாகவும் வெளிப்படையாகவும் வர்த்தக நிறுவனத்தின் scanner price accuracyஇனைத் தெரியப்படுத்துவது
- Scanner Price Accuracy Committee மூலம் வர்த்தக நிறுவனங்களுக்கு ஓர் கட்டமைப்பு நியமனத்தை உருவாக்கித் தருவது

### எந்தெந்த வர்த்தக நிறுவனங்கள் இதில் பங்கு கொள்கின்றன? எவ்வாறு கண்டு பிடிப்பது?

**CACDS Supporting Companies:** Shoppers Drug Mart, The Groupe Jean Coutu (NB and Ont only), Lawton Drug Stores, London Drugs, Lovell Drugs, Pharma-save (BC and Sask), Pharma Plus

**CCGD Supporting Companies:** Canada Safeway Limited, The Great Atlantic and Pacific Tea Company of Canada Limited, Loblaw Companies Limited, Sobeys Inc., Metro Inc., Thrifty Foods, Costco Wholesale Canada Ltd., Co-op Atlantic Federated Co-operatives Limited

**RCC Supporting Companies:** Costco Wholesale Canada Ltd., The Home Depot Canada, Canadian Tire Corporation Ltd., Toys r Us, Rona, Wal Mart Canada Corp., Giant Tiger Stores Ltd., The North West Company, Best Buy/Future Shop, 2 Home Hardware franchisees

**CFIG Supporting Companies:** Thrifty Foods, Overwaitea Food Group, The Harry Watson Group, Longos Brothers Fruit Markets , and other + 1374 independent locations.

வர்த்தக நிலையத்தில் கீழ்காணும் படங்களில் ஏதாவது ஒன்று அல்லது சில இருக்கும். இவ்வாறு இப்படங்கள் இருக்கும் நிறுவனங்கள் இதில் சேர்ந்து கொண்டவையாகும். பாவனையாளர் வர்த்தக நிலையத்திலேயே சென்று நடந்த பிழையினைத் திருத்தும் படி கேட்கலாம். அவ்வாறு வர்த்தக நிலைய மட்டத்தில் பிரச்சனை தீர்க்கப்படாவிடின் 1-866-499-4599 என்னும் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டால் அவர்கள் அதற்கான வழிமுறையினை பாவனையாளருக்கு செய்து கொடுப்பார்கள். இந்த நாட்டு வழக்கின்படி "customers are always right" எனவே பாவனையாளர் தாராளமாகச் சென்று கேட்கலாம். சரியான முறையில் இதனைச் செய்ய வேண்டியது அவர்களது கடமை.

### எவ்வாறு இது நன்மையளிக்கின்றது?

பாவனையாளர் ஒரு பொருளை வாங்கும் போது அப் பொருளை அவர்கள் Scan பண்ணி தட்டில் (shelf price) போடப்பட்டிருக்கும் அல்லது விளம்பரத்தில் போடப்பட்டிருக்கும் விலையினை விடக் கூடுதலாக அறவிடப்பட்டு பாவனையாளர் அதனை வர்த்தக நிலையத்திற்குச் சென்று நிரூபித்தால் அப்பொருள் $10க்குட்பட்ட விலையுடைய பொருளாயின் பாவனையாளருக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும். இது 10 டாலருக்கு உட்பட்ட பொருளுக்குத் தான் இச் சட்டம்.

> " ஒரு பொருளை வாங்கும் போது அப் பொருள் shelf priceல் அல்லது விளம்பரத்தில் போடப்பட்டிருக்கும் விலையினை விடக் கூடுதலாக அறவிட்டதை பாவனையாளர் நிரூபித்தால், அப்பொருள் $10க்குட்பட்ட விலையுடைய பொருளாயின் பாவனையாளருக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும். "

பொருள் பத்து டாலரிலும் பார்க்க கூடுதலான பெறுமதியாயின் ஆகக் கூடியது 10 டாலர்கள் கழிவு பாவனையாளருக்கு கொடுக்கப்பட வேண்டும். மேலும் ஒரே விதமான பொருட்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் கொள்வனவு செய்யப்படும் போது முதலாவது பொருள் இனாமாக அல்லது 10 டாலர் கழிவிலும் ஏனையவை சரியான விலையில் விலை திருத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

தவறுகள் நடைபெறுவது சாத்தியம். சில சமயம் வர்த்தக நிலையங்கள் flyerஇல் தவறான விலை போட்டிருப்பார்கள். பின்னர் அத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு திருத்த அறிக்கை வெளியிட்டிருப்பார்கள். இவ்வாறு புதிய flyerஇல் அல்லது பொருள் அடுக்கப் பட்டிருக்கும் தட்டில் Correction notice போட்டிருந்தால் பாவனையாளர் இலவசமாகவோ விலைக் கழிவோ பெறும் தகுதி அற்றவராவர்.

### வர்த்தகர் செய்யவேண்டியது:

- தனித்தனியாக விலை போடப்படாத பொருட்களுக்கு அவை இருக்கும் இடத்தில் விலைப்பட்டியல் மட்டுமல்லாது பொருட்களுக்குரிய விபரம் விளக்கமாக எழுதப்பட வேண்டும்.
- தட்டில் அடுக்கப்பட்ட பொருட்களுக்கு பொருள் பற்றிய விளக்கம், விலை, என்பவை மட்டுமல்லாது விலை 28-point bold type printஇலும் பொருள் பற்றிய விபரம் ஆகக் குறைந்தது 10-point type printஇலும் குறிக்கப்பட வேண்டும்.

### வாடிக்கையாளர் கவனிக்க வேண்டியது:

- ஆகக் குறைந்த தகவல்களாக வர்த்தக நிலையத்தின் பெயர், பொருள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, விலை, கொள்வனவு செய்யப்பட்ட பொருளின் விபரம் என்பன விற்பனைச் சிட்டையில் இருக்கின்றதா என கவனித்துக் கொள்ள வேண்டும்.

sivagini.bala@thaiveedu.com


■ ■ ■

## அழகிய பூஞ்செடிகள்

# ஊமத்தை

# (Datura - Moon Flower)

வீட்டுத் தோட்டம் - 21



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

ஊமத்தை; குடும்பம் சொலனேசியேயைச் (Family Solanaceae) சேர்ந்தது. வர்க்கம் டற்றுறா(Datura) ஆகும். இவ்வர்க்கத்தில் ஒன்பது இனங்கள் உண்டு. இனோஷ்யா(inoxia) வைச் சாதாரணமாக எல்லோரும் பயிரிடப்படுவதைக் காணலாம்.

வீட்டுத்தோட்டத்தில் இச்செடியினை வளர்க்கலாமா என்ற கேள்வி பலரிடமும் எழலாம்? குப்பைக்கருகே, புழுதிவாய்ந்த புதரின் பக்கத்தே, எப்படியோ முளைத்துவிடுவது டற்றுறா. ஆனால் மேலைநாடுகளில் வீட்டுப் பூந்தோட்டத்தில் அழகிய பூக்களையுடையதாக இச்செடி காணப்படுவது அதிசயமாகவும் இருக்கின்றது. இருந்தும், பார்ப்பதர்க்கு பூக்கள் தோற்றத்தில் வடிவாகவே இருக்கின்றது. இச் செடியின், வெண்மை நிறமானதும் குழலுருவான தோற்றமும், ஆழ்ந்து கவனிக்கும்போது, குழல் வாசிக்கும்போது வாசிப்பவர், எப்படிக் குழலை மேலும் கீழும் அசைக்கின்றாரோ அதுபோன்ற நிலையில், பூவானது இரவில் மேல் நோக்கியும் காலை நேராகவும் மாலை கீழ் நோக்கியும் காணப்படுகின்ற நிலைகளின் அழகுதான் எல்லோரது மனதையும் ஈர்த்து, எமது பூந்தோட்டத்தில் பயிரிடப்படுகின்றது.

குழலூதும் கண்ணனுக்கு இப்பூவென்ன உதாரணமோ? பூக்கள் ஆறு அங் நீளமானவை. இவை வெப்பகாலம் நடுப்பகுதியிலிருந்து இலையுதிர்காலம் ஊடாக உறைபனி வரும் வரை காணப்படும். எனது பூந்தோட்டத்திலும் இச்செடி காணப்பட்டதால் அதனைப் படம் பிடித்து, கட்டுரையில் இணைத்துள்ளேன்.

மத்திய, தென்அமெரிக்காவின் பூர்வீகச் செடியாக இருந்தபோதிலும் ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பின்னர் அறிமுகப் படுத்தியுள்ளனர். 1768ம் ஆண்டில் ஆங்கிலத் தாவரவல்லுணரான பிலிப் மில்லர் என்பவர் இச்செடிக்கு ''டற்றுரா இனோஷ்யா'' என பெயரிட்டார். இதனது இயற்கையான பயிர்ச் செய்கையின் பரம்பல், விசித்திரமாக இருக்கின்றது. ஏனெனில் உலகின் எல்லா வெப்ப மண்டலங்களிலும் பரந்து காணப்படுவதால், இனங்களில் பலவிதமான வேறுபாடுகளையும் நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

### செடியின் தோற்றம்:

பெரிய இலைகளின் வசீகரத்தன்மை, செடி வளர்ச்சியின் விஸ்தீரணம், இறக்கும்வரை





தனிப்பூ



மகரந்தச்சேர்க்கை



கனி

இலைகளின் பச்சைநிறம், பரந்து காணப்படும் அழகியபெரிய பூக்கள், குறிப்பான முட்களுள்ள காய்கள் ஒருங்குசேர்ந்தமை, செடிகளை உலகநாடுகள் எல்லாம் இன்று தோட்டங்களில் பயிரிடுகின்றனர். பூக்களின் தோற்றம் எல்லோரையும் கவர்ந்துவிடுகின்றன. வட்டவடிவான காய்கள் முட்களைக் கொண்டிருக்கும். பழமாவதால் வித்துக்களின் பரவல் இலேசாக்கப்படுகின்றன. வித்துக்கள் அவ்வவ்விடங்களில் முளைப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. செடியின் நிலக்கீழ்த்தண்டுகள் எடுக்கப்பட்டு சேமிக்கப்பட்டும் அடுத்த பருவம் உண்டாக்கப்படுகின்றன.

வருடந்தோறும் முட்களுள்ள பழத்தின் வித்தனது விலங்குகளின் மயிர்களோடு சிக்கலாகி வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுதுக்களிலிருந்து பயிரிடப்படுவது சிரமமாக இருப்பதை நாம் அறிவோம். சிலவேளைகளில் செடியானது பனியையும் தாங்கி மறு வருடமும் திரும்பி உண்டாவதைக் காணலாம். இல்லையேல், இதனது கிளங்குகளிலிருந்தும் நன்றாக உண்டாகின்றன. செடியானது வெப்பத்தை நன்கு வரவேற்கும். வேர்கள் அநேகமாக காய்ந்த நிலையில் இருக்கவேண்டும். பங்கசு தாக்கம் ஏற்படாது பார்ப்பதற்கு பசளை, உரம் உபயோகிக்கக்கூடாது.

இங்கு ஊமத்தை குடும்பத்தில் உள்ள சில இனங்களைத் தருகின்றேன்

- Datura inoxia
- Datura ceratocaula
- Datura discolor
- Datura ferox
- Datura wrightii
- Datra stramonium

sekari.s@thaiveedu.com

■ ■ ■



Family Myrtaceae: - Moraceae

## கற்பூரத்தைலமரம்

(Botanical Name:Eucalyptus globulus : Eng.Name: Eucalyptus)

சுமாரான வெப்ப நிலைகளில் வாழக்கூடிய மரமாகும். Captain James Cookeஇனது ஆராய்ச்சிப் பிரயாணத்தின்போது 1777 ஆண்டளவில், கற்பூரத்தைலமரத்தின் ஒரு இனமாக Eucalyptus oblique என்ற பெயர் அறிமுகமானது. கற்பூரத்தைலமரம் இந்தியாவில் நீலகிரிப் பிரதேசங்களில் பரந்து காணப்படுகின்றது. அவுஸ்திரேலியா, ரஸ்மேனியா போன்ற இடங்களில், பிரதான மரங்களின் தொகுப்பு வர்க்கமாகவே கருதி வளர்க்கப்படுகின்றன. இருந்த போதிலும், ஆபிரிக்கா, இந்தியா, சைனா, ஐரோப்பா போன்ற நாடுகளிலும் பயிரிடப்படுகின்றன. மரமானது ஏறக்குறைய 30-60 மீற்றர் உயரம் வளரக்கூடியது. சிறிய இனங்கள் 10 மீற்றர் உயரமாக வளரும். கடும் பச்சை நிறமானதும் எண்ணெய் சுரப்பிகளைக் கொண்டுள்ள தடித்த இலைகள், பளிங்காக இருப்பது அழகாக இருக்கும். பூக்கள் கூடுதலான தேனைச் சுரப்பதால் பூக்களை நாடும் வண்டுகள், பறவைகள், வைளவால்கள் போன்றவற்றிற்கு பூவின்தேன், உணவாக அமைகின்றது.

உயிர்ப்பான இலைகளிலிருந்து உற்பத்தியான எண்ணெய், வர்த்தக ரீதியில் பெருந் தொகையாக, பலவிதமான தேவைகளுக்கேற்ப பொருளாதாரச் சந்தையில் காணப்படுகின்றன. தைலம் போன்றவை தடிமன், இருமல், தலையிடி போன்றவற்றை போக்கும். இரு துளிகள் எண்ணெய் கொதி நீரில் விட்டு, நீராவியினை உள்ளெடுக்கும்போது கடுமையான நுரையீரல் வியாதிகள் சுகப்படுகின்றன. பலவித பூச்சிகளின் எதிர்ப்புக் கொல்லிகளாக எல்லாப் பாகங்களும் உபயோகிக்கப்படும். எல்லாப்பகுதிகளும் சாயம் செய்வதற்கு பயன்படும். மரங்கள் பெறுமதியான பலகைகளுக்கும் முழு மரங்கள் கம்பங்களுக்கும் உபயோகிக்கப்படும். பட்டு, கம்பளி போன்றவற்றிற்கு மரத்தின் நார்கள் உபயோகமாகும்.

■ ■ ■



R&S AUTO SALES

HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING

சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்

Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield

Radha





Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated



416.200.5470




சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

NO FEE FOR RESIDENTIAL MORTGAGES
• Rate discount up to 3%
• Give me a call for free consultation
• Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

Our interest rates starts from 0%
• First-time Buyers
• Renewal
• Refinancing
• Pre-Approval
• Self Employed
• Bankruptcies
• Poor Credit
• New Immigrants
• Debt. Consolidation
• Construction Loans

invis

• Residential
• Industrial
• Commercial

1st, 2nd, 3rd Mortgages

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

After Approval

Joy is yours
Pride is ours





அகிலா செந்தில்
Akila Senthil, AMP
Lic: M08002166
Senior Mortgage Consultant,
Team Leader, Platinum Award Winner
A Challenging Prosperity Long Term Experienced Team Leader

Cell: 416.895.4321

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2




Taxes: $3,475
Possession: Flexible but Long Closing Possible

- Excellent Location-Location-Location
- Many upgrades-Shows well
- 1 year new Semi-Detached home
- 4 Bedrooms-1905 sq.ft
- 3" Strip Hardwood Floors thru out
- Oak Stairs
- Upgraded Kitchen
- Ceramic Backsplash
- Stainless Steel Double Rangehood
- Stainless Steel Fridge (will replace new)
- Stainless Steel Gas Stove
- Central Vacuum
- Upgraded California Shutters
- Fully Fenced Yard
- Stone front & All Brick
- Professionally Painted
- Direct Access to Garage
- No Sidewalk



CALL NOW: V. Logan, Broker
Coldwell Banker Exceptional R.E Services
416-497-9794 (Office)
416-410-1620 (Direct)
COLDWELL BANKER

# Residential, Commercial & Investments...

**SALE/LEASE OPPORTUNITY**




*Newly Built Plaza. Ready For Occupation*

**Bovaird/Chinguacoucy**

Higher Growth/High Traffic Location.
Signalized Intersection.
Units Available For Sale Or Lease
Call for exclusive uses!

Kitchen FOOD FAIR
*Looking for a Convenience Store Franchise Opportunity?*




New locations coming to Aurora, Ajax, Brampton
Call now for more info!
Dir: 416.560.4728

*Looking for a New Real Estate Career...*
For Phase I, Phase II & Phase III Residential, Commercial Students
**Free Real Estate Tutoring in Mississauga**

CITYSCAPE
REAL ESTATE LTD, BROKERAGE
25 Watline Avenue, Suite 402, Mississauga, ON

A MEMBER OF
Commercial Division
Toronto Real Estate Board
www.trebcommercial.com
CCIM

**Neel Surendran** CCIM
Broker of record.
Cell: 416.560.4728
Bus: 905-241-2222
ici@rogers.com



குறுந்திரைப்பட விழா 2009

VIMBAM TAMIL SHORT FILM FESTIVAL

விம்பம் - 2009

28 NOVEMBER 2009

சனி மாலை 5.00 மணி

Trinity Centre
East Avenue
London E12 6SG

இப் போட்டியில் கலந்துகொள்ள
கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.
படைப்புகள் யாவும் 20 நிமிடங்களுக்குக் குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.
உங்கள் படைப்புகளை DVD யில் பதிவுசெய்து

10. 11. 2009

திகதிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு:
VIMBAM, 4 Burges Road, London E6 2BH, UK
Tel: 0208 470 7883, 0208 471 5636
Mobile: 07956 490 694, 07984 136 160
E-mail: vimbam@aol.com

VIMBAM

ஊடக அனுசரணை
நாழிகை
வீடு
வீரகேசரி
தீபம் TV



# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

invis



**Siva Ratnasingam**
*Lic: M08002133*
Mortgage Consultant
***2005,2006,2007,2008 Diamond Award Winner***
**416.430.0111 ext:1**
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

# Buy / Sell Properties

**Eglinton & Cofederation Pkwy**



3 Bedrooms, 3 Washroom
**$329,900**

**Eglinton & Central Pkwy**



3 Bedrooms, 2 Washroom
**$361,900**

**Markham & Brimorton**




3 Bedrooms, 2 Washroom
**$299,800**

**Markham & Lawrence**



3+2 Bedrooms, 2 Washroom
**$299,900**

**McCowan & Denison**



3+2 Bedrooms, 4 Washroom
**$388,888**

**Bur Oak & 9th Line**



3 Bedrooms, 4 Washroom
**$369,000**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
**Brokerage***
**Phone : 416-298-3200**
**Cell : 416-903-4663**
31 Progress Ave. Suite 210, Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR



**Kirew Kanagasabai**
Broker of Record
Kirewk@yahoo.com

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**
*Broker*
**Cell: 416-728-5772**



**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**

Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

# இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு (Fall - House maintenance)

நாம் எமது வாழ்நாளில் செய்திருக்கக்கூடிய பாரிய முதலீடு 'வீடு' என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே அத்தகைய முதலீட்டைப் பேணி உரிய முறைப்படி பராமரிக்க வேண்டியது மிக அவசியமானது. தவறும் பட்சத்தில் அல்லது கவனயீனமாக இருந்துவிட்டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ள வேண்டி வரலாம். மறுவார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள் போட்ட முதலீட்டிற்கு ஏற்ற முழுப் பலாபலனையும் அடைய முடியாதுபோகலாம். இதனைக் கருத்திற்கொண்டே வீட்டுப் பராமரிப்புப் பற்றி பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றது.

கனடாவில் மாறிவரும் பருவகால நிலைக்கேற்றவாறு நாமும் வீட்டுப்பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பருவ கால மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பராமரிப்பு வேலைகளை, முக்கிய 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

- வசந்தகாலப் பராமரிப்பு (Spring)
- கோடைகாலப் பராமரிப்பு (Summer)
- இலையுதிர் கால பராமரிப்பு (Fall)
- குளிர்காலப் பராமரிப்பு (Winter)

கடந்த இரு மாதங்களிற்கு முன்னர் இப்பகுதியில் 42வது தொடர் கட்டுரையில் கோடைகாலப் பராமரிப்பு பற்றி விளக்கப்பட்டிருந்தமை பலருக்கும் நினைவிருக்கலாம். காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு இந்தத் தொடரில் இலையுதிர் கலத்திற்குரிய பராமரிப்பு பற்றி பார்ப்போம்.

வழமைக்கு மாறாக இவ்வாண்டு குளிர்காலம் நேரகாலத்திற்கே தொடங்கிவிட்டதுபோலத் தெரிகிறது. எனவே அதற்கேற்றபடி எமது பராமரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். கோடைகாலத்தில் ஓடியாடித் திரிந்த நாம் வரப்போகும் 4-5 மாதங்களுக்கு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைபட்டுக் கிடப்பது மட்டுமல்லாது எமது நடவடிக்கைகளையும் குறுகிய வட்டத்துள் அடக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அத்தகைய குளிர்காலத்திற்கு எற்றவாறு முன்கூட்டியே வீட்டினை, வீட்டுச் சூழலைத் தயார்படுத்துவதையே இலையுதிர்காலப் பராமரிப்பு குறித்துநிற்கின்றது. மறுவார்த்தைகளில் கூறுவதானால் வெள்ளம் வருமுன்னரே அணைகட்டுதல் அவசியல்லவா?

## வெப்பமாக்கி Furnace

வீட்டில் இருக்கக்கூடிய இயந்திர கருவிகளில் வெப்பமாக்கி (Furnace) மிக முக்கியமானது. எதிர்கொள்ளப்போகும் குளிர்காலத்திற்கு ஏற்ப அதனை தயார்நிலையில் வைத்துக்கொண்டால் பெருங்குளிர்நேரத்தில் ஏற்படப்போகும் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான வீடுகளில் எரிவாயுவில் இயங்கும் (Gas Furnace) வெப்பமாக்கிகளே பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய வெப்பமாக்-

**வீடும் விடியலும் - 45**

கிகளை குறைந்தது இரண்டு வருடத்திற்கொரு முறை தகுதிவாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் (Qualified Technician) மூலம் சரிபார்த்துக்கொள்வது நல்லது. சிலர் 'Winter Tune up' என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் தயார்படுத்திக்கொள்வதும் உண்டு.

எண்ணெயில் இயங்கும் (Oil Furnace) ஆக இருந்தால் ஒவ்வொருவருடமும் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

- வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filter) 3 மாதத்திற்கொருமுறை மாற்ற வேண்டும். வெப்பமாக்கியின் தொழிற்பாடு குளிர்காலத்தில் தொடர்ச்சியாக இருக்கப்போவதால் முன்கூட்டியே இதனை மாற்றி தயார் நிலையில் வைத்திருத்தல் மிகப் பொருத்







தமானது. ஆரோக்கியமான வாழ்விற்கு இச்செயற்பாடு மிக இன்றியமையாதது. தொய்வு, ஒவ்வாமை (Ashma, Alergy) போன்ற நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீட்டில் இருந்தால் வடிகட்டியை மாற்றும் போது ஏற்ற தரமான வடிகட்டிகளை மாற்றுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதிய வடிகட்டியைப் போடும் போது வடிகட்டியில் போடப்பட்டிருக்கும் அம்புக்குறி குளிர்காற்றுப் பகுதியில் இருந்து வெப்பமாக்கி நோக்கி போகும் விதத்தில் போடப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- முதன்மை விளக்கு (Pilot Lamp) அணைக்கப்பட்டிருந்தால் அந்த விளக்கினைக் கொழுத்தி தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வெப்பமாக்கி 6-7 வருடத்திற்குட்பட்டதாக இருந்தால் Pilot Lamp இல்லாமல் இருக்கலாம். அதாவது புதிய வெப்பமாக்கிகளில் பொருத்தப்பட்டிருக்கும் Electronic Ignitor' தேவையான போது மட்டும் இயங்கி பொறியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தமை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## Heat Register

இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Duct Cleaning செய்வது நல்லது. தவறினால் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு அறைகளிலும் மற்றைய வீட்டுப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய வெப்பமூட்டும் வழிகளுக்கான தடைகளைத் (Heat Register) திறந்து சுத்தம் செய்து (Vacum) வைத்துக்கொள்வது நல்லது.






## தண்ணீர் குழாய்கள் (Pipes)

கோடைக்காலத்தில் முன்வளவு, பின்வளவு போன்ற இடங்களுக்கு இருக்கக்கூடிய தண்ணீர்க் குழாய்கள் மூலம் நீர்ப்பாய்ச்சி இருப்போம். தற்போது அவற்றின் பயன்பாடு அடுத்த கோடைகாலம் வரை இருக்காது. எனவே இவற்றுக்குரிய கட்டுப்படுத்திகள் (Control Valve) வீட்டிற்குள் உள்ள நிலக்கீழ் அறையில் இருக்கும். பொதுவாக முன்பக்கத்திற்கு ஒன்றும் பின்பக்கத்திற்கு ஒன்றுமாக 2 கட்டுப்படுத்திகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து இறுகப்பூட்டிவிடுதல் மிக அவசியம். தவறும் பட்சத்தில் குளிர்காரணமாக தண்ணீர் உறை நிலைக்குச் செல்லும் போது குழாய்கள் வெடித்து வீட்டிற்குள் வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

அத்துடன் வெளியில் உள்ள பிளாஸ்ரிக் குழாய்களில் இருக்கும் தண்ணீரைத் திறந்து வடியவிடுதல் வேண்டும். அல்லது அத்தகைய குழாய்களிலும் வெடிப்பு ஏற்படுவதால் அடுத்த வருடம் பாவிக்க முற்படும்போது ஒழுக்கு ஏற்படுவதைக் கண்டு புதிதாக அவற்றை மாற்ற வேண்டிய நிலை உருவாகும்.

## குளிரூட்டி (AC)

இனி வரப்போகும் 6-7 மாதங்களுக்கு குளிரூட்டியின் தேவை இருக்காது எனவே அதனை

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



உரிய முறையில் பேணினால் அதன் ஆயுட் காலத்தைக் கூட்ட வாய்ப்பு இருக்கும். குளிரூட்டிகளை கொட்டும் பனியில் மூழ்க விடுவதைவிட உரிய உறைகளைப் போட்டு மூடி வைத்தல் நல்லது. துருப்பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிப்பகுதிக்கு 'Anti Rust Spray' அடித்த பின்னர் மூடிவிடுதல் நல்லது. 4-5 டொலர்களுக்கு வாங்கக் கூடிய Anty Rust Spray பலதடவைகள் பாவிக்கப் போதுமானது.

## Weather Stripes

தலைவாசற்கதவு, பின்கதவு, கராஜ் கதவு என்பன குளிர் உட்புகாதவாறு மூடப்படுகின்-





றனவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும். இடைவெளிகள் காணப்படும் பட்சத்தில் காலநிலைக்கேற்ற Weather Stripeஐ பொருத்தி விடுதல் அல்லது சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் ஏற்படும் வெப்பமாக்கலுக்கான செலவின் கணிசமான அளவு திருப்திகரமில்லாத வாசல்களின் ஊடாக ஏற்படுவதாக பல அறிக்கைகள் கூறுகின்றன.

## Central Humidifer ஈரப்பதனாக்கி

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னரே ஈரப்பதனாக்கிக்குரிய வடிகட்டிகளைச் (Evaporator grid) சுத்தம் செய்து வைத்திருப்பது நல்லது. ஒவ்வொருவருடமும் இலையுதிர்காலப்பகுதியில் இத்தகைய வடிகட்டிகளையும் மேலதிக நீர் வழிந்தோடும் குழாய்களையும் நீரினால் கழுவி சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.

## Garage Man-Door


கராஜ்ஜில் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானே இறுக்கமாக மூடவேண்டியது மிக அவசியம். குளிர்காலத்தில் ஊர்திகளை வெப்பமாக்குவதற்காக கராஜ்ஜின் உள்ளே இயங்க விடுவதும், நிறம், மணம் அற்ற காபனீரொட்சைட் வாயு பாதுகாப்பற்ற கதவுகளின்

37ம் பக்கம் பார்க்க...



# WHO DO YOU CALL? Town Of Markham

Customer Service Centre: (905) 477-5530




## மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker

**Direct: 416-262-4176**

HOMELIFE
HIGHER STANDARDS




**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o




**Morningside / Staines**
3 Bedrooms 3 Washroom




**Hwy 10 & Steeles**
4+2 Bedrooms 4 Washroom



**HomeLife Today Realty Ltd., Brokerage***

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# வேகமாகப் பரவி வரும் H1N1 வைரஸ்

- சிவா சுப்ரா -

உலகம் முழுவதும் வேகமாகபரவி வரும் பன்றி காய்ச்சல் என்று அழைக்கப்படும் H1N1 வைரஸ் புளுகாய்ச்சலை குணப்படுத்துவதற்கும் மற்றும் தடுப்பதற்கும் பல தயாரிப்பு, மற்றும் வினியோக நிறுவனங்கள் பற்பல மருந்துக-ளை தயாரிக்கும் முயற்சிகளில் மிக அவசர மாக இறங்கியுள்ளன.

ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் இதயநோய், சிறுநீரகம், ஈரல், சுவாசப்பையில் நோய் உடையவர்க-ளையும் இந்த நோய் அதிகமாகத் தாக்கும் ஆபத்து உள்ளது.

இதுவரை கனடாவில் ஒன்டோரியோ மாகா-ணத்தில் 28 பேரும், கியூபெக்கில் 27, பிரிட்டிஸ்கொலம்பியாவில் 9, அல்பட்டாவில் 9, மணிடோபாவில் 7, சஸ்கச்சுவானில் 5, நோவஸ்கொஸ்யாவில் 1, இனுவிட் மாகா-ணத்தில் 1என்றும் ஒட்டு மொத்தமாக 86 பேர் இந்த நோயால் இறந்துள்ளனர். உலகம் முழுவதும் 414,000 பேருக்கு இந்த தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் அதில் 5,000 பேர் இறந்து விட்டதாகவும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏராளமான வலைதளங்களில் அந்த வைரஸ் தொற்று நோயை தடுப்பது அல்லது குணப்-படுத்துவது சம்பந்தமாக, காற்றை தூய்மைப் படுத்தும் கருவிகள், மூலிகை மருந்துகள், inhalerகள் மற்றும் body washes என்று மித மிஞ்சிய விளம்பரங்கள் வந்த வண்ணம் உள்ளன.

பன்றி காய்ச்சலை குணப்படுத்தும் Shampoo என்று ஒரு விளம்பரம் வந்தாலும் பயந்து நடுங்கும் மக்கள் அதை உடனே வாங்க துடிக்கிறார்கள். ஆனால் இந்த மாதிரியான விளம்பரங்கள் அறிவியல் அடிப்படைகளை ஆதாரமாக கொண்டிருக்கவில்லை என்று ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்துறை அதி காரிகள் கூறுகிறார்கள். இப்படி விளம்பரம் செய்யப்பட்ட H1N1 ஃபுளு காய்ச்சலை குணப்-படுத்தும் அல்லது தடுக்கும் என்று வியாபார நோக்கில் போலியான மருந்துகள் பற்றி வரும் மோசடி விளம்பரங்களை தடைசெய்வதற்கு ஒரு எச்சரிக்கை அறிவிப்பை விடுவிக்க கனடாவின் தேசிய ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்துறை சமீபத்தில் தீர்மானித்துள்ளது.

"பெருவாரியாகப் பரவும் தொற்று நோய்களும் மற்றும் மக்கள் மனதில் ஏற்படும் பயமும் ஆழ்ந்த யோசனையுடன் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்" என்று McGill Center for Medicine, Ethics and Lawன் நிறுவன தலைவர் Margaret Somer Ville தெரிவித்தார். ஆகையால் இதில் எந்த தவறும் செய்யா-தீர்கள். Influenza காய்ச்சல் பரவுவதை தடுப்-பதற்கு பல வழிகள் உள்ளன. உங்கள் கை-களை அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்தி-ருங்கள் alcohol based hand Sanitizerகளை பயன்படுத்துங்கள்.

ஆனால் H1N1 காய்ச்சலை குணப்படுத்தும் அல்லது தடுக்கும் என்று Onlineல் வரும் விளம்பரங்களைப் பார்த்து மாத்திரைகளை-யோ அல்லது திரவ மருந்துகளையோ வாங்கும் நுகர்வோர்கள் தங்கள் பையில் இருக்கும் பணத்தை தான் குறைப்பார்களே தவிர வேறு எந்த பயனையும் அடையப்-போவதில்லை.

H1N1 காய்ச்சலை தடுப்பதற்கு Puerarin and Radix Sileris போன்ற பல்வேறு மூலிகைகள் மற்றும் சாறுக் Herbal Tea என்னும் அதுபோல் நான்கு மாறுபட்ட வகை மருந்துகளை சீன மருத்துவ முறைப்படி தயாரித்து அளித்து விருகிறோம் என்றும் ஒரு நிறுவனம் விளம்-பரம் செய்கிறது. மேலும் கூடுதல் விபரங்கள் அறிய அந்த நிறுவனத்தை தொலைபேசி மூலம் அழைத்தால், பதிலே கிடைப்பதில்லை கொடிய பன்றி காய்ச்சல் அல்லது அது போன்ற வேறு எந்த influenza காய்ச்சலையும் குணப்படுத்தும் அல்லது தடுக்கும் என்று Flugonazol என்ற பெயருள்ள ஒரு மருந்து Onlineல் விற்பனை செய்யப்படுகிறது.

> "*H1N1* நோய்க்கான தடுப்பு மருந்தை கனடாவின் சுகாதாரத் துறை பரிசீலித்து அங்கீகாரம் வழங்கியுள்ளது.
> இந்த தடுப்பு மருந்து தற்போது மக்களுக்கு வழங்கப்படுகின்றது.
> இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்ளுமாறு *Federal Health Minister Leona Aglukkaq* அவர்கள் கனேடிய மக்களைக் கேட்டுள்ளார்.
> 50.4மில்லியன் *doeses* தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.
> இது கனடாவுக்குப் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
> இந்த தடுப்பு மருந்தை எடுக்க விரும்புகின்றவர்கள் தங்கள் குடும்ப மருத்துவர் மூலமாக அணுகி மேலதிக விபரங்களை அறியலாம்.
> ஆறு மாதத்துக்கு குறைவான வயது உடைய குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை போடக் கூடாது."

வயது வந்தவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மற்றும் மூத்தவர்களுக்கும் தனித்தனியான மருந்து கூட்டும் முறைகளில் தயாரிக்கப்பட்டு ஒரு bottleக்கு சுமார் 200 U.S டாலர் விலை-யில் அந்த மருந்து விற்கப்படுகிறது. அந்த நிறுவனத்தையும் நேற்று அணுகமுடியவில்லை. பொதுவாக Onlineல் விற்கபடும் மருந்துகள் உண்மையில் குணப்படுத்தும் என்பதற்கு நிருபணமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அரசாங்க முகமை அல்லது சுகாதாரத் துறை-யால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் என்று நுகர்வோர்கள் அவைகளை பற்றி நினைத்து ஏமாறுகிறார்கள்.

முகமூடிகள் போன்ற சில பொருள்கள் நன்-மையை விட தீமையை தான் அதிகம் அளிக்-கின்றன. மூகமூடிகள் ஃபுளுகாய்ச்சல் (flu) பொது மக்களுக்கு தொற்றுவதை தடுப்ப-தில்லை என்று கனடாவின் தேசிய சுகாதார கழகம் (The Public Health Agency of Canada) கூறுகிறது. ஏனென்றால் மக்கள் அவைகளை தவறாக அணிகிறார்கள். மேலும் அவைகளை போடும் போதோ அல்லது கழற்றும் போதோ வைரஸ் கிருமிகள் தொற்றிவிடும் அபாயம் இருக்கிறது.

H1N1 வைரஸ் பன்றி காய்ச்சல் அல்லது அதன் அறிகுறிகள் உள்ளவர்களிடமிருந்து, மற்றவர்களுக்கு அது பரவிவிடகூடாது என்-பதற்கு தான் பொது உடல் நலம் மற்றும் சுகாதாரத்துறை பணியாளர்கள் முகமூடிகளை பொது மக்களுக்கு வழங்குகிறார்கள்.

H1N1 காய்ச்சலுக்கு மருந்து அல்லது சிகிச்சை என்ற பெயரில் நிஜம் என நிரூபிக்கப்படாத பல்வேறு ரகமான gelகள், Kitகள், Supple-mentகள், Sprayகள் மற்றும் அங்கீகாரம் பெறாத பிறபொருள்களை வலைதளங்களில் விற்பனை செய்யும் நிறுவனங்கள் பற்றிய ஒரு விசலாமான பட்டியலை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக கழகம் தயாரித்துள்-ளது.

H1N1ஐ குணப்படுத்தும் என்று விளம்பரம் செய்யப்பட்ட போலியான மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள் என்று மே மாதத்தில் கனடா-வில் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் ஒரு எச்சரிக்கை அறிவிப்பு விடுத் துள்ளனர். அனால் கடந்த சில மாதங்க-ளுக்கும் மேலாக திடீரென்று பரவிவரும் H1N1 பன்றிகாய்ச்சலை குணப்படுத்துவது அல்லது தடுப்பது சம்பந்தமாக Internetன் வலைதளங்களில் (websites) பல எண்ணிக்-கையிலான மருந்துகள் விளம்பரம் செய்யப் படுவதை கண்காணிக்கும் பணியில் கனடா-வின் தேசிய ஆரோக்கிய கழகம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது என்று செய்தி தொடர்பாளர் Christelle Legault என்ற பெண்மணி எழுதி இருக்கிறார். "இத்தகைய போலியான மருந் துகளை" online மூலம் விற்பனை செய்ய-கூடாது என்று அறிவுரை அடங்கிய எச்சரிக்கை அறிவிப்பை தற்போது வெளியிட அரசுதுறை தீர்மானித்துள்ளது என்று அவர் தெரிவித்துள்-ளார். இந்த மாதிரியான பல மருந்து நிறுவனங்களை FDA தொடர்பு கொண்டபின், வலைதளங்களில் உள்ள தங்கள் விளம்பரங்-களை மாற்றுவதற்கும் மற்றும் திருத்திகொள்-வதற்கும். அந்த நிறுவனங்கள் சம்மதித்துள் ளன என்று அரசுதுறை வட்டாரங்கள் தெரி-விக்கின்றன. ஆனால் புதிய வலைதளங்கள் (sites) புதிதாக ஏராளம் வந்த வண்ணம் இருக்கின்றன.

சில சில்லறை வலைதளங்கள் online மூலம் ஒரு அன்றாட அடிப்படையில் இத்தகைய தனிப் பட்ட மருந்துகள் பற்றி விளம்பரம் செய்து கொண்டு தான் இருக்கின்றன. அத-னால் H1N1 காய்ச்சல் சம்பந்தமான மருந்-துகளை சட்டத்திற்கு புறம்பாக வினியோகம் செய்பவர்களை கண்டுபிடித்து தண்டிப்பது அரசு அதிகாரிகளுக்கு ஒரு பெரிய பிரச்சி னையாக ஆகிவிட்டது.

H1N1 Vaccine, rapid flu test kits மற்றும் H1N1 முகமூடிகள் ஆகியன விரும்பிய பலன்களை விட அதிகம் தந்தன என்று பல நூற்றுக் கணக்கான வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க பெற்ற நிரூபண சான்றுகள் என்று பல பொய்யான கடிதங்களை இதற்கு முன்பு Alibaba.com வலைதளம் விளம்பரம் செய்-துள்ளது.

H1N1 காய்ச்சல் பற்றிய பயம் மக்கள் மத்-தியில் பரவிவிட்டதால், அது சம்பந்தமான அறிவுப்பூர்வமான அறிவுப்புகளை மக்கள் நம்பதயங்குகிறார்கள். ஆனால் மக்களின் இந்த பயத்தை சில நிறுவனங்கள் தங்க-ளுக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்கிறார்-கள் என்பதை கனடியர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் Somerville கூறினார்.

siva.subra@thaiveedu.com

■ ■ ■

www.inayam.net

# வீடு விற்பதற்கான காரணங்கள்

### உங்கள் வீட்டை விற்பது எப்படி?

('How to sell your home' என்னும் ஒன்றாறியோ வீடு விற்பனைச் சபையால் வெளியிடப்பட்ட ஒரு நூலிலிருந்து தொகுக்கப்பட்டது).

சென்றமாதத் தொடர்...

**பாகம் - 03**

### மறுநிதி ஏற்பாடு செய்தல் Refinancing:

நாங்கள் முன்பு குறிப்பிட்டது போல வட்டி வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால், சில வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது வீட்டை விற்கத் தூண்டப்படுவர். நல்ல வட்டி வீதம் வீட்டுச் சந்தையைச் சூடாக்கி அதனால் விற்பனை சந்தையை நல்ல சூழலில் வைத்திருக்கும்.

வீட்டை விற்பதற்கு வட்டி வீதம் தான் ஒரே காரணம் என்றால், தற்போதைய உங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யுமானால், நீங்கள் உங்கள் வீட்டிற்கு Refinancing மறு நிதி பெற யோசிக்கலாம். இதனால் சொல்வது என்னவென்றால் உங்கள் வீட்டை குறைந்த வட்டி வீதத்தில் ஈடுவைப்பதே (புதிய ஈடு) இதனால் நீங்கள் mortgage கட்டும் மாதாந்த ஈட்டுத்தொகை குறைவடையும். (ஒருசிலர் ஈட்டுத்தொகையின் அளவை அதிகரிக்கச் செய்து தமது பிற செலவுகளை அதற்குள் அடங்குகின்றார்கள்.)

ஆனால் நீங்கள் ஒன்றை மனதில் வைத்திருத்தல் வேண்டும். அதாவது முடிய ஈட்டுத் தொகை (Closed mortgage) விடயத்தில் நீங்கள் கணிசமான தொகை அபராதம் செலுத்த வேண்டி ஏற்படலாம். நீங்கள் மறுநிதி செய்ததொகை அதிகமானால் நீங்கள் மிகப் பெரிய கட்டுத் தொகை கட்டவேண்டி ஏற்படலாம். எனவே பணம் கடன் கொடுக்க வேண்டின் இந்த ஏற்பாடு உங்களுக்கும் பொருளாதாரரீதியில் நியாயமானதென அறிந்து செயல்படுங்கள்.

### புதுப்பித்தல்: Renovation

இந்த மாற்று நடவடிக்கை வீடு விற்பவர்களில் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது உள்ள வீடுகளை திருத்தி விற்றுவிட்டுப் புதிய அல்லது தமக்கு உகந்த வீடுகளுக்கு மாறிச் செல்கின்றார்கள். புதுப்பித்தல் என்பது வழக்கமாக இருக்கும் இடத்தைப் புதுப்பித்தல் அல்லது இருக்கும் வீட்டின் அளவை அதிகரித்தல் அல்லது இரண்டுமே இருக்கலாம்.

எனினும் புதுப்பித்தல் இதயப் பலவீனமானவர்களுக்கு உகந்ததல்ல. இது அநேகமாக ஒரு அதிக செலவான விடயமாகும். ஒரேயடியாக உயர்ந்து உங்கள் கணிப்பு, திட்டம் எல்லாவற்றையும் தாண்டிச் செல்லக்கூடியது.

மேலும் உங்கள் திட்டத்தைப் பொறுத்து நீங்கள் பல நாட்கள் அல்லது வாரங்கள் ஒரேதூசி, சத்தம் நிறைந்த ஒரு சூழலில் வாழ வேண்டியிருக்கும். பிரத்தியேகமான இடமின்மை, வசதியீனம் போன்றவையும் மகிழ்ச்சியான விடயம் அல்ல.

நீங்களே இதைச் செய்வதாயின் ஒரு நிபுணர் செய்தது போன்ற தோற்றமளிக்கக் கூடியவாறு உங்களால் செய்ய முடியுமென்ற நம்பிக்கையிருந்தால் செய்யுங்கள். திறமையற்ற ஒருவர் செய்ய புதுப்பித்தல் அல்லது மேலதிக வசதிகள் வீட்டின் பெறுமதியை உண்மையில் குறைக்கவே செய்யும். நீங்கள் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் வசிக்கும் எண்ணம் இல்லாவிடின் நீங்கள் செய்ய எண்ணியுள்ள திருத்த வேலைச் செலவு குறைவாகவும், பிரயோசனம் அதிகமாகவும் இருக்கவேண்டும். "வீடு திருத்தச் செலவு செய்த பணத்தின் பெரும்பகுதியை அல்லது முழுவதையும் வீடு விற்கும் போது எம்மால் பெற முடியமாமா என்று நீங்களே உங்களை கேட்கவேண்டும். தொழில் நிபுணத்துவத்தில் செய்யப்பட்ட திருத்தவேலை உங்கள் சமயலறை, குளியலறை ஆகியவற்றை மதிப்பில் அதிகரிக்கச்செய்வதால் செலவுசெய்த பணத்திற்குமேல் பெறலாம்.

புதுப்பித்தல் யோசனையை மிக்க கவனமாக, நன்றாகக் கூர்ந்து அணுகுங்கள். உங்கள் தேவையை நன்கு அறிந்துவிட்டு முகவர் அல்லது வீட்டு விலை மதிப்பாளரோ இருந்தால் உங்கள் வீடு திருத்திய செலவு வீடு விற்கும்போது திரும்பப் பெறமுடியுமா என கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

### உங்கள் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுத்தல்

நிதி நிலை இறங்கும் முகமாக இருக்கும் வீட்டில் ஒரு அறையையோ, அல்லது வீட்டின் அடித்தளத்தையோ வாடகைக்குக் கொடுக்க யோசிக்கலாம். வீட்டை விற்பதற்கு பதிலாக ஒரு மாற்று ஏற்பாடாக இதைச் செய்யலாம். இது ஒரு கவர்ச்சியான தீர்வாக இருந்தாலும் இதில் இறங்கும்போது மிக விழிப்பாக இருக்க வேண்டும். பின்வரும் சில விடயங்களை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலில் வாடகைக்கு விடப்படும் பகுதிகளைப் பற்றியும் அவற்றிற்குரிய வாடகை மற்றும் தீ விபத்து பற்றிய உப சட்டங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் குடியிருப்பாளரின் (வாடகைக்கு) பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்டங்கள் ஒன்றாறியோவில் உள்ளன. அவற்றையும் நாம் தெரிந்து கொள்வது நல்லது.

தேவையற்றவர்களை குடிவைப்பதால் உங்களுக்கு தேவையற்ற பிரச்சினைகளும் அதனால் வீண் அலைச்சலும் உங்கள் நேரமும் வீணாகும். அவர்களிடமிருந்து வாடகைப் பணம் பெற நீங்கள் பெரிய அளவில் சட்ட நடவடிக்கையும் பணச் செலவும் செய்ய நேரிடலாம்.

முன்பின் தெரியாதவர்களுக்கு வீட்டை வாடகைக்கு கொடுப்பதனால் ஏற்படும் விளைவுகளை நினைத்துப் பாருங்கள். முக்கியமாக உங்கள் பிரத்தியேக வாழ்வு பாதிக்கப்படும். நீங்கள் வாடகைக்கு கட்ட வேண்டிய வரியையும் வீடு விற்பதற்கு கட்ட வேண்டிய வரியையும் உங்கள் கணக்காளரிடம் தெரிந்து கொள்ளுங்கள்.

வீட்டை வாடகைக்கு கொடுக்க முடிவு செய்தால் உங்கள் வீட்டு விற்பனை முகவரை அனுகினால் அவர் வாடகைக் குடியிருப்பாளரை பேட்டி கண்டு வீட்டை வாடகைக்குக் கொடுக்கலாமா என்பதை முடிவு செய்வார். ஒரு ஒப்பந்தத்தை நீங்கள் அவருடன் கைச்சாத்திட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அது உங்களையும் வாடகைக் குடியிருப்பாளரையும் சட்டப்பிரச்சினையில்லாது வாழ வழிவகுக்கும்.

### உங்கள் வீட்டை நீங்கள் எப்போது விற்க வேண்டும்?

இதற்கு உங்களுடைய பதில் உடனடியாக என்று இருக்கலாம். நீங்கள் வேறொரு நகரத்தில் வீட்டை விற்பதற்கு விலை பேசியிருந்தாலோ அல்லது இன்னொரு வீட்டை வாங்க முடிவு பண்ணியிருந்தாலோ உங்கள் வீட்டை விரைவில் விற்பது தான் உங்கள் இலட்சியமாக இருக்கும். அநேக மக்களிற்கு எப்போது வீட்டை விற்பது என்பதில் அவசரப்படவேண்டிய தேவை இராது. விற்பது என்ன காரணங்கள் என்பதை இப்போது பரிசீலிக்க செய்வோம்.

### எவ்வளவு விரைவாக விற்க வேண்டும்?

வீட்டை விற்பதாக முடிவு பண்ணியவுடன் அதற்குரிய வேலைகளை முடித்துவிட வேண்டும். (Seller's Market) ஆனால் "விற்பனைச் சந்தையில் உங்களுடைய வீட்டை அதிக பட்சவிலைக்கு விற்க நீங்கள் விரும்பலாம். வீடு வாங்குவதற்கு பலர் போட்டி போடலாம். எனவே வேகமும், விலையும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்லவேண்டும்.

எனினும் ஒரு வீடு வாங்கவோர் சந்தையில் பல வீடுகள் விற்பனைக்கு வருவதால், (Buyer's Market) அங்கும் வேகமும் விலையும் விற்பனையை உறுதி செய்கின்றன. உங்களுடைய தேவையென்ன என்பதை உங்களுடைய வீட்டு முகவருடன் விவாதிக்கலாம். அவர் உங்களிற்கு நீங்கள் விரும்பிய விலையிலும், விரும்பிய கால எல்லைக்குள்ளும் அதைப் பெற்றுத்தர உதவுவார்.



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

உங்களுடைய பெற்றொருடைய வீட்டை நீங்கள் வாரிசு என்ற முறையில் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். அது உங்களிற்கு தேவைப்படாத பட்சத்தில் அதை நீங்கள் விற்கவும் தீர்மானிக்கலாம். இந்த விடயத்தில் உங்களுடைய வழக்கறிஞரையும், கணக்காளரையும், வீடு விற்பனை சம்பந்தமான வரிகள் (Capitol Gains Tax) பற்றியும் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள். சிலவேளை நீங்கள் பெற்றொருடைய வீட்டை வைத்துக் கொண்டு, உங்கள் சொந்த வீட்டை விற்கவும் தீர்மானிக்கலாம்.

வீட்டு விலை அதிகரிக்கும்போது, வீட்டை விற்று இலாபம் பெறவும் நீங்கள் தீர்மானிக்கலாம்.

வீட்டுக்கடன் வட்டிவீதம் (Mortagage Interst Rate) உங்களுடைய வீட்டை விற்கும் தீர்மானத்திற்கு சாதகமாக இருக்கலாம். அடமானக்கடன் வட்டி வீதம் குறையும்போதும் விற்பனைச் சந்தை சூடு பிடிக்கின்றது.


உங்களிற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டால் அதிலிருந்து விடுபட, வீட்டை விற்கத் தீர்மானிக்கலாம். உங்களுடைய அடமானக்கடன் வழங்கியவரிடம் நீங்கள் உங்கள் நிதி நெருக்கடியைப் பற்றியும், அதற்காக வீட்டை விற்க தீர்மானித்திருப்பதையும் மறைக்காமல் கூறலாம். நீங்கள் வீட்டை விற்றதின் பிறகு, அடமானக்கடனிற்கு கட்ட வேண்டிய பணத்தையும், பிந்திய தவனைப் பணத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கக்கூடும்.

### விற்பனைச் சந்தையின் சுழற்சிகள்:

உங்களுடைய வாழ்வில் நீங்கள் செய்யும் மிகச்சிறந்த முதலீடு உங்கள் வீட்டின் மீது

33ம் பக்கம் பார்க்க...

**House for Sale**




**Birchmount & Lawrence**
3+1 Bedrooms, 2 Washrooms

**Canadian Home Appraisals Inc**
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca



**Why should you choose Ice condos?**

1) Cadillac Fairview and lanterra developments ( reputation builders )
2) The neighborhood ICE is midway between the Air Canada Centre and the Rogers Centre Between them is the Metro Toronto Convention Centre just a short stroll up York Street are the city's finest performing arts venues, including the Four Seasons Centre, Roy Thomson Hall, the St. Lawrence Centre, the Sony Centre for the per forming arts and those two regal ladies of the theatre the Royal Alex and the Princess of Wales
3) Very close to the Union subway with direct connection to Toronto's PATH system.
4) Positive monthly cash flow project
5) 100% rental guarantee program
6) Assignment clause

**Please call right away, first come first serve basis**

**S .K .Bales,**
CRA, FRI, MVA, CAR, CREA.
VIP REAL ESTATE BROKER IN DOWNTOWN
**416- 801 -3219**


# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**


**Dir: 416-276-1225 Off: 905-470-9800**


**Email: esrinathan@trebnet.com**




**Mccowan/401**

**$204,900**
Condo Apt. Bed rooms 2, Washroom 1 Ttc At Door, Close To Scarborough Town Centre, Clean, Bright, East Corner. Facilites Include An Indoor Pool

**Brimley & Denison**

**$318,900**
Link 2 Story, Bed rooms 3+1 , Washrooms 3 Basement Partly Finished With Bedroom And 3 Pc Washroom, Bright And Spacious House


**Brimley & Eglinton**

**$319,900**
Detached Bungalow, Bed rooms 3+1, Washroom 1 Lots Of Windows.Walk-Out Basement With Sep Side Entrance Gleaming Hardwood

**Morningside/Sheppard**

**$339,900**
Town house, 3 story, Bed rooms 3, Washrooms 3 Apx 1850 Sq.Ft, Under 4 Years Old, Large Size 3 Bed Room Open Concept Floor

**Markham/Denison**

**$369,900**
Semi Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Double Driveway. Close To Ttc/Yrt. Basement Floor Has Been Carpeted

**Finch/Morningside**

**379,500**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 Immaculate Detached Home With 9 Ft. Ceiling, Close To Ttc

**N Of Steeles/E Of Mccowan**

**$389,900**
Link 2 Story, Bed rooms 3+1 Washromss 4 Excellent Location, Approx 1750 Sq.Ft, Huge 3-Bedrooms, New Hardwood Floors, Double Driveway,

**Mccowan/Denisonn AveAve**


**399,0900**
Link 2 Story, Bed rooms 4 Washrooms 3.Short Cut To Steels,Schools,Park..... New Furnace & Hot Water

**Reeves Way/9th Line**

**$409,800**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 New Blooming Community With Shopping, Park, Transits, School, Go Station

**Markham Rd/ Buroak**

**$415,000**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, Gleaming Solid Oak Hardwood Flrs,Stairs And 2nd Flr Hall

**Staines/Finch**

**$419,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 4 Bedroom With Double Car Garage House Close To Ttc, School And Shopping

**9th Line /14th Ave**

**$432,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Upgraded Kitchen Cabinet & Back Splash, Newly Painted-Minute To 407

**Markham/16th Ave**

**$435,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Appx. 2000 Sq.Ft.* Indoor Access To Garage, Fully Fenced, Close To Public School/Shops.

**Staines/Steeles**

**$436,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, 5 Year New, Modern Large Kitchen, Double Garage, Close To School, Fenced

**9th Line & Hoover Park Dr.**

**$ 459,900**
Detached 2 Story, Bedrooms 3, Washroom 3 2 Years New , Very Well Maintained Like Brand New, Hardwood Flooring Throughout Main Floor

**9th Line & Rouge Bank**

**$469,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Large 4 Bedroom In High-Demand Legacy Area!

**Bur Oak & Hwy 48**


**$470,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, To Go. Elementary School Across Street. Close To Shopping, Seperate Dining Room

**Woodbine & Major Mac**

**$688,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, Luxurious 4 Yrs, Mins To Hwy, Library & Shopping Malls, Steps To Public Transit. Walk To Park,

**Elm Grove & Queen W.**

**$799,000**
Store / Office Solid Brick Building With 3 Bedroom Apartment Totally Renovated

**Westney/ RosslandMacken-**

**$279,000**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2Detached Home With A Finished Basement, Spectacular Ajax Home

**Bramalea / Larkspur**

**$379,900**
Detached 2 story. Bed rooms 4, Washrooms 3, No Maintenance, Custom Shelving In Wicc

**Mccowan/16th**

**$749,990**
Detached 2 story. Bed rooms 4+1, Washrooms 4, High Demand Markham Neighbourhood, Access To 3-Car Garage &

**Sales of Business**


**$479,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Esso Gas Station With Convenience Store

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# புதின்ம முன்வயது...

முன்னைய ஆக்கங்களில்...

சிறுவர்கள் வளர்ந்து வரும் போது அவர்கள் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய அறிவினை, அவர்கள் அத்தகைய மாற்றங்களை உணருமுன்பாகவே அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும் என்பதையும், இதர உடல் மாற்றங்களைப் போன்றே 9-12 வயதினரிடையே ஏற்படும் பருவமாற்றங்களின் ஆரம்பமும் இயற்கையானதும், இயல்பானதும் என்பதை அவர்கள் புரியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும் என்பதையும் பார்த்தோடு, படிப்படியாக இந்த மாற்றங்கள் அவர்கள் உடலில் ஏற்பட்டாலும், இன்னமும் அவர்கள் சிறுவர்கள் தான் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதோடு, ஆண் பெண் சிறார்களிடையே ஏற்படும் பருவமாற்ற வேறுபாடுகளின் அடிப்படை அறிவை அவர்கள் அறிந்து கொள்ளத் தேவையான அளவில் மட்டுப்படுத்தி அறிவுறுத்தும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்பதையும் பார்த்தோம்.

பூப்பெய்திய பெண்குழந்தைகள் மாதவிலக்கு உபாதைகளால் அவதியுறுகையில் அதனை வெறுத்து சலித்துப் பேசுவர். இயற்கையின் சிறப்பே பெண்ணினம் என்பதை அவர்களுக்கு புரிய வைத்து மாதவிலக்கு என்பது கருவறையின் சுத்திகரிப்பு செயற்பாடு என்பதை விளக்கி அதன் உபாதைகளை சுதாகரித்து கவனிக்கும் பக்குவத்தை பெற அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். இக்காலத்தில் ஏற்படும் உடற் சோர்வு இயல்பானது என்பதையும் புரிய வைக்க வேண்டும்.

அத்தோடு பதின்ம முன் வயதின் இறுதிக்கட்டத்தினால் பதின்ம வயதின் ஆரம்பக் கட்டத்திற்கும் இடையே பெரும்பாலும் உடலியல் பருவமாற்றங்கள் முற்றுப்பெற்று பெரியோர் போல் அவர்கள் உரு மாறினாலும் இன்னமும் பொரியோர் போல் மனதினால் வளர்ச்சி முற்றுப் பெறாதநிலையிலுள்ள சிறார்களே தாம் என்பதை அவர்கள் மனதில் வலுவாக உணர்த்த வேண்டும்.

ஆண், பெண் இணைந்து சிசு கருவுற்று தாயின் வயிற்றுள் வளர்ந்து குழந்தையாகி தாயின் வயிற்றிலிருந்து பிறந்து புற உலகை காணும் வரை எத்தகைய மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை படிமுறையாக விளக்கிக் கற்பிக்கும் பாலியல் கல்வியைக் கட்டாயமாகக் கற்கும் பதின்ம முன் வயதுச் சிறார்கள் இதன் போது எழும் மனச் சந்தேகங்களை எவ்வித கூச்சமுமின்றி வெளிப்படையாக தமது பெற்றோரில் ஒருவரிடமேனும் கதைத்து தம்மை தெளிவுபடுத்தக்கூடிய வகையில் தோழமை படைத்த பெற்றோராக இன்றைய பெற்றோர் இருப்பது அவசியமாகின்றது. அதே வேளை ஆண் பெண் புணர்ச்சி என்பது திருமணத்தின் பின்னான புனித உறவாக தமிழர் பண்பாட்டில் பேணப்படுகின்றது என்று வலியுறுத்தும் பொறுப்பான கடனும் பெற்றோருக்கு உண்டு.

தமிழர் பண்பாட்டின் செழுமையையும் பெருமையையும் சிறுவயதிலேயே தன் உணர்வினால் மதித்து மனதில் ஆழப்பதிக்கும் எந்தச் சிறாரும் வேற்று கலாச்சார வெள்ளத்தினால் அள்ளுண்டு சிதையுண்டு போக ஒருபோதும் துணியார்கள் என்பது திண்ணம்.

பாலியல் கல்வி தொடர்பான சந்தேகங்களோடு, பெற்றோரிடம் பேசவரும் பிள்ளைகளுடன் பேசும் பெற்றோரின் கவனத்திற்கு,

உங்கள் பிள்ளை உங்களிடம் என்ன வினா வைக் கேட்கின்றார்கள் என்பதை சரியாகக் கண்டுபிடியுங்கள். அதன் பின் அதற்கான விடையை அறிவுபூர்வமாகவும், சரியாகவும், உண்மையாகவும் கூறுங்கள். வினாவுக்கு சம்பந்தப்படாத தேவையற்ற பாலியல் சார் கருத்துக்களை அனாவசியமாக வழங்கத் தேவையில்லை. உங்கள் பிள்ளைகளையே இதுகுறித்த பேச்சை தொடரும் வண்ணம் விட்டுவிடுங்கள். போதனையாக இராமல் செவிமடுப்பாக உரையாடலில் பெரும்பாகம் இருத்தல் வேண்டும்.

தர்மசங்கடமான அசௌகரியமான வினாக்களை அவர்கள் உங்களிடம் கேட்டு அதற்கு விடையளிக்க நீங்கள் தயாராக இல்லாவிட்டால் நூலகத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு தேவையான அளவில் வயதெல்லைக்குள் விளக்கும் நூல்களின் உதவியோடு புரிய வைக்கலாம். குறிப்பாக பதின்ம முன் வயதினர் படிப்பதற்குகேற்ற வகையில் எளிமைப்படுத்தப்பட்ட வரைபட விளக்க நூல்கள் (Picture Books) இதற்கென வைத்தியர்கள், உளவியல் ஆலோசகர்கள் போன்றோரால் எழுதப்பட்டு வடிவமைக்கப்பட்டு உள்ளன.

நீங்கள் இதுகுறித்த பேச்சை அவர்களுடன் பேச ஆரம்பிக்கையில் உங்கள் பாதுகாப்புக் குறித்த அக்கறையுடனான கருத்தை வலியுறுத்தி உங்கள் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். "கணவன் மனைவியின் அன்பின் வெளிப்பாடே பாலியல் சேர்க்கை" எனச் சொல்லலாம். அதாவது "Sex is way of expressing your love to your husband or wife some day" என ஒரு வகையில் உங்கள் ஒழுக்கம் சார்ந்த உங்கள் எதிர்பார்ப்பை மென்மையாக புகுத்திவிட வேண்டும். திருமணத்தின் முன்னான இத்தகைய உறவுகள் தகாதவை தவறானவை என்பதை தாய், சேயின் மனதில் திணிக்க வேண்டும். மருத்துவ ஆய்வுகளின் படி இவ்வாறு தாயால் திணிக்கப்படும் கருத்துக்கள் பிள்ளைகளில் பெரிதும் காத்திரமாக பிரதிபலிப்பதாக கூறப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் உங்கள் பிள்ளைகள் (Middle School) இடைநிலைப் பள்ளிக்கு செல்லுமுன்பாக இது குறித்து உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் பேசுவது அவசியமாகும்.

## பருவமுன் வயதினருள் ஏற்படும் உடலியல்கள் உளவியல் மதிப்புகள் (Preteen Body Image)

பருவ முன் வயதுப் பருவத்தினர் இதர வயதுப் பிரிவினர் போலன்றி ஒரே வயதினரிடையே உடல் வளர்ச்சியில் பெருமளவில் வேறுபட்டிருப்பார்கள். உயர வேறுபாடு, உடலமைப்பு வேறுபாடு போன்ற வேறுபாடுகளால் ஒத்தவயதினரிடையே வேறுபட்டிருப்பதை இப்பருவத்தினரிடையே பெருமளவில் காணலாம். இவை குறித்து பெற்றோர் பெரிதும் கவலைப்படத் தேவையில்லை.

ஆண் சிறாரிடையே குரல் மாற்றம், மீசை, தாடி அரும்புதல் போன்ற பருவமாற்றங்கள் ஏற்பட்டு இதனால் வெட்கம் கூச்சம் ஏற்பட்டு சங்கடப்படுவர் சில சிறார்கள். சில சிறார்கள் அதிக உடற்பருமனாக இருப்பதனால் தமது உடலமைப்பை எண்ணி வருத்தப்படுவர். எது எவ்வாறாயினும் தமது உடலமைப்பை எண்ணி வருத்தப்படும் அல்லது பாதிக்கப்படும் இயல்பான உணர்வுத் தூண்டலை இவ்வயதினரிடையே காணலாம். அதிகம் கண்ணாடியில் தம் உருவத்தைப் பார்த்து ஆராயும் இயல்புடையராக இவ்வயதினர் இருப்பர்.

தாம் அழகாக, பார்ப்பவர் மனம் கவரும் வண்ணம் தோற்றமளிக்க வேண்டும் என அதிக அக்கறைப்படுபவராக இவ்வயதினர் இருப்பர்.

எமது தமிழ்ச் சமூகத்தில் பெற்றோர் பலர் இவர்களின் மனநிலையை உணராமல் பிள்ளை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் குண்டாக சதைப்பிடிப்பாக இருக்க வேண்டும் என எண்ணி அதிகம் உணவு ஊட்டி வளர்ப்பதனால் ஏற்படும் குண்டான தோற்றத்தை தமது பெரும்குறையாகக் கொண்டு கூச்சப்பட்டு வருத்தப்படும் சிறுவர்கள் பலர் எம்மத்தியில் உள்ளனர்.

> "பிள்ளைகளின் மனநிலையை உணராமல்
> பிள்ளை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால்
> குண்டாக சதைப்பிடிப்பாக இருக்க வேண்டும்
> என எண்ணி
> அதிகம் உணவை ஊட்டி வளர்ப்பதனால்
> ஏற்படும் குண்டான தோற்றத்தை
> தமது பெரும்குறையாகக் கொண்டு
> கூச்சப்பட்டு வருத்தப்படும் சிறுவர்கள் பலர்
> எம்மத்தியில் உள்ளனர்."

சிறுவர்கள் வளரும் காலத்தில் ஆரோக்கியமான உணவுகளை உண்டு ஆரோக்கியமாக இருக்க வேண்டுமேயொழிய, குண்டாக இருப்பது தான் ஆரோக்கியம் என எண்ணி அதிக மாச்சத்துள்ள அதிக கொழுப்புச்சத்துள்ள உணவுகளை பெற்றோர் உண்ணப் பழக்கி ஊக்குவிக்கலாகாது.

எடை அதிகரிப்பானது, உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் ஆரோக்கியக் கேடாக அமைவதை பெற்றோர் மனதில் கொள்ள வேண்டும். எடை அதிகமாவதனால் வருந்தும் சில சிறார்கள் சாப்பிடாமல் இருந்து மெலிய முனைவதனால் சிறு வயதிலேயே பலதரப்பட்ட பலவீனங்களுக்கு உள்ளாகி நோயாளிகளாகின்றனர்.

கண்ட கண்ட வேளையில் கண்ட கண்ட



சிவவதனி பிரபாகரன்

உணவைச் சாப்பிடும் பழக்கமானது உடலுக்கு ஊறு விளைவிக்கின்றது. இன்றைய சிறார்கள் வீட்டு உணவினை விட கடை உணவினையும் கொறிப்புணவான கள்ளத் தீனிகளையும் அதிகம் நாடுகின்றனர். இவை அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு கற்பதற்கு மூளைக்குத் தேவையான சத்துமிக்க உணவைப் பெற விடாது மன இச்சை போக்கும் வழியில் செல்லத் தூண்டுகின்றது. இதனால் இன்றைய இளையவர்கள் பெரும்பாலும் ஆரோக்கியமிழந்து வாழ்கின்றனர்.

சாப்பாட்டு முறையில் ஏற்படும் கோளாறுகளான anorexia bullimla போன்றன பதின்ம முன் வயது ஆண் பெண் சிறுவர்களை வெகுவாக பாதிக்கின்றது. இவை கவனமெடுக்கப்பட வேண்டிய மிக உயிராபத்தான சிக்கல்களாகும். இந்நிலையிலுள்ள சிறார்கள் சிறந்த ஆலோசனைகளைப் பெற்று குணமெய்துவது அவசியமாகும். பின்வரும் அறிகுறிகள் உங்கள் பிள்ளைகளிடம் காணப்பட்டால் உடன் வைத்திய ஆலோசனை பெறவும்.

- பாடசாலைக்கு கொண்டு செல்லும் உணவை வீசுதல், தானாக சாப்பிடாமல் விட்டு மெலிய நினைத்தல்.
- சடுதியாக மெலிந்து செல்லல்.
- சாப்பிட்டவுடன் அச்சமுற்றவராக உடற் பயிற்சியை கடுமையாக செய்தல்.
- உண்டவுடன் குற்றவுணர்வில் வாய்க்குள் கைவிட்டு சத்தி எடுத்தல்.
- தன் உடலமைப்பை தான் வெறுப்பதை தன் நண்பர்களிடம் வெளிப்படுத்துதல்.

மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் குடும்ப வைத்தியரிடமோ அல்லது குழந்தை நல வைத்தியரிடமோ சென்று உங்கள் பிள்ளையை குணப்படுத்தி ஆரோக்கியமான முறையில் மெலியவைக்க உதவும் ஆலோசகரை நியமிப்பதன் மூலம் உதவி பெறலாம்.

உடலமைப்பு குறித்த தேவையற்ற மனக் கவலைகளால் இவ்வயதினரிடம் ஒருவகையான மனப்பதட்டம் நிலவுவதை காணலாம்.

உடலமைப்பை வைத்து ஒருவரை எடை போடுவதை சிறாரிடம் ஊக்குவிக்கலாகாது. சக சிறாரை மதிக்கும் பக்குவத்தை ஒவ்வொரு சிறுவர்களும் கொண்டிருப்பது அவசியம். அத்தகைய மனப்பான்மையானது பெற்றோரிடமிருந்தே சிறுவர்களுக்கு வருவதனால் பெற்றோர் முதலில் அடுத்தவர்களை மதிக்கும் நற்பண்பாளராக வாழ்ந்து காட்ட வேண்டும்.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■


ஒரே நாளில்

Saree Blouse

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400


HOMELIFE FUTURE REALTY
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Midland/Lawrence
$419,900
3 Bedrooms.
2 Washrooms.
Renovated Top to Bottom
Entertainment Room
Hardwood Floors.
McCowan/Steeles
$469,000
4+2 Bedrooms.
3 Washroom.
Close to all Amenities.
Finished Basement
Excellent Neighbourhood.
Meadowvale/Ellesmere
SOLD IN 2 DAYS!
98% OF ASKING PRICE
HOMELIFE
HIGHER STANDARDS
LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com


Buy & Sell Residential and Commercial Properties
Raj. A. Rasaratnam
B.Com.
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
*Independently own and operated
$214,900
Midland & Danforth
2+1 br Condo. Close to TTC, shopping, Go, school. Gym, pool, tennis, squash, billiards, sauna and other facilities in building.
$284,900
Markham & Sheppard
3 br townhouse. Corner unit. Close to TTC, school, library & shopping. Upgraded kitchen, hardwood flooring, wood staircase, large underground parking spaces.
$339,000
Bellamy & Lawrence
3+2 br Detached Bungalow. Close to TTC. Hardwood floors, pot lights, separate entrance to finished basement, glass covered sunroom. 4 car parking on driveway.
$399,900
Markham & 14th Ave
3+2 br Link. 2 br basement Apartment w/ seperate enterance. Gorgeous property w/ Upgrades. Hi efficiency furnace, hardwood and ceramic floors.
$519,900
16th & 9th Line
4 br Detached. Finished basement apartment. Very clean home in desirable makrham location. Hardwood floors, no sidewalk.
$549,900
9th Line & 14th Ave
4 br Detached. Close to school and shopping. Lots of upgrades! Hardwood flooring, 9 ft ceiling.
Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation
(416) 726-8055

# நலம் நாடுவதும் அதுவே

## உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்


$ 95,000
Markham & Eglinton


$ 104,900
Markham & Sheppard


$107,900
Eglinton & Rosemount


$119,908
Midland & Lawrence


$120,000
Neilson & Sheppard


$132,000
Tapscott & Mclevin


$137,900
Lawrence & Midland


$154,900
Ellesmere & Morningside


$159,900
Kennedy & Eglinton


$163,800
Meadowale & 401


$165,000
Kingston south & Eglinton


$169,900
Neilson & Sheppard


$203,000
Galloway & Lawrence


$209,000
Manse S & Lawrence


$213,900
Lawrence & Galloway


$229,000
Meadowale & Sheppard


$239,900
Markham & Eglinton


$255,000
Sheppard & Neilson


$310,000
Orton Park & Ellesmere


$325,000
Bellamy & Lawrence


$365,000
Carlton & Mccowan


$415,000
Markham & Buroak


$424,900
9th Line & Buroak


$429,000
Buroak E of Markham




$429,000
9th Line & 407


$432,000
9th Line & 14th Ave


$435,000
9th Line & Hwy 7


$459,000
16th & Markham By Pass

Call me for a change

RE/MAX


$518,000
16th Ave & Markham


$495,000
Mccowan & Bur Oak

**FOR RENT**

1 BED ROOM BEASEMENT
2 BED ROOMS BEASEMENT
3 BED ROOMS BEASEMENT APPARTMENT

Kathir S Kathirgamanathan P. Eng.
Sale Representative
www. kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com

24 Hrs 416 856 6900

Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com

Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7

## கீரை உணவு வகைகள்

# ஆரைக்கீரை, புதினாக்கீரை, முளைக்கீரை


உதயணன்

‘உணவுதான் மருந்து, மருந்துதான் உணவு’ என்பது ஆன்றோர் வாக்கு. எங்களுடைய உணவில் சீரான அளவில் புரதம், மாப்பொருள், கொழுப்பு, வைட்டமின் சத்துக்கள், தாதுப்பு என்பன இருப்பதைதான் சமச்சீர் உணவு என்கிறோம். சமச்சீர் உணவுக்குத் தேவையான சத்துக்களையும் தாதுப்புக்களையும் எளிதாகப் பெற தினசரி 125 கிராம் கீரைகளைச் சாப்பிட வேண்டும். மேலும் சில கீரைகள் பற்றிய சிறு குறிப்புகள்.

### ஆரைக்கீரை

சோழ நாட்டில் அம்பர் என்று ஓர் ஊர். ஔவையார் என்னும் பெரும்புலவர் தெரு வழியே போய்க் கொண்டிருக்கிறார். வழியில் களைப்பு ஏற்பட்டதால் அவரால் தொடர்ந்து நடக்க முடியவில்லை. தெருவோரத்தில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து இளைப்பாறுகின்றார். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரி சிலம்பி என்றொரு தாசி. தனது வீட்டுத் திண்ணையில் ஒரு மூதாட்டி களைப்புடன் அமர்ந்திருப்பதைக் கண்ட சிலம்பி, தனக்கெனச் சமைத்து வைத்திருந்த கூழைக் கொண்டு வந்து ஔவையாருக்குக் கொடுக்கிறாள்.

அந்த வீட்டுச் சுவரில் கரிக்கட்டியால் எழுதப்பட்டிருந்த இரண்டு பாடலடிகள் கூழைக் குடித்துக் கொண்டிருந்த ஔவையாரின் பார்வையில் படுகின்றன.

“தண்ணீருங் காவிரியே தார் வேந்தன்
சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே”

தனது பசியையும் களைப்பையும் போக்கிய சிலம்பியிடம் பரிவு ஏற்பட்டு, “இது என்ன?” என்று ஔவையார் கேட்கின்றார்.

சிலம்பி வருத்தத்துடன் இவ்வாறு கூறுகின்றாள்: “குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவரான கம்பர் வாயால் பாடல் பெற்றவர்கள் மிகவும் சீரோடும் சிறப்போடும் செல்வப் பொலிவோடும் வாழ்வதாக அறிந்தேன். அதனால் கம்பரை அழைத்து வந்து என்மீது ஒரு பாடல் பாடும்படி கேட்டேன். அவர் ஒரு பாடலுக்கு 1,000 பொற்காசுகள் கேட்டார். என்னிடமோ 500 பொற்காசுகள்தாம் இருந்தன, அதனால் பாதிப் பாடலை மட்டும் இந்தச் சுவரில் எழுதிவிட்டுப் போய்விட்டார். கையிலிருந்த 500 பொற்காசுகளும் போய்விட்டதால் அன்றிலிருந்து கொடிய வறுமையில் வாடுகிறேன்.”

**கீரை உணவு - 12**

ஔவையார் ஒரு கரித்துண்டை எடுத்துப் பின் வரும் அடிகளை எழுதி அந்தப் பாடலை நிறைவு செய்தார்.

“பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு”

முழுப் பாடலும் வருமாறு அமையும்:

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன்
சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே -
பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

ஔவையாரின் பாடலால் சிலம்பிக்குப் பொன்னும் பொருளும் புகழும் நிறைந்தது. கால்களில் செம்பொன் சிலம்பு அணியும் அளவுக்குச் செல்வம் பெருகியது.

இதனை அறிந்த கம்பர் சினந்தார். ஔவையாரை இழிவு படுத்த எண்ணினார். ஒரு நாள் ஔவையார் அரச சபைக்கு வந்தபோது அவரை நோக்கி சிலேடையாக ஒரு விடு கதை போட்டார்.

“ஒரு காலடீ, நாலிலைப் பந்தலடீ”

இதற்கு ஔவையார் பின்வரும் பாடலால் பதிலடி கொடுக்கிறார்.

“எட்டேகால் லட்சணமே, எமனேறும்
பரியே
மட்டில் பெரியம்மை வாகனனே –
முட்டமேற்
கூரையில்லா வீடே, குலராமன்
தூதுவனே
ஆரையடா சொன்னா யது”

கடைசி அடியை, “ஆரையடா சொன்னா யடா” என்றும் சில நூல்கள் கூறும். இந்தப் பாடலின் சுருக்கமான பொருள் வருமாறு: “அவலட்சணமே, யமன் வாகனமாகிய எருமையே, மூதேவியின் வாகனமாகிய கழுதையே, கூரையில்லாத வீட்டின் குட்டிச் சுவரே, இராமருடைய வாகனமாகிய அனுமாரான குரங்கே, ஆரைச் செடியைச் சொன்னாயடா.”

கடைசி அடிக்கு, “யாரைப் பார்த்தடா சொன்னாயதை” என்று இன்னொரு பொருளும் வரும்.

மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில் ஆரைப்பற்றை என்ற ஊர் இருக்கின்றது. மட்டக்களப்பின் கல்விக் களஞ்சியம் எனப் புகழ்பெற்ற கிராமம் இது. இந்த ஊருக்கு ஆரைப்பற்றை என்ற பெயர் வரக் காரணங்கள் பல கூறப்படுகின்றன. அவற்றுள், நான்கு இலைகளைக் கொண்ட ஆரை என்ற ஒரு செடி இப்பகுதியில் பற்றை பற்றையாக வளர்வதால் ஆரைப்பற்றை என தாவரவியல் சார்ந்து தமிழ் மரபு பேணி இப்பெயர் ஏற்படலாயிற்று என்பார் ஒரு சாரார். இப்பொழுது இவ்வூர் ஆரையம்பதி என்று அழைக்கப் படுகின்றது.



ஆரைச் செடிகள் நீரிலும் வளரும். சதுப்பு நிலத்திலும் வளரும். அதனால் நீராரை என்றும் நிலவாரை என்றும் சொல்வதுண்டு. ஒரு தண்டில் நான்கு இலைகள் பந்தல் போட்டதுபோல இருக்கும். நான்கே இலைகள் என்பதால் இலைகளில் பசுமை அடர்த்தியாகச் செறிந்திருக்கும். அதனால் நிறைய உயிர்ச் சத்தான ஊட்டச் சத்துக் கிடைக்கின்றது. அத்துடன் பல வைட்டமின் சத்துக்களும் உலோகச் சத்துக்களும் இருக்கின்றன. சிறிது இனிப்புச் சுவையுள்ள ஆரைக்கீரையைச் சத்துள்ள காயகல்பக்கீரை என்றும் சொல்வார்கள்.

ஆரைக்கீரை உடம்பின் சூட்டைத் தணித்துச் சீராக வைத்திருக்கும். இரத்தப் போக்கை நிறுத்தும். சிறுநீரைச் சீர்படுத்தும். சிறுநீரில் இரத்தம் கலந்து போவதைக் கட்டுப்படுத்தும். மலச்சிக்கலைத் தீர்க்கும். உடல் வலிகளைப் போக்கும். நஞ்சை முறிக்கும். வயிற்று நோய்களைக் குணப்படுத்தும். இன்சுலின் ஊசி போட்டு வரும் நீரிழிவு நோயாளிகள் ஆரைக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், காலப்போக்கில் இன்சுலின் அளவைக் குறைத்துக் கொண்டெ வந்து கடைசியில் இன்சுலினை நிறுத்திவிடக் கூடிய வாய்ப்பு வரும்.

ஆரைக்கீரையை நோயாளிகள் மட்டும்தாம் சாப்பிட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எல்லோரும் வாய்ப்பு வசதி வரும் நேரங்களில் எல்லாம் சாப்பிடலாம். அதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து நோய்கள் வராமலே தடுக்கலாம். சில கிராமங்களில் ஆரைக் கீரையை ஆண்கள் சாப்பிடக் கூடாது என்று கூறுகிறார்கள். “ஆண்களுக்கு ஒரு கீரை, பெண்களுக்கு இன்னொரு கீரை என்று இயற்கையன்னை படைக்கவில்லை. ஆரைக் கீரையை இரு பாலாரும் சாப்பிடலாம்” என்பது மருத்துவர்களின் கருத்து.

“ஆரைக் கீரை உண்டால் ஆனை பலம் உண்டாகும்” என்ற பழமொழியை இங்கே நினைவு கூர்வோம்.

### புதினாக் கீரை

புதினாக் கீரையைப் புதியன் மூலி, புதியல் மூலி, பொதியன் என பல்வேறு பெயர்களால் அழைக்கிறார்கள். புதினாக் கீரையில் நிறைய ஊட்டச் சத்துக்கள் இருக்கின்றன. புரதம், இரும்புச் சத்து, தாதுப்பு, கந்தகம் இன்னும் பல சத்துக்கள் அடங்கியுள்ள கீரை புதினா. இதன் இலை, தண்டு, விதை, வேர் என அனைத்தும் மருத்துவச் சிறப்பு மிக்கவை. ஆனால் புதினா இலைகளே அதிகம் பயன்பாட்டில் உள்ளன. புதினாக் கீரையில் ஒரு தனிச் சிறப்பான மணமும் சற்றுக் காரமான சுவையும் இருக்கின்றன. எனவே, புதினாக் கீரை மணத்திற்காகவும் சுவைக்காகவும் மருத்துவப் பலனுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. காரச் சுவையுள்ள புதினாக் கீரை கிருமிகளை அழிக்கும் ஆற்றல் படைத்தது. புதினாக் கீரையில் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் ‘ஏ’ வைட்டமின் ‘சீ’ மற்றும் உலோகச் சத்துக்களும் இருக்கின்றன. புதினாவில் ‘மென்தால்’ என்ற ஒருவகைக் கற்பூரச் சத்து இருக்கின்றது. இதிலிருந்து ரசகற்பூரம் கற்பூரத் தைலம் என்பவற்றைச் செய்து, அவற்றிலிருந்து வேறு மருந்துகளைத் தயாரிக்கிறார்கள்.

புதினாக் கீரை இரைப்பையைப் பலப்படுத்தும். வாயுத் தொல்லைகளைத் துரத்தி அடிக்கும். புதினாக் கீரை இரத்தத்தை உற்பத்தி செய்யவும் சுத்தி செய்யவும் உதவுகின்றது. பல் வலி, செமிபாட்டின்மை, பசியின்மை, வயிற்று வலி, நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகக் கோளாறுகள் ஆகியவற்றைக் குணமாக்கும். கிழங்கு, எண்ணெய் மற்றும் நெய் கலந்த உணவு வகைகள் செமிபாட்டின்மையை ஏற்படுத்தலாம். அப்படியான உணவுகளைச் சாப்பிடும்போது, புதினாக் கீரையையும் ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்ப்பது பலன் தரும். ‘பிரியாணி’ போன்ற உணவு வகைகளை வீடுகளில் - கவனிக்கவும் வீடுகளில் - சமைக்கும் போது சுவைக்காகவும் மணத்துக்காகவும் செமிபாட்டிற்காகவும் புதினாவைச் சேர்ப்பார்கள்.

38ம் பக்கம் பார்க்க...

Driving School
ஓட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.
நீண்டகால அனுபவத்தின்
தனித்துவமான பயிற்சி
General Driving School
Ministry of Transportation Approved Instructor
பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829

# மருத்துவக் கேள்வி பதில்

**டாக்டர், எனது தலையில் சொடுகு குறைய மாட்டேன் என்கிறது ஏன்?**

குமுதா,

குமுதா, உங்களைப் போல இந்த நாட்டில் பலபேர் அவதிப் படுகின்றனர். தலையில் இருக்கும் சருமம் உலர்வதால் பலருக்கு சொடுகு ஏற்படுகின்றது. தேங்காய் எண்ணெயில் கறிவேப்பிலை, மிளகு, கருவா இவைகளைப் போட்டு காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். பின்பு இந்த எண்ணெயை எடுத்து தலையில் நன்றாக மசாஜ் செய்யவேண்டும். அரை மணிநேரமாவது இவ்வாறு மசாஜ் செய்யவேண்டும். இதன்பின் குளிக்கும் போது ஷாம்பூ பயன்படுத்தக் கூடாது. வேண்டும் என்றால் சிகைக்காய் உபயோகிக்கலாம். குளிருக்கு வேகமாக சருமம் உலர்ந்துவிடும். எனவே தலைச் சருமம் உலராமல் இருக்க லேசான எண்ணெய்ப் பசை அவசியம் தேவை. இதைத் தவிர தோலில் எக்ஸீமா, சொரியாஸிஸ் போன்ற நோய் உள்ளவர்கள் தினமும் 'திரிபலா' மற்றும் (Liv -52) போன்ற மருந்துகளை எடுத்து வந்தால் சொடுகுத் தொல்லை ஒழிந்துவிடும்.

**டாக்டர், நான் தங்களது கேள்வி – பதில் பகுதியை தொடர்ந்து படித்து வரும் வாசகன். சென்ற வாரம் உங்களது உரையில் 'பூத நாடி' என்று குறிப்பிட்டீர்கள், அது எல்லோருக்கும் உணரப்படுமா?**

வளவன்.

தொடர்ந்து படிப்பதற்கு வாழ்த்துக்கள், வளவனைப் போன்ற அனேக வாசகர்கள் தொலைபேசியிலும், நேரிலும், 'தாய்வீடு' பத்திரிகை அலுவலகத்திற்கும் தொடர்பு கொண்டு உற்சாகப் படுத்துகிறார்கள். சிலர் பாராட்டுகின்றனர் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

வளவன் கேட்டிருக்கும் 'பூத நாடி' என்பது மரண நாடி ஆகும். சாதாரணமாக யாருக்கும் இது உணரப்படுவதில்லை. ஒரு மனிதர் மரணமடையும் முன்பாக சுமார் 3 அல்லது 4 மாதங்களுக்குள் இது உணரப்பட முடியும். அப்பொழுது மருத்துவர்களாகிய நாங்கள் நோயாளியின் உறவினர்களிடத்தில் இனி எந்த மருந்தும் உதவாது என்றும் கடைசி ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறிவிடுவோம். இது பற்றிய விபரங்களை மேலும் அறிய நீங்கள் நேரில் வருவதுதான் நல்லது.

**டாக்டர், எனது எடையைக் குறைக்க உணவுக் கட்டுப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்?**

ஈஸ்வரி அற்புதன்.

உங்கள் கேள்வி எளிது ஆனால் பதில் தான் சற்று கடினமானது. இனிப்பு மற்றும் துவர்ப்பு சுவையிலான உணவு வகைகளை முற்றாகத் தவிர்த்து புளிப்பு மற்றும் கசப்பு சுவை உணவுகளை உட்கொள்ளவேண்டும். நார்ச் சத்துள்ள உணவு மற்றும் அதிகமான காய் கறிகள் உட்கொள்வதனால் கொழுப்பு நீக்கப் படும் - நச்சுத்தன்மையும் (Toxin) குறையும்.

**டாக்டர், உடல் சக்தி கூட என்ன செய்ய வேண்டும்?**

ஷில்பா.

உணவு, உறக்கம், உடற்பயிற்சி இவைகளை நெறிப்படுத்தினால் உடல் சக்தி கூடும். உணவில் 'ALFALFA' என்ற டானிக், உறக்கம் இரவு 9.30 மணி முதல் காலை 5.30 மணி வரை, உடற்ப்பயிற்சியில் நீச்சல் அல்லது நடைபயிலுதல் ஆகியன சிறப்பு தரும்.

**எனக்கு எந்த நோயும் இல்லை. எந்த மாதிரியான மாற்றுவகை உணவு அல்லது தாதுப்பொருள் உட்கொள்ளலாம்?**

இரமேஷ் அரவிந்த்.

உங்கள் கேள்விக்கான பதில் நிறைய சொல்லாம். ஆனாலும் மிகவும் நல்லதொரு தயாரிப்பு 'MAX GXL' இந்தக் கூட்டுக்குளிசையை 4 வாரங்களுக்கு மேல் தொடர்ந்து எடுத்து வந்தால் ஆற்றல் மிகுந்து, தசைகள் வலுவடையும். ஆழ்ந்த நித்திரை, தெளிந்த புத்தி, மன ஒருமை, தோள்பட்டை, மூட்டுகளில் இதமும் சுகமும் கூடும். சரி இத்தனை நல்ல தயாரிப்பு சந்தையில் கிடைக்கின்றதா, அப்படியானால் என்ன விலை? என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது. ஒரு மாதத்திற்கு சுமார் 80 டொலர்கள் மட்டுமே.

**மரக்கறி மட்டுமே உண்பது நல்லதா?**

ஜீவிதா.

B12 என்ற உயிர்ச்சத்து மரக்கறிகளில் இல்லை. எனவே மரக்கறி மட்டுமே உண்பவர்கள் B12 உயிர்ச்சத்து எடுத்துக் கொண்டால் நல்லது.

**டாக்டர், இங்குள்ள நவீன வாழ்க்கை முறை (Life Style) உயிர்ச்சத்துக்கள் நிறைவாக ஏற்றதாக இருக்கும் பொழுது நாம் ஏன் உயிர்ச் சத்துக்களை தனியாக எடுக்க வேண்டும்?**

சாண்டில்யன்.

நண்பர் சாண்டில்யன் முதலாவதாக உங்கள் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.



இங்குள்ள வாழ்க்கை முறை எத்தகைய குறைபாடுகளை ஏற்படுத்த வல்லது என்பதை முழுமையாக அறிந்து கொள்வது நலம். நவீன முறை விவசாயம், செயற்கை உரம் மற்றும் கிருமி நாசினி போன்ற காரணிகள் உயிர்ச் சத்துக்களை அழிக்கின்றன. உரிய காலத்திற்கு முன்பே பறிக்கப்படும் பழங்கள், செயற்கை முறை பதப்படுத்துதல், குளிரூட்டுதல் போன்றவை உயிர்ச்சத்து 'E' அழியக் காரணமாகின்றது. தண்ணீரில் கழுவும் போது, தோலை நீக்கும் போது, சமையல் சோடா சேர்க்கும் போது, நீண்ட நேரம் கொதிக்க வைக்கும் போது என்று பல படிகளில் விட்டமின்கள் அழிக்கப்படுகின்றது.

சிகரெட் புகைப்பதால் விட்டமின் 'C' மதுவால் விட்டமின் B6, கொலஸ்ரால் குளிசைகளால் விட்டமின் A,D,K, கருத்தடை குளிசைகளால் விட்டமின் D,C,B6 அழிக்கப்படுகின்றன. இன்னும் Aspirin, Antibiotics போன்றவை உயிர்ச் சத்துக்களான K,B போன்றனவற்றை அழிக்கின்றன. இப்பொழுது சொல்லுங்கள்... இங்குள்ள வாழக்கை முறை (Life Style) எத்துணை சிரமமானது என்று!

**டாக்டர், மூட்டுத் தேய்மானம் நோய்க்கு சித்த மருத்துவத்தில் எடுக்கக் கூடிய மருந்து வகை சொல்ல வேண்டுகின்றேன்.**

ஆஸ்கார்.

அத்திப்பழம் 5, அரச விதை 10 கிராம், ஆலவிதை 10 கி, பூசணிவிதை 10 கி, தேன் 250 எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து காய்ச்ச வேண்டும் நுரை நீக்கி சரியான பதத்தில் இறக்கி காலை, மாலை இருவேளை என்று 50 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மூட்டுத் தேய்மானம் குணமாகும்.

**டாக்டர், எனது மகளுக்கு பசியே இல்லை, என்ன செய்வது?**

ஜெயா.

புதினா சாறு 30 மிலி, எலுமிச்சை சாறு 30மிலி சர்க்கரை 2 தேக்கரண்டி கலந்து குடிக்கக் கொடுங்கள். நன்கு பசியைத் தூண்டும்.

**டாக்டர், எனக்கு வயது 57 அடிக்கடி மூச்சுப்பிடிப்பு மற்றும் தசைப்பிடிப்பு ஏற்படுகின்றது. இதற்கான வீட்டு வைத்யம் என்ன?**

சரோஜா.

சூடான பாலில் குங்குமப்பூ மற்றும் சிறிதளவு மஞ்சள் கலந்து தினமும் இரவு அருந்தி வந்தால் நீங்கள் சொன்ன குறைபாடு நீங்கி முகவசியம் உண்டாகும்.
சுடுநீரில் பெருங்காயத்தைக் கரைத்துக் குடித்தால் தசைப்பிடிப்பு குணமாகும்.

குடைமிளகாய், சின்ன வெங்காயம், தக்காளி, புதினா, பூண்டு, இஞ்சி, மிளகு எல்லாவற்றையும் வதக்கி தேவையான அளவு உப்பு சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால் மூச்சுப் பிடிப்பும், தசைப்பிடிப்பும் நீங்கி விடும்.

**டாக்டர், எனக்கு மாதவிடாய்க் காலங்களில் தலைவலி வருகின்றது, வீட்டு வைத்யம் (Home remedy) ஏதாவது சொல்லுங்கள்.**

நீலாவதி.

மணத்தக்காளி, முருங்கைக் கீரை, பொன்னாங்காணி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றுடன், மிளகு, சீரகம், பூண்டு பொருங்காயம், மிளகாய்வற்றல் சேர்த்து மல்லி இலையுடன் சூப் வைத்து சாப்பிட்டால் உங்கள் தலைவலி தீரும்.

**டாக்டர் எனது வயது 46 எனக்கு தும்மல், இருமல், ஈளை, இளைப்பு, அலர்ஜி, ஆஸ்த்துமா என்று எல்லாம் சேர்த்து வாட்டுகின்றது. உண்மையாக உதவிட வேண்டுகின்றேன்.**

இராமலிங்கம்.

மருதம்பட்டை, கஸ்தூரி, சிருங்கி, அமுக்ரா, தாமரைப் பூ, செம்பருத்தி இவைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் நல்லதொரு கூட்டுக் குளிசை கேரள ஆயுர்வேத கடையில் கிடைக்கின்றது. 2 குளிசைகளை மூன்று வேளையும் எடுத்து வந்தால் உங்கள் பிரச்னை தீரும்.

**மருந்துண்ணும் போது பொதுவாகத் தவிர்க்க வேண்டியவை யாவை?**

கலாவாணி.

நீங்கள் பத்தியம் பற்றி கேட்டுள்ளீர்கள். அகத்திக்கீரை, பாகற்காய், சுரைக்காய், பூசணி, பரங்கிக்காய், கடுகு, நல்லெண்ணெய், மாங்காய், புளி, எலுமிச்சை, கிழங்கு வகைகள் ஆகியவற்றை உணவில் தவிர்த்திட வேண்டும். போதை, புகை, வெயில், மிகுந்த காற்று, உடலுறவு போன்றவையும் கூடாது. இப்படிக் கடைப்பிடித்து மருந்து எடுத்தால் விரைவில் குணம் கிடைக்கும்.

டாக்டர், நோய் ஏன் ஏற்படுகின்றது?

கோவலன்.

"மிகினுங் குறையினு நோய் செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று"

இராஜசேகர் ஆத்தியப்பன்



இந்த திருக்குறள் புரிந்தால் உங்கள் கேள்விக்குப் பதில் கிடைத்துவிடும். அதாவது, வாத, பித்த, கபம் என்ற 3 கூறுபாடுகள், உணவு, உழைப்பு, ஆகியவற்றின் ஒவ்வாமையால், மிகுதல், குறைதல் என்ற நிலைக்குட்படுகின்றன. இதனால் நோய் ஏற்படுகின்றது. மூச்சினை ஒழுங்கு படுத்துதல், புத்துணர்ச்சி யூட்டல், மனம், மொழி முதலியவற்றைச் சரிவர நடத்துதல், உடல் நிலைபேற்றுக்கு உரிய பல்வேறு தாதுக்களை உண்டாக்குதல், கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் ஆகியவை வாதத்தின் தொழில்கள். உதாரணமாக வாதம் குறைந்தால் மலச்சிக்கல், பேச்சுத் தடுமாற்றம் போன்றவை உண்டாகலாம்.

உண்ட உணவை செரிக்க வைத்து, அறிவு, நினைவாற்றல் இவைகளை அளித்து, குருதிக்கு நிறம், பார்வைத் திறன், தோல் பளபளப்பு போன்றவை கிடைக்கச் செய்வதே பித்தத்தின் தொழில்.

தசை நார்கள், மூட்டுக்கள் தேய்வடையாமல் இருக்கவும், நாவில் சுவை அறியவும், இதயத்தைப் பாதுகாக்கவும் உதவுவதே ஐயம் எனப் படும் கபம். கபம் மிகுந்தால் நுரையீரல் அழற்சி, சிறுநீரகக் கோளாறு போன்றவை ஏற்படலாம்.

ஆண் மலட்டுத் தன்மை நீங்க மூலிகை மருந்து என்ன?

டவாத்து பின்னி.

அரச விதைத் தூள் அணுக்களைப் பெருக்கும். முருங்கைப் பூவைப் பாலில் காய்ச்சி இரவில் உட்கொள்ளலாம் ஆலம்பழம், ஆலம் விழுதுக் கொழுந்து ஆகியவற்றைச் சமஅளவு அரைத்து எலுமிச்சை அளவு காலை மட்டும் வெறும் வயிற்றில் 120 நாட்கள் சாப்பிட்டு வர வேண்டும். இப்படிச் செய்தால் விந்து அணுக்கள் உற்பத்தியாகும்.

**வெண்மேகம் (குட்டம்) நோய்க்கு எளிமையான மருந்து என்ன?**

சுமித்திரா.

சந்தனக் கட்டையை எலுமிச்சை சாற்றில் உரைத்துப் பூச வேண்டும்.

**டாக்டர், எனது வயது 68, சிறுவயதில் இருந்தே வறட்சியான சருமம். கனடா வந்தவுடன் இன்னும் மோசமாகி விட்டது. தயவு செய்து தகுந்த பரிகாரம் சொல்லவும்.**

M.R. லிங்கம்,

நீங்கள், முந்திரி, பாதா, பிஸ்தா, ஆல்மண்ட் போன்றவற்றை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிஞ்சு வெண்டை, கரட் இரண்டையும் சமஅளவு எடுத்து தேங்காய்ப் பால் விட்டு அரைத்து தோலில் பூசி வர வேண்டும். அகத்திக் கீரையைத் தேங்காய்ப் பால் விட்டு அரைத்து உடல் முழுவதும் பூசி ஊறவைத்து அரைமணி நேரம் கழித்துக் குளிக்க வேண்டும். நீங்கள் சவர்க்காரம் (Soap) பயன்படுத்தக் கூடாது. அதற்குப் பதிலாக Shower Cream (தேங்காய்ப் பாலில் செய்தது) வாங்கிப் பாவிக்கலாம். செம்பருத்தி இலை, பச்சைப் பயிறு இரண்டையும் சமஅளவில் எடுத்து விழுதாக அரைத்து பூசலாம். புளிப்புச் சுவையை முற்றிலுமாகத் தவிர்த்து ஆட்டுப்பாலை தினமும் குடிக்க வேண்டும்.

நலம் பெறுக! வளம் பெறுக!

rajasekar.a@thaiveedu.com


■ ■ ■

# தோல் & புற்று நோய் ஆராய்ச்சி மையம்

நாகர்கோவில்,
தமிழ்நாடு
91-93627 28808



- முகப்பரு
- சொடுகு
- சொரியாசிஸ்
- எக்சிமா
- பாலுண்ணி
- உலர் சருமமம்
- தேமல்
- கருவளையம்
- கட்டிகள்
- கால் ஆணிகள்
- நரம்பு சுருளுதல் (Varicose Vein)
- உடலி எரிவு (Hot Flash)
- தோல் புற்று நோய்




- நீரிழிவு & இல்லற இனிமை (Sex Performance)
- இரத்த அழுத்தம்
- தைராய்டு
- இருதய பலவீனம்
- ஆஸ்துமா

போன்றவைகளுக்கு எளிய ஆயுர்வேத மூலிகைகள் பக்க விளைவுகள் அற்ற இயற்கை வழித் தீர்வு

போன்றவைகளுக்கு சித்த மருத்துவம்

**கேரளா ஆயுர்வேதா**

டாக்டர் ராஜசேகர் ஆத்தியப்பன்
416 995 0416
ayurvetha@gmail.com

## பாரம்பரிய சித்தா இரகசியங்கள்



- ஒல்லியானவர்கள் உடல் தேற.
- குண்டானவர்கள் ஒல்லியாக.
- குள்ளமானவர்கள் உயரமாக.
- முகம் கவர்ச்சி பெற.
- தோல் நோய் குணமாக.
- மூல நோயிலிருந்து விடுபட.
- அல்சர், குடல் புற்று, அசிடிட்டி, வாய்வு தொல்லை தீர.
- மாதவிடாய், வெள்ளை படுத்தல் பிரச்சினைகளுக்கு.
- முதுகுவலி, தோள் வலி, முழங்கால் வலி குணமாக.
- சொடுகு, முடி உதிர்தல் குறைய.
- வலிப்பு, திக்குவாய், ஞாபக சக்தி குறைவு.
- தாம்பத்ய சுகம் நீடிக்க, ஆர்வம், எழுச்சி கூட.

சிறப்பு ஆலோசனை மற்றும் சிகிட்சை
டாக்டர் இராஜசேகர் ஆத்தியப்பன
416-995-0416

**கேரளா ஆயுர்வேதா**

## உலகம் சுற்ற ஆசையா?

உள்ளூரில் வேலை வேண்டாம்!
தங்கும் இடம், உணவு, கை நிறைய சம்பளம்



என்ன வேலை என்று கேட்கிறீர்களா?
ஆங்கிலம் கற்பித்தல்.

யாருக்கு?
குழந்தைகள், தொழில் செய்வோர், மாணவாகள என்று பலதரப்பட்ட மக்களுக்கு!

எந்த நாட்டில்?
துபாய், பிஜி, ஜப்பான், சீனா, ஹாங்காங் என்று ஒரு பெரிய பட்டியல் உண்டு.

என்ன தகுதி வேண்டும்?
வேலை எடுத்து தர ஏஜென்சிகள் உண்டா?
எவ்வளவு காலம் ஆகும்?
நூறு சதம் வேலை கிடைக்குமா?

இன்னும் உங்கள் கேள்விகள் அனைத்திற்கும் பதில் இங்கே!

நேரில் வந்து ஆலோசனை பெறுங்கள்.
416 995 0416
vaathu88@gmail.com

Century 21
King's Quay Real Estate Inc. Brokerage
Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

For All Your Real Estate Needs
**HomeExpertTeam.com**
**416-496-2625**

*Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.*
*Knowledge + Experience + Team work = Result*



**Flexible & competitive commission!**



**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)



**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)



**JUGA SUREES ***




**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker

உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**
Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு உதவக்காத்திருக்கின்றோம்
நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !




**Open House Sat Nov 7th between 2 - 5 PM**

Well Kept 3 Bedroom Detached Home, Granite Floor In Kitchen, Laminated Floor Through-Out Main Floors, Child Safe Neighborhood




Brand New Luxury 2 Bedroom Condo, Bright & Stunning High Quality Finishes, Granite/Marble Counter, Hardwood Floors. Close to Hwy 407,Hwy 7 and Go Station




Brand New Luxury 2 Bdrm South West Corner Unit Condo next to Scarborough Town Centre, Aprox 800 Sq.Ft. Marble Foyer, Marble Counters, Close To All Amenities




Bright & Spacious 1 Br + Den, South Exp. Enclosed Balcony, Very Well Maintained Bldg, Close To Go Station, Ttc, School And Shopping.




Two Storey Indoor Shopping Mall. 2nd Floor Corner Unit With North And West Exposure, Total Area of 889 Sq. Ft. Lots Of Potential For Walk In Clients.

**Earn AIR MILES reward miles when you buy or sell your home with us**

RE/MAX The Real Estate Leaders

**TAKE ADVANTAGE OF HISTORIC LOW INTEREST RATES!!**
***WHY RENT?? OWN IT NOW!!***

RE/MAX Above the Crowd!

***$343.69 /MONTH**



**SAVE YOUR MONEY!!**
^WOW!... Starter Home!!!
^ **Two Bed Rooms** + 2 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$512.09 /MONTH**



**LARGE FAMILY HOME!!**
^HUGE!!!!...1450 Sq.ft Home!!!
^ **Three Bed Rooms** + 2 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$580.83 /MONTH**



**LUXURY FOR LITTLE!!!**
^UNBELIEVABLE!... Small Investment!
^ **Two Bed Rooms** + 2 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$687.37 /MONTH**



**UPSCALE LIFESTYLE!!**
^Yes!!... Must See!!!
^ **Million Dollar Recreation**
^Walk to Schools, shopping & TTC

***$777.29 /MONTH**



**DOUBLE YOUR MONEY!!**
^WONDERFUL... Downtown Living!!!
^**Live & Work or Rent it!**
^Walk to Financial District

***$955.45 /MONTH**



**THREE FAMILY HOME!**
^Believe it or Not!!... Live for FREE!!
^ **Three Bed Rooms** + 3 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$1061.99 /MONTH**



**IN-LAW SUITE!!!**
^FANTASTIC!... Less than the Rent!!!
^ **Three Bed Rooms** + 2 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***1141.04/MONTH**



**INCOME POTENTIAL!!!**
^Hey!!...Oversized Range Bungalow!!!
^ **Three Bed Rooms** + 2 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$1577.52 /MONTH**



**AFFORDABLE LUXURY!!!**
^Beautiful!... Ideal Location!!!
^ **Four Bed Rooms** + 4 wash Rooms
^Walk to Schools, shopping & TTC

***$1268.21 /MONTH**



**LIVE & WORK!!**
^LOOK!!!... Care Free Investment!!!
^ **Three Bed Rooms + Store Front**
^Gross Rental Income $2850.00

* Mortgage Payment OAC @ Current prime rate of 2.25% - In addition to Mortgage payments, Property Taxes and Utility / Maintenance charges may be applicable

***DO NOT WAIT ANY MORE!! CALL US NOW FOR IMMEDIATE ACTION!!!***


**Direct: 416-613-2877**

***Vijay Thiagarajah***
*Real Estate & Business Broker*

***Uthayan Nadarajah***
*Real Estate & Business Broker*

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage, Independantly owned and operated
**3785 Kingston Road, Toronto, ON., M1J 3M4 Tel: 416-264-5151 Fax: 416-264-2635**
****Not Intended to solicit any property under contract****

# சத்தமின்றி வெளிவந்த விண்டோ 7

ஜிப்ரி உதுமாலெப்பை

- கணினி வல்லுனர் -


சத்தம் சந்தடி இல்லாமலேயே விண்டோ 7 வெளிவந்ததுவிட்டது! விஸ்டா வெளி விடுவதற்கு மைக்ரோசாப்ட் நிறுவனம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் சத்தம் இன்னமும் காதில் ஓய்ந்தபாடில்லை.

Microsoft நிறுவனம் இதுவரை வெளியிட்ட எந்த operating Systemகளையும் விட விண்டோஸ் 7 மிக எளிதாதவும் அருமையாகவும் அமைக்கப்பட்ட மென்பொருளாக கருதப்படுகிறது. விண்டோஸ் XP Professional இற்கு பிறகு வந்திருக்கும் ஒரு பலமான Operating System என கூறலாம். இதனைப் பற்றிய சில தகவல்களை இப்பொழுது பார்ப்போம்

### விண்டோ 7, ஒரு கணணியில் பாவிக்கப்படுவதற்கு தேவையான குறைந்த எதிர்பார்ப்புக்கள்.

- Processor = 1GHz
- Memory =1 GB for 32 Bits OS / 2GB for 64 bits OS
- Hardisk free space = 16 GB for 32 bits OS / 20 GB for 64 bits
- DirectX 9 Graphic Device

### தெரிவு செய்யக் கூடிய விண்டோ 7இன் வகைகள்:

- Home Premium - வீட்டு பாவனையாளர்களுக்கு
- Profefessional - கணணி வலை தொழில் சார் வல்லுனர்களுக்கு
- Ultimate - கூடிய பாதுகாப்பு வசதி உள்ளடங்கிய வகை
- Enterprise - மிக கூடிய வசதிகளைக் கொண்ட வியாபார நிறுவனங்களின் கணணி பாவனைக்கு

### புதிதாக வந்திருக்கும் வசதிகள்

### மிகவும் தெளிவான Desktop

முன்னைய விண்டோக்களை விடவும் நல்ல தெளிவான விம்பங்களைத் தரக்கூடிய video Card drivers இணைக்கப்பட்டுள்ளதால் கண்ணிற்கு குளிர்மையான நிறங்களைத் தரக்கூடியதாக மென்பொருட்கள் தோற்றம் அளிக்கின்றன.

### வேகத்துடன் கூடிய செயல் திறன்

விண்டோ 7, கணனி ஆரம்பித்தவுடன் தனது முழுமையான செயற்பாட்டை ஆரம்பிக்க எடுக்கும் நேரம் மிக குறைந்ததாக மாற்றப்பட்டுள்ளது. விஸ்டாவை விடவும் விண்டோ 7இல் நீங்கள் install பண்ணிய மென்பொருட்களை இயக்கும்போது அவை மிகமிக விரைவாக இயங்குவது இந்த மென்பொருளில் மைக்ரோசாப்ட் நிறுவனம் ஏற்படுத்தி இருக்கும் மிக முக்கியமான வசதி என கூறலாம். பழைய கணனிகளில் கூட விண்டோ 7 வேகமாக வேலை செய்வது, இந்த மென் பொருளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அடிப்படை மாற்றத்தை உணரவைக்கிறது.

### Internet Explorer 8 for Windows 7

சாதாரணமாக விண்டோ XP அல்லது விஸ்டாவுடன் நாம் பாவிக்கும் IE 8ஐ விட விண்டோ 7 உடன் வரும் IE 8 Version மிகவும் விரைவானதாகவும், ஒவ்வொரு TAP பகுதிலும் நீங்கள் புதிய இணையதளங்களை திறக்கும்போது வேறு நிறங்களுடன் தெரியக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. சாதரண IE 8 பாவனையில் வெறுத்துப்போய், கூகுளின் Chrome browser பாவித்தவர்கள் மீண்டும் Windows 7உடன் வந்திருக்கும் V 8ஐ பாவிக்க தொடங்கலாம். அத்துடன் favairites bar மூலம் நீங்கள் அடிக்கடி பாவிக்கும் இணையதளத்தினை எளிதாக பாவிப்பதற்கும் வழி பிறந்திருக்கிறது.

### Touch of Class

Tablet PC போன்ற touch screen வசதியுடைய கணணி விழித்திரைகள் (monitors) உங்களிடம் இருந்தால் விண்டோ 7 இந்த வசதியைப் பாவிக்கத் தேவையான driver களையும் மென்பொருட்களையும் தன்னகத்தே உள்ளடக்கியதாக வந்திருக்கின்றது

“ கணணியில் குழந்தைகள் எந்த விளையாட்டு மென்பொருட்களை பாவிக்கலாம், எப்படிப்பட்ட இணைய தளங்களுக்கு போகலாம், குறிப்பாக எவ்வளவு நேரம்/எப்போது மட்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் பாவிக்கலாம் என்பதனை எளிதாக கட்டுப்படுத்தும் முறையை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். ”

### Jump List

நாங்கள் அடிக்கடி பாவிக்கும் மென் பொருட்களையும் Filesஜயும் அடையாளம் கண்டு கொள்ளவும் உடனடியாக மீண்டும் பாவிக்கக் கூடியதாக Documents என்ற பகுதி விண்டோஸ் XP , Vista மென் பொருட்களில் இருந்ததை அறிவோம். இந்த Doucments இப்போது Jump List என்றபெயரில் முழுமையாய் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. Jump Listல் Filesஜ திறக்க பாவிக்கப்படும் மென் பொருளின் அடிப்படையில் ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கும். இந்த Filesகளை வேறு நமக்குத் தேவையான வரிசை கிரமத்திலும் மாற்றிக் கொள்ளலாம். அதேவேளை இந்த Jump Listஜ பாவனையாளர்களின் வசதிக்காக Task Barஇலும் இணைத்திருக்கிறார்கள்.

### Finding Files

புதிதாக அறிமுக படுத்தியிருக்கும் Libray என்ற அணுகுமுறை மூலம் மிகவிரைவாக Filesகளை தேடி எடுப்பது மட்டுமில்லாமல், External hard Drive, Networkஇல் இருக்கக்கூடிய directoryகளை இந்த Libraryஇன் ஒரு பகுதியாக மாற்றுவதன் மூலம் ஒரே இடத்தில் எல்லா Filesகளையும் தேடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக முக்கியமாக நான் கூறப் போகும் அமைப்பு மிக அருமையாக பலருக்கும் உதவும். அதாவது, ஒரே Fileஜ பலமுறை Modify பண்ணிவிடும் போது பழைய vesionஇல் இருக்கும் விடயம் சிலவேளைகளில் தேவைப்படலாம் இந்த நிலையின்போது Advance Search மிக உதவியாக இருக்கும். அது மட்டுமில்லாமல் அந்த தேவையான Fileஜ திறந்து பார்ப்பதற்கு முதல் அந்த Fileஜ Preview முறை மூலம் நீங்கள் தேடும் சொல்பதத்தைக் கொண்ட சரியான Fileஜ எடுத்துக்கொள்ளலாம்.

### Software / Hardware Compatibility Windows

விஸ்டாவின் தோல்விக்கு மூல காரணங்களில் ஒன்றாக கருதப்படுவது, விஸ்டா பாவனையாளர்கள் பாவிக்கவிரும்பும் மென் பொருளுடன் மட்டுமில்லாமல் Hardware களுடனும் இருக்கும் ஒவ்வாமையே. விண்டோஸ் 7 இந்த தவறு ஏற்படாதவாறு அமைக்கப்பட்டுள்ளது.

### Home group (Files /Media File களை பகிர்ந்து கொள்தல்)

Data /Audio /Video /Printerகளை வலை அமைப்புடன் கூடிய கணணிகளிடையே எளிதாக பகிர்ந்துகொள்ள ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பை பாவித்து உங்கள் வீட்டுக்கு உள்ளேயே ஒரு Audio / Video Streamகளை உருவாக்கிக்கொள்ளலாம்.

### Parental Control

கணணியில் குழந்தைகள் எந்த விளையாட்டு மென்பொருட்களை பாவிக்கலாம், எப்படிப்பட்ட இணைய தளங்களுக்கு போகலாம், குறிப்பாக எவ்வளவு நேரம்/எப்போது மட்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் பாவிக்கலாம் என்பதனை எளிதாக கட்டுப்படுத்தும் முறையை அதிகப்படுத்தி இருக்கிறார்கள்.

### தேவைக்கேற்ப அழகுபடுத்திக் கொள்ளுதல் (Personalizing your PC)

நாம் பாவிக்கும் கணணி கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், எமது உணர்வை தாழ்ந்த நிலைக்கு கொண்டு போகாததாக wall paper, Screen சேவர்/Sound/Resolutions/Text Size அமைத்து கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளோம். விண்டோஸ் 7இல் இன்னமும் அதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக குறிக்கப்பட்ட வினாடிகளுக்கு தானாகவே மாறக்கூடிய Wall Papers, Screen Color (Customized Theme / Desktop Slide Show / Pictures as Screen Saver) சேர்க்கைகள் அற்புதம். விண்டோஸ் 7இல் Gadgets Desktopஇல் எந்த பகுதியிலும் நிறுத்தக் கூடியதாக அமைத்திருக்கிறார்கள். (விஸ்டாவில் Side Bar என்ற அமைப்பு எல்லாம் ஒன்றாக கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது)

### முழுமையாய் மாற்றி அமைக்கபட்ட Task Bar

விண்டோஸ் 7ஐ பொறுத்தவரை Desktopஐ Task Bar பிரதியீடு செய்து விட்டதாகவே எடுத்துக்கொள்ளலாம். (Quick Lauch அகற்றப்பட்டு விட்டது). அதிகமாக பாவிக்கும் மென் பொருட்களை Task Barஇல் இருந்தே ஆரம்பிக்க முடியும். Jump List போன்ற மிக பிரயோசனமான பகுதிகளும் இதில் இருந்தே இயக்க முடியும்.

### Arranging open files and folders

திறக்கப்பட்டு பாவனையில் இருக்கும் Files /Directorisஐ எளிதாக பாவனைக்கு எடுத்து வருவதற்கு மிக அற்புதமாக ஒரு அமைப்பை விண்டோஸ் 7இல் அமைத்திருக்கிறார்கள். நீங்கள் திறந்து வைத்துக்கொண்டு பாவிக்கும் அத்தனை மென் பொருட்களும் அவற்றின் பிரதான மென் பொருளின் அடிப்படியில் உங்களின் Task Barஇல் பார்க்கக்கூடியதாக minimized பண்ணப்பட்டிருக்கும். அந்த Task Barஇல் உங்கள் மௌசை (Mouse) கொண்டு செல்லும்போது விண்டோவில் previewஆக நீங்கள் தெரிவு செய்ய விரும்பும் File அல்லது Web Pageஐ சிறிய அளவில் பார்க்கலாம். அதே நேரம் அந்த சிறிய Pre View மீது Mouseஐக் கொண்டு செல்லும்போது அது பெரிய அளவிலான Pre Viewஆக மாறி தெளிவான windows தோன்றும். பல Filesகளை ஒரே நேரத்தில் பாவிக்கும் பாவனையாளர்களுக்கு இந்த வசதி ஒரு மிக அருமையான நேரம் சேமிக்கும் தொழில் நுட்பமாக உதவும்

விஸ்டாவில் வரும் “programmeஸ் not responding”, “Internet Explorer is stop responding” போன்ற எரிச்சலூட்டும் programing bugs இங்கு இல்லை என்று சொல்லும் அளவிற்கு இந்த மென் பொருள் அமைக்கப்பட்டிருக்கிறது.

விண்டோ 7 பாவிப்பது ஒரு தனி அனுபவம்!

jiffry.u@thaiveedu.com

■ ■ ■




கேளுங்கோ கேளுங்கோ

ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்

இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!

கலசம்

www.KALASAM.com

தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு


Knowledge Experience Results
ராஜீவ் கோணேஸ்வரன்
Broker
SOLD
416.568.1078
FOR SALE
RAJEEF KONESWARAN
RE/MAX VISION REALTY 416-568-1078
RE/MAX Hall of Fame
Platinum Club Award
Interest Rate 2.25 %
VIP SPECIAL
ICE
Why ICE Condo is the best choice for you?
• The Toronto's BEST LOCATION
• $0 Assignment Fee
• Under ground PATH access to Union Starion, Maple Leaf Square, Air Canada Centre
• Minutes to CN TOWER, ROGERS CENTRE, METRO TORONTO CONVENTION CENTRE
• ACCESS TO 24HRS TRASPORTATION ON STEPS SUBWAY, GO TRAIN, BUS STATION STREET CAR
Starting at $189,000
DOWNTOWN TORONTO
www.torontoicecondo.com
RE/MAX Re/Max Vision Realty Brokerage
2210 Markhan Road, Toronto, Ontario M1B 5V6, Tel:416 321-2228
*some condition apply
*not intended to solicit buyer and seller currently
*transactions completed where either buyer or seller represented.

# அந்தரத்தில் தூங்கும் ஒரு தமிழனின் அமெரிக்கக் கனவு



ராகுலன்
- Accountant -

அமெரிக்கா குடிவரவாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு நாடு. பல்வேறு திசைகளில் இருந்து அமெரிக்க மண்ணில் இறங்கி சாதனை படைத்தோர் பலர். Arnold Swarza niggar, Bruce Lee, Albert Einstein Madeleine Albright, Rupert, Murdoch வரிசையில் இலங்கைத் தமிழன் ராஜ் இராஜரத்தினமும் இடம்பெறுகிறார்.

ஒவ்வொரு வார வேலை நாட்களிலும் காலை 8.35 மணியளவில் Galleon Grrup இன் 70 ஆய்வாளர்களும், முதலீட்டு நிர்வாகிகளும், மகாநாட்டு அறைக்குள் அன்றைய சந்தை நிலவரங்களை ஆய்வது வழக்கம். அந்த சந்திப்பிற்கு பிந்தி வருபவர்களுக்கு $25 குற்றப்பணம் வேறு.

அந்த குழுக் கூட்டத்தின் தலைமை ஆசனத்தில் ராஜ் ராஜரத்தினம் அங்குள்ள ஒவ்வொருவரிடமும் ஆணித்தரமான கேள்விகள். அந்த நிறுவனம் என்ன செய்கிறது? இந்த நிறுவனம் என்ன செய்கிறது? அந்த நிறுவனம் இந்த நிறுவனத்துடன் கூட்டுச் சேருமா? இந்த நிறுவனங்களின் நிதி நிலவரத்தின் சாதக பாதக நிலைமைகள் என்ன என்று அந்த கூட்டத்தில் இருக்கும் தனது சக ஊழியர்கள் மிக திறமையாக தங்களை ஆயத்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் கூடிய கேள்விகள் என அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவரின் கருத்து.

ஆனால், அமெரிக்க வழக்கு தொடருநர்கள் பொது மக்களுக்கு தரப்படாத தகவல்களின் அடிப்படையில் Google, Polygon, Hilton Holds corp போன்ற நிறுவனங்களின் பங்குகளை விற்று $20 million வரையில் இலாபமீட்டியதாக குற்றம்சாட்டியுள்ளார்கள்.

இவருடன் சேர்த்து இன்னும் ஐவர் மீது இந்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது இந்த வகையான வழக்குகளில் மிகப் பெரியதாகும்.

எந்தவொரு பங்குகளை வாங்கி விற்பவரும் மற்றையவர்களை விட முன்னே செல்ல விரும்புகிறார்கள். இந்த வகையில் இந்த வர்த்தகத்தில் ஒரு சட்டத்தின் தெளிவில்லாத பகுதிகள் இருக்கவே செய்கின்றன. ஆனால், பொது மக்களிடம் சொல்லப்படாத இரகசிய தகவல்களின் அடிப்படையில் வாங்குதலும் விற்றலும் சட்டத்திற்கு முரணானது.



Forbes சஞ்சிகையின் தகவலின்படி 1.3 Billion அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இவர் உலகில் 559வது பணக்காரனாவார். நியூயோர்க் நகரில் உணவு விடுதி ஒன்றுக்கு சொந்தக்காரனாவார்.

இந்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் இவரது Hedge Fund உலகத்திலேயே பெரிய Fund களில் ஒன்றாகும். இவரது நிர்வாகத்தில் 7.3 Billion இருந்தது. சராசரியாக 21.5% விளைவினை ஆண்டுதோறும் இவரது Funds தரக் கூடியதாக இருந்தது.

இவரது செல்வம் வளர வளர தான தருமங் களிலும் ஈடுபட தவறவில்லை. இந்தியாவில் Aids நோய்க்காகவும் ஈழத்தின் சுனாமிக்காக 5 Million dollar உம் தந்திருக்கிறார் இவர். அமெரிக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைக்கு $400,000 கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பணம் கொடுத்து இரு ஆண்டுகளின் பின் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டது.
இது ஒருபுறம்இருக்க சிறிலங்காவில் கொழும்பு பங்குச்சந்தையில் இவரின் முதலீடுகள் பற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கொழும்பில் பிறந்த இவர் புனித தோமஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்று பின் இங்கிலாந்தில் கல்வி பயிலச் சென்றார். அங்கிருந்து பின் University of Pennsylvaniaவில் MBA படிப்பை முடித்தார்.

1985இல் ஒரு நியூயோர்க் முதலீட்டு வங்கியில் ஆய்வாளராகச் சேர்ந்து அங்கு படிப்படியாக முன்னேறி 1991ல் அந்நிறுவனத்தின் தலைமைப் பதவியை ஏற்றார்.

1997ல் தற்போது தலைமை தாங்கும் Galleon நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்த ஆண்டில் அந்த நிறுவனம் 830 Million டொலர் சொத்தை நிர்வகித்தது. 2000 ஆண்டில் SP சுட்டி 37.6% வீழ்ச்சியடைந்த நேரத்தில் இவரால் நிர்வகிக்கப்பட்ட சொத்துக்கள் 43.7% உயர்வடைந்தது. 2001ல் 5 Billion ஆக இருந்த இவரால் நிர்வகிக்கப்பட்ட சொத்துக்கள் உலகின் பெரிய பத்து Fundsஇல் ஒன்று என்ற நிலையை அடைந்தது.

13 ஊழல் சதி குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்கும் 52 வயதாகும் திரு இராசரத்தினத்திற்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள்.

மேற்கத்தைய நீதிமன்றங்களில் குற்றவாளிக்கும் தன்னை பாதுகாக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். இராசரத்தினத்தின் வழக்கறிஞர் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அரச தரப்பினர் கூறுவது போல் உறுதியானதாக இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், அண்மைக்காலமாக இதுபோன்ற வழக்குகளில் பலர் சிறை சென்றதைப் பார்க்கும் போது முடிவு முடிவாக வந்த பின்புதான் தெரியும்.

ragulan@thaiveedu.com

■ ■ ■

# வீடு விற்பதற்கான...

22ம் பக்கத் தொடர்ச்சி...

தான். ஏனனில் அது உங்களிற்கு வசிப்பதற்கு ஒரு தேவையான இடத்தையும், உங்கள் மகிழ்ச்சியில் நிகழ்வுகளை தேக்கி வைக்கும் ஒரு இடமாகவும் அமையப்போகின்றது. ஆனால் சந்தையில் பல சுழற்சிகள் எப்போது உங்கள் வீட்டை விற்பது என்று தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த சுழற்சிகள் வீடுகளிற்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தாலாம். (இதனால் வீடுகளின் விலை உயரலாம்.) அல்லது மேலதிக வீடுகளை சந்தைக்கு கொண்டு வரலாம். (இதனால் வீட்டின் விலைகள் உயர்வது தடுக்கப்படுவதுடன் விலைகள் வீழ்ச்சியும் ஏற்படலாம்.

இந்த சுழற்சிகளை எது இயக்குகின்றது?. நாட்டின் பொருளாதாரம் என்பது தான் உண்மையான பதில். பொருளாதாரம் வளர்ச்சியடையும்போது தொழில் வாய்ப்புக்கள் பலம் பெற்று மக்களுக்கு தங்கள் எதிர்காலத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படும்போது வீடுகளின் கிராக்கி (Demand) அதிகரிக்கின்றது. மாறாக, பொருளாதாரம் வீழ்ச்சியடையும்போது வேலை இழப்பு அதிகரித்து அநேக வீடுகள் விற்பனைக்கு வருகின்றன. அதேநேரம் வீடு வாங்க விரும்புவோர் நிலமை சீர்பெறும் வரை காத்திருக்கின்றார்கள். இந்த பொருளாதார ஏற்ற இறக்கம், தேசிய மட்டத்திலோ அல்லது குறிப்பிட்ட பிரதேசங்களிலோ பாதிப்பை ஏற்படுத்தலாம்.

தொடரும்...

skbales@thaiveedu.com

■ ■ ■

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Bus: 416.284.5555 (24 Hrs.) or Toll Free- 1-877-284-5561
$244,900 For Sale
Birchmount/Ellesmere
2 Bedrooms, 2 Washrooms
Luxury Tridel Building, Well Kept
North West Corner Unit
$444,900 For Sale
Ajax
4 Bedrooms, 3 Washrooms
2400 Sq Feet As Per Builder's
Plan, Lots Of Upgrades
$419,900 For Sale
Markham / Bur Oak
3 Bedrooms, 3 Washrooms
Bright Open Concept Design
Minutes To The 407
$409,900 For Sale
Brampton
4 Bedrooms, 3 Washrooms
Prime Location, Bright And Spa-
cious With Lots Of Natural Light
$399,900 For Sale
Mccowan/Brimorton
6+2 Bedrooms, 2 Washrooms
One Of The Biggest House In
The Neighbourhood
$134,900 For Sale
Whitby
2 Bedrooms, 1 Washroom
Step To Finch And Pharmacy
Buses
$197,900 For Sale
Neilson / Ellesmere
4+2 Bedrooms, 4 Washrooms
Bright Spacious 4 Br Home.
Renovated Washrooms, Kitchen.
$244,900 For Sale
Kennedy/Ellesmere
3+2 Bedrooms, 3 Washrooms
Freshly Painted, Very Spacious
3 Bedroom Unit.
$339,900 For Sale
Morningside/Meadowvale
3 Bedrooms, 3 Washrooms
Location!Location!End Unit Like
A Semi-Detached Home
$237,000 For Sale
Warden/Finch
3+1 Bedrooms, 2 Washrooms
End Unit Townhouse In Prestige
Area. Kitchen W/Eat In Area
$60,000 For Sale
Keele/Finch
Excellent Opportunity To Own
Your Own Business.
Excellent Location
$489,000 For Sale
Mississauga
3+3 Bedrooms, 3 Washrooms
Bright Spacious Bunglow On
Huge Lot, call for more info
$119,900 For Sale
Kennedy/401
2 Bedrooms, 1 Washroom
Well Maintained Unit. Newer
Laminate Floor In Living/Dining
$198,800 For Sale
Hillcrest/Hwy 10
2+1 Bedrooms, 2 Washrooms
Shows Absolutely Immaculate,
Parquet Floor Throughout
$224,900 For Sale
Hwy 427/Rexdale
2 Bedrooms, 1 Washroom
Luxury 2Br Tridel Building, Excel-
lent Location
SEP. ENTRANCE
BASEMENT FOR RENT
MIDDLEFIELD/HIGHGLEN
Bright & spacious 2 Bedroom Basement
apartment for rent with separate entrance
$ 850 FOR RENT
FOR MORTGAGE AGENTS
OFFICE PLACE FOR RENT
MISSISSAUGA
Call for more info.
416-284-5698
$1,700 For Lease
Finch/Pharmacy
4 Bedrooms, 2 Washrooms
Good Location, 4Br Well Main-
tained House.Close To Hospital
$1,500 For Lease
Ellesmere/Orton Park
3+1 Bedrooms, 2 Washrooms
Minutes To Don Mills Subway,
Schools & Seneca College
$1,200 For Lease
Markham/Mclevin
3 Bedrooms, 2 Washrooms
Spacious Corner Lot. 3 Bedroom
With Two Washrooms.
$800 For Lease
Brimley/Eglinton
1 Bedroom, 1 Washroom
Quiet, Residential
Neighbourhood
Looking for a New Real Estate Career
Join a winning team for your success
• Free Real Estate Classes
• Regular Sales Training from Experts
• Referral leads
• Help & guidance for newly licensed agents
Tel: 416-284-5698

## மூலிகைத் தயாரிப்புக்கள்




### The ERVAMATIN™ HAIR LOTION

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும்
தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக
தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை
ஔடதம்! உலகெங்கும்
பல்லாயிரக்கணக்கானவரின்
பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத்
தயாரிப்பு. இப்போது எவமாட்டின்
சாம்பூவும் கிடைக்கிறது.



Tel: 416•264•8787

## புதிய டிசைன்களில் சபோனா காப்புகள்



SABONA & Gift

### க்லூாட்டியலா

பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கிறது.




### டயபீனா

இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியது. கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.





### கொன்சிடாப்

மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது.




### இயற்கை மூலிகையிலான தலை முடி மை




இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.




### லோங்லைஃப்

இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம்.

www.dreamron.ca

www.mediherbs.ca

**இங்கேயும் விற்பனையாகின்றன!**

**மிக விரைவில் ஐரோப்பா எங்கும் விற்பனையாகவிருக்கின்றன**

| | | |
|---|---|---|
| New Spicy Land | Jaffna Super Store | Eera Super Market |
| 416 292 9769 | 416 289 8812 | 416 269 2622 |
| Daily Needs | M&S Convenience | Durcaa Supermarket. |
| 416 490 7703 | 416 444 8202 | 905 796 6762 |

Amazon Health Care www.amazonhealthcare.com 2602, Eglinton Ave East (Midland/ Eglinton)

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு எடுக்கும் காலம்

### கனடாவில் ஒருவர் Bankruptcy (வங்குரோத்து நிலை)க்கு விண்ணப்பித்த பின்பு, வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு எவ்வளவு காலம் செல்லும்?

பொருளாதார உருகுநிலை (Economic Meltdown), பொருளாதாரம் கீழ்நோக்கி வீழ்ச்சி அடைதல் (Economic Downturn), பொருளாதார மந்த நிலை (Recession) என்று வெவ்வேறு அடைமொழிகளால் அழைக்கப்படும். உலகளாவிய ரீதியிலான பொருளாதார பாதிப்பு சமீப காலங்களில் தனிமனிதர்களின் வாழ்க்கையிலும், வர்த்தக நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கனடா உட்பட அநேக பொருளாதார வளர்ச்சி கூடிய நாடுகளும், அதேசமயம் அபிவிருத்தி குன்றிய நாடுகளும் இதன் விளைவாக பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் சடுதியாக தமது தொழிலை இழந்துள்ளனர். இதனால் அவர்களது வாழ்க்கை முறை பாதிப்படைந்து, நிலை குழம்பியுள்ளது. இதனால் அவர்களது எதிர்கால திட்டங்கள் பல்வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளது.

வேலை இழப்பு காரணமாக குடும்பங்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் அநேகர் வேறு வழி எதுவுமின்றி வங்குரோத்து நிலை (Bankruptcy)க்கு செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வங்குரோத்து நிலை(Bankruptcy)க்கு விண்ணப்பிக்காமல் நிதி நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்து விடுபடுவதற்கு மாற்றீடான வழிகள் என்ன? என்பவை உட்பட பல்வேறு விடயங்கள் இந்த கட்டுரை தொடரில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

இத்தொடரின் இந்த ஆரம்ப அறிமுக கட்டுரையில் தனிநபரின் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy) தொடர்பாக கனேடிய அரசு மிகவும் சமீபத்தில் அமல்படுத்தியுள்ள புதிய விதிமுறைகளும் விளக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து வங்குரோத்து நிலை பற்றிய விபரங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் தொடர்ச்சியான கட்டுரைகளாக வெளிவரவுள்ளது என்பதையும் வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

### கனேடிய அரசு சமீபத்தில் ஏற்படுத்தியுள்ள Bankruptcy தொடர்பான புதிய சட்ட விதி முறைகள்:

கனேடிய அரசு சமீபத்தில் ஏற்படுத்தியுள்ள வங்குரோத்து நிலை (Bankruptcy) தொடர்பான புதிய சட்ட விதிமுறைகள், பல சாதக பாதக நிலைகளுடன் 2009 செப்டம்பர் முதல் அமலுக்கு வந்துள்ளன.

### வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கான கால எல்லை

- முதல் தடவையாக வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தால், மேலதிக வருமானம் எதுவும் இல்லாவிடில் 9 மாதத்தில் வங்குரோத்து நிலைக்கான காலஎல்லை முடிவடையும். மேலதிக வருமானம் இருந்தால், வங்குரோத்து நிலை 21 மாதங்கள் வரை நீடிக்கும்; எவரும் எதிர்ப்பு தெரிவிக்காவிடில் - No Opposition.
- இரண்டாவது தடவையாக வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தால், மேலதிக வருமானம் இல்லாத ஒருவர் 24 மாதங்களின் பின்னர் இந்த நிலையில் இருந்து விடுபடுவார். மேலதிக வருமானம் உடையவராக இருந்தால் 36 மாதங்களின் பின்னர் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவார்; எவரும் எதிர்ப்பு தெரிவிக்காவிடில் - No Opposition.
- முன்பு ஒருவரின் கடன் தொகை 75,000 டொலர் வரையில் தான் Consumer Proposal (நுகர்வோர் ஆலோசனை) செய்யமுடியும், தற்போது அக் கடன் தொகை 250,000வரை உயற்றப்பட்டுள்ளது.

### இந்த விதிமுறை பற்றிய விளக்கம்:

- தனிநபர் ஒருவரது நிகர வருமானம், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவான $1870ஐ விட அதிகமானதாயின், அவரது வங்குரோத்து நிலைக்காலம் மேலதிகமாக 12 முதல் 36 மாதங்களால் நீடிக்கப்படும்.

**குறிப்பு:** நீங்கள் மேலதிகமாக உழைக்கும் ($1870ஐ விட)வருமானத்தின் 50 சதவீதமான தொகை வங்குரோத்து Trustreeயின் மூலமாக கடன் வழங்கியவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

> உங்களது கடனில்
> 10% முதல் 40% வரையான தொகையே
> வட்டியின்றியும்,
> உங்கள் வருமானத்திற்கு ஏற்ற விதத்திலும்,
> கடன் தந்தோர் ஏற்கக்கூடிய விதத்திலும்,
> குறிப்பிட்ட கால இடைவெளியிலும், மாதாந்தத்
> தவணைமுறையிலும்,
> திரும்ப செலுத்த முடியும்.

### Consumer Proposal (நுகர்வோர் ஆலோசனை)

### கடன் வழங்கியவர்களுக்கு கடன் பெற்ற ஒருவர் முன்வைக்கும் திட்டத்தை ஆரம்பித்தலும், அதன் பின்னரான நடவடிக்கைகளும்.

கடன் பெற்ற ஒருவர், அவருக்கு கடன் வழங்கியவர்களுக்கு கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பி செலுத்துவது தொடர்பாக முன்வைக்கும் ஆலோசனைகள் நுகர்வோர் ஆலோசனை (Consumer Proposal) என்று அழைக்கப்படும். உதாரணமாக இந்த திட்டத்தின் மூலம் உங்களுக்கு கடன் வழங்கியவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் திரும்பச் செலுத்த



வி. சிறி

வேண்டிய பணத்தின் மொத்த அளவை குறைத்து செலுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்படும். இதன் காரணமாக உங்களது கடனை அதிகளவிலான (60 மாதத்திற்குள்) கால இடைவெளியில் குறிப்பிட்ட தொகையை திரும்ப செலுத்த முடியும். இதன்படி உங்களது கடனில் 10% முதல் 40% வரையான தொகையே வட்டியின்றியும், உங்கள் வருமானத்திற்கு ஏற்ற விதத்திலும், கடன் தந்தோர் ஏற்கக் கூடிய விதத்திலும், குறிப்பிட்ட கால இடை வெளியிலும், மாதாந்தத் தவணைமுறையிலும், திரும்ப செலுத்த முடியும்.

### இந்த வகையாக நீங்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் உங்களுக்கு எந்த வகையில் பயன்படும்?

கடனைத் திரும்பவும் செலுத்துவது தொடர்பாக நீங்கள் முன்வைத்த ஆலோசனைத் திட்டத்தை நீங்களாக மீளப் பெற்றுக்கொண்டால் அல்லது ஏற்றுக்கொள்ளாவிட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் தவிர உத்தரவாதமின்றி உங்களுக்கு கடன் வழங்கிய எவரும் உங்களிடமிருந்து கடனைத் திரும்ப பெறுவதற்கு எவ்வித சட்ட நடவடிக்கையையும் எடுக்க முடியாது.

குறிப்பு: வங்குரோத்து நிலை மூலம் விடுபட முடியாத வகை கடன்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாணவர்களது கல்வி தொடர் பான கடன்: (Student Loan)

பழைய விதிமுறைகளின் படி, ஒரு மாணவர், தான் கடன் பெற்ற தொகையை திரும்பச் செலுத்த முடியாவிடில் அவர் வங்குரோத்து நிலைக்கு அல்லது Consumer Proposal (நுகர்வோர் ஆலோசனை)க்கு விண்ணப்பம் செய்யும் காலம் 10 வருடங்களுக்கு மேற்பட்டதாக அமைய வேண்டும்.

ஆனால் புதிய விதிமுறையின்படி (மாற்றம் செய்யப்பட்ட காலம் யூலை 2008) ஒரு மாணவர் தான் கடன் பெற்ற தொகையை திரும்பச் செலுத்த முடியாவிடில் அவர் வங்குரோத்து நிலைக்கு அல்லது Consumer Proposalக்கு விண்ணப்பம் செய்யும் காலம் 7 வருடங்களுக்கு மேற்பட்டதாக அமைய வேண்டும்.

sri.v@thaiveedu.com

■ ■ ■

# இலையுதிர்கால...

19ம் பக்கத் தொடர்ச்சி...

ஊடாக வீட்டிற்குள் செல்வதும், இதன் நச்சுத் தன்மை காரணமாக பலர் உயிர் இழப்பதும் நாம் வருடா வருடம் கனடாவில் அறியும் செய்திகள். இத்தகைய கதவுகள் தானே மூடப்படுவதற்காக பொருத்தப்பட்டிருக்கும் 'Auto Closer' சரியாக செயற்படுகின்றதா? என்பதைப் பரிசோதித்து அதன் விசையை உரிய நிலைக்குச் சரிசெய்து விட வேண்டியது மிக அவசியம்.

### Gutters கூரை வடிகால்

கூரைவடிகால்களில் சருகுகள் தேங்கிக் கிடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைச் சுத்தம் செய்து அத்துடன் தண்ணீர் ஒழுங்காக கீழ்நோக்கிச் செல்லும் குழாய் ஊடாக (Downspout) அகற்றப்படுகின்றதா? என்பதை உறுதிப்படுத்துதல் நல்லது.

**குறிப்பு:** சுற்றுப் புறங்களில் அதிக மரங்கள் உள்ளவர்கள் Guttersக்குரிய துவாரமிடப்பட்ட மூடிகளை பொருத்துவதன் மூலம் சுத்தம் செய்யும் மேலதிகப் பழுவைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஜன்னல்கள் மற்றும் கூரையில் கண்ணாடிகள் (Sky Light) பொருத்தப்பட்டிருந்தால் அவை இறுக்கமாக மூடப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கோடைக்காலத்திற்குரிய யன்னல் திரைச்சீலைகளை மாற்றி விட்டு குளிரை எதிர்க்கக்கூடிய திரைச்சீலையை மாற்றுபவர்கள் இக்காலப்பகுதியில் அதனையும் மறக்காது செய்தல் வேண்டும்.

வீடுகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக யன்னல் கண்ணாடிகளில் நீர்ப்படிவு ஏற்படுவதை அவதானித்திருக்கலாம். குறிப்பாக திறக்கக்கூடிய யன்னல் பகுதிக்கு உட்பக்கமாகப் போடப்பட்டிருக்கும் Netன் அடியிலேயே அதிகளவு நீர்ப்படிமானம் ஏற்படுவது, வழிந்தோடுவது, பங்கஸ் பிடிப்பது போன்ற பல இடர்களை காணக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்பவர்கள் முன்கூட்டியே அத்தகைய Netகளை எடுத்து வைத்து விட்டு மீண்டும் கோடைக்காலத்தில் போடலாம். இத்தகைய Netகள் காற்றோட்டத்திற்கு இடையூறு செய்வதாலேயே அத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால், உயர்ந்த மாடிகளில் இருப்பவர்கள் பாதுகாப்புக் காரணங்களை கருத்திற்கொண்டு அதனைத் தவிர்த்துவிட வேண்டும்.

Smoke Detectors + Carbon Monoxide Detectors என்பன உரிய முறையில் வேலை செய்கின்றனவா? என்பதனை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் இவற்றின் தொழிற்பாடு அதிகளவில் தேவைப்படும்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

# மகப்பேறு...

9ம் பக்கத் தொடர்ச்சி...

யோனியினுள் விடப்பட்ட நாளில் இருந்து 5 நாட்கள் வரை உயிர்வாழும்.

குழந்தைப்பாக்கியம் வேண்டும் என்பவர்கள் பெண்ணானவள் சூல் கொள்ளும் காலத்திற்கு 4 நாட்களுக்கு முன்பே கலவியில் ஈடுபடலாம். இதன் மூலம் உயிருடன் காத்திருக்கும் விந்தை முட்டையானது அண்மிக்கும் பொழுது கருக்கட்டல் நிகழ்கின்றது. அதி உயர் இரத்த அழுத்தமுடைய ஆணிற்குச் சில சமயங்களில் பீற்றா புளொக்கர் என்ற பீற்றா வாங்கி களைத் தடை செய்யும் Propranolol (Indiral) போன்ற மருந்துகள் கொடுப்பார்கள். விந்தின் வாலிலும் பீற்றா வாங்கிகள் இருப்பதனால் இம்மருந்துகள் விந்தின் நீச்சல் திறனைக் குறைத்து முட்டையை அடைய விடாது தடுக்கலாம். வைத்திய ஆலோசனைப்படி வேறு மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

பெண்ணிற்கும் சந்திரனிற்கும் தொடர்புகள் அதிகம் உண்டு. பெண்ணிற்கும் பெண் மாதவிடாய் ஏற்படும் நாட்கள் வித்தியாசப்படும். அநேகமான பெண்களிற்கு சராசரியாக 28 நாட்களிற்கு ஒரு தடவை மாதவிடாய் ஏற்படும். அமாவாசையை அடுத்து 14 நாட்கள் வளர் பிறையாகி பூரண நிலவாகவும் பின்பு 14 நாட்கள் தேய்பிறையாகச் சென்று அமாவாசையாகவும் ஒரு ஒழுங்கு முறையில் நடைபெறுவது போல் பெண்களிலும் மாதவிடாய் தொடங்கிய நாள் முதல் அடுத்து வரும் 14 நாட்கள் வரை ஈஸ்ரொஜன் என்ற ஹோமோனின் அளவு கூடிச் சென்று 14ம் நாள் பூரண நிலவு ஏற்படுவது போல் அதி உச்சக்கட்டமான சுரப்பை ஏற்படுத்துகின்றது. இக்காலகட்டத்தில் FSH, LH போன்ற ஹோமோன்கள் Gn RHன் அதிர்வு அலைக்கட்டளைகளை ஏற்று சூலகத்தில் உள்ள முளையக் கலங்களில் ஒரு சிலவற்றை படிப்படியாக முதிர்வடையச் செய்கின்றன. இறுதியில் LH மிகுதியாகக் கூடும் பொழுது முதிர்வடைந்த முளையக் கலம் வெடித்து முட்டையானது சூலகத்தில் இருந்து வெளிவிடப்படுகின்றது.

இப்படியாகப் 14ம் நாள் வெளிவிடப்பட்ட முட்டை ஆணின் விந்துடன் கூடிக் கருக்கட்டாத பட்சத்தில் 24 மணித்தியாலங்களின் பின்பு கருக்கட்டும் தன்மையை இழந்து இறந்து விடும். ஆனால், முட்டை வெளிவரும் அதே நாளில் ஆணின் விந்துடன் சேரும் வாய்ப்புகள் ஏற்படுமானால் முட்டையுடன் விந்து சேர்ந்து கருக்கட்டல் நிகழலாம். மேலே கூறப்பட்ட முளையக்கலம் முதிர்வடைந்து முட்டையை வெளியேற்றிய பின்பு அது மஞ்சள் சடலமாக மாறுகிறது. LH ஹோமோனின் அதிஉச்சச் சுரப்பு முளையத்தில் இருந்து முட்டையின் வெளியேற்றத்தைத் தூண்டியது மட்டுமல்லாமல் புறொஜெஸ்ரைறோன் என்ற மற்ற ஹோமோனையும் 14ம் நாளின் பின்பு சுரக்கத் தூண்டுவதுடன் மஞ்சள் சடலத்தின் ஆயுளைப் பேணி அதனூடே புறொஜெஸ்ரைறோன் ஹோமோன் சுரப்பு அளவைப் பேணுகின்றது. 14ம் நாளின் பின்பு கூடிய அளவு சுரப்பைக் கொண்டுள்ள புறொ ஜெஸ்ரைறோன் கர்ப்பப் பையின் உட்சுவரில் பலமாற்றங்களை ஏற்படுத்தி கருக்கட்டிய முளையம் வந்து தங்கி வளர்வதற்கு ஏற்ற சூழலை அடுத்த 12 நாட்கள் வரையில் வைத்திருக்கும். கருக்கட்டிய முட்டை இங்கு வந்து தங்கி வளர்ந்தால் இந்த வளமான இடம், பிள்ளை கருப்பையில் வளர்ந்து, பூமியில் வந்து பிறக்கும் வரை பேணப்படும்.

கருக்கட்டல் நிகழாத விடத்து 12வது நாளின் பின்பு மஞ்சள் சடலம் தனது செயற்பாட்டை இழக்க நேரிடும். அப்பொழுது புறொஜெஸ்ரெறோன், ஈஸ்ரொஜன் ஹோமோன்கள் இரண்டினதும் சுரப்பின் அளவுகள் குறைந்து விடும். இதன் காரணத்தால் வளம் படுத்தப்பட்ட கருப்பையின் உட்படை மேற்கொண்டு தேவைப்படாத நிலையில் (கருத்தங்காத நிலையில்) வெளியே 28ம் நாளில் உதிர்க்கப்படுகின்றது. இது தான் மாதமொருமுறை ஏற்படும் மாதவிடாய்.

பூப்பெய்திய நாள் முதல் இம்மாதவிடாய் ஒவ்வொரு மாதமும் ஏற்படுகின்றது. மாதவிடாயில் ஏற்படும் ஒழுங்கீனங்கள் பற்றி எழுதுவதானால் இக்கட்டுரை மிகவும் நீண்டுவிடும் என்பதனால் அதனை அடுத்து வரும் கட்டுரைகளில் கவனிப்போம்.

மகப்பேற்றைப் பற்றி விளங்கிக் கொள்வதற்காகவே சற்று விபரமாக பெண்களின் கர்ப்பப்பையினுள் என்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பனவற்றைக் குறிப்பிட்டிருந்தேன்.

ஆணும், பெண்ணும் சேர்ந்து கர்ப்பம் தரிப்பதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்திய பின்பு, மகவைப் பெற்றெடுப்பதற்குரிய செயலில் ஈடுபடுத்தல் வேண்டும். வயதும் ஒரு பிரதானமான காரணியாக அமைவதனால் காலம் தாழ்த்தாது அச்செயலில் ஈடுபடுவது நல்லது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள சில பிரதேசங்கள் மச்சாள், மச்சாள் இடையே நடைபெறும் கலியாணங்களை சட்டமூலமாகத் தடுத்துள்ளன. சில பரம்பரை நோய்கள் கடத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இச் சட்டமூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து வரும் கட்டுரைகளில் இதுபற்றி ஆராய்வோம்.

### கவனிக்க வேண்டியவை:

- சூழலகத்தில் இருந்து முட்டை வெளிவரும் நாளில் பெண்ணின் உடல் வெப்பநிலை சற்றுக் கூடுதலாக இருக்கும். தினமும் வெப்பமானி கொண்டு உடல் வெப்ப நிலையை அளந்து வந்தால் இம்மாற்றத்தைக் கண்டுகொள்ளலாம்.
- முட்டை வெளிவரும் நாளிற்கு முன்பாகவே யோனியினுள்ளும், கருப்பைப் பகுதியிலும் விந்துகள் உயிருடன் இருந்தால் கருக்கட்டும் வாய்ப்பு அதிகம் இருக்கும்.
- முட்டை வெளிவரும் நாட்களில் யோனிப் பகுதியில் ஏற்படும் சுரப்புகள் மற்றும் மார்புப் பகுதியில் ஏற்படும் கனதி போன்றவற்றைக் கவனித்து அந்நாட்களில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
- ஆணின் விந்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் பல தடவைகள் பெண்ணுடன் ஊடலில் ஈடுபட்டு விந்து வெளிவிடுவதைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கலாம். ஊடலில் ஈடுபடும் பொழுது விந்தின் அளவை ஓரளவாவது கூட்டலாம். முயன்று பார்ப்பதில் தவறில்லை.
- முட்டை வெளிவரும் நாளிற்கு 2 அல்லது 3 நாட்களின் முன்பிருந்தே கலவியில் ஈடுபட்டு மகப்பேற்றைப் பெறுவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளலாம்.

மேலும் பலவற்றைக் கூறலாம். ஆனால் அவை கூடுதலான விளக்கங்களை ஏற்படுத்த வேண்டுமாகையால் தவிர்க்கப்பட்டுள்ளன..

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

# ஆரைக்கீரை, புதி...

27ம் பக்கத் தொடர்ச்சி...

புதினா இலைச் சாற்றை நெற்றியில் தடவத் தலைவலி கட்டுப்படும். தலைவலித் தைலம் செய்வதற்குப் புதினா இலைச் சாற்றைப் பயன்படுத்துகிறார்கள். அடிக்கடி செமிபாட்டின்மை உள்ளவர்கள் புதினா இலைகளைத் தண்ணீரில் ஊற வைத்துத் தொடர்ந்து குடித்து வரலாம். புதினா சூட்டைக் கிளப்பிவிடும் தன்மை கொண்டது. அதனால் மூலநோய் போன்ற வியாதிகள் உள்ளவர்கள் புதினாவைத் தவிர்ப்பது நல்லது. புதினா இலைகளின் சாறு மிகவும் குளிர்ச்சியானது. இந்தச் சாறும் எண்ணெயும் தோலில் காணப்படும் பருக்களையும் தழும்புகளையும் நீக்கி, தோலுக்கு வனப்பை ஏற்படுத்தும். புதினா எண்ணெய் சருமத்துக்குப் புத்துணர்ச்சியை அளித்து மிருதுவாக வைத்திருக்க உதவும்.

புதினாச் செடி 'மெந்தா' என்ற இனத்தைச் சேர்ந்தது. இதன் ஆங்கிலப் பெயர் 'மின்ற்' (mint) என்பதாகும். மிருதுவான தன்மையைக் கொண்ட இச்செடியை எல்லாப் பருவங்களிலும் பயிர் செய்யலாம். பற்பசைகளில் புதினாவில் இருந்து கிடைக்கும் 'மென்தால்' என்னும் உப்பைச் சேர்க்கிறார்கள். இதுவே பல் ஈறுகளில் வரக்கூடிய நோய்களைக் குணமாக்க உதவுகின்றது. நாமும் புதினா இலைகளை நன்கு காய வைத்துப் பொடி செய்து பல் துலக்கி வரலாம்.

புதினா இலையும் தண்டும் வாசனை மிக்கவை. பெப்பமின்ற் தைலமும் பச்சைக் கர்ப்பூரமும் புதினாவில் இருந்து செய்யப்படுகின்றன. புதினாச் செடி பூக்கும் காலங்களில் எண்ணெய்ச் சத்து அதிகம் கொண்டதாக இருக்கும். அத்தகைய பருவங்களில் இலைகளிலும் பூக்களிலும் அதிக எண்ணெய் கிடைக்கும். எண்ணெயை உறைய வைத்தால் அரைவாசி பச்சைக் கர்ப்பூரம் படிக வடிவமாகவும் மிகுதி பெப்பர்மின்ற் தைலமாகவும் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது.

புதினாக் கீரையுடன் பாசிப்பயறு சேர்த்து, தேங்காய், புளி சேராமல், துவையல் செய்து உணவுடன் சாப்பிட்டு வந்தால் காமாலை நோய் தீரும். புதினாவில் செய்யப்படும் குடிநீர் பல நோய்களைத் தீர்க்கும். குறிப்பாகச் சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சல் குறைந்து குணமாகும். இந்தக் குடிநீர் குடித்து வந்தால், பெண்களுக்கு மாத விலக்கின்போது ஏற்படும் வயிற்றுவலி நீங்கும் இந்தக் குடிநீர் உடலில் உள்ள சூட்டைத் தணிக்கும். நல்ல நித்திரை வரும்.

### முளைக்கீரை

முளைக்கீரை தென்னாசிய நாடுகளில் சர்வ சாதாரணமாக வளரும். உணவில் சுவை ஊட்டுவதற்காகவும் சிறந்த மருத்துவப் பயன்களைப் பெறுவதற்காகவும் பெருமளவில் பயிரிடப்படுகின்றது. உழுது பதப்படுத்தப்பட்ட நிலத்திலும் பயிரிடப்படாத வெற்று நிலத்திலும் முளைக்கீரை சிறப்பாக வளரும். முளைக்கீரையும் தண்டுக்கீரையும் ஒன்றுதான் என்று சிலர் கூறுகிறார்கள். இளம் நாற்றுக்களை முளைக்கீரை என்றும் உயர்ந்து வளர்ந்தவற்றைத் தண்டுக்கீரை என்றும் அவர்கள் சொல்கிறார்கள். இந்த இரண்டு கீரைகளின் தாவரப் பெயர்களில் காணப்படும் ஒற்றுமையாலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டது என்பதும், இரண்டும் வெவ்வேறான இரு வகைக் கீரை இனங்கள் என்பதும் கற்றோர் கருத்து.

நன்றாக நீர் பாய்ச்சிச் செழிப்பாக வளரும் முளைக்கீரை பூப்பதற்கு முன்னர் நாலாவது வாரத்தில் இருந்து ஆறாவது வாரம் வரை பிடுங்கிச் சமைத்து உண்ணலாம். அதற்குமேல் விட்டால் முற்றி நாரில் வயிரம் பாய்ந்து தடித்து விடும். முளைக் கீரையைக் குழந்தைகள் முதல் முதியோர் வரை எல்லோரும் பயமில்லாமல் சாப்பிடலாம். முளைக் கீரையைச் சாப்பிடும் போது நாவுக்குச் சுவையாக இருக்கும். செமிபாட்டுச் சக்தியைக் கொடுக்கும். நல்ல பசியை உண்டாக்கும்.

முளைக்கீரைக்கு இளங்கீரை என்றும் ஒரு பெயர் உண்டு. முளைக்கீரையில் 85.7 விழுக்காடு நீரும், 4 விழுக்காடு புரதச் சத்தும், 0.5. விழுக்காடு கொழுப்புச் சத்தும், 2.7 விழுக்காடு தாதுப்புகளும், 1 விழுக்காடு நார்ச்சத்தும், 6.3 விழுக்காடு மாச்சத்தும் அடங்கியுள்ளன. முளைக்கீரையில் உள்ள ஒரு விசேட அம்சம் என்னவென்றால் இந்தக் கீரை ஒன்றில்தான் எல்லாவிதமான தாதுப்புகளும் அடங்கியிருக்கின்றன. முளைக்கீரையில் இருக்கும் இரும்புச் சத்தும் தாமிரச் சத்தும் இரத்தத்தைச் சுத்தி செய்து உடலுக்குப் பலத்தையும் அழகையும் கொடுக்கும்.

முளைக்கீரையை வெங்காயம், பச்சை மிளகாயுடன் உப்பும் சேர்த்துக் கடைந்து சாப்பிட்டால் உடம்பின் உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த நோய்கள் முதலியன குணமாகும். இந்தக் கீரை வெப்ப சுரத்தைத் தணிக்கும். சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்களைக் குணமாக்கும்.


இது வரையில் பதினாறு வெவ்வேறு வகையான கீரைகளையும் அவற்றின் சிறப்பான பலன்களையும் பார்த்தோம். தமிழீழத்தில் சாதாரணமாகப் பயன்பாட்டில் இருப்பவையும் மருத்துவத் தேவைகளுக்கு மட்டும் உணவில் சேர்ப்பனவுமான வேறு சில நல்ல கீரைகளும் இருக்கின்றன. உதாரணமாக, குறிஞ்சாக்கீரை, சண்டிக்கீரை, தேங்காய்ப்பூக் கீரை, பயிரிக்கீரை, முசுட்டைக்கீரை ஆகியவற்றைக் கூறலாம்.

நாங்கள் பயன்படுத்துகின்ற கீரைகள், காய்கறிகள், மூலிகைகள் ஆகியவற்றில் கிடைக்கக்கூடிய அற்புதமான நல்ல பயன்கள் பற்றி அறியும் ஆர்வம் எனக்கு வெகு காலமாக இருந்து வந்தது. கட்டுரைகள் எழுதும் நோக்கம் எதுவும் இல்லாமல், சொந்தத் தேவைகளுக்குப் பயன்படக்கூடும் என்ற எண்ணத்தில் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இவற்றைப் பற்றி நான் படித்த நூல்கள் மற்றும் இணையத்தளக் கட்டுரைகளில் என்னைக் கவர்ந்த சில விடயங்களை அவ்வப்போது குறிப்பெடுத்து வைத்திருந்தேன். அவற்றை அடிப்படையாக வைத்தே இக்கட்டுரைத் தொடரை எழுத முடிந்தது. பல குறிப்புகளும் படங்களும் எங்கிருந்து பெறப்பட்டன என்று இப்பொழுது நினைவில்லை. எனினும் அந்தந்த நூலாசிரியர்கள் கட்டுரையாசிரியர் களுக்கு மனமார்ந்த நன்றி.

முற்றும்.

uthayanan@thaiveedu.com

■ ■ ■

TRAFFIC TICKETS!
• SPEEDING
• STOP SIGN
• RED LIGHT
• ACCIDENT
• CARELESS
• TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

**$299.900** — Rehab Buisness with Property — Midland / McNicoll

**$499,900** — Port Union / Lawson — 4 Bedrooms 4 Washroom — Finished Basemen

**$429,900** — BRAMPTON — Torbram & Father Tobin — 4 Bedrooms 3 Washroom

**$599.000** — WOODBRIDGE — Rutherford / Western Rd — 4 Bedrooms, 4 Washroom — Finished Basement

**$329.000** — Port Union/Lawrence Ave — 3 Bedrooms,2 Washroom

**In Cambridge** — GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE — **$845.000**

**In Hamilton** — GAS STATION Petro Canada — **$1,700.000**

**In Orono** — ESSO GAS STATION — **$1,100.000**

**In Norwood** — ESSO GAS STATION — **$749.000**

**In Port Hope** — SHELL GAS STATION — **$1,750.000**

மேலும் பல GAS STATION களும் விற்பனை நிலையங்களும் விற்பனைக்குண்டு

*Some conditions may apply



நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

## சத்தி மருதப்பா

Sales Representative

(முழுநேர வீடு விற்பனை முகவர்)

## 416-816-1500

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3GS
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

Century 21



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

**$139,900** — Bank Sale — Jane/Sheppard — 3 Bdrm & 2 Wrm — Convenient Location

**$310,000** — Sheppard/Markham — 3 Bdrm & 3 Wrm — Very Demand Location

**$219,900** — Kennedy/401 — 3+1Bdrm & 4 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$169,000** — Warden/Finch — 3 Bdrm & 2 Wrm — Great Location

**$325,000** — Scar.Golf/Lawrence — 3 + 2 Bdrm & 2 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$349,900** — Morningside/Hwy 401 — 3+3 Bdrm & 4 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$355,500** — Bellamy/Lawrence — 3+3 Bdrm & 3 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$247,900** — Warden/Finch — 3+2 Bdrm & 2 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$369,000** — Mccowan/lawrence — 4+2 Bdrm & 3 Wrm — Fin. Bsmt & 2 Kit

**$365,990** — Brimley/Lawrence — 3+3 Bdrm & 2 Wrm — Fin. Bsmt & Sep Ent

**$369,000** — Harwood/Hwy2 — 3+2 Bdrm & 4 Wrm — Fin. Bsmt & 2 kit

**$449,000** — Keele/Rogers — 5 Bdrm & 3 Wrm — Great Investment

If you want see more House visit at www.krishome.ca

**$199,000** — Markham/SHeppard — 3 Bdrm & 2 Wrm — Front Of Shopping Mall

**$183,000** — Middlefield/Finch — 2+1 Bdrm & 1 Wrm — Excellent Location

**$189,000** — Lawrence/Midland — 2Bdrm & 2 Wrm — Great Location

Full Time Realtor



**Krish Sivapatham**
Sales Representative
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Independently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply

HOMELIFE HIGHER STANDARDS



## CENTUM Gold Mortgages
Looking out for your best interest

இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள் நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...

- Ist, 2nd, 3rd MORTGAGES *
- COMMERCIAL MORTGAGE *
- LINE OF CREDIT *
- POWER OF SALE *
- SELF - EMPLOYED *
- BRIDGE FINANCING *
- SWITCHING *
- REFINANCING *
- BAD CREDIT *

All Mortgages Needs
☎: 416- 844-8692
supen71@hotmail.com

Fixed rate
as low as for 5 yrs - 3.65%
closed variable
as low as - 2.25% (prime rate)
open variable
as low as - Prime(2.25%) + 0.70

Second mortgage avaiable with out income qualify and deal can be closed within two days.




**Supen Subramaniam**
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply


Shan Thayaparan
Sales Representative
Dir: 416.567.7675
Bus: 416.321.2228
www.shan123.com
E mail: Shan123@rogers.com
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6
Scarborough
$229,900
SOLD
Power of Sale
Excellent Value. Large Rooms, Big Backyard Steps to TTC, Close to 401, Mall, Library Schools and more!!!!!!
Scarborough
$229,900
Move in Condition
Excellent Value. Large 3 Bed Rooms, Steps to TTC, Close to 401, Mall, Library Schools and more!!!!!!
Scarborough
$309,000
Free Hold End Unit
4Years new, Large 3 Bed Rooms, Finished walk out Basement Close to School & TTC
Scarborough
$329,000
Markham/Sheppard
Large 3 Bed Rooms, 3 Full Wash Rooms Finished Basement Close to Everything
Scarborough
$329,000
Markham/Sheppard
Large 3 Bed Rooms, Newly Renovated House. Finished Basement Close to Everything
Scarborough
$639,000
Over 3000 Sqf.
Large 4 Bed rooms, 3 Full washrooms Hardwood Floors through out, Pot Lights Close Schools, TTC & Shopping.
Scarborough
$379,900
SOLD
Extra Large/Finished Bsmt
Large 3 Bed Rooms & 3Bedrooms in the Basement. Close to Scar. Town centre School 401,& TTC
Scarborough
$369,900
4 Bedrooms/Double Garage
Large 4 Bed Rooms & 2Bedrooms in the Basement. Steps to TTC. Close to Schools, 401, & Shopping
Scarborough
$339,900
SOLD
Mattamy Built Semi.
4 yrs. New, 3 Bed Rooms, Hardwood Floors Steps to TTC. Close to Schools, 401, & Shopping
Markham
$470,000
Grate Family Home
4 Large Bedrooms, 3Full Washrooms. Open Concepts, California Shutters & More Walk to Schools, Go & Shopping
Scarborough
$449,900
SOLD
Mattamy Built/ 4+2 Bedrooms
4 Bed rooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close Schools, TTC & Shopping.
Scarborough
$369,900
Investment opportunity
4 Bed+3Bedrooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close UofT, TTC, Hospital & Shopping.
Markham
$415,000
Sun-Filled Home
Solid oak Floors & Stairs, Upgraded Kitchen Stainless Appliances, Well Maintained Close to YRT, Schools & Shopping
Markham
$459,900
Sun-Filled Home
Solid oak Floors & Stairs, Upgraded Kitchen Stainless Appliances, Well Maintained Close to YRT, Schools & Shopping
Markham
$469,000
McCowan/Steels
4+2 Bedrooms. Quit Neighborhood, Finished Basement, Newer Windows, Close to Schools, YRT, TTC & 407
For Rent
2 Bedroom Basement Apt.
Close to School, 401, 407 & Steps to TTC Amicable from November1st. Asking $800/Month
Daisy Mart
Real Money Maker
Steady Weekly Sales $10,000. Ideal Family Business.
Stouffville
$345,000
SOLD
Beautiful Semi.
3 Large Bed rooms, 2 Full washrooms Upgraded Kitchen, Upgraded Washroom Stainless Appliances. Close to GO Station
Plaza/Apartments
$990,000
Over 5000Sqf.
4 Stores, 3 Apartments. Fully Leased Located in Scarborough. Live in and make money.
Brampton
$339,900
Spotless House
3 Large Bed rooms, 2 Full washrooms $$$ Spend on Hardwood floors, Kitchen Washrooms. Close to GO Station
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
Bus: 416.321.2228
E mail: vvelauthan@yahoo.com

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# உரிமை காப்புறுதி (Title Insurance)



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

"வீடு" அல்லது "வியாபார நிறுவனம்" அல்லது "நிலம்" என்ற பெரிய விலை உயர்ந்த சொத்து ஒன்றினை சொந்தமாக வாங்கிய தாங்கள் தற்போது அதன் உரிமையாளராக இருக்கின்றீர்கள்.

இவ் உரிமையினை சட்டரீதியாக மாற்றம் செய்து தங்கள் பெயரில் பதிவு செய்யும்போது அதில் எதுவிதமான சிக்கல்கள், பிரச்சினையும் இல்லாது அதன் உரிமை பதிவுகளை முடித்து தர வேண்டியது நாம் நியமிக்கும் சட்டத்தரணியின் கடமையாகும்.

(சட்டரீதியாக செய்து தர வேண்டிய மாற்றங்கள், பதிவுகளில் சட்டத்தரணியின் செயல்பாட்டில் தவறுகள் ஏற்பட்டால், இத் தவறினை சரியாக நிரூபிக்கும்போது சட்டத்தரணியின் தொழில் பொறுப்பு காப்புறுதியில் -Professional Liability Insurance - இருந்து நட்டஈடு பெறலாம் என்பது அறிந்து கொள்ள வேண்டிய இன்னொரு விடயம்)

ஆனால் சட்டத்தரணியின் கடமைக்கு மேலால் சில நேரங்கள் ஏதாவது 'கெட்ட காலங்கள்' சுற்றி பிடிக்கும்போது பிரச்சனைகளும் தொடரலாம். உதாரணமாக எங்கள் சொத்தில் இன்னொருவருக்கும் உரிமை பங்கு இருப்பதாக பதிவுகள் இருக்கலாம். முன்னைய உரிமையாளர் ஏதாவது கட்டணங்கள் செலுத்தாது தவறலாம். காணி எல்லைகளில் தப்புகள் இருக்கலாம். இப்படிப்பட்ட பல்வேறு வகையான பிரச்சனைகளில் இருந்து பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே இவ் "உரிமை காப்புறுதி" (Title Insurance) ஆகும்.

- வீடு அல்லது வியாபார தளம் ஒன்றினை பொதுவாக வாங்கும்போது பாதுகாக்கும் நான்கு காப்புறுதிகளும் எவை?
- இதில் உரிமை காப்புறுதி (Title Insurance) என்பது எத்தகைய பாதுகாப்புகளை வழங்குகின்றது?
- இக் காப்புறுதி ஒப்பந்தத்தினை பெற்றவர் ஒப்பந்தத்தில் கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?

இவையே இத் தலைப்பில் உள்ள ஆய்வு கட்டுரையில் தொடரப்படுகின்றன.

வீடு என்ற ஒரு பெரிய சொத்துக்கு உடமையாகும் ஒருவர் பின்வரும் காப்புறுதி ஒப்பந்தங்களை பெற்று வைத்திருக்கும் போது இங்கு பாதுகாப்பு பல கோணங்களிலிருந்து வழங்கப்படுகின்றது. அவையாவன பின்வருமாறு:

### வீட்டு காப்புறுதி (Home Insurance)

திடீர் என வீடு தீப்பற்றி எரிந்து, பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பாதிக்கப்பட்டால் அந்த நிலையில் இக் காப்புறுதி ஒப்பந்தம் கை கொடுக்கும். இதே போல வேறு எந்த வழியிலும் அழிவுகள், பாதிப்புகள் ஏற்பட்டால் நட்டஈடு கிடைக்கும் (ஆனால் நீரினால், வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்படும் போது சில இடங்களில் விதி விலக்குகளும் உண்டு).

உடமைகள், பொருட்கள் ஏதாவது வீட்டினுள் திருட்டு போனால், திருட்டு போன பொருட்களுக்கு ஒரு வரையறை வரை நட்டஈடு பெறலாம். இதே காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து உலகில் எங்கு சென்றாலும் போகும் இடங்களில் நாம் தொலைக்கும் உடமைகளுக்கு இதே வரையறையின் அடிப்படையில் நட்டஈடு பெறலாம்.

வீட்டு உரிமையாளரின் கவனக் குறைவு என்பதால் ஏனையோருக்கு பாதிப்பாக உருவாகும் போது அப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ் ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈடு கிடைக்கும். (Liability Coverage).

> "வீடு தீப்பற்றி எரிந்து, பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பாதிக்கப்பட்டால் அந்த நிலையில் இக் காப்புறுதி ஒப்பந்தம் கைகொடுக்கும். இதேபோல் வேறு எந்த வழியிலும் அழிவுகள், பாதிப்புகள் ஏற்பட்டால் (குறிப்பிட்ட சிலவற்றைத் தவிர) நட்டஈடு கிடைக்கும்"

### வீட்டின் ஈட்டு அடமான காப்புறுதி (Home Mortgage Insurance)

இது ஒரு வகையில் ஆயுள் காப்புறுதி போன்றதே ஆகும்.

சுமார் ஐந்து லட்சத்திற்கு வங்கி ஒன்று அடமான கடன் தருகின்றது என வைத்துக் கொள்வோம். வங்கியின் அடமான கடனை செலுத்தும் உரிமையாளர் ஒருவரின் மரணத்தினால் வங்கி பாதிக்கப்பட கூடாது என்பதற்காக காப்புறுதி கம்பனியுடன் தற்கள் பெயரில் ஆயுட்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை வங்கி உருவாக்கி கொள்ளும். உயிர் இழப்பு நடந்தால் ஈட்டு கடன் முழுவதும் காப்புறுதி கம்பனி வங்கிக்கு செலுத்த இக் கடனில் இருந்து உரிமையாளரின் குடும்பத்தினர் விடுதலையாகின்றனர்.

ஆனால் இக் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு பதிலாக காப்புறுதி கம்பனியுடன் நேரடியாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்வது மிகவும் சிறந்தது என்பது பல வழியியும் நிரூபணமான விடையமாகும்.

### வங்கிக்கு பாதுகாப்பினை வழங்கும் கனடிய கூட்டுஸ்தாபனத்தின் காப்புறுதி (Insurance from Canada Mortgage and Housing Corporation)

வங்கி ஒன்று தங்களுக்கு வீட்டு அடமான கடனை வழங்குகின்றது. தற்சமயம் தாங்கள் கடனை தொடர்ந்து மாதா மாதம் செலுத்தாவிட்டால் என்ன நடக்கும்?

வீட்டினை வங்கி பறிமுதல் செய்து விற்பனை செய்யலாம். சில நேரங்களில் வீட்டினை பறித்து விற்பனை செய்யும் போது, அந்த விற்பனை விலையினை விட கடனின் தொகை அதிகமாக இருந்தால் வங்கிக்கு பாதிப்பு அல்லவா?

இத்தகைய ஆபத்தில் இருந்து தப்புவதற்காக கடன் வழங்கும் வங்கி ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தினை தங்கள் செத்தில் இவ் அரச நிறுவனத்துடன் செய்து கொள்கின்றது. அதற்குரிய கட்டணம் தங்களிடமே அறவிடுகின்றது.

அடமான கடன் செலுத்த முடியாத நிலையில் வங்கி வீடு ஒன்றினை பறிமுதல் செய்யும் நிலையில் வங்கிக்கு அடமான கடனை வட்டியுடன் செலுத்தி விட்டு இக் கூட்டுஸ்தாபனம் வீட்டினை பொறுப்பு எடுத்து கொள்கின்றது.

ஆனால் வீடு வாங்கி அடமான கடன் பெறும் போது 20%-25% ஆரம்ப பணம் (Down Payment) செலுத்தினால் இக் காப்புறுதி தேவையில்லை.

### உரிமை காப்புறுதி (Title Insurance)

வீடு அல்லது வியாபார தளம் ஒன்றினை சொந்தமாக வாங்கும் போது இதன் உரிமையினை சட்டரீதியாக பதிவு செய்யும் போது வக்கீலின் உதவியுடன் மாதாமாதம் செலுத்தாது ஒரே தரத்தில் செலுத்தும் கட்டணத்துடன், உரிமையின் ஆபத்தில் ஏற்படும் பாதுகாப்புக்காக செய்து கொள்ளும் காப்பறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

இக் காப்புறுதி என்பது கண்டிப்பாக (Mandatory) பெற்று வைத்து இருக்க வேண்டும் என்பதல்ல. அவரவர் விரும்பினால் ஒரு பெரிய சொத்தின் பாதுகாப்புக்காக எதிர் காலத்தில் அதில் இருந்து உருவாகலாம் என எதிர்பார்க்கும் தலை வலிகளை தவிர்ப்பதற்காக பலரும் பெற்று வைத்திருப்பது தற்போது வழமையாகும்.

தற்போது இவ் "உரிமை காப்புறுதி" யினை ஒன்ராறியோ மாகாணத்தில் ஆறு காப்புறுதி கம்பனிகள் மட்டும் சந்தைப்படுத்துகின்றன. இதில் இரு கம்பனிகள் அமெரிக்கன் கம்பனிகளின் கிளை நிறுவனங்கள் ஆகும். அண்மை காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக் காப்புறுதியில்

**தகவல் தொடர் - 34**

2006ஆம் ஆண்டில் ஒன்றாறியோ மாகாணத்தில் சுமார் 200 மில்லியன் டொலர் தொகைக்கு கட்டணம் (Total Insurance Premium) செலுத்தியுள்ளனர் என புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### "உரிமை காப்புறுதி" (Title Insurance) ஒப்பந்தம் ஒன்றினை பெற்று வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர் ஒருவருக்கு எப்படியான பாதுகாப்பு இக் காப்பு றுதியினால் கிடைக்கின்றது?

எப்படியான சிக்கல் நிறைந்த நிலைமையில் வீடு போன்ற அதி உயர் சொத்துக்களின் உரிமையாளரை இக் காப்புறுதி பாதுகாக்கின்றது என்பதனை பின்வருமாறு தெளிவு பண்ணலாம்.

- சொந்தமாக வீட்டினை வாங்கி தங்கள் பெயரில் சட்டபூர்வமாக பதிந்து வைத்திருக்கும் தங்களுக்கு, சில வருடங்களுக்கு பின்பு இந்த குறிப்பிட்ட வீட்டில் சட்டரீதியாக இன்னொருவர் உரிமை கோருகின்றார். அவர் பெயரில் உரிமை பத்திரம் பதிவில் இருக்கின்றது என்ற செய்திகள், கடிதங்கள், ஆவணங்கள் அதிர்ச்சிகரமாக சில நேரங்களில் வரலாம்.

  இந் நிலையில் முழுமையாக தங்களை பாதுகாப்பது இக் காப்புறுதி ஒப்பந்தத்தின் கடமையாகும் (Unknown title defects).
- தங்களுக்கு முன்னர் உரிமையாளராக இருந்தவர் சில நேரங்களில் ஏதாவது
- மின்சார செலவு கட்டணம் (Electricity)
- எரிபொருள் சக்தி கட்டணம் (Utilities)
- நீர் கட்டணம் (Water Bill)
- வீட்டு வரி (Property Tax)
- கொண்டோமனிய கூட்டுத்தாபன கட்டணம்

44ம் பக்கம் பார்க்க...


உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON





வீடுகள்
தொடர்மாடி வீடுகள்
தொழிற்சாலைகள்
வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997

# வீடு புதுப்பித்தலுக்கான வரிச்சலுகைத் திட்டம்

**வீட்டு உடைமை மாற்றம் மற்றும் வீடுகள் புதுப்பித்தலுக்கான கனடிய அரசின் இந்த வரிச்சலுகை 01-02-2010ல் காலாவதியாகவுள்ளது.**
**மேலதிக தொடர்புகளுக்கு Quebec:**
**http://www.budget.finances.gouv.qc.ca/Budget/2009-2010/en/calcul_3en.asp**
**Canada: http://www.cra-arc.gc.ca/**



சுகுமாரன் சின்னையா

- வீடு விற்பனை முகவர் -

கனடாவின் 4.6 மில்லியன் குடும்பத்தினர்களுக்கு, வீடு புதுப்பித்தலுக்காக செலவாகும் பணத்தை குறைக்கும் நோக்கத்தின் அடிப்படையில், கனடிய அரசு ஒரு தற்காலிகமான வீடு புதுப்பித்தல் வரிச்சலுகைத் திட்டத்தை அறிவித்துள்ளது. அதன்படி 1,350 டொலர் வரை வரிச்சலுகையாகப் பெறலாம். கியூபெக் மாகாணத்தில் வசிப்பவர்கள் மேலும் அதிக பட்சமாக 2,500 டொலர் வரை வரிச்சலுகையாகப் பெறலாம்.

தொழில் வளம் மிகுந்துள்ள நாடுகளில் கனடா அதிக எண்ணிக்கையிலான வீடுகளை கொண்ட நாடாக விளங்குகிறது. கனடிய சமுதாயம் சார்ந்த வீடுகளை கட்டுவதற்கு கவர்ச்சிகரமான நலத்திட்டங்கள் மூலம் பண-உதவிகள் வழங்கப்படுகிறது. சமீபகால வருடங்களில் வேலைகளுக்கான மற்றும் வியாபாரங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதிலும் மற்றும் கட்டுமானப் பொருள்களை விற்பனை செய்வதிலும் கனடாவின் வீடுகள் கட்டும் கட்டுமானப்பணி முக்கிய பங்கு ஆற்றுகிறது. இதனால் வேகமான பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுகிறது. கனடியர்களுக்கு உயர்தரமான வீடுகளை கட்டிகொடுப்பதற்கும், நம் கட்டுமானத் தொழிலை முன்னேற்றுவதற்கான சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கும், வரிச்சலுகைகள், பண உதவிகள் மற்றும் கடன் வசதிகள் ஆகியன அளிப்பதற்கு 2009வது வருட Budgetல் 780 கோடி டொலர் நிதி உதவி அளிக்க மத்திய அரசு தீர்மானித்தது அறிந்ததே.

## வீட்டு உடைமை மற்றும் வீடுகள் கட்டுவதற்கு ஆதரவு.

ஒரு வீட்டை விலைக்கு வாங்கி சொந்தமாக்குவது, கனடியர்களின் ஒரு முக்கியமான குறிக்கோளாகவும் மற்றும் தங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான முதலீட்டு விஷயமாகவும் கருதுகின்றனர். கனடாவில் தொழிலாளர் வர்க்கத்தினருக்கும், கட்டிட கட்டுமானப் பொருள்களுக்கும் மற்றும் மற்றைய பொருள்களுக்கும் தேவையை அதிகரிக்கச் செய்து பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய ஆதாரா காரணமாக விளங்கும் வீட்டு கட்டுமானத் தொழில் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. போட்டியும் மற்றும் சவால்களும் அதிகம் நிறைந்த இந்த பொருளாதார காலகட்டங்களில், கட்டிட கட்டுமானத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும், கனடியர்கள் வீடுகளை வாங்குவதற்கும் மற்றும் புதுப்பிப்பதற்கும் 2009வது வருட budget ஒரு தற்காலிகமான வீடு புதுப்பித்தல் வரிச் சலுகையை (HRTC) அறிவித்துள்ளது.

புதிய வீட்டுச்சீரமைப்பு திட்டங்களுக்கும் மற்றும் எதிர்கால வீடு கட்டுமான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் ஒரு தற்காலிகமான ஊக்கத் தொகையை HRTC கனடியர்களுக்கு அளிக்கும். இவ்வாறு கனடாவின் பொருளாதார நிர்வாகம் சரியான காலத்தில் ஊக்குவிக்கப்படும் போது, சக்தி திறன் வாய்ந்த பற்பல வீடுகள் கனடாவின் சுற்றுப் புறங்களில் உருவாக வாய்ப்புண்டாகின்றது.

## தற்காலிகமாக வீடு புதுப்பித்தல் வரிச் சலுகை எப்படி பயனளிக்கும்.

> **“ வீட்டுச் சீரமைப்பு வேலைகளுக்காக செலவிடப்பட்ட தொகையில் 15 சதவீதம் வருமான வரிச்சலுகையாக பெற்றுக்கெள்ளலாம். பெப்பிரவரி 01, 2010 வரை அமுலில் இருக்கும் இந்த சலுகைத் திட்டத்தினால் 1,350 டொலர் வரை வரி நிவாரணம் பெற முடியும். கியூபெக் மாகாணத்தில் ஆகக்கூடியது 2,500 டொலர் வரை வரி நிவாரணம் பெறமுடியும். ”**

வீட்டுச் சீர்மைப்பு வேலைகளுக்காக செலவிடப்பட்ட தொகையில் 15 சதவீதம் வருமான வரிச்சலுகையாக பெற்றுக்கெள்ளலாம். இந்த திட்டம் ஜனவரி 27, 2009ல் இருந்து பெப்பிரவரி 01, 2010 வரை அமுலில் இருக்கும். இந்த சலுகைத் திட்டத்தினால் 1,350 டொலர் வரை வரி நிவாரணம் பெற முடியும். கியூபெக் மாகாணத்தில் 7,500 டொலர்களுக்கு மேற்பட்ட தொகையில் 20 சதவீதத்தை வருமான வரிச்சலுகையாக, ஆகக் கூடியது 2,500 டொலர் வரை பெறலாம். செலவுகள் 31-12-2009க்கு முற்பட்டதாக இருக்கவேண்டும்.

## இந்த வரிச் சலுகையை யார் பெறமுடியும்.

HRTC என்பது குடும்ப நலத்திட்டமாகும். ஒரு தனிப்பட்ட நபர் மற்றும் அவருடைய மனைவி அல்லது சட்டப்பூர்வமான வாழ்க்கை துணை அடங்கிய ஒரு குடும்பத்தினர். இந்த நலத் திட்டத்தின் மூலம் பண உதவி பெறமுடியும். தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வசிப்பிடம் பொதுவாக தகுதியுள்ளதாக கருதப்படும். ஒரு வீடு, ஒரு குடில், மற்றும் ஒரு கூட்டு குடியிருப்பு ஆகியன இதில் அடங்கும். HRTC மூலம் சுமார் 4.6 மில்லியன் குடும்பங்கள் கனடாவில் பயனடைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## வரிசலுகையால் பயனடைந்தவர்கள்.

வீட்டு உடைமைகாரர்கள் HRTC மூலம் எத்தகைய பயன்பெற முடியும் என்பதை கீழ்கண்ட உதாரணங்கள் விளக்கும்.

சீதா மற்றும் ராமன் இருவரும் தம்பதியினர் அவர்கள் சமீபத்தில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கினர். HRTCயின் தற்காலிக வரிச்சலுகையை அவர்கள் பெற விரும்பியதால் அவர்கள் தங்கள் ஜன்னல்களை புதுப்பிப்பதற்கும் மற்றும் வீட்டில் Insulation செய்வதற்கும் 10,000 டாலர் செலவழித்தார்கள். அதில் ஆரம்பப்பணம் 1,000 டாலரை கழித்த பின், மீதமுள்ள 9,000 டாலர் உண்மையான செலவிற்கு வரி சலுகையாக 1,350 டொலர் கிடைத்தது.

தங்கள் வீட்டில் வைப்பதற்கு ஒரு அதிக சக்தி திறன் வாய்ந்த furnaceஐ வாங்கவும் மற்றும் தங்களுடைய வீட்டில் ஒரு Deckஐ கட்டவும் வள்ளுவன் வாசுகி தம்பதியினர் 2009ல் முடிவு செய்தனர். இந்த இரண்டு திட்டங்களையும் செயல்படுத்தி விட்டு, தற்காலிக HRTCயின் வரிசலுகையை பெறவேண்டும் என்று அவர்கள் விரும்பினர் furnaceக்கு 5,000 டொலரும் மற்றும் Deckற்காக 3,500 டொலரும் அவர்கள் செலவிட்டனர். Deckஐ சுற்றியுள்ள இடத்தை இயற்கை வண்ண காட்சியாக அமைப்பதற்கு மேலும் 2,500 டொலர் செலவிட அவர்கள் தீர்மானித்தனர். இங்ஙனம் அவர்கள் செலவிட்ட மொத்த தொகை 11,000 டொலரை எட்டியது. உயர் பட்சதொகை 9,000 டொலரில் வரிச்சலுகையாக 1,350 டொலர் வாசுகிக்கு கிடைக்கும்.

ரம்பா ஊர்வசி ஆகிய இருவரும் சகோதரிகள். அவர்கள் ஒரு வீட்டிற்கு கூட்டு உடைமைக்காரர்கள். ரம்பா தன்னுடைய சக்கர நாற்காலியில் சுலபமாக சென்று வருவதற்கு ஏதுவாக தங்களுடைய சமையலறையை இருவரும் தலா 7,500 டொலர் செலவுசெய்து புதுப்பித்தார்கள். ரம்பா மற்றும் ஊர்வசி , தாங்கள் செலவழித்த தொகையில் 6,500 டொலரில் (7500-1000 டாலர்) ஒவ்வொருவரும் தலா 975 டொலர் வரிசலுகையாக பெற விரும்பினார்கள். இந்த தொகையும் மற்றும் ரம்பா தனக்கு செலவிட்ட மருத்துவ செலவு தொகையும் அவர்களுக்கு கிடைக்கும்.

## HRTCயின் தகுதியான மற்றும் தகுதியில்லாத செலவுத்தொகைகள்.

### தகுதியானது.

- ஒரு குளியலறை, சமையலறை அல்லது அடித்தளத்தை புதுப்பித்தல்.
- புதிய கம்பளி தரை விரிப்பு அல்லது Hardwood floors.
- ஒரு அறை, மேடை, வேலி அல்லது தடுப்புச் சுவர் கட்டுதல். ஒரு புதிய furnace or water heater வைத்தல்.
- ஒரு வீட்டின் உட்புறம் அல்லது வெளிப் புறத்தை Paint அடித்தல்.
- ஒரு வாகனப்பாதையின் மேற்பரப்பில் தளம் போடுதல்.
- புதிய புல்தரை போடுதல்.


### தகுதியில்லாதது.

- Refrigenator, Stove and Couch போன்ற உபகரணங்களையும் மற்றும் தளபாடப் பொருள்களையும் வாங்குதல்.
- கருவிகள் வாங்குதல்
- தரைவிரிப்புகளை சுத்தம் செய்தல்.
- பராமரிப்பு பணி ஒப்பந்தங்கள். (furnaceஐ சுத்தப்படுத்துதல், பனிக்கட்டிகளை அகற்றுதல், பசும் புல்வெளியை பேணிபாதுகாத்தல் மற்றும் நீச்சல் தடாகங்களை சுத்தம் செய்தல்)

Canada அரசின் கொள்கைபடி கனடியர்கள் தங்கள் வீடுகளில் சக்தி திறன் வாய்ந்த Retrofit செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டதற்கு அரசின் பண உதவிகள் பெற்றிருந்தாலும், HRTCயின் கீழ் அளிக்கப்படும் நிதிஉதவிகள் கிடைப்பது உறுதி. HRTC திட்டத்தின் கீழ் பணஉதவி பெற்று வீட்டு உடைமைக்காரர்கள் தங்கள் வீடுகளை சீர்மைப்பு மற்றும் புதுப்பித்தல் வேலைகளை செயல்முறைப்படுத்த வேண்டும் என்று சில்லறை விற்பனை வியாபாரிகள் பெரிதும் விரும்புகிறார்கள். இந்த திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியாக 08-09 ஆம் வருடங்களில் 500 மில்லியன் டொலரும் மற்றும் 09-10ஆம் வருடங்களில் 250 கோடி டொலரும் செலவிடப்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

sugumaran.sinnaiah@thaiveedu.com

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# PUNCH SOCKALINGAM

Broker

# OPEN HOUSE

## SAT OCT. 31st - 2-5 PM

**181 Kenborough Crt, Markham (McCowan & Steeles)**




4 +2 Bedrooms

4 Washrooms

Hardwood Flooring

2 Bed Room Basmt.Apt

YOU MUST SEE

OVER $150,000

UPGRADES




Century 21

Affiliate Realty Inc. Brokerage* 416.290-1200

**PLEASE CALL PUNCH : 416-786-2463**



# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

## Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial

A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng

சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்

**Office: 416-291-0451 Ext.227**

**Cell: 416-518-9489**

**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
www.computek.edu

NEW LOCATION IN MARKHAM !

Markham Campus
Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)
202 - 7 Eastvale Drive.
Markham
905.471.3344




Courses Offered :
Ms Vista
Word
Excel
Access
Powerpoint
Outlook

Financial Accounting
Quickbooks
Simply Accounting
AccPac




Early Childcare Assistant (ECA)

Computerized Accounting




Personal Support Worker (PSW)

Network Engineering



Business Administration
Medical Office Admin (MOA)

PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.

Scaborough Campus
Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Toronto Campus
Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# உரிமை காப்புறுதி...

41ம் பக்கத் தொடர்ச்சி...

(Condominium fees)

- அடமான கட்டணம் (Mortgage payments)

என ஏதாவது ஒன்றினை செலுத்த தவறிவிட அதன் சுமை என்பது தற்போது வீட்டின் உரிமையாளராக இருக்கும் தங்களின் தலையில் வந்து விழும்போது, அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் பயப்பட தேவையில்லை. இக் காப்புறுதி ஒப்பந்தம் இத்தகைய பிரச்சினைகளை பார்த்து கொள்ளும் (Existing lines against the property).

- பக்கத்து வீட்டுக்காரன் எல்லையினை கூட்டி தங்கள் எல்லையினை சட்டரீதியாக ஆக்கிரமிக்கப் பார்த்தால் இவ் ஒப்பந்தம் பாதுகாக்கும். (Encroachment Issues).
- காணியின் எல்லை வரைபடங்களில் உள்ள முரண்பாடுகள் அல்லது காணியின் பதிவுகளில் ஏற்படும் தவறுகளுக்கும் இக் காப்புறுதி பாதுகாப்பு வழங்குகின்றது (Errors in Surveys and Public records)
- மோசடியான பத்திரங்களை உபயோகித்து வீட்டின் உரிமை என்பது சட்டரீதியாக தங்களுக்கு எழுதப்பட்டிருந்தால் காலப்போக்கில் இம் மோசடி காரணமாக வீட்டின் உரிமையாளராக இருக்கும் தங்களுக்கு ஏற்படும் தலையிடிகள், பிரச்சனைகளுக்கும் இக் காப்புறுதி பாதுகாப்பு வழங்குகின்றது (Title Fraud)
- தங்களின் வீட்டு உரிமையில் ஏற்படும் ஆபத்துகளில் இருந்து மீள்வதற்காக தாங்கள் மேற்கொள்ளும் சகல வக்கீல் செலவுகள், வழக்கு செலவுகளையும் இவ் ஒப்பந்தத்திலிருந்து மீள் பெறலாம்.

## "வீடு" ஒன்றுக்கு உரிமை காப்புறுதி கைச்சாத்திட்டு பெறும் போது பின்வரும் விடயங்கள் காப்புறுதி பத்திரத்தில் தெளிவாக உள்ளதா? என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

- வீடு வாங்கும் போது எவ்வளவு பெறுமதிக்கு விலை கொடுத்து வாங்கியிருந்தீர் களோ அந்த விலைக்கு காப்புறுதி செய் யப்பட்டுள்ளதா? (Your home is insured for its full value or the amount you paid for it)
- புதிதாக வீடு வாங்கியவராக இருந்தால் வீட்டு உரிமை பத்திரம் சட்டரீதியாக கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து (Closing date) வலிமையுடையதாக உள்ளதா? (Your policy's effective date is the same as your home's closing date, if you are a new home buyer)
- தாங்கள் வாங்கிய வீடு என்ற ஒரு சொத்து அல்லது ஏனைய மேலதிக வீடுகள் யாவும் சரியாக காப்புறுதி ஒப்பந்தத்ததில் பதியப்பட்டுள்ளதா? என்பது பரிசீலனை செய்து கொள்ள வேண்டும் (You carefully review your policy to ensure that it correctly describes all of the property you are purchasing)
- எந்த வகையான ஆபத்துகளுக்கு பாதுகாப்பு இவ் ஒப்பந்தத்தில் உள்ளது? எவற்றுக்கு இல்லை? என்பதனை புரிந்து கொள்ள வேண்டும் (You understand what title related losses your policy will cover and what it excludes)

ஏனனில் சம்பந்தம் எதுவும் இல்லாத இழப்புக்கள், பிரச்சினைகளுக்கு இவ் உரிமைக் காப்புபுறுதியில் இருந்து தீர்வுகாண கோரிக்கைகள் வந்து குவிகின்றது என்ற பதிவுகள் காப்புறுதிக் கம்பனிகளில் உள்ளன. இவ் காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுக்கு மட்டுமே இவ் உடன்படிக்கையால் தீர்வு காணலாம்.

sivapanchalingam@thaiveedu.com

■ ■ ■

**KathirHomes Design group**
DIV. OF 1780681 ONTARIO LTD.
Build Your Dream Home

கனவு மனை ஒன்றை
புதிதாய் கட்டி வாழ்ந்திட



Design & Construction
416 856 6900
*Custom home Design*
*Building permit*
*Committee of adjustment*



Kathir
S Kathirgamanathan P.Eng.

# வெப்பமான விடுமுறைச் சொத்து



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

கனடியர்கள் வழமைபோல விடுமுறைச் சொத்துக்களை வாங்க தெற்கு நோக்கி படையெடுக்கிறார்கள். அண்மைக்காலங்களில் அவர்கள் அடைமானக் கடன்களைத் தவிர்த்து முழுப் பணத்தையும் கொடுத்து வீட்டை வாங்கக்கூடிய நிலைமையில் பலர் இருக்கின்றார்கள்.

பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் அமெரிக்க வீட்டுச் சந்தையும் அமெரிக்க நாணயத்தின் பெறுமதிக்குச் சமனாக வந்துகொண்டிருக்கும் கனடிய நாணயப் பெறுமானமும், கனடிய குளிர்காலத்தை வெறுக்கும் கனேடியரை, அவர்களது பணத்தை அங்கு முதலிட வைத்துள்ளன. கனடிய விடுமுறை சொத்துக்களான Cottagesஇன் விலைகள் வானத்தில் இருந்து இறங்காத நிலையில் Florida சொத்துக்கள் மிகவும் கவர்ச்சியான விலையில் உள்ளன.

அமெரிக்க வங்கிகளில் கடன் எடுப்பது கடினமாகி விட்ட நிலையில் கனடியர்கள் பலர் அதைத் தவிர்த்து தங்களது சேமிப்பில் இருந்து Florida சொத்தை வாங்குகிறார்கள். முழுப் பணத்தையும் கொடுத்து சொத்தை வாங்கியவர்களின் எண்ணிக்கை 81% வீதமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றது. 2008இல் இது 47% வீதமாகும். வேறு நாட்டவருடன் ஒப்பிடும் போது பணம் கொடுத்து சொத்துக்களை வாங்கும் சந்தர்ப்பம் கனடியர்களுக்கு இரட்டிப்பாக இருப்பதாகவும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன. பொருளாதார விடயங்களில் இடரைத் தவிர்க்க விரும்பும் கனேடியர்கள் 1 Trillion Dollarஐ பணமாகவோ சொத்தாக வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அமெரிக்காவில் வீட்டுச் சொத்துக்களை வாங்க இது போன்றவொன்றான சந்தர்ப்பம் இருந்ததுமில்லை இனிமேல் எமது வாழ்வுக்காலத்தில் வரப்போவதுமில்லை என ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இது மட்டுமல்லாது, Golf Courses உணவு விடுதிகளிலும், மாலைநேர பொழுதுபோக்குகளும் இன்று மலிவடைந்து வருகின்றன. கனடிய டொலர்களின் பெறுமதி உயர்வடைந்து வருவதால் அதனுடைய வாங்கும் சக்தி உயர்வடைந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மூன்றில் ஒரு பகுதி விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த விலை வீழ்ச்சியில் Gas, உணவு போன்றவையும் அடங்கும்.

> “ **அமெரிக்க வங்கிகளில் கடன் எடுப்பது கடினமாகிவிட்ட நிலையில், கனடியர்கள் பலர் அதைத் தவிர்த்து, தங்களது சேமிப்பில் இருந்து சொத்தை வாங்குகிறார்கள்.** ”

அண்மையில் அமெரிக்க கடையில் வரி ஒப்பந்தங்கள் ஏற்பட்ட சில மாற்றங்கள் கனேடியர்களுக்கு அனுகூலமாக இருக்கின்றன. அமெரிக்காவில் கனேடியர்களின் சொத்தை பாதுகாப்பதுடன் இரட்டை வரியிறுத்தலையும் தவிர்க்கின்றது.

அமெரிக்காவில் சொத்துக்களை வாங்கிய கனடியர்களின் மொத்த எண்ணிக்கை 2008ஐ விட குறைவாக இருந்த போதும் 2007ஐ விட கூடவாக இருக்கிறது. அமெரிக்க சந்தை வாங்குபவர்களுக்கு ஆதாயமாக இருக்கும் போது அங்கு முதலிட கனடியர்களுக்கே கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. கனடாவைத் தொடர்ந்து பிரித்தானியா, மெக்சிக்கோ, இந்தியா, சீனா போன்ற நாட்டவர்கள் முன்னிலை வகிக்கின்றார்கள்.

கனேடியர்கள் நல்ல வெப்பமான காலநிலை காரணமாக சொத்துக்களை வாங்கினாலும், ஒரு 12 வீதத்தினர் இருப்பதற்காகவும், வாடகைக்காகவும் என்று கூறியிருக்கிறார்கள். வெம்மை நிறைந்த இடங்களான Arigana, Florida, Califonia, Texas போன்ற இடங்களிலேயே கூடுதலானவர்கள் சொத்துக்களை வாங்கியுள்ளார்கள்.

Arizanaவைச் சேர்ந்து Richard Baziret என்ற வீடு விற்பனைமுகவர் தனது வாடிக்கையாளர்களில் 80 வீதமானவர்கள் கனடியர்கள் என்று கூறியுள்ளார். அத்துடன் இந்தஆண்டு மட்டுமல்லாது கடந்த சில ஆண்டு புள்ளிவிபரமும் இதுபோலவே என்கிறார் அவர்.

கனேடியர்கள் நன்கு தங்களது பணத்தை பராமரிப்பது இதற்கு ஒரு காரணமாக இருந்த போதிலும் அமெரிக்க வங்கிகளின் வெளிநாட்டவர்களுக்கு கடன் கொடுப்பதைக் குறைத்துள்ளதும் ஒரு காரணமாகும். கனடிய வங்கிகள் பொதுவாக, அமெரிக்க சொத்துக்களின் மேல் அடமானக் கடன் கொடுப்பதில்லை. ஆனால், கனடியர்கள் தமது கனடியச் சொத்துக்களின் மீது ஒரு கடன் Credit Line எடுத்து அந்த பணத்தில் அமெரிக்கச் சொத்துக்களை வாங்கலாம்.

இப்படிப்பட்ட கடினமான வேலைப்பாடு இருந்த போதிலும் 30 – 60 வயதிற்கிடைப்பட்டவர்கள் அமெரிக்காவில் வீடுகளின் விலைகள் ஒரு போதும் இப்படி மலிவாக இருந்ததில்லை எனவும், இருக்கப்போவதில்லை எனவும் உணர்கிறார்கள்.

அண்மையில் Naples Floridaவில் 90,000 விற்பனையான கடலைப் பார்த்திருக்கும் Condo ஒன்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதன் விலை $234,000 ஆகும். முழு குளிர் காலத்திற்கும் வாங்கியவர்களால் பாவிக்க முடியாது விட்டாலும் நண்பர்களும் குடும்பத்தினரும் பாவிப்பதன் மூலம் அந்த வீட்டின் செலவுகளை சமாளிக்க உதவுவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும்.

அத்துடன் இது வாங்குவதற்கு, சரியான நேரம் அத்துடன் இது சரியான நேரத்தில் ஓய்வுகால வாழ்விடத்தைத் தேர்ந்துகொள்ள உதவும் என நம்புகிறார்கள். இந்த நேரத்தில் அமெரிக்காவில் சொத்துக்களை வாங்குவது நல்ல முதலீடாக இருந்தும் அநேக நேரங்களில் ஒரு சிக்கலான முதலீடாகவும் அமைந்து விடும். அந்த சொத்துக்களை தொலைதூரத்தில் இருந்து நிர்வகித்தல், இருநாடுகளுக்கிடையிலான வரிச் சட்டங்கள் வாடகைக்கு விடுவதில் உள்ள இடைஞ்சல்கள் என்பன ஒரு காரணியாகும். இவற்றை எல்லாம் சிலர் பார்த்து முடிவுளடுக்க வேண்டும்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■

**Law Office**

**T. JEGATHEESAN**

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



# காப்புறுதியில் குழப்பமா?



## சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

தவிர்க்கமுடியாத காரணங்களையிட்டு சென்ற மாதத் "தாய்வீட்டில்" காப்புறுதியில் குழப்பமா? தொடரை எடுத்து வரமுடியவில்லை. தெடரும் மாதங்களில், தொடர்ச்சியாக வரும்.

முன்னைய இதழில் நிறுவனம் Aஇன் விளக்கங்கள், அதில் கேட்கும் கேள்விகளின் தமிழாக்கத்தை விவரித்திருந்தேன். இந்த இதழில் நிறுவனம் Bஇன் விளக்கங்கள், கேட்கப்படும் கேள்விகளின் தமிழாக்கத்தைப் பற்றி விவரிக்க விரும்புகிறேன்.

நிறுவனம் Bஇனைப் பொறுத்தவரை வயது 35 இலிருந்து 75 வயதுள்ள எவரும் 50,000 டொலர்வரை விண்ணப்பிக்கலாம். இதில் ஒரு திட்டம் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை 50,000 டொலர்வரை காப்புறுதி மாறாமல் இருக்கும். மற்றவகை, ஆரம்பத்திலிருந்து வருடாவருடம் 3 வீதத்தினால் அதிகரிக்கும். உதாரணமாக, முதல் வருட முடிவில் காப்புறுதி தொகை 50,000 டொலர் + 3% = $51,500 ஆகவும், இரண்டாவது வருடம் $53,000 என அதிகரித்து இறுதியில் $100,000 வரை அதிகரித்துக்கொண்டு போகும். இந்த இரண்டாவது வகை திட்டம் முதலாவது வகையைவிட ஓரளவு அதிகமான மாதாந்த கட்டுப்பணத்தை அறவிடும். ஆனால், இரண்டு திட்டங்களிலும் மாதாந்த அறவீட்டுப் பணம் ஒருபோதும், எக்காரணம் கொண்டும் அதிகரிக்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இரு திட்டங்களிலும் அகால மரணம் ஏற்படின் மேலதிக பணம் அறவிடாமல் காப்புறுதி இழப்பீட்டுத் தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக ஆரம்பத்தில் விண்ணப்பித்த தொகை $25,000ஆக இருப்பின் அகால மரணம் ஏற்படும்போது காப்புறுதி இழப்பீட்டுத்தொகை 50,000 டொலராக அதிகரிக்கும். பதிலாக ஆரம்பிக்கும்போது விண்ணப்பித்த தொகை $50,000ஆக இருப்பின் அகால மரணம் ஏற்படும் போது காப்புறுதி இழப்பீட்டுத் தொகை $100,000ஆக அதிகரிக்கும் என்றால் மிகையாகாது. அத்துடன், காப்பறுதி விண்ணப்பம் கொடுத்த திகதியிலிருந்து 3 வருடம் தாண்டியதும் காப்பறுதிக்கான அறவீட்டுப் பணத்தில் ஒரு பகுதி சேமிப்புத் திட்டத்தில் ஒதுக்கப்படும். இதன்படி உங்களுக்கு ஒரு அவசர தேவை ஏற்படின் இந்த சேமிப்பிலிருந்து கடனாக நீங்கள் ஒரு கணிசமான தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். இப்படி கடனாக எடுத்தபின் உங்களுக்கு திடீர் மரணம் ஏற்படின் கடனையும் கடனுக்கான வட்டியையும் நிறுவனம் எடுத்துக் கொண்டு மீதிப் பணத்தை நீங்கள் நியமித்த வாரிசுதாரரை அல்லது வாரிசுதாரர்களை வருமானவரியின்றி சென்றடையும். பதிலாக கடனாக எடுக்காமல் பணம் கட்டத் தவறினாலும் தேவையான பணத்தை நிறுவனம் காப்புறுதிக்காக எடுத்து, நீங்கள் அதனை கடனாக எடுத்ததாக கருதி அதற்கு வட்டியும் அறவிடும். இங்கும் திடீர் மரணம் ஏற்படும்போது மீதிப் பணம் வாரிசுதாரரை சென்றடையும். இதனையே ஆங்கிலத்தில் Automatic Premium Loan (சுருக்கமாக APL) என அழைப்போம்.

இதனை எழுதிக்கொண்டு போகையில் ஒரு சில வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு வயதுபோன பெண்மணிக்கு அவருக்கு இருக்கும் வருத்தங்கள் காரணமாக இந்த திட்டத்தில் அவரது மகன் விண்ணப்பித்திருந்தார். 4 வருடங்களுக்கு பின்னர் அவரது மாதாந்த கட்டுப்பணம் ஒழுங்காக கட்டப்படவில்லை. ஒவ்வொருநாளும் நானும் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நினைவூட்டினேன். ஒரு குறிப்பிட்ட தினம் மகனுக்குப் பதிலாக அவரது தாயார் என்னுடன் தொலைபேசியில் பேசிய போது இதனை நினைவூட்டினேன். அதன்பின் அவர் தனது மகனிடம் கட்டுப்பணத்தை ஒழுங்காக ஏன் கட்டாமல் இருக்கிறீர். இங்கு அடிக்கடி 'சக்தி' தொலைபெசியில் தொடர்பு கொண்டு நினைப்பூட்டுகிறார் என்று சொல்ல,

"அம்மா, நீங்கள் அப்படி விரைவில் மோசம் போகமாட்டீர். அது நான் கவனித்துக்கொள்வேன்" என்று செல்லி குளியலறைக்குச் சென்றுவிட்டார். அவர் குளித்துக்கொண்டு இருக்கும்போது இந்த வயதுபோன பெண்மணி மாரடைப்பால் வீட்டிலேயே இறந்துவிட்டார். உடனே மகன் என்னுடன் தொடர்புகொண்டு 'அண்ணை, நான் இரண்டு மூன்று மாதமாக பணம் கட்டவில்லை. எப்படியோ காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை மீட்டுத் தாருங்கள் என்றார். நானும் என்னால் இயன்றதைச் செய்து பார்ப்பதாகக் கூறிவிட்டு இந்த காப்புறுதி நிறுவனத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இவரது காப்புறுதி ஒப்பந்தத்தின் நிலவரம்பற்றி கேட்டபோது, "இவரது கட்டுப்பணம் கட்டப்படாமல் இருந்தபடியால் ரத்துச்செய்யப்பட்டுவிட்டது" என்றார்கள். உடனே சேமிப்பில் பணம் இருக்கவேண்டுமே, அதை ஏன் உபயோகக்படுத்தவில்லை என்றபோது, அதன்படி செய்கிறோம் என்றார்கள். மறுநாள் தொலைபேசியில் மீண்டும் அவர்களுடன் தொடர்புகொண்டு திரும்பவும் இந்த ஒப்பந்தத்தின் நிலவரம்பற்றி கேட்டபோது, காப்புறுதி ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவில்லை. ஆனால், 2 மாதத்திற்குரிய கட்டுப்பணமும் அதற்கான வட்டியும் கடன் தொகையாக இருக்கிறது என்றார்கள். இதன் முழு விவரத்தையும் தொலைநகலில் அனுப்புமாறு கேட்டு எனக்குக் கிடைத்ததும் உண்மையாக நடந்த விவரத்தை அவர்களுக்குச் சொன்னதும் "ஏன் இதை முதலில் எங்களுக்குச் சொல்லவில்லை" என்று கேட்டார்கள். "உடனே சொல்லவேண்டிய அவசியமில்லை. எல்லாவற்றையும் தீர விசாரித்து ஆதாரங்களை எழுத்தில் வாங்கியதும் சொல்லலாம் என்றேன்." காரணம், பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதி என்ற முறையில் இவர்களின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, பயந்து வேலைசெய்ய வேண்டிய அவசியமில்லை. காப்புறுதி நிறுவனத்தின் நியதிக்கு ஏற்ப, சட்டங்களுக்கு ஏற்ப எமது தொழிலை செவ்வனே செய்தால் ஒருவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. காப்புறுதி இழப்பீட்டுத் தொகையும் 2 நாட்களில் வாரிசுதாரருக்கு நேரில் சென்று கையளித்தேன். அந்த நம்பிக்கை காரணமாக அந்த குடும்பத்தில் இருந்த அனைவரும் எனது வாடிக்கையாளரானார்கள். இந்த தொழிலானது, நம்பிக்கை மூலமும் தெளிந்த அறிவுமூலமும் விஸ்தரிக்கும் தொழிலாகும்.

இந்த நிறுவனம் Bஇனைப் பொறுத்தவரை நிறுவனம் Aஇனை விட கேட்கும் மேலதிகமான கேள்விகள் பின்வருமாறு:

- இந்த நிறுவனத்தைவிட வேறு நிறுவனத்திற்கும் காப்புறுதிக்கு விண்ணப்பிக்க இருக்கிறீர்களா?
- இதே நிறுவனத்தில் இந்த ஒப்பந்தத்தைவிட வேறு ஒரு ஒப்பந்தத்திற்கு 1 வருடத்திற்குள் மனுச்செய்ய இருக்கிறீர்களா?
- கடந்த 5 வருடங்களுக்குள் மேலதிக மதுபானம் அருந்தும் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டீர்களா?
- உங்கள் வாழ்நாளில் AIDS வருத்தம் காரணமாக அல்லது Hepatitis B, C அல்லது குணப்படுத்த முடியாத மோசமான Hepatitis காரணமாக வைத்தியரைச் சந்தித்தீர்களா அல்லது அந்த வைத்தியர்மூலம் ஏதாவது குணப்படுத்தும் மருந்துகளைப் பெற்றுக் கொண்டீர்களா?
- சலரோகம் காரணமாக தடுப்பூசி தொடர்ச்சியாக அல்லது இடைக்கிடை உபயோகப் படுத்துகிறீர்களா?

மேற்கண்ட கேள்விகள் அனைத்திற்கும் அல்லது ஏதாவது ஒரு கேள்விக்கு 'ஆம்' என்று பதிலளித்தால் காப்புறுதி ஒப்பந்தம் அளிக்கப்பட மாட்டாது. அத்துடன் நிறுவனம் Aஇலும் பார்க்க நிறுவனம் B அறவிடும் மாதாந்த அல்லது வருடாந்த கட்டுப்பணம் சற்று அதிகம் என்றால் மிகையாகாது. இந்த மாதாந்த அறவீட்டுப் பணத்தை அடுத்த இதழில் ஒப்பிட்டு அட்டவணையாக வெவ்வேறு வயதிற்கு கொடுக்க விரும்புகிறேன்.

தொடரும்.

saththivel@thaiveedu.com

■ ■ ■

சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 144 துரித காப்புறுதி இழப்பீடுகள். 20 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

- சக்திவேல் -


தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

- Building permit
- Zoning info.
- Site plan approval
- Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# TWO FULL TIME REALTORS ONLY ONE COMMISSION

**Bellamy & Lawerence**



$ 325,100
3+2 Bedrooms + 2 Washrooms

**Meadowvale & 401**



$ 329,000
3+2 Bedrooms + 4 Washrooms

**Derry & 10th Line**



$ 359,000
3 Bedrooms + 4 Washrooms

**Hardwood & Hwy 2**



$ 369,000
3+2 Bedrooms + 4 Washrooms

**9th & 14th Ave.**



$ 432,000
3 Bedrooms + 3 Washrooms

**Westney & Williamson**



$ 459,000
5 Bedrooms + 4 Washrooms

**Morningside & 401**



$ 349,900
3+3 Bedrooms + 4 Washrooms

**Mccowan & Steels**



$ 469,000
4+2 Bedrooms + 3 Washrooms

**Mccowan & Steels**



$ 469,900
4+2 Bedrooms + 4 Washrooms

**Brimley & Eglinton**



$ 335,000
3+1 Bedrooms + 2 Washrooms

**Dundas & Garrard**




$ 99,900
Sale of Business (Pizzeria)

**Mccowan & Steels**



$ 198,900
2+1 Bedrooms + 2 Washrooms

**9th & 14th Ave.**



$ 359,000
3 Bedrooms + 3 Washrooms

**Markham & Denison**




$ 279,900
2+1 Bedrooms + 2 Washrooms

**Neilson & Mclevin**



$ 159,900
2 Bedrooms + 2 Washrooms

**Mclaughlin & Sandalwood**



$ 375,000
3+1 Bedrooms + 4 Washrooms

**Taunton & Salem**



$ 359,000
4 Bedrooms + 3 Washrooms

**Mccowan & Sandhurst circ.**




$ 289,000
3 Bedrooms + 2 Washrooms

**Salem & Taunton**



$ 444,900
4 Bedrooms + 3 Washrooms

**Mccowan & Eglinton**



$ 169,900
2+1 Bedrooms + 2 Washrooms



**Thamil Suberamaniam**
Salesrepresentative
Direct:416-358-6200
Email:thamilrealtor@gmail.com

முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க..விற்க..அழையுங்கள்

LISTING FLEXIBLE COMMISON

**HomeLife/Future Realty Inc., Brokerage***
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bust : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca



**Mugunthan Nadarajah**
Salesrepresentative
Direct:416-276-8025
Email:homelifemugunthan@gmail.com

# புதிய முகவரி தேடும் உங்களுடன் என்றும் நாங்கள்

# மாகோசா கிரெடிட் யூனியன்



கல்யாணி நாதன்
-நிதி திட்டமிடல் ஆலோசகர்-

சென்ற ஒரு தாய்வீடு பத்திரிகையில் கிரெடிட் யூனியன் பற்றிய சில பொதுவான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். இங்கு இலங்கை மக்களுக்காக இலங்கை மக்கள் அமைத்துள்ள கிரெடிட் யூனியன் பற்றி கவனி கவனிப்போம்.


இப்படி ஒரு அமைப்பு இலங்கையர்களுக்கு என்று அமைக்காமல் ஏன் இலங்கை தமிழர் களுக்கு என்று அமைக்கக்கூடாது என்ற கேள்வி எழலாம். அதற்கு பதில் தருவது எனது முதற்கடமை. கனேடிய சட்டம் அதற்கு இடம் தரமாட்டாது என்பதுவே அதற்கு காரணமாகும். ஆனால் கிரெடிட் யூனியன் அமைப்புகள் அதன் அங்கத்தவர்களால் இயங்கப்படுத்தும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பு என்ற சித்தாந்தத்தில் இயங்குவதால் அதில் அங்கத்துவம் வகிக்கும் நீங்கள் தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் என்பதை மனதில் கொண்டு அதிகம் ஈழத்தமிழர் இதில் இணைவதனால் இந்த அமைப்பு நம்மவருக்கு அனுசரனையாக இயங்கும் ஒரு அமைப்பாக்கலாம்.

அடுத்து எப்படி இந்த கிரெடிட் யூனியன் ஆரம்பிக்கப்பட்டது என்று பார்ப்போம்.
எந்த ஒரு வெற்றியும் கனவில் தான் ஆரம்பிக்கிறது என்றால் நீங்கள் வியப்படையக்கூடும். மனிதன் முதலில் வானில் பறக்கக் கனவு கண்டான். அதுவே ஆகாயக்கப்பலாகி பல நாடுகளைக்கடந்தது. அதுபோல் ஒருசிலர் புதிதாக கனடாவில் வந்து குடியேறியவர்கள் முதியவர்கள் சிறுதொழில் உரிமையாளர்கள் பெரும் வங்கிகளினாலும் வட்டிக்கு பணம் கொடுக்கும் அமைப்புகளினாலும் நசுக்கப்படுவதை கண்டு தர்மமான வட்டி விகிதத்தில் கடனுதவிகள், செயற்பாடுகள் கொண்ட அமைப்பு இருக்கவேண்டும் எனக் கனவு கண்டார்கள். இதுவே அவர்களை கனடா வாழ் இலங்கை மக்களுக்காக ஒரு கிரெடிட் யூனியனை அமைக்க உந்தியது.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கடைகள் வங்கிகள் வைத்திருந்தவர்களுக்கு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு என பல கூட்டுறவு அமைப்புகளை இயக்கி தமிழ் மக்களுக்கு, கிரெடிட் யூனியன் ஒரு புதுவிடய மல்ல அல்லவா?

இதன் ஆரம்பகால அங்கத்தவர்கள் செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதி 2004ம் ஆண்டு தமது வாழ்க்கையின் மத்தியிலும் பிரதிவாரமும் கலந்துரையாடி செயற்பட உறுதிபூண்டனர். இவர்கள் அயரா உழைப்பால் 2004ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 36 இலங்கைக் கனடியர் கள் தமது முழுப்பங்களிப்பை தருவதாக உறுதி கூறினார்கள்.

இந்த அமைப்புக்கு அரச மரம் ஆலமரம் என பலவிருட்சங்கள் பெயரைக் கருத்திலெடுத்தாலும் நோய்க்கு மருந்தாகும் வேம்பு தான் சிறந்த பெயர் என முடிவு செய்தார்கள்.




முதல் கூட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் வள்ளுவர் கூறிய வாக்குப்படி

'இதனை இதனா லிவன் முடிவுக்கு
மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்'

அறுவர் கொண்ட ஒரு குழுவை தேர்ந்து அதற்கு ஒரு தலைவரையும் காரிய தரிசியையும் குறிப்பிட்டு பொறுப்பை அவரிடம் விட்டார்கள். அவர்களும் இந்த அவசரமான அதாவது புலம்பெயர்ந்த நாட்டில் பொருளீட்டுவதற்கு வசதியாக பொருளை மருந்தாக தந்துதவும் அமைப்புக்கு வேம்பின் பெயரே சிறந்தது என மனதில் கொண்டு அப்பெயரை வழங்கினார்கள்.

இந்நிலையில் 300 இலங்கை கனடியர்களிடம் தபால் மூலம் ஒரு ஆய்வு நடத்தப்பட்டவேளையில் இத்தகைய ஒரு அமைப்பிற்கு ஆரோக்கியமான வரவேற்பிருந்தமையால் இக்குழு 15ஆக விரிவாக்கப்பட்டு ஸ்டான்லி ஆகனல்ட் தலைமையிலும் ஜாஜ் தம்பித்துரை காரியதரிசியாகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

இந்த கிரெடிட் யூனியன்கள் யாவும் ஒன்ராறியோவின் FISCO (Financial Service Commission of Ontario)வின் கட்டுப்பாட்டிற்கு அடங்கியதாக இயங்குவதுடன் இதில் வைப்பிலிடும் முதலீடுகள் தனித்தனியே 100,000 வரை காப்புறுதி செய்யப்பட்டுள்ள இந்நிலையில் இந்த அமைப்பு எப்படி செயல்படுகிறது எனப்பார்ப்போம்.

எப்பொழுதும் ஒரு பரைபடம் ஆயிரம் சொற்களுக்கு சமமானது என்பார்கள். எனவே இங்கு இந்த வங்கியின் செயற்பாடுகளை முதலீடுகளை ஒரு வரைபடத்தின் மூலம் தருகின்றேன்.

இங்கு தரப்பட்ட படத்திலிருந்து நீங்கள் வங்கியில் பங்கு வாங்கி இருப்பதுடன் பணம் வைப்புச் செய்வதால் உங்களுக்கு இலாபத்தில் பங்கு கிடைப்பதுடன் கடன் பெறும் சலுகைகளும் உண்டு.


இந்த அமைப்பு எங்களுக்காக எம்மவர்களால் அமைக்கப்பட்டது. இதில் சேர்ந்து நாம் பயன் பெறுவதுடன் எம்மவர்கள் பயன்பெற உதவுவோம்.

kalyani.nathan@thaiveedu.com

■ ■ ■

## இப்படியும் மனிதர்கள்

# மஹாகவிக்கு 150/= சன்மானம்



'சோக்கல்லோ'
சண்முகநாதன்

இலங்கை வானொலி தாய் வானொலி என்று இன்றும் போற்றப்படுகின்றது. உண்மைதான் அது பலரை உருவாக்கி கலை உலகிற்குத் தந்திருக்கிறது.

அங்குதான் இந்த வேடிக்கையான, வேதனை நடந்திருக்கிறது. மஹாகவி பாரதி பிறந்து 127 வருடங்கள் கடந்துவிட்டன. இறந்து கடந்த செப்டெம்பர் 12ந் திகதி நள்ளிரவு 1.30 மணியுடன் 88 எண்பத்தெட்டு வருடங்கள் பழசாய், பழசாய், பழங்கதையாய் ஓடி மறைந்துவிட்டன. கனடாவில் வாழும் பேத்தி விஜய பாரதியை தவிர வேறு தகவல்கள் எம்மிடமில்லை.

70களில் இலங்கை வானொலியில் முன்னணித் தயாரிப்பாளர்கள் மத்தியில் ஜோர்ஜ் சந்திரசேகரன் என்ற ஓர் சிந்தனையாளனும் பணியாற்றினார். அவர் பாரதியின் குயில் பாட்டை இசைச் சித்திரமாக்கி பிரதி



சி.சுப்பிரமணிய பாரதி என்று அறிக்கையிட்டு சித்திரம் ஒலிபரப்பாகி பலரது உடனடிப் பாராட்டுக்களையும் பெற்றது.


அப்பொழுது இலங்கை வானொலியில் பிரதி எழுதுபவருக்கு 150 ரூபா சன்மானம் கொடுக்கின்ற வழக்கம் இருந்தது. அந்த வகையில் வவுச்சர் போடுபவர் இந்த. சி.சுப்பிரமணிய பாரதிக்கும் 150 ரூபாவுக்கான வவுச்சர் போட்டு வைத்தார். பிரதியில். சி.சுப்பிரமணிய பாரதிக்கு விலாசமில்லை. சன்மானம் அனுப்பப்படவில்லை. இது வவுச்சர் போட்ட அன்பருக்குப் பொறுக்கவில்லை. ஜோர்ஜ் சந்திரசேகரனிடமே சென்று சொன்னார். நீங்கள் பிரதியில் விலாசம் போடவில்லை. சுப்பிரமணிய பாரதிக்கு வவுச்சர் அனுப்பப்படவில்லை. விலாசத்தைத் தாருங்கள் என்று கேட்டார். 'ஜோர்ஜ்'யும் ஒரு நமட்டுச் சிரிப்புடன் எட்டய புரத்தை றைப்பண்ணி பாரும், என்று சொல்லிவிட்டு தன் பணியில் ஈடுபட்டார்.

எல்லோருக்கும் பாரதியைத் தெரிந்திருக்க வேண்டுமென்று நாங்கள் நினைப்பது, நியாயமில்லைத்தான். ஆனால், பல வருடங்கள் வானொலியில் வேலைசெய்யும் ஒருவருக்குக் கூடவா? அத்தோடு நில்லாது, இந்த வவுச்சர் அன்பர், பின்பு இலங்கை வானொலி விளம்பரப்பகுதியிருந்த தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கும் போனது. இதுக்கு அது கிடைக்கேல்லை. கடவுள்காக்க. இப்படியுமா? மனிதர்கள்.

தொடரும்

sanmuganathan@thaiveedu.com

■ ■ ■



நீங்கள் கனடாவுக்கு புதிதாய் வந்திருக்கும் அகதியா?

சட்ட உதவிப் பத்திரத்துடனிருக்கும் புதிய அகதிகளுக்கு
குடிவரவு சம்மந்தமான சேவைகள் அனைத்தும்
**இலவசம்**

20 வருடங்களுக்கு மேற்பட்ட குடிவரவாளர் சேவை

தமிழில் தொடர்புகளுக்கு
**என். பொன்னா**

**LANK-CAN LINK Ltd.**
106 Rough River Drive.,
Scarborough, ON
(Morningside & Sheppard)
Tel: 416.269.5883
Fax: 416.281.3404


CR Canada
உங்கள்
கடன்
பிரச்சினைகளைக்
கண்டு
ஓடிஒழிய
நேர்ந்ததா?
கவலையை விடுங்கள்!
உங்கள் வீடு, நிலம், வாகனம், வியாபாரம், எல்லாவற்றிற்கும் பிரச்சனைகளின்றித் தீர்வைப் பெற்றுத்தருவோம்.
உங்கள் கடன் தொகையிலிருந்து 15-20% மட்டும் தவணை முறையில் கட்டி முடிக்கலாம்.
அழையுங்கள்
CR Canada
சங்கர் அல்லது கிறிஸ்
Having difficulty repaying your student load?
New rule changes can help
CR Canada
Credit Reform Canada
Judgement in your favour!
416 264 1010
885 Progress Ave, Unit - 202, Scarborough.


ஒரு கூரையின் கீழ் அனைத்துவகை வணிக நிறுவனங்களும், அலுவலகங்களும்
நவீனம் | மலிவு | பல் தெரிவு | தாயக வாசனை | வட அமெரிக்காவின் முதல் தென்னாசிய வணிக மையம்
அள்ளலாம் வாங்க
தீபாவளியை முன்னிட்டு சிறப்பு மலிவு விற்பனைகள்
Jewellery Shops
Textiles & Fashion Clothing
Tailoring Shops
Dollar Shop
Grocery & Convenience Store
Book Store
Video Store
Gift Store
Computer Stores
Internet Service
Cellphone Centre
Lotto Centre
Online Store
Radio TV repair Shop
Kitchen Ware
Ink & Toner Store
Electronic Shop
Satellite Shop
Printing & Design
Café
Cake House
Beauty Parlor/Skin Care
Hair Salon
Party Supplies
Money Transfer
Charted Bus Services
Dry Cleaning
Airconditioning & Heating
Medical Office
Pharmacy
Physiotherapy
Law Offices
Real Estate Office
Mortgage Office
Accountant Office
Insurance Office
Newspaper Office
Astrology
Open 7 days
Mon - Sat : 9am - 9pm
Sundays & Holidays : 10am - 8pm
More than 50 Stores and Offices
GTA Square
INDOOR MALL
5215 Finch Ave. East, Scarborough, ON
(Middlefield & Finch)
digi media

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



**ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பணத்தை மீளப்பெற ஒரு வாய்ப்பு**

உங்கள் Furnace, Air Conditionerஐ Energy efficient systemதிற்கு மாற்றினாலும், தண்ணீர் சூடேற்றியை Tankless Systemமாக மாற்றினாலும் Rebates & Grantsஆக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை விட **15%** அரசாங்க grant பெறலாம். நீங்கள் செலவளிப்பதில் இருந்து ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பணத்தை பெற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

Furnaceக்கு **$1845**
Air Conditionerக்கு **$750 - $900**
Tankless Systemக்கு **$950 - $1050**

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

## பாதுகாப்பு

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA®
Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard
HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

**Raman Appliances**

# Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com

# FANTASTIC FALL SEAT SALES

## FANTASTIC FALL SEAT SALES TO INDIAN DESTINATIONS

**JET AIRWAYS** — **$1260.00** taxes INCL *
Toronto - Brussels - **Chennai**
Travel From: Oct 31th - Nov 30th

**ETIHAD AIRWAYS** — **$1050.00** taxes INCL *
Travel up to Nov 30th
Toronto - Abu Dhabi - **Chennai / Kolkata**

**QATAR AIRWAYS** — Toronto - Washington DC - Doha - Indian Destinations: **$1255.00** taxes INCL *
Travel up to Nov 20th
• Mumbai • Delhi • Chennai
• Cochin • Hyderabad • Kozhikode

**Emirates** — **$1234.00** taxes INCL *
Travel From: Oct 1st - Nov 30th
Toronto - Dubai: - Chennai / Delhi / Mumbai / Bangalore / Hyderabad

**ALL INDIA FARE** — starting from **$1298.00** taxes INCL *
Toronto - Brussels - **Indian Destinations**
• Cochin • Goa • Trivandrum • Bangalore
• Mumbai • Delhi • Hyderabad

* Above fares are Seat Sale Fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.

## SUPER SEAT SALES TO SOUTH EAST ASIAN DESTINATIONS

**AIR CANADA** — **$1613.00** +taxes*
Toronto - Vancouver - **Sydney**
Travel From: Oct 31st - Nov 30th

**AIR CANADA** — **$1513.00** +taxes*
Toronto - Vancouver - Sydney - **Melbourne**
Travel From: Oct 31st - Nov 30th

**JAL** — **$1039.00** +taxes*
Toronto - Tokyo - **Kuala Lumpur**
Travel From: Oct 31st - Nov 30th

**JAL** — **$941.00** +taxes*
Toronto - Tokyo - **Bangkok**
Travel From: Oct 31st - Nov 30th


**JAL** — **$960.00** +taxes*
Toronto - Vancouver - Tokyo - **Singapore**
Travel From: Oct 31st - Nov 30th

**JAL** — **$892.00** +taxes*
Toronto - Tokyo - **Manila**
Travel From: Oct 31st - Nov 30th

* Above fares are Seat Sale Fares. **Taxes range from $200-$370.** Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.


## Tour Of The Month: Exotic Caribbean Cruise


Cruise Ship


Balcony Cabin


Pool Area


Fort Lauderdale Beach


Limon, Costa Rica

Escape the winter blues, set sail today on the Carnival Liberty to the Caribbean in glorious style. The abundance of duty-free shops, delicious dining options, bars, clubs, onboard activities and the addition of the Carnival Seaside Theatre – a 12-foot-high by 22-foot-wide LED screen located poolside on Carnival Liberty's Lido deck showing movies, sporting events, concerts, and various other programming -- make the Carnival Liberty as much an attraction as the destinations themselves. Getaway for a week-and-a-day on an exotic 8 day Western Caribbean cruise aboard this beautiful ship and see the sun and sands of the exotic Caribbean beaches.

- Day 1: Ft Lauderdale, Florida
- Day 2: Fun Day At Sea
- Day 3: Cozumel, Mexico
- Day 4: Fun Day At Sea
- Day 5: Limon, Costa Rica
- Day 6: Colon, Panama
- Day 7: Fun Day At Sea
- Day 8: Fun Day At Sea
- Day 9: Ft Lauderdale, Florida




• Cruise Duration: 08 Days
• Ship: Carnival Liberty
Length: 952 feet
Passengers: 2,974
Crew: 1,160
Speed: 21 knots
Tonnage: 110,000 tons

Starting from only $1200

*Your Satisfaction is Our Success.*

**Serandib travel.com**
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495
PATA ACTA IATA

# சிமலாக்ரா இண்டிக்கா (simulacra indica)

அண்மையில் வந்திருக்கும் மூன்று செய்திகள் அவை வந்திருக்கும் தொடர்ச்சியின் படி-நிலையில், ஒரு வகையான எள்ளலுடன் அவற்றைப் பார்த்துச் சிரிக்கும் நிலையை நமக்கு ஏற்படுத்தியிருக்கின்றன. அவற்றைச் சுருக்கமாகவும் வரிசையாகவும் பார்ப்போம்.

இந்த இடத்தில் அடுத்த ஓர் சிக்கல் வருகிறது. இந்தச் செய்திகள் எங்கு, எந்த ஊடகத்தில் வந்தன அல்லது வருகின்றன என்பதே அது? ஆயினும் எங்களுக்கென்ற நடுநிலையுடைய ஊடகங்கள் ஒன்றும் இல்லாதபடியினால்... தமிழர் தரப்பிற்கு இருக்கும் ஊடகங்களில் வருவனவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் நிலையிலேயே நாங்கள் இன்றுமிருக்கின்றோம். அதனால் அப்படியே அந்தச் செய்திகளை இங்கும் தொகுக்கின்றேன்.

கடைசியாக இம்மாதத்தின் இறுதி சில நாட்க-ளுக்குள் வந்த செய்தி: இந்தியாவின் கடல வழியாக ஊடுருவிய விடுதலைப்புலிகள் இந்திய வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மாவோயிஸ்டு தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயற்சி கொடுக்கிறார்கள்.

(இதனை ஒரு இந்திய உளவு நிறுவனம் வெளியிட அந்தச் செய்தியை வெளியாக்கியது மற்றுமொரு அதைப்போன்ற செய்தி ஏடு.)

இது 2009 ஒக்ரோபர் 26 இல் வெளிவந்தது.

அதற்கு முந்தியதாக ஓர் செய்தி வந்திருந்தது: இது இந்திய உள்துறை அமைச்சர் அளவில் பேசப்பட்டது. விடுதலைப்புலிகள் 4,000 கோடி பெறுமதியான ஆயுதம் விற்பனை செய்திருக்-கிறார்கள். இந்தியாவின் மாவோயிஸ்டு தீவிர வாதிகளுக்கு விடுதலைப்புலிகள் ஆயுதம் விற்பனை. யாருக்கு? - இந்தியாவின் தீவிர-வாதிகளுக்கு. எப்போது? - கடைசியாக அவர்கள் தீவிரச் சண்டையில் இலங்கையின் இராணுவத்துடன் ஈடுபட்டிருந்தபோது.

இது எப்படி வெளியில் வந்தது? – அசாம் (இந்தியாவின் வடகிழக்கு – சீனாவின் எல்லை) இல் உள்ள தீவிரவாதிகளிடம் இருந்த ஆவணங்களைக் கைப்பற்றியதில் அவர்கள் விடுதலைப்புலிகளிடம் ஆயதம் வாங்கியதாகத் தரவு கிடைத்திருக்கிறது. இது ஊடகங்களில் வாந்தியாக வந்தது.

இது 2009 ஒக்ரோபர் 25 இல் வெளிவந்தது.

அதற்கு முந்தியதாக வந்திருந்த செய்தி:

இந்தியாவின் மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கணபதி என்பவர் ஓர் வீடியோ வழி நேர்காணல் வழங்கியி-ருந்தார். அதில் உலகில் மிகப்பெரிய மக்கள் அழிப்பு இலங்கையில் நடந்துள்ளது. அதைக் கண்டிக்கிறோம். அதனால் ஆயுதம் கொடுத்து பயிற்சி கொடுத்து போராடி துன்பப்படும் அவர்களை விடுதலை பெற வைப்போம் என்றிருக்கிறார்.

அதுவும் குறிப்பாக அதி நவீன படகுகள் வழியாக கடல்வழியில் ஆயுதங்களைக் கொண்டு செல்வோம் என்றும் அதில் கூறி-யிருந்தார்.

மேலும் தமிழகம் மற்றும் கேரளாவில் தமது இயக்கத்தை வளர்க்க முனைப்புடன் இறங்-கியிருப்பதாகவும் அவர் தெரிவித்ததுடன் தாங்கள் கடல்வழியாக ஆயுதங்கள் கொண்டு செல்வதை யாராலும் தடுக்க முடியாது என்றும் கூறியிருந்தார்.

இது 2009 ஒக்ரோபர் 22இல் வெளிவந்தது.

அப்படியெல்லாம் இருந்தால் இதற்கெல்லாம் மூலகர்த்தாச் செய்தி ஒன்று இருக்கவேண்டுமே?

அதுவும் வந்ததுதான்.

அது ஓர் பேராசிரியரின் நேர்காணல்.

இந்தியா கடைசியாக நடந்த போரின் போது இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கி உதவியது உண்மையே என்று அறுதியிட்டுக்கூறியிருந்தார்.

அதுமட்டுமல்லாமல் பிராந்தியப் போட்டி மற்றும் இலங்கையின் அதிகரிக்கும் படைபலம் போன்றவற்றையும் அவர் சுட்டிக்காட்டியி-ருந்தார்.

இது 2009 ஒக்ரோபர் 21இல் வெளிவந்தது. இந்தக் கடைசிச் செய்தியைச் சொல்லியி-ருப்பவர் பேராசிரியர் பிரம்மா செல்லச்சாமி என்பவர்.

எனது தேடல் சரியோ பிழையோ என்பதற்கப்-பால் அனைத்துச் சாத்தியங்களைப் பயன் படுத்தித் தேடியும் இவரைப்பற்றிய இந்தச் செய்தி தவிர்ந்த எந்தக் குறிப்பும் இணையத்-தில் இல்லை. (இணையம்தானே எங்கள் இப்போதைக்கான சுக்குமாந்தடி அல்லது மயாக்கண்ணாடி.)

ஆங்கிலத்திலும் கிடைக்கவில்லை. சரி தேடு-தல் தவறு என்றே வைத்துக் கொள்வோம். அப்படியாயினும் எளிதாக்க கண்டுபிடிக்க முடியாத, ஒருவகையில் பரவலாக அறியப் படாத ஒருவர் உருவாக்கிக் கொடுத்த செய்தி மூலம்தான் அது.

ஆனால் இந்தியாவின் கொள்கை ஆய்வு மையத்தின் உறுப்பினர் அவர் என்கிற செய்தி தவறாமல் அனைத்துப் பதிவுகளிலும் இடம் பிடித்திருக்கின்றன. அவரது பெயருடன் இணையத்தில் கிடைப்பனவோ இந்த மேற்படி செய்தி மட்டும்தான்.

இதேகாலப்பகுதி வரையும் தொடர்ந்து இந்திய மீனவர் கொல்லப்படுவதும் சிங்கள கடற்படை தாக்குவதும் பொதுச் செய்தியாகத்தான் இருந்ததுவந்தது அனைவருக்கும் தெரியும்.

இந்த நிலையில்...

முதற் சொன்ன மூன்று செய்திகளும் கட்ட-விழ்க்கப்பட்டன.

அவை வந்த ஒழுங்கைப்பாருங்கள்.

அவற்றில் முதலிரண்டு செய்திகளிலும் இந்தி-யாவின் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தொடர்பு பட்டிருக்கிறார். (இங்கு அவை விரிவாக்கப்படவில்லை.)

புலிகளில் சிலர் இந்தியாவிற்குள் வந்திருப்-பார்களா இந்தியாவிற்கு ஓர் சந்தேகம்? இந்திய உளவுத்துறை அதற்கேற்ப செய்தியை உருவாக்கியது.

பின்னர் அவர்களின் கையாள் தீவிரவாதி – மாவோயிஸ்டு யாரோ நேர்காணல் செய்தியில் புலிகளுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் ஆயுதம் கொடுப்பதாகச் சவால் விடுகிறார். அதுவும் கடல்வழியில்...

இத்தனைக்கும் இந்த மாவோயிஸ்டு தீவிர-வாதிகள் இருப்பது பெரும்பாலும் மலைப் பகுதிகளிலும் அதை அண்டிய காட்டுப் பகுதி களிலும். அதுதான் இதுவரைக்கும் வந்துள்ள செய்திகள். ஆனால் அவரோ, குறிப்பாக நவீன ஆயுதங்கள், படகுகள் என்கிறார். அதுமட்டு மல்லாமல் தங்களைக் கடலில் பிடிக்கமுடி-யாது என்று வேறு சவால் விடுகிறார்.

அவரது குறிக்கோள் தமிழகத்தில் உள்ள இலங்கைக் கடலை இந்திய கடற்படை பாதுகாக்கவேண்டும் என்பதாகத்தானே இருக்-கிறது!? இப்படிப்பட்ட ஒரு அக்கறையுள்ள தீவிரவாதி கடந்த ஓராண்டாக இந்த அறிக்-கையைக்கூட வெளியிடத் தெரியாமல் இருந்-தாரா? ஏன் இப்போது இவ்வளவு கிழமை நாள் பாரத்து வெளியிடுகிறார். அப்போது இலங்கையில் என்ன தமிழ் மக்கள் ஓடிப்பி-டித்து விளையாடிக்கொண்டா இருந்தோம்?

> “ சில இந்தியக் கிராமங்களில்
> நவீன எலக்ரோனிக் அடையாள அட்டை
> வழங்கப்படுகிறது.
> எங்கு?
> இந்தியாவை அவ்வப்போது ‘அடிச்சடிச்சுப் பிடிக்கும்’
> சீனாவின் எல்லையில் அல்ல.
> காசுமீரிலிருந்து கட்ச் வளைகுடா வரை தலையிடி
> கொடுக்கும் ‘மும்பை ஹோட்டல் புகழ்’
> பாக்கிசுதான் எல்லையில் அல்ல.
> கச்சத்தீவுக்குப் பக்கத்தில் அடிக்கடி சிங்களக்
> கடற்படையிடம் அடிவாங்கும் அதே அப்பாவித்
> தமிழ் மீனவர்களுக்குத்தான். ”



மாமூலன்

பின்னர்...இப்போது அதுவும் போதாது என்று இந்திய இழவுத்துறை புலிகளிடம் மாவோ-யிஸ்டு தீவிரவாதிகள் பயிற்சி பெறுகிறார்கள் என்கிறது – நேற்று.

மாவோயிஸ்டு தீவிவரவாதிகள் என்பவர்கள் சீனத் தொடர்புடைய கம்யூனிஸ்டுக்கள். முன்பு சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று இலங்கை-யில் யாரும் கேள்விப்பட்டிருக்கலாம். அதைப் போல அவர்கள் சீன சார்புடையவர்கள்.

ஆனால் இவர்கள் ஆயுதம் ஏந்திப்போராடு-பவர்கள்.

அவர்கள் பெரும்பாலும் செயற்படுவது இந்தியாவில் சீனாவின் எல்லையில் தொடர் புடைய மாநிலங்களில் மட்டும்தான். ஆந்திரா அதற்கு விதிவிலக்கு. இதற்கெல்லாம் பெரிய துப்பறியும் மூளை தேவையில்லை. இதற்கு முன்பெல்லாம் இதே இந்திய இழவுத்துறை விட்ட அறிக்கைகளைப்படித்தாலே போதும்.

இந்த நிலையில் இவர்களுக்கு ஆயுதப்பயிற்-சிக்கு புலிகள் போய்... அதற்கு முன்னதாக ஆயுதம் வித்து... பிறகு அவர்களிடமிருந்தே இலங்கைத் தமிழ் மக்கள் ஆயுத உதவி பெற்று... என்ன லூசா என்று ஊரில் கேட்-பார்களே!

முந்தியெல்லாம், மாகாபாரதம் இராமாயணம் எப்பிடி உருவாகியிருக்கும்... எவ்வளவு கற்ப-னைத் திறன் அதை எழுதியவர்களுக்கு என்று வியந்திருக்கிறேன். ஆனால் இப்போதேல்லாம் இந்தச் சந்தேகம் இல்லை. இந்திய இழவுத்-துறையின் செய்திகளை அப்போதும் வால்-மீகியும் வியாசரும் படிச்சிருப்பினமாக்கும் எண்டு இப்போது நினைக்கிறேன்.

கடைசியாகச் செய்தி:

இந்தியாவின் தமிழகத்தில் உள்ள கடலோரக் கிராமங்களில் நவீன எலக்ரோனிக் அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

எங்கு- ?!?!?!?

இந்தியாவை அவ்வப்போது ‘அடிச்சடிச்சுப் பிடிக்கும்’ சீனாவின் எல்லையில் அல்ல!?!!? காசுமீரிலிருந்து கட்ச் வளைகுடா வரை தலையிடி கொடுக்கும் மும்பை ஹோட்டல் புகழ் பாக்கிஸ்தான் எல்லையில் அல்ல?!?!

கச்சத்தீவுக்குப் பக்கத்தில் அடிக்கடி சிங்களக் கடற்படையிடம் அடிவாங்கும் அதே அப்பாவி மீனவர்களுக்குத்தான் இது வழங்கப்படுகிறது.

முடிச்சுகள் போடுபவர்களும் அவர்களே. அவிட்க முடியாமல் திண்டாடுபவர்களும் அவர்களே.

இந்த இழவுத்துறைகளின் நாடகத்தில் சிக்கி எம்மக்களை தொடர்ந்தும் இழந்து கொண்-டிருக்கிறோம் என்பதைத்தவிர கவலை வேறேதுமில்லை.

(இந்தக் கட்டுரையில் காணப்படும் செய்தி-கள்-ஆதாரங்கள் இருப்பில் உள்ளன. ஆனால் அந்த இணையத்தளங்கள் திடீரென்று காணாமல் போனால் நான் பொறுப்பல்ல)

mamoolan@thaiveedu.com

■ ■ ■

# குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் பங்கு

கரினி சுரேன்




தங்கள் குழந்தையின் கல்விக்கு பெற்றோர்கள் ஒரு முக்கியமான பங்கு ஆற்றினால் தான் அந்த குழந்தை ஒரு சிறந்த கல்வியை பெறமுடியும். உங்கள் குழந்தையை தனியே விட்டுவிடாதீர்கள்! எழுத்துக்கள் படிப்பதற்கோ அல்லது எண்களை எண்ணுவதற்கோ, புத்த கங்கள் வாங்கி தரும்படி Kinder Gartenல் படிக்கும் ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோர்களை கேட்பதில்லை.

குழந்தைகள் தாங்கள் அறிவு கூர்மையுள்ளவர்களாக ஆவதற்கு தங்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பெரியவர்களை எதிர்பார்க்கின்றனர். Kinder Gartenல் படிக்கும் தங்கள் குழந்தை வகுப்பில் கூடுதல் பாடபுத்தகங்களை கற்றுக் கொள்வதற்கு பெற்றோர்கள் தான் நிதி ஆதாரங்களை வழங்கவேண்டும். குழந்தை குறைந்தபட்சம் வாரம் இரு முறையாவது படிக்கும்படி எழுத்துக்கள் (Alphabet) மற்றும் எண்கள் (Number) அடங்கிய புத்தகங்களை அவர்கள் வாங்கவேண்டும். பின்னர் குழந்தை 1 முதல் 10 வரை எண்களையும் மற்றும் Alphabetகளையும் கற்றுக்கொண்ட பிறகு குறில் உயிர் எழுத்துகள், நெடில் உயிர் எழுத்துகள், பல வகை மெய்யெழுத்துகள் மற்றும் குழந்தையின் அவசியங்களை நிறைவு செய்யும் விவரங்கள் அடங்கிய மற்ற Kinder Garten புத்தகங்களை அவர்கள் தொடர்ந்து வாங்கி தங்கள் குழந்தைக்கு கல்வி புகட்டவேண்டும்.

உங்கள் குழந்தையின் ஆசிரியருடன் ஒரு நெருக்கமான தொடர்பில் இருங்கள். தங்கள் குழந்தை வீட்டு பாடங்களை வீட்டில் வைத்து ஒழுங்காக முடித்து வருகிறார்களா என்பதை ஆசிரியரிடம் விசாரியுங்கள். குழந்தைகள் படிப்பதற்கென பெற்றோர்கள் ஏராளமான சிறு கதை புத்தகங்களை வாங்கி கொடுக்கவேண்டும். அவைகளை படிப்பதினால் குழந்தைகளின் கற்பனை வளமும் மற்றும் படைப்பு திறனும், வேகமாக வளரும். புதிய அறிவு உலகத்திற்கு திறவுகோலாக அது அமையும். அவர்கள் எவ்வளவு அதிகமாக படிக்கிறார்களோ அந்த அளவிற்கு பள்ளி கூடத்தில் அவர்களின் திறமையின் வெளிப்பாடு இருக்கும்.

Kinder Gartenல் அடிப்படை பாடங்களை நன்கு கற்று தேர்ச்சி பெறாத ஒரு குழந்தை தன்னுடைய எதிர்கால படிப்பில் முதல் தரத்தில் வர முடியாமல் போராடும் நிலைமை ஏற்படும். ஆகையால் துன்பமும் மற்றும் குழப்பமும் நிறைந்த பாதையில் உங்கள் குழந்தையை பயணிக்க விடாதீர்கள். Kinder Garten கல்வி முடிந்த பிறகு அனைத்தையும் சுலபமாக அவர்கள் படிக்கும் திறன் வளர்வதற்கு நீங்கள் உதவவேண்டும். குழந்தைகள் இளம் வயதில் பல மொழியையும் மிக எளிதாக கற்றுக்கொள்வார்கள்.

முதலாவதான கல்விக்கு முயற்சி எடுங்கள், உங்கள் குழந்தைக்கு வீட்டில் வைத்தும் பாடம் கற்று கொடுங்கள்.



**பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் கொடுமைப் படுத்தப்பட்டால் அவர்கள் படிப்பு கெட்டு போய் விடும், இதனால் இடையில் படிப்பை விட்டு விடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.**

பள்ளிக்கூட மணி அடித்தவுடன் குழந்தைகள் தங்கள் வகுப்பிற்கு தொல்லை ஏதும் இல்லாமல், மிரட்டல் பயம் எதுவுமின்றி கல்வி கற்பதற்கு தீர்மானமான மனதுடன் செல்ல வேண்டும். துரதிருஷ்டவசமாக சிலவேளைகளில் வகுப்பறைகளில் இந்த சுமூகமான சூழ்நிலையைக் காணமுடிவதில்லை.

ஒரு குழந்தையை முட்டாள், அசிங்கமானவர், அவலட்சணமானவர் என்று பெயரிட்டு அழைத்து நிரந்தரமாக தொல்லை கொடுக்கும் போது, அவர்கள் எவ்வளவு காலம் தாங்குவார்கள். சில மூத்த மாணவர்கள் கூட கடுந்தொல்லைக்கும் மற்றும் மிரட்டலுக்கும் ஆளாகி மனஉளைச்சலில் உழல்கிறார்கள். இதனால் அவர்கள் படிப்பை இடையில் நிறுத்த நேரிடுகிறது.

பள்ளிக்கூட சகமாணவர்களின் இந்த இரக்க மற்ற அடாவடித்தனத்தை மூத்த மாணவர்களே தாங்கி கொள்ள முடியாத போது பாவம் குழந்தைகள் என்ன செய்யும்?

இப்படி தொல்லைகள் கொடுக்கும் மாணவர்களுக்கு அவர்கள் செய்யும் துன்பங்கள் பற்றி பலருக்கு நன்கு தெரியும். மேலும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் நன்கு அறிவர். ஆனால் அவர்கள் எதைபற்றியும் கவலைப்படுவதில்லை. ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் முதலியோர் மூத்த மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கொடுமை மற்றும் மிரட்டல்களை தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிற்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். இல்லையென்றால் இந்த அச்சுறுத்தல் ஒரு சங்கிலி போன்று தொடர் நிகழ்வுகளாக மாறிவிடும்.

குழந்தைகள் வயது வந்தவர்களிடமிருந்து இந்த அடவாடித்தனத்தை கற்றுக் கொள்ளும் என்பதால் வயதானவர்கள் தங்களுடைய மிருகத்தனமான நடத்தையை விட்டுவிட்டு குழந்தைகள் பின்பற்றத்தக்க ஒரு உதாரண மனிதராக வாழவேண்டும்.

சில குழந்தைகள் வகுப்பறையில் எதுவும் பேசாமல் பயந்து விலகி இருக்கின்றனர். ஏனென்றால் அவர்களுடைய கபடமற்ற பேச்சு சகமாணவர்களாலும் மற்றும் ஆசிரியராலும் தப்பான அர்த்தம் கற்பிக்கப்படும் என்ற பயம் தான் காரணம். ஏன் சில இடங்களில் பலர் ஒதுக்கி வைக்கப் படுகின்றார்கள். இந்த நடைமுறை குழந்தைகளுக்கும் மற்றும் அதுபோல் வயதானவர்களுக்கும் பொருந்தும். இங்ஙனம் சமுதாயம் பெரிதும் வளர்ச்சியடைந்து, பயனுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும் என்றால், ஒவ்வொரு குடிமக்களும் தங்களுடைய பங்கை ஒழுங்காக ஆற்ற வேண்டியது மிக முக்கியம். மற்ற மனிதர்களை அன்புடனும் மற்றும் மரியாதையுடனும் நடத்துங்கள்.

"அனைவரையும் நேசியுங்கள்,
அனைவருக்கும் சேவை செய்யுங்கள்"

harini.suren@thaiveedu.com

■ ■ ■

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா
Mahajana College OSA Canada

"மகாஜன மாதாவின்" நூற்றாண்டின் ஆரம்ப நிகழ்வு
நவம்பர் மாதம் 14ம் திகதி (14-11-2009) சனிக்கிழமை
Everest Banquet Hall (1199 Kennedy Road)இல் நடைபெறவுள்ளது.

அன்றைய நிகழ்ச்சிகள்
இளையோர் நிகழ்ச்சி (YOUTH EXPO)
காலை 9.00மணிமுதல் 3.00 மணி வரை
*TALENT SHOW & EXHIBITION*

நூற்றாண்டு இரவு விருந்து (CENTENARY DINNER)
மாலை 6.00மணி முதல் 11.00 மணி வரை
*நூற்றாண்டை நினைவுபடுத்தும் முத்திரை வெளியிடுதல்*
*நிகழ்வை குறிக்கும் ஞாபகார்த்த "மகாஜனன்" மலர் வெளியீடு*
*கணிதம், பொது அறிவுப்போட்டிகள்-2009ல் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கல்*

இப்பெருமைக்குரிய நிகழ்வுக்கு தங்களது வரவை மகிழ்வுடன் எதிர்பார்க்கிறோம்

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா
தொடர்புகளுக்கு 647 989 6477, 416 705 1493, 416 451 8427

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கக் கனடாக்கிளையின்

வருடாந்த
இராப்போசன விருந்து
November 14, 2009
6.30pm

The Church of the nativity ( next to Malvern Mall)
Neilson & Sewells
10 Sewells Road
Toronto, ON

நடா ஜி நடராஜா: 416-616 8751,
சி. ஏ. ரூபசிங்கம்: 416 271 1579,
கே. மகேந்திரலிங்கம்: 647-287 4611.



## வங்கிக் கடன் தொல்லையா?

# புதியதோர் ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம்

- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் வாகனம், வீடு, முதலீடுகள் என்பவற்றை தொடர்ந்து வைத்திருக்கலாம்
  **Keep your car, home, RRSP and RESP**
- மாதாந்த ரீதியில் எல்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one simple monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

**இலவச**
ஆலோசனைகளுக்கு
அழையுங்கள்

digi Media

## Suren Sornalingam

Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914

web: www.creditrecoverycanada.com



**CREDIT RECOVERY CANADA**
**Working with Trustee in Bankruptcy**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

"Eliminate Your Debt Stress"

# வாகனத் திருட்டும் பாதுகாப்பும்

மஞ்சுளா
ராஜலிங்கம்



நான்கு சக்கர வாகனங்களையே நம்பி வாழும் கனடா போன்ற வெளிநாடுகளில் நாமும் நம் அயலவரும் வாகனத்திருட்டையும் அதனால் மக்களைக் கொள்ளையடிக்கும் அனுபவத்தையும் பயத்துடனேயே எதிர்பாரா தருணத்தில் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் பழைய புள்ளிவிபரக்கணக்குப்படி (1991ம் வருடம்) $1.6 மில்லியனுக்கும் கூடுதலான வாகனங்கள் களவாடப்பட்டுள்ளன. அதாவது முறையாக அனுமதி பெற்ற வாகனங்களில் 117க்கு ஒன்று களவுபோதல் என்ற விகிதாசாரத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

நீங்கள் கவனமாக வாகனத்தைப்பத்திரப் படுத்துமிடத்து, களவுகள் தவிர்க்கப் படுவதோடு, களவுபோவதால் ஏற்படும் அலைச்சல்களும், செலவுகளும்கூட தவிர்க்கப்படுகின்றது. ஒரு வாகனம் களவுபோனால் இன்னொரு வாகனத்தைப் புதிதாய் வாங்குவது இலேசுப்பட்ட காரியமல்ல. இதிலிருந்து தப்புவதற்கான சில குறிப்புக்களைப் பார்ப்போம்.

Motor vehicle theft என்று உரைக்கப்படும் வாகனத்திருட்டில் வாகனம் மட்டுமே கடத்தப்படுகின்றது. ஆனால் ஒரு வாகனத்தை ஒருவர் உடைத்து, அதிலுள்ள உடைமைகளைத் திருடும்போது (briefcase, audio deck etc), அதை "plain theft அல்லது larceny" என்று குறிப்பிடுகின்றார்கள்.

கார்களைப் பெரும்பாலும் திருடுபவர்கள், வயதில் மிகவும் குறைந்தவர்களாகவே இருக்கின்றார்கள் (இருபது வயதிற்கும் குறைவானவர்கள்). இவர்கள் நோக்கம், அந்தக் கணப்பொழுதில் கேளிக்கையாக அந்த வாகனத்தைச் செலுத்திப் பார்ப்பதேயாம். ஆனால் தேர்ந்த திருடர்கள் வாகனங்களைத் திருடி, முழுக்காரையுமே அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்து, அதன் உதிரிப்பாகங்களை பலமடங்கு இலாபங்களில் தனித்தனியாகப் பிரித்து விற்பதோடு, சமயத்தில் மற்ற வெளிநாடுகளுக்கும், அல்லது கறுப்புச் சந்தையிலும் இம்மாதிரி வாகனங்களை மற்றவர்களின் தலையில் கட்டி, இலாபம் ஈட்டி விடுவார்கள்.

நாம் ஏதோ கைதேர்ந்த திருடர்களால் மட்டுமே எந்தச் சக்தியைக் கொண்டும், பூட்டப்பட்டுள்ள காரைத் திருடலாம் என நினைக்கின்றோம், ஆனால் கார் பூட்டை உடைப்பது என்பது அவ்வளவு கடினமான காரியமல்ல என்பதே உண்மை. எத்தனையோ கார்கள் கவனமின்மை காரணமாக சரியாகச் பூட்டப்படுவதில்லை என்பதோடு, பல கார்களில் வாகன ஓட்டுனர்கள் சாவியையும் துவாரத்தில், மறதியாக விட்டுச் செல்கின்றார்கள்.

கார் திருடப்படும் சந்தர்ப்பங்களையும், கார் திருட்டுக்களையும் நாம் சுலபமாக வெல்லலாம். முழுக் கதவுகளையும் சரியாக lock பண்ணுதல், மற்றும் trunks, roof hatches போன்றவற்றையும் சரியாக மூடுவதன் மூலம் நாம் கார் திருட்டுக்குள் சிக்க வெகுநாழியாகும்.

பலவிதமான, கார்களை secure செய்யும் நவீன கருவிகள் சந்தையில் ஏராளம். கார் எச்சரிக்கை அலாரம் தொடங்கி, stearing, wheel lock வரை எவ்வளவோ முன்னேற்றங்கள். உங்கள் வாகனக் காப்புறுதி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, இதுபற்றிய முழுத்தகவல்களையும் நீங்கள் பெறலாம்.







வீட்டு எச்சரிக்கை அலாரம் போலவே இந்தக் கார் அலாரங்களும் திருடர்களின் வேலையை எளிதாகச் செய்ய விடாது. ஆனால் anti theft devices என்று சொல்லப்படும் நவீன கருவிகளின் யுக்திகள் மூலம், ஒரு கார் ஒரு திருடனால் கடத்திச் செல்லப்பட்டுச் சென்ற சில நிமிடங்களில், எஞ்சினின் இயக்கம் தானாகவே செயலிழந்துவிடும். அல்லது, களவெடுக்கப்பட்ட கார் எங்கே, எந்த இடத்தில் போய்க்கொண்டிருக்கின்றது, அது ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இடம் போன்றவற்றையும் இக்கருவிகள் காட்டிக் கொடுத்துவிடும். தொழில்நுட்ப வளர்ச்சியின் பரிணாமம் இது.

உங்கள் காரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் முக்கிய குறிப்புக்களை எழுதித் வைத்திருங்கள்.

கார் தரிப்பிடங்களை தேர்வாக முடிவு செய்யுங்கள். மக்கள் அதிகமாகப் புழங்கும் இடங்களிலும், மற்றும் பலபேரும், ஒரு நோட்டம் வைத்துக்கொள்ளக்கூடிய இடங்களாகப் பார்த்து, வாகனங்களை நிறுத்திவைத்தல் நலம். களவுகள் நடைபெறும்போது, தற்செயலாக யாராவது பார்த்து உங்களை எச்சரிக்கும் வாய்ப்புக்கள் அதிகம்.

கார் திருடப்பட்டு விட்டது என்று தெரிந்து விட்டால், தாமதிக்காமல் உடனடியாக போலீசில் முறைப்பாடு செய்வது நல்லது. உங்கள் காரின் licence plate number, make, model, year and colour of the car, இவற்றை முக்கியமான அடையாளங்களாகக் கொடுங்கள். வேறு ஏதும் விசேட அடையாளங்கள் இருப்பினும் (phone or C.B antenna, mag wheels மற்றும் காரில் குறிப்பிடத்தக்க சேதங்கள் முன்னரே இருந்தால் அவற்றையும் குறிப்பிடலாம்) அவற்றைச் சொல்லி வைக்க மறந்துவிடாதீர்கள். எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக இவ்விடயத்தில் செயற்படுகின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் போலீஸ் உங்கள் வாகனத்தைக் கண்டு பிடிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம்.

## வாகனம் செலுத்தும்போது களவாடப்படும் வாகனம்

carjacking என்று சொல்லப்படும் இடத்தில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திருடர்கள் நீங்கள் அதைப்பாவிக்கும் தறுவாயிலேயே உங்களிடம் இருந்து பலவந்தமாக வாகனத்தைப் பறித்துச் செல்லுதலாகும். இவர்கள் ஆயுதம் தரித்தும், அன்றி ஆயுதம் இல்லாமலும் கூட உங்களைக் குறிவைக்கலாம்.

இம்மாதிரிக் களவுகள், நீங்கள் அர்த்த ராத்திரியில் ஒரு கடைக்குப்போகும்போது மட்டுமன்றி, சாதாரண நாளில் ஒரு சிவப்பு விளக்கு விழுந்த சந்தியில் வாகனத்தை நிறுத்தும்போதும் நிகழலாம். இத்திருடர்கள் பெரும்பாலும், வாகன ஓட்டுனர், தனியாக வாகனத்தில் செல்லும் நேரங்களையே பெரும்பாலும் தமக்கு உகந்த நேரமாகத் தேர்ந்தெடுப்பர். வாகனம் பலபேர் கொண்டு நிரம்பியிருந்தால், அவர்கள் தம் திருட்டைத் தொடர முயல்வதில்லை. கொஞ்சம் சுயசிந்தனையும், தைரியமும் இருந்தாலே, நாம் இவற்றிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

எப்பொழுதும் சுற்றுப்புற நிலைமைகளை, வாகனம் செலுத்தும்போது, குறிப்பாகக் கண்காணியுங்கள். உங்கள் வாகனத்தில் நீங்கள் இப்போது ஏறப்போகின்றீர்களா? சுற்றுப்புறத்தை ஒரு நோட்டம் விடுங்கள். கையில் கார்ச்சாவி தயாராக இருக்கட்டும். காரில் ஏறி வாகனத்தைச் செலுத்தும் தறுவாயில், தெருக்களின் நித்திய நடமாட்டங்களையும் கொஞ்சம் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். பகற்கனவில் மிதந்துகொண்டு காரைச் செலுத்தாதீர்கள்.

காரில் இருக்கும் நேரங்களில், பெரும்பாலும், உங்கள் கார்க்கண்ணாடிகளை மேலே ஏற்றி விட்டும், மற்றும் காரை lock positionஇலும் வைத்திருங்கள். ஒரு திருடன் உங்களைத் தாக்க முனைவதிலிருந்தும், அவர் உங்களை வெளியே இழுக்க முயற்சிப்பதிலிருந்தும், நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளலாம்.

நீங்கள் பொதுத் தொலைபேசியைப் பாவிக்க வேண்டியோ, அல்லது gas station போன்ற இடங்களில் உங்கள் வாகனத்தைத் தற்காலிகமாக நிறுத்தும்போது, மற்றொரு வாகன சாரதி அல்லது கடையில் gas stationஇல் வேலை செய்யும் பணியாளர் கண்பார்வையில் படும்படி உங்களை வாகனத்தைப் பார்க் செய்யலாம். இடைத்தெருவில் நிறுத்தப் போகிறீர்களா? சுற்றுப்புறத்தைச் சற்று கண்களால் அலசுங்கள். யாராவது சந்தேகப்படும்படி தெரிகின்றார்களா, அல்லது வேறு கார்களில் பலர் கூட்டமாக உட்கார்ந்திருக்கின்றார்களா? உங்கள் கார் தரிக்கும் எண்ணத்தை அந்த இடத்தில் கைவிடுங்கள், இன்னும் சற்றுத்தள்ளி ஒரு நல்ல இடத்தைப் பாதுகாப்பானதா என்று ஆராயுங்கள். வாகனத்தை ஓட்டியபடியே சிறிதுதூரம் சென்று சுற்றுப்புறத்தை நோட்டம் விடலாம். இந்த இடத்தில் வாகனத்தைப் பார்க் பண்ணுவது சரிதானா என்று மனதுக்கு உடனே தெரிந்துவிடும்.

இருட்டில் வாகனம் அடிக்கடி செலுத்தும் சந்தர்ப்பமா உங்களுக்கு? கையுடன் எப்போதும் ஒரு flashlightஇனை வைத்திருங்கள். இம்மாதிரி flash lightக்கள் சிறிய அளவில், key chain மற்றும் ஆடையின் pocketக்களில் வைக்க வசதியாக செய்யப்படுவதுண்டு. காரின் உள்ளே இருட்டில் ஏறமுன், நன்றாக flashlightஐ அடித்துப் பாருங்கள். சில புதிய கார்களில் (remote மூலம் unlock பண்ணக் கூடிய கார்களின் உள்ளே) நாம் பத்தடி தொலைவில் வரும்போதே, அதிலுள்ள மின் குமிழ்கள் பற்றிக் கொண்டிருக்கும். அதுவும் ஒரு நல்ல தொழில்நுட்ப யுக்தி.

சில திருடர்கள், நீங்கள் வாகனம் செலுத்தும் போது, தாமும் இன்னொரு வாகனத்தில் உங்கள் பின்னால் வருவார்கள். உங்கள் காரை வேண்டுமென்றே இடிப்பார்கள். நீங்கள், கார் விபத்துக்குள்ளாகி விட்டதே என்று உங்கள் காரை நிற்பாட்டி, அவர்களுடன் சமரசம் செய்து உங்கள் காரின் சேதங்களை ஆராயும் தறுவாயில், அவர்கள் சாமர்த்தியமாக உங்கள் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விடுவார்கள். ஒருவர் நம் காரை இடித்து விட்டார் என்றால் நாம் சும்மாவா இருப்போம்? உடனே இறங்கி damage estimation பற்றி ஆராயத் தொடங்கிவிடுவோம். இது திருடர்களுக்கோ, தாம் நினைத்தபடியே நடக்கின்றதே என்ற தெம்பு.

யாராவது தமது கார் பழுதடைந்த நிலையில் தெருவில் உதவிதேடி நிற்கின்றாரா? அவரின் நிலைமையை சம்பந்தப்பட்ட நிலையங்களுக்குத் தெரிவிப்பதே நீங்கள் செய்யக் கூடிய அதிகூடிய உதவி. உங்கள் காரை நீங்கள் அவருக்கருகில் நிறுத்துவதே, பாதுகாப்பு இல்லாதவிடத்தில், ஒரு உகந்த செயலல்ல. காரின் நிறம், காரின் உற்பத்தி அடையாளம் மற்றும் car licence plate number இவற்றை நீங்கள் குறித்துக்கொண்டு, உங்கள் கைத்தொலைபேசியைப் பாவித்து, அல்லது பொதுத்தொலைபேசியைப் பாவித்து, காவற்துறையினருக்கோ, சம்பந்தப்பட்ட வேறுதரப்பினருக்கோ அழைத்து, வாகனத்தின் பிரச்சினையைத் தெரிவிக்கலாம்.

ஒரு விபத்து நடந்த வாகனங்களைக் கடக்கும்போதுகூட, உங்கள் விடயத்தில் மெத்தனமாக இருக்காதீர்கள். வாகனங்கள் விபத்துக்குள்ளானதுபோல் நடித்து, அப்பாவி மக்களைக் கவர்ந்து, பின்னர் அவர்கள் உதவிக்கு ஓடி வர, கடைசியில் அவர்கள் கார்களையே திருடிக்கொண்டு போன சம்பவங்கள் ஒன்றும் புதிதாக நடப்பவையுமல்ல. இங்கும் கொஞ்சம் விழிப்புடன் இருங்கள்.

திருடரால் மறிக்கப்பட்டால், அவருடன் தர்க்கம் செய்யவோ, கைகலப்பில் ஈடுபடவோ முயல வேண்டாம் என்று காவற்துறை எச்சரிக்கின்றது. அவர் ஆயுததாரியாக இருக்கலாம். தர்க்கம் செய்யாமல், உங்கள் வாகனத்தைக் கையளித்துவிட்டு, உயிராபத்தில்லாமல், அந்த இடத்தைவிட்டு விலக முயற்சி செய்யுங்கள். எக்காரணம் கொண்டும், திருடனைக் கோபப்பட செய்துவிடாதீர்கள்.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்








Over **50 Years**
Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario

## FIREMAN WOLFE LLP

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

## தீபன்

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)



**William C. Wolfe B.A. LLB**
Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

**(416) 505-9804**

இலவச ஆலோசனைகளுக்கு:
24 Hours Direct Line **(416) 624-4751**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

"One of the best personal injury law firm in Ontario"

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO
**$1,000.00** IRB'S PER WEEK
வரை
இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்

TORONTO SCARBOROUGH MISSISSAUGA



# ஆயுட் காப்புறுதி

Universal Life • Whole Life • Term Life • Non Medical

| RESP | RRSP | CRITICAL ILLNESS |
|---|---|---|
| + 20% Government Grant 15% Company Bonus | Loan Aproved Even SIN Number 9 | Upto 25 Illness |

digi



**VASANTH VINAYAGAMOORTHY**
Insurance Broker
**647-885-3012**
www.vvinsurance.ca

759 Warden Ave., Toronto, ON M1l 4B5
Office: 416-759-5453, Fax: 416-759-6220

# ஆனந்தம்



- சத்குரு வாசுதேவ் -

தற்போது நீங்கள் ஆனந்தமாக இருக்க வேண்டுமென்றால், அதற்கென பல நிபந்தனைகளை உருவாக்கியிருக்கிறீர்கள். உங்கள் மனைவி ஏதோவொரு விதமாக இருக்க வேண்டும், உங்கள் கணவன் வேறுவிதமாக அவரை மாற்றிக்கொள்ள வேண்டும். உங்கள் மாமியார் இருக்கவே கூடாது, உலகமே மாறவேண்டும். இவ்வாறாக ஏதேதோ நிபந்தனைகளை விதித்துக் கொள்கிறீர்கள்.

நீங்கள் ஆனந்தமாக இருக்க வேண்டுமெனில், உலகமே நீங்கள் நினைத்தவிதமாக நடக்க வேண்டும். அப்படித்தானே?

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு இருக்கும் ஒரேயொரு பிரச்சினை இதுதான்.

உங்கள் வாழ்க்கை நீங்கள் நினைத்தவிதமாக நடக்கவில்லை. அது ஒன்றுதானே பிரச்சினை? வேறு ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா? உங்களுடைய எல்லா துன்பத்திற்கும் அடிப்படையான காரணம் என்னவென்றால், நான் நினைத்தவிதமாக வாழ்க்கை நடக்கவில்லையே!

அனைத்துமே நீங்கள் நினைத்தவாறே நடக்க முடியுமா? அப்படியில்லை தானே? நீங்கள் நினைக்கும்விதத்தில் முழு உலகமும் ஒரு போதும் நடக்காது. நடக்கவும் முடியாது. இது எப்போதுமே இப்படித்தான் இருக்கப் போகிறது. எவ்வளவுதான் விஞ்ஞானமும் மற்றும் தொழில்நுட்பமும் வளர்ந்தாலும், எதுவுமே நூறு சத விகிதம் நாம் நினைப்பது போல் இருக்காது. நாம் அதனை ஓரளவுதான் கட்டுப்படுத்த முடியும்.

நீங்கள் விரும்பியபடி இது நூறு சதவிகிதம் நடக்கவில்லை, அவ்வாறு இருப்பது நல்லது தான். ஏனென்றால் நீங்கள் விரும்பியபடி உலகம் நிகழ்ந்தால் நான் எங்கே செல்வது? எனவே நீங்கள் விரும்பியபடியே மிகச் சரியாக உலகமும் நடக்காது. உங்கள் குடும்பமும் நீங்கள் விரும்பியபடி நடக்காது. ஏன்? இவ்வுலகில் ஒரேயொரு மனிதன், வேறு ஒரேயொரு மனிதன் கூட நீங்கள் விரும்பியபடி நடக்கமாட்டான். யாராவது நீங்கள் நினைத்தவாறே நடந்து கொள்கிறார்களா? உங்களது நாய் கூட, நீங்கள் அது என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதனைச் செய்யாது, இல்லையா? ஒருவரும் நீங்கள் நினைத்தவாறு நடந்துகொள்ள மாட்டார்கள். வெளிச்சூழ்நிலை ஒருபோதும் நீங்கள் நினைத்தவாறு நடக்காது. ஆனால், உங்களது உள்நிலைப் பரிமாணமாவது நீங்கள் நினைத்தவாறு நடக்க வேண்டும், இல்லையா?

எனவே, அடிப்படையில் நாம் அந்தப் பரிமாணத்தை ஆராய்வோம். உங்களை மிகவும் ஆனந்தமாகவும், அமைதியாகவும் உங்களுக்குள் நிலைப்படுத்தும் ஒரு முழுமையான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் எங்களிடம் உள்ளது. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் ஒருவர், அவரது உள்நிலையை அவர் விரும்பியபடியே உருவாக்க முடியும். நீங்கள் நூறுசதவீதம் கட்டுப்பாட்டினைக் கொண்டுவர முடிகிற ஒரே இடம், உங்கள் உள்நிலைதான். வெளிச்சூழல் முழுமையாக உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் உள் உலகம், உள்நிலை நீங்கள் நினைக்கின்ற விதமாக நடக்க முடியும். உங்கள் உள்நிலை நீங்கள் நினைத்தவிதமாக எப்பொழுது நடக்கிறதோ, அப்பொழுது ஆனந்தம்தான் இருக்க முடியும். வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனந்தம் மட்டுமே அங்கு இருக்க முடியும்.

நிறைய மனிதர்கள் ஆனந்தம் என்றால் இன்பம் என்றே தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். ஆனால் ஆனந்தமும் இன்பமும் ஒன்றல்ல. நீங்கள் இன்பத்தை என்றுமே நிலையாக இருத்தி வைத்திருக்க முடியாது. அது விரைவாகவே வீழ்கிறது. இன்பம், என்றுமே எதையோ அல்லது எவரையோ சார்ந்தே இருக்கிறது. ஆனந்தம் என்றுமே எதையும் சார்ந்திருப்பதில்லை, அது உங்கள் இயற்கையான தன்மை, அதற்கு வெளித்தூண்டுதல் எதுவும் தேவையில்லை ஆனந்தம் என்பது உங்களுக்குள் உணர்வது எனப் புரிந்துகொண்டால், தற்போதைய உங்கள் செயல்கள் யாவும், ஆனந்தம் பெறுவதற்கான குழந்தைத்தனமான முயற்சிகள்தான் என்பதை அறிவீர்கள். நீங்கள் ஆனந்தமாக இருந்தால் அமைதியாக இருக்கிறீர்கள். நீங்கள் அதனுள் இருக்கிறீர்கள், அவ்வளவே.

பேரானந்தநிலை என்பது நீங்கள் வெளியிலிருந்து சேகரிப்பது அல்ல. அது உங்களுள் ஆழமாகத் தோண்டிக் கண்டுபிடிக்கவேண்டிய ஒன்று. இது எப்படியெனில், மழை வரும்போது, மழைத்துளி வாயில் விழக் காத்திராமல், ஒரு கிணற்றைத் தோண்டுவது போல. ஏனென்றால், மழை வெறுமனே ஒருமணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ மட்டுமே பெய்யும். கிணறு அப்படியல்ல. எனவே உண்மையான பேரானந்தம் என்று நாம் குறிப்பிடுவது இதைத்தான். நீங்கள் உங்களது உள்ளிருக்கும் கிணற்றிலிருந்தே தண்ணீர் எடுப்பது. அது என்றுமே உங்களுக்காக இருக்கும். மழை வரும்பொழுது, மழைத்துளிகளுக்காக வாயினைத் திறந்து காத்திருப்பதுபோல அல்ல. அனைத்து நேரங்களிலும் உங்களுக்கு தண்ணீர் இருக்கிறது. அதுதான் பேரானந்தம்.

ஆனந்தம் - 4

மக்கள் நம்மிடம் பல காலங்களாக "ஆரோக்கியமே செல்வம்" என்று சொல்லி வருகிறார்கள். ஆரோக்கியம் மற்றும் செல்வம் இரண்டும் நம்மிடம் இல்லாதபோது, அவை மிகவும் மதிப்பு மிக்கதாய் இருக்கிறது. ஆனால் அவை நம்மிடம் வந்து சேர்ந்தபோது, அவை ஒன்றுமேயில்லாமல் ஆகிவிடுகிறது. உங்களுக்கு ஆரோக்கியம் இல்லாதபோது, உங்கள் தேவைகள் அனைத்துமே அது மட்டும்தான் என்று நம்புகிறோம். ஆனால் ஆரோக்கியமும் செல்வமும் வந்து சேர்ந்துவிட்டால், அவை இரண்டுமே ஒன்றும் பெரிய விஷயமில்லை என்பதைக் காண்பீர்கள். அன்றாட வாழ்க்கையில் ஆரோக்கியம் இல்லாத பல மக்களை நீங்கள் சந்திக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு, வாழ்க்கையில் ஆரோக்கியமாக இருப்பது மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இந்த உலகில் ஆரோக்கியமின்றி துயரில் இருக்கும் மக்களைவிட, ஆரோக்கியத்துடன் துயரில் இருப்பவர்கள் தான் அதிகம். அதுதான் நிதர்சன உண்மை, இல்லையா? இளைய தலைமுறையினருக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது? இவ்வுலகில் ஆரோக்கியமின்றி, மிகுந்த துயரில் இருப்பவர்களை விட அதிக அளவு மக்கள், ஆரோக்கியமாக இருந்தும் மிகுந்த துயரில் இருக்கிறார்கள். உடல்நலமற்ற மக்களுக்கு அவர்களின் துயரத்திற்கு ஒரு காரணமாவது இருக்கிறது. ஆரோக்கியமான மக்களின் துயருக்கு ஒரு காரணமுமில்லை.

எனவே, மனிதன் ஆரோக்கியம் மற்றும் செல்வத்தோடு மட்டும் அமைதி கொள்வதில்லை. அவை தேவைதான். இரண்டுமே நம் நல்வாழ்விற்கு இன்றியமையாதது தான். ஆனால் அது நம்மை அமைதியடையச் செய்யப்போவதில்லை. அது நம்மை நிறைவடையச் செய்யப்போவதில்லை. அது நம் வாழ்வை முழுமையடையச் செய்யப் போவதில்லை. எனவே மனிதன் உண்மையில் எதைத் தேடுகிறான்? வெவ்வேறு மக்கள், அவர்களது மகிழ்ச்சிக்கு, பலவழிகளில் வெவ்வேறு நடைமுறையைக் கொண்டுள்ளார்கள். அமைதியையும், மகிழ்ச்சியையும் தான் ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு வழிகளில் தேடிக் கொண்டிருக்கிறான். அமைதியும், மகிழ்ச்சியும் ஒருவரது வாழ்வின் இறுதி குறிக்கோள்கள் அல்ல. அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது என்பது வாழ்வின் அடிப்படைத் தேவை.

மக்களின் செயல்கள் அனைத்தும் மகிழ்ச்சியைத் தேடுவதாக இல்லாமல், ஆனந்தத்தின் வெளிப்பாடாக இருக்குமாறு வாழவேண்டும். அப்பொழுது மட்டுமே அவர்கள் தேவைகளுக்கு ஏற்ற செயல்கள் செய்வார்கள். மகிழ்ச்சியைத் தேடி செயல் செய்தால், முடிவில்லாமல் செயல் செய்துகொண்டிருப்பார்கள். குறிக்கோளற்ற பல செயல்கள். ஏனெனில், மகிழ்ச்சியின் தேடுதலுக்கு முடிவே இருக்காது. இதன் இயல்பு எப்படியெனில், நீங்கள் எவ்வளவு தூரம் போனாலும், மகிழ்ச்சி உங்களை விட ஒரு அடி முன்னால் இருக்கும். நீங்கள் எவ்வளவு வேகமாக நடந்தாலும், எவ்வளவு வேகமாக ஓடினாலும், நீங்கள் தேடுவது உங்களை விட ஒரு அடி முன்னால்தான் இருக்கும். இது தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

உங்களது வாழ்வை திரும்பிப் பாருங்கள். உங்களது வாழ்வின் மிக அழகான ஷணங்கள், நீங்கள் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டிருந்த ஷணங்கள் அல்ல. உங்கள் வாழ்வின் மிக அழகான ஷணங்கள், நீங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய ஷணங்கள் தான், இல்லையா? மகிழ்ச்சியின் தேடுதலில் நீங்கள், பல பெரிய பெரிய செயல்களைச் செய்திருக்கக்கூடும். உங்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக, நீங்கள் வெறுமனே சில சிறிய செயல்களையும் செய்திருப்பீர்கள். ஆனால் அந்தச் சிறிய செயல்களே உங்கள் வாழ்வின் மிக அழகான தருணங்களாக மனதில் இருக்கிறது, இல்லையா? எனவே மனிதகுலம், அவர்களது வாழ்வை மகிழ்ச்சியின் தேடுதலிலிருந்து, மகிழ்ச்சியின் வெளிப்பாடாக உருவாக்கிக் கொள்ள இதுவே தருணம்.

> "இன்பத்தை என்றுமே
> நிலையாக இருத்தி வைத்திருக்க முடியாது.
> அது விரைவாகவே வீழ்கிறது.
> இன்பம், என்றுமே எதையோ
> அல்லது எவரையோ சார்ந்தே இருக்கிறது.
> ஆனந்தம்
> என்றுமே எதையும் சார்ந்திருப்பதில்லை,
> அது உங்கள் இயற்கையான தன்மை,
> அதற்கு வெளித்தூண்டுதல் எதுவும் தேவையில்லை
> ஆனந்தம் என்பது உங்களுக்குள் உணர்வது."

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

GP TELECOM

இரமணன் திரு

(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable




உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344


Mortgage Mortgage Mortgage
5 வருட ஈட்டுக்கடனுக்கான
வட்டி விகிதம்
3.89%
variable
2.15%
வருடத்தைக் கொஞ்சம்
கூட்டி மோட்கேஜ்
கட்டுக்காசைக்
குறைக்க வேணும்.
பெனால்டி கூட வருமோ
என்று பயமாக இருக்கு!!
வீட்டை மாற்றி எழுதவேணும்.
ஒருவருடைய பெயரை எடுத்து
விட்டு, மற்றைய நபரின்
பெயரைச் சேர்க்கவேண்டும்.
அதற்கு நல்ல
அட்வைஸ் தேவை!!
CONSOLIDATE ALL YOUR CREDIT CARDS
& OTHER HIGH INTEREST DEBTS!
LOWER YOUR MORTGAGE PAYMENTS!
CALL NOW:
(416) 716-8707
தயா PK கந்தையா BAS, ABR®
Principal Mortgage Broker
FSCO LIC# M08001083
CENTUM™ Rapid Mortgages Inc.
FSCO LIC #10158
- WWW.CENTUMRAPID.COM -
Scotiabank
CIBC
TD Canada Trust
FirstLine Mortgages
IA Industrial Alliance Insurance and Financial Services Inc.
Home Trust
Street Capital
211-80 NASHDENE RD • TORONTO, ON • M1V 5E4 • BUS: 416-644-3555 • FAX: 866-696-3893
Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply, call for details

# நம் வீட்டுக் கொண்டாட்டங்கள்



கௌரி சதானந்தன்

புலம்பெயர் நாடுகளில் பலவகையைச் சார்ந்த தலைமுறையினராக நாம் தமிழர் வாழ்கிறோம்.

நன்கு வயது முதிர்ந்தவர்கள், அவர்களின் பிள்ளைகள் - நடுத்தரம் கடந்த முதிர்ந்தவர்கள், தாய்நாட்டில் பிறந்த அவர்களின் இளவயதுப் பிள்ளைகள், இன்னும் இங்கேயே பிறந்து வளர்பவர்கள் என பலவகையில் வகைப்படுத்தலாம்.

முதல் இரு தலைமுறையினரும் நம் தாய்த் திருநாட்டில் தமிழ்ப் பண்பாடு, கலாச்சார விழுமியங்களோடு வாழ்ந்த நினைவுகளுடன் உள்ளவர்கள். "அந்தக் காலத்தில..." என்ற சொற் பதத்திற்கு..., அந்த வார்த்தைக்கு உரியவர்கள். பழைய பசுமையான எண்ணங்களுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்.

அவர்கள் காலத்தில், நம் நாட்டில், வீட்டுக் கொண்டாட்டங்கள் என்றால் எவ்வளவு குதூகலம்! வீட்டில் திருமணம் என்றால் பந்தல் கால் நடுவதில் தொடங்கும். ஒரு வீட்டு முற்றத்தில் நிற்கும் கல்யாண முருங்கைகள் எத்தனை கல்யாணங்கள் அந்த வீட்டில் நடைபெற்றிருக்கின்றன என்ற கதைகளைக் கூறும். அவை சிவப்புப் பூக்களைப் பூத்து, சூடிச் சிங்காரித்திருக்கும்!

பந்தல்கால் நட்டு, பின்னர் உறவினர் கூடி மரம், கிடுகுகள் கொண்டு வீட்டு முற்றத்தை அடைத்து பந்தல் அமைத்து அலங்கரித்து; உதவிக்கு வருவோருக்கான சமையல், பரிமாறல் என்று அப்போதே கொண்டாட்டம் களைகட்டத் தொடங்கும். சிறுவர்கள் கூடி விளையாடி கலகலப்பாக்கிவிடுவார்கள்.

மாப்பிள்ளை வீட்டார், 'பொம்பிளை'வீட்டார் என்று இரு வீட்டாரிலும் ஆண், பெண் என இருவர் இருவராக சேர்ந்து ஊருக்குச் சொல்வார்கள். திருமணத்தன்று இரு வீட்டிலும் கல்யாணச் சாப்பாடுகள் பின்கட்டில் தயாராகும். முதல்நாளே வகைவகையான மரக்கறிகள் வெட்டித் தயார்படுத்தி, உற்றார் உறவினர் கூடி இந்தக் கொண்டாட்டத்திற்குத் தயாராவதே ஒரு கொண்டாட்டம்தான்!

இத்தனை சிறப்புக்களுடன் ஊர் சேர்ந்து, உற்றார், உறவினர் சேர்ந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடிய நம் கொண்டாட்டங்கள் புலம் பெயர் தேசங்களில் "Package"களில் பொதி யப்பட்டுவிட்டன!

நாம் வாழும் நாடும் மாறி, நாமும் மாறியபோது கொண்டாட்டங்களின் வடிவமும் மாறிவிட்டது.

வீட்டு முற்றம் அடைத்து பந்தல் போட இயலாது. வீட்டுக்கோடியில் சமையல் செய்ய முடியாது. இவ்விரண்டு பேராக ஊருக்குச் சொல்ல முடியாது.

அழகான வாடகை மண்டபங்கள்! விழாவை ஒருங்கிணைக்க மண்டப ஒழுங்கமைப்பாளர்கள்! உறவினரை அழைக்க தொலைபேசி! ஒரு கொண்டாட்டம் சுலபமாக நடந்தேறிவிடுகிறது.

உறவினர்கள், உற்றார் என்று ஒருவருக்கொருவர் எவ்வளவு தூரங்களில் இருக்கிறோம்! இவ்வளவில் நமக்கு தொலைபேசி உதவுவதுபோல் வேறெவரும் உதவமுடியாது!

இவ்வாறு நம்மாலான வழிமுறையில் நம் வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு முறைவைத்து, சேதி சொல்லி அன்புரிமையுடன் உறவினர்களை அழைத்துக்கொள்கிறோம்.

உறவுக்காகவும், உரிமைக்காகவும், நட்புக்காகவும் நமது உற்றவரை நமது விழாக்களில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம். "விழா நாயகர்களை" வாழ்த்துவதற்காகவும், உறவினரைச் சந்திக்கும் ஆர்வத்தாலும், நமது உறவை உறுதிப்படுத்திக்கொள்ளவுமாக ஆர்வத்தோடு அவ்விழாக்களில் நம் உறவினரும் நண்பர்களும் கலந்துகொள்கிறார்கள்.

உதாரணத்திற்காக ஒரு திருமண விழாவை எடுத்துக்கொள்வோம்.

ஒரேநாளில், ஒரே ஊர்க்காரர்களதும் உறவினர்களதுமாக இரண்டு, மூன்று வைபவங்கள் நடைபெறுவதுண்டு. இதனால் திருமண விழாவில் கலந்துகொள்ள வரும் உறவுகள் அன்றைய நாளில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் செல்லக் கடப்பாடுடையவர்களாகி ஒரே நாளில் ரொரண்டோ பெரும் பாகத்தையே சுற்றிவந்து அலைக்கழிகிறார்கள். ஆகவே விழா ஏற்பாட்டாளர்கள் தமது சுய கௌரவத்தை விட்டுக்கொடுத்து கலந்து பேசி, தமது கொண்டாட்டங்களை புரிந்துணர்வுடன் நாள் குறித்துக்கொண்டால் இக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் உறவுகள் அலைக்கழிவுபடத் தேவையில்லை.

பெரும்பாலும் வைபவங்கள் வார இறுதி நாட்களிலேயே நிச்சயிக்கப்படுகின்றன. இந்த நாட்களிலேயே மாணவர்களின் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன. இதனால் இவ்வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்பவேண்டிய தேவையுள்ள பெற்றோரும், வேலைக்குச் செல்லவேண்டியவர்களும் இந்த வைபவங்களில் கலந்துகொண்டு, வாழ்த்தி விட்டு நேரகாலத்துடன் அவரவர் அலுவல்களைப் பார்க்க வெளிக்கிடும் அவசரத்தில் இருப்பது ஒவ்வொரு விழாக்களிலும் இடம் பெறுகிறது. நேரம் பிந்தும்போது எவ்வளவோ விடயங்களை அவர்கள் இழக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

> "கொண்டாட்டத்திற்குச் செல்வோர்
> ஆசனத்தில் இருந்ததைவிட கால்கடுக்க
> வரிசையில் நின்ற நேரம் தான் அதிகம்
> அறுகரிசி போட, அன்பளிப்புகள் கொடுக்க,
> புகைப்படமெடுக்க, சாப்பாடு எடுக்கவென்று
> ஒவ்வொரு வரிசையும்
> நீண்டுகொண்டே போகும்."

வாழ்த்தவருவோர் வாழ்த்திவிட்டு படம் எடுப்பதற்கென்று வரிசையில் நின்றே எவ்வளவோ நேரம் செலவழிகிறது. ஆனால், இவ்வாறு படம் எடுத்துக்கொள்வோரின் படங்கள் கழுவப்படுகின்றனவா, Album-த்தில் போடப்படுகின்றனவா என்றால் இல்லை. இதை படப் பிடிப்பாளர்களே கூறிக்கொள்கிறார்கள்.

பெரும்பாலும் மேசைக்கு மேசை ஒளிப்படம் எடுப்பது வழமையாதலால் விழாவுக்கு வந்தவர்கள் யாரென்பதை அறியவேண்டுமாயின் அதனைப் போட்டுப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இதனால் எவ்வளவோ நேரம் மிஞ்சும்!

உண்மையில், திருமணத் தம்பதிகளை வாழ்த்துவதற்கென்றே விருந்திரை அழைக்கின்றோம், வருகின்றனர். தாலிகட்டி முடிந்ததும் அவர்களை வாழ்த்தி அறுகரிசி போடவென்று வரிசை கட்டி நிற்கும்போது இடைநடுவில் தம்பதிகள் ஆடைமாற்றவென்று புறப்பட்டு விடுகின்றனர். மணமகள் உடுத்தியிருந்த விலையுயர்ந்த அந்த அழகான கூறைச் சேலை ஒரு அரைமணி நேரம்தான் பாவனையிலிருக்கிறது! பின்னர் வேறு ஆடை மாற்றிவர சுமார் ஒன்று, ஒன்றரை மணித்தியாலம் என்று நேரம் எடுத்துக்கொள்கின்றனர். வாழ்த்தக் காத்திருக்கும் உறவினர், உற்றார் வட்டத்தினர் பொறுமையிழந்து, மணமக்களுக்கான தம் அன்பளிப்புக்களை யார்யாரிடமோ ஒப்படைத்து விட்டு புறப்பட்டுவிடுகின்றனர். இவர்கள் மகிழ்ச்சியாக செல்வது வாழ்த்த! ஆனால், திரும்பும்போதோ சலிப்பும் அலுப்பும் கூடவே சேர்ந்துகொள்கிறது.

தாலி கட்டுவதும், திருமண எழுத்தும் ஒரேநாளில் வைப்பதாயின், தாலி கட்டிமுடிந்ததும் வாழ்த்துவோருக்கு இடம் கொடுத்து, பின்னர் தமது வசதிப்படி நெருங்கிய உறவினர், நண்பர்களுடன் திருமண எழுத்தை வைத்துக்கொள்ளலாமே! அழைத்த விருந்தினருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாதவாறு இவை நடைபெற்றால் எவ்வளவு மகிழ்ச்சி!

இதற்கான நேர ஒழுங்கை விழாவை நடத்துவோர் கவனத்தில் எடுத்தால் பலருக்கும் நன்மையாக இருக்கும். படம் எடுப்பதற்கும், வீடியோ எடுப்பதற்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுத்து விழாவினை நடாத்தாமல், அவற்றுடன் மற்றவர்களின் நேரத்தையும் மதித்து, மனம் நிறைந்த வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வைபவங்களை வைத்துக் கொண்டால் விழாவும் முழுமை பெறும்.

கொண்டாட்டத்திற்குச் செல்வோர் ஆசனத்தில் இருந்ததைவிட கால்கடுக்க வரிசையில் நின்ற நேரம் தான் அதிகமாக இருக்கும். அறுகரிசி போட, அன்பளிப்புகள் கொடுக்க, புகைப்படம் எடுக்க, சாப்பாடு எடுக்க என்று ஒவ்வொரு வரிசையும் நீண்டுகொண்டே போகும்.

இந்த சிக்கலைத் தவிர்க்க அந்த மண்டபத்திலேயே வழியிருக்கிறது.

அங்கே இருக்கும் ஒவ்வொரு மேசையிலும் இலக்கங்கள் குத்தியிருப்பார்கள். இது ஏன் என்று குத்தியவர்களுக்கும் தெரியாது, குந்தியிருப்போருக்கும் தெரியாது.

விழாவை நடத்துவோர் மேசையிலுள்ள இலக்கரீதியாக விருந்தினரை அழைத்து, வரிசையைத் தவிர்த்து ஒழுங்குபடுத்த முடியும்.

வரிசையில் நிற்பதென்ன தமிழர் கலாச்சாரமா?

காலாற இருந்துவிட்டு வாயார வாழ்த்திவிட்டுச் செல்லவேண்டாமா?

kowry.sathananthan@thaiveedu.com

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம்.net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

digi

# சகல சட்டத் தேவைகளுக்கும்

**Real Estate Law**

Purchase, Sale & Mortgage

**Immigration Law**

Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**

Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்

## Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2






**2010 ல் பொங்கும் மங்களம்**
**எங்கும் தங்கிட -**
**எங்கும் விளங்கிட -**
**எங்கும் முழங்கிட**
**செந்தியின் தமிழன் வழிகாட்டி !**

5ற்கும் மேற்பட்ட 24 மணிநேர தமிழ் வானொலிகள்...

3ற்கும் மேற்பட்ட தொலைக்காட்சிகள்...

7ற்கும் மேற்பட்ட வாராந்தப் பத்திரிகைகள்...

20ற்கும் மேற்பட்ட கோயில் தலங்கள்...

500ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவச் செல்வங்கள்...

இந்த வரிசையில்...

**தமிழன் வழிகாட்டி**

1996ம் ஆண்டில் 174 பக்கங்கள். 2009ஆம் ஆண்டு 1760 பக்கங்கள்.

இது புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின் அசுர வளர்ச்சி, இதன் பின்னணியில் இருப்பது அவர்தம் அயரா முயற்சி.

24 மணிநேர இலவச தொலைபேசித் தொகுப்பு மூலம் மக்களிடையே முதல் முத்திரை பதித்து, வர்த்தகக் கைநூலாக உருவாகி, வர்த்தகர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் இடையே தமிழன் வழிகாட்டி எனும் பெயரில் ஓர் நல்லூடகமாக மிளிர்ந்து, 'வர்த்தகச் சோலை' எனும் உறுதியான உறவுப் பாலத்தினைக் கட்டி, இன்று www.tamilsguide.com எனும் இணையத்தளம் கண்டு, கனடியத் தமிழரின் எழுச்சியை உலகுக்குப் பறைசாற்றி நிற்பதில் இறும்பூதெய்துகிறோம்.

**தமிழன் வழிகாட்டி**

இது புலம் பெயர் தமிழர்களின் விலாசத் தொகுப்பு மட்டுமல்ல; அன்னிய மண்ணில் வாழ்க்கையைத் தொடங்கிய தமிழர்களின் வரலாற்று ஏடும்தான்!

எமது கடந்தகால அனுபவங்கள், கனடிய புலம் பெயர் தமிழர்களின் வரலாற்றை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி மையமாக எம்மைத் தரமுயர்த்தியிருக்கிறது.

தமிழன் வழிகாட்டியின் பதினான்காம் வெளியீடு 2010இல் வெளிவரவுள்ளது. எமது கடந்த கால சாதனைகளை நாமே முறியடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய சேவையின் கட்டாயத்தையே இது எடுத்துக்காட்டுகிறது.

நாள்தோறும் வந்து குவியும் விளம்பரங்களின் எண்ணிக்கையைக் கண்டு மலைத்த நாம், புத்தகத்துக்கான வேலையை முன்கூட்டியே தொடங்க வேண்டியவர்களாகிவிட்டோம். உங்கள் விளம்பரங்கள், தகவல்கள், கருத்துக்கள் அனைத்தையும் தன்னுள் அடக்க தமிழன் வழிகாட்டி தயாராக உள்ளது. **416-615-4646** எனும் இலக்கத்தைச் சுழற்றுங்கள்; அடுத்த ஆண்டிற்கான உங்கள் வெற்றியை இன்றே உறுதி செய்யுங்கள்!

**தமிழரின் பி.பி.ஸி....**

**தமிழரின் டெலி மார்க்கெட்டிங்...**

**தமிழரின் என்சைக்ளோபீடியா...!**

**இதுதான் தமிழன் வழிகாட்டி !**

**416.615.4646**



**Athavan Publications Inc.**

771 BRIMLEY ROAD, Scarborough,
Ontario, Canada M1J1C7.
Telephone: +1 416.615.4646
Fax : +1 416.615.2414
Email : info@tamilsguide.com

# சேமமான சாரதி

## தொடர் - 5



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

சென்ற 'மாத தாய்வீடு' பத்திரிகையில் சிவப்பு விளக்குக்கூடாக செல்வதன் தீமையை கவனித்தோம். இம்முறை இன்னும் சில தவறுகளை கவனிப்போம்.

### கட்டளை: 09: கவனக்குறைவாக வாகனம் செலுத்துதல்:

அனேகமாக வாகனச்சாரதிகளுக்கு வீதிச்சட்டம் தெரிந்திருக்கும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. சரியாக சிக்னல் செய்வது, திருப்புவதற்கு தகுந்த லேனில் வாகனத்தைச் செலுத்துவதுடன் திரும்பிய பின் சரியாக லேனில் வாகனத்தை செலுத்துவது (உதாரணத்திற்கு Uவாக திரும்பாதிருப்பது, சிவப்பு விளக்கில் வலது பக்கம் திரும்பாதிருப்பது போன்றவை) மேலும் பாதையின் வலது கரையில் ஓட்டிச்சென்று இன்னொரு வாகனத்தை முந்தும் போது மட்டும் பாதையின் இடது கரைக்குச் செல்வது அன்றேல், இரு மஞ்சள் கோட்டைத் தாண்டி எதிர்ப்பக்கச் சாலையில் வாகனத்தைச் செலுத்துவது. மேலும் STOP என அறிவித்திருந்தால் முற்றாக வாகனத்தை நிறுத்துவது போன்றவற்றை குறிப்பிடலாம். இவை யாவற்றிற்கும் காரணம் நாம் அவசரப்படுவதனால் கவனக்குறைவாக இருப்பதுவே. கவனக் குறைவுக்கு முக்கிய காரணி, நாம் நமது வாழ்வின் பிரச்சினைகளில் மனதைச் செலுத்துவதே. அண்மையில் எடுத்த கணிப்புப்படி ஒரு சராசரி சாரதி ஒரு மைல் வாகனம் செலுத்துகையில் 2.5% வீதிச் சட்டங்களை மீறுவதாக கணித்துள்ளது. வீதிச் சட்டங்கள் அனைத்துமே முக்கியமானது என்பதை மறக்கலாகாது.

சாலை வீதிகள் ஒரு நல்ல காரணத்துக்காகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே அதனை அனைவரும் பின்பற்றுவது அவசியம். உதாரணத்திற்கு இன்னொருமொரு வகையான பயண சாதனத்தை கவனிப்போம். ஆகாய விமானங்கள் அவற்றின் தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் சில சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாவது உண்டு. இவை நடக்கும் வேளையில் வான்வெளி பயண கட்டுப்பாட்டு அதிகாரி (Air Traffic Controller) வேலையில் இல்லாததால் ஏற்பட்டது எனவும் குறிப்பிடுவர். உலகின் பெரும்பாலான விமான நிலையங்களில் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருப்பதில்லை என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ரொறன்ரோ, ஒட்டாவா, வான்கூவர் போன்ற நகரங்களில் உள்ள பெரும் விமான நிலையங்களில் விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருப்பர்கள் என்பதில் ஐயமில்லை. எனவே நீங்கள் பயப்படாமல் பயணம் செய்யுங்கள். ஆனால், உலகெங்கிலும் உள்ள சிறு விமானங்கள் விபத்துக்கள் இல்லாமல் இயங்குகின்றனவெனின் அது விமானக் கட்டுப்பாட்டு விதிகளைக் கற்று, அதை அவதானித்து செலுத்துவதால்தான் முடிகிறது. எதிரில் விமானம் வந்தால் எந்தப் பக்கம் திரும்ப வேண்டும், என்ன உயரத்தில் பறக்க வேண்டும் என்று எல்லாம் அவர்கள் கற்றுத் தேர்ந்து பறப்பதற்கான லைசன்ஸ் பெறுவது மட்டுமல்லாமல் கற்றபடி அவர்கள் விமானத்தைச் செலுத்துவதால் விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றது. கவலையீனத்திற்கு எது விதமான மாற்று மருந்தும் கிடையாது. பலரும் ஒரு வீதியை ஒரே நேரத்தில் பயன்படுத்துவதால் ஒவ்வொருவரும் தாம் எப்படி செல்ல வேண்டும், மற்றவர் எப்படிச் செல்வார் என்பதையும் அறிந்திருப்பதவசியம். மேலும் நீங்கள் எப்படி மற்றவர் வாகனத்தைச் செலுத்துவார் என்பதை ஊகிப்பது போல் அவரும் நீங்கள் எப்படிச் செலுத்துவீர்கள் என ஊகிக்கலாம். இந்த நிலையில் நீங்கள் கவனக் குறைவாக மாறி வாகனத்தைச் செலுத்தினால் விபத்தைத் தவிர்க்க முடியாதல்லவா?

உங்கள் மனதில் பதிய வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில், வீதிச் சட்டங்கள் உங்களுக்கு அலுப்புத் தருவதற்கல்ல. விபத்துக்களைத் தவிர்ப்பதற்கே. எனவே வீதிச் சட்டத்திட்டங்களை, சமிக்ஞைகளை சரியாகப் பாவித்து விபத்தைத் தவிருங்கள்.

### கட்டளை 10:

பொறுமையாய் இருங்கள். விபத்தில்லாமல் வாகனம் செலுத்துவது உங்கள் மனநிலையைப் பொறுத்ததே. உங்களுக்கு கற்பிப்பதெல்லாம் சரியான மனநிலையே உங்கள் எல்லோருக்கும் வீதி விதிகள் தெரிந்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. அவற்றின்படி ஒழுகுகிறீர்கள் என்பது உங்கள் மனநிலையைப் பொறுத்துத்தான் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் சில விதிகளை மறந்து விடலாம். ஆனால், தவறுக்கு முக்கிய காரணி மனநிலையே. தொடர்ந்து வாகனம் செலுத்தும் வேளையில் காலக்கிரமத்தில் பரிச்சயம் காரணமாக அவதானக் குறைவு ஏற்படுவது இயல்பு. இதைத் தவிர்ப்பது மிக முக்கியம். 1895ம் ஆண்டில் ஒகாயே நகரில் இரண்டு வாகனம் மட்டுமே இருந்தது. அதாவது மற்றைய யாவும் குதிரை அல்லது மாட்டு வண்டிகளே. இவ்வேளையில் ஒரு 'T' சந்தியில் இந்த இரு வாகனங்களும் விபத்துக்குள்ளாகியுள்ளன. இரு வாகனங்களைச் செலுத்தியவர்களும் இளைஞர்களே. வாகனத்தில் நிறைய இளம் பெண்கள். இரு சாரதிகளும் தாம் செல்லும் திசையைப் பார்க்காமல் (கட்டாயம் வாகனத்தில் உள்ளவர்களை கவனித்திருக்க வேண்டும்) விபத்தில் சிக்கியுள்ளார்கள். வாகனம் செலுத்துகையில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். அதேவேளையில் நீங்கள் எப்படி நடந்துகொண்டீர்கள் என்பதில் இருந்துதான் நீங்கள் நல்ல சாரதியா என தீர்மானிக்கப்படுகிறது.

அமைதியாக, தன்னம்பிக்கையுடன் வாகனம் செலுத்தினால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். அனுபவம்தான் சிறந்த பல்கலைக்கழகம். அனுபவத்தில் அறிந்திருப்பீர்கள் நீங்கள் மனம் குழம்பிய நிலையில் தான் குற்றப்பத்திரிகையைப் பெற்றிருப்பீர்கள். ஒருவருடைய உணர்ச்சியும் தீர்மானங்களும் மறுதலை விகிதச்சமமாயிருக்கும். அதாவது உணர்ச்சி வசப்பட்டிருக்கும் வேளையில் சிந்தனைகள், தீர்மானங்கள், தவறானதாய் இருக்கும். உங்களுக்கு கோபம், வெறுப்பு அல்லது வேறு எந்த உணர்வும் அதிகமாக இருக்குமானால், உடனே வாகனத்தை மனம் ஆறும் வரை நிறுத்திவிட்டு, வேண்டுமானால் ஒரு கோப்பியை குடித்துவிட்டு பின் வாகனத்தைச் செலுத்துங்கள். இன்னுமொரு விடயத்தை மனதில் வைத்திருப்பது அவசியம். மற்றச் சாரதி தவறு செய்யும் வேளையில், குறுக்கே வெட்டும் வேளையில் உங்கள் பொறுமையை இழந்து நீங்களும் ஏதாவது தவறாகச் செய்ய வேண்டாம். நீங்கள் எப்படி வாகனம் செலுத்துவது என்பதை கேவலம் மற்ற வாகனத்தினைச் செலுத்துபவர் தீர்மானித்துவிட வேண்டாம். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். நீங்கள் பொறுமையாய் மன அமைதியுடன் வாகனத்தைச் செலுத்துங்கள். நீங்கள் வல்லவரல்லவா? மற்றவர்கள் உங்களை செலுத்த விடலாமா? எனவே, மன அமைதியுடன் பொறுமையாக வாகனத்தைச் செலுத்துங்கள்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

நவம்பர் மாதக் குறிப்புகள்

- கார்த்திகை 1 ம் திகதி நேர மாற்றம் இடம்பெறுகிறது, அதாவது இரவு 2:00 A.M க்கு, நேரம் 1:00 A.M ஆக மாறும்.
- கார்த்திகை 11 Remembrance Day
- விடுமுறைக்கான வாழ்த்து மடல்களை வாங்குங்கள். இப்பொழுதே வாங்குவதனால் நிறைந்த தெரிவுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.
- தபால்கள் அனுப்புவதற்கான உங்கள் தபால் பட்டியலை சரிபாருங்கள்.
- விடுமுறைக்கு பின்னர் நன்றி தெரிவித்து அனுப்பும் வாழ்த்து மடல்களை தேர்ந்தெடுத்து வாங்குங்கள்.
- விடுமுறைகாலத்திற்குரிய கையேடுகளையும் சஞ்சிகைகளையும் ஒழுங்கு படுத்துங்கள்.
- விடுமுறைகாலத்தில் கேக் போன்ற பலகாரங்களைச் செய்வதற்கான பாத்திரங்களையும், உபகரணங்களையும் சுத்திகரியுங்கள்.
- வீட்டின் உட்பகுதியில் இருக்கும் தாவரங்கள் மெலிந்த கிளைகளையும் மஞ்சள் இலைகளையும் கொண்டதாக ஆரோக்கியமற்றுக் காணப்பட்டால், போதிய சூரிய ஒளியைப் பெறுமுகமாக தெற்கு அல்லது மேற்கு நோக்கிய யன்னல்களுக்கு அருகாமையில் இடம் மாற்றி வையுங்கள்.
- படுக்கையறைகளில் குளிர்காலத்திற்குரிய போர்வைகளை (Quilts & Comforters) பயன்படுத்துங்கள்.
- குளிர்காலத்திற்குரிய உடைகளை வெளியே எடுத்து ஆயத்தமாக்குங்கள்.
- வெப்பகாலத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஆடைகளை பாதுகாப்பாக சேமித்து வையுங்கள்.
- வீட்டினுள் வாயுக்கசிவு ஏற்படுமிடத்து ஒலிப்பதற்கான எச்சரிக்கை மணிகளின் (Alarms) மின்கலங்களை (Batteries) மாற்றி புதியவற்றை மீளமையுங்கள். வீட்டினுள் வாயுக்கசிவால் மணம் ஏற்பட்டால், தொலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம். எந்தவித மின் விசைகளையும் (Switches) அழுத்தாதிருங்கள். கணனியை இயக்கவோ, நெருப்பைப் பற்றவைக்கவோ, அருகாமையில் மோட்டார் வாகனங்களை இயக்கவோ வேண்டாம். வீட்டினுள் புதிய காற்று வருமுகமாக கதவுகளையும் யன்னல்களையும் திறந்து விட்டு அயலவரின் தொலைபேசியினுதவியுடன் என்பிரிட்ஜ் வாயு பரிவர்த்தனை அவசர தொலைபேசி இலக்கத்தை **1 877 420 8800** (Enbridge Gas Distribution Emergency Number) அழையுங்கள்.
- வீட்டிற்கு வெளியே வாயுக்கசிவு மணம் ஏற்பட்டால் அயலவரின் தொலைபேசி உதவியுடன் அவசர தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். கதவுகளையும் யன்னல்களையும் பூட்டி வையுங்கள். வெளியே நெருப்பு பற்றவைக்கப்பட்டி-ருந்தால் எல்லாவற்றையும் அணைத்து விடுங்கள்.
- பூக்கும் தாவரங்கள் மற்றும் காய்கறி நடப்பட்ட இடங்களை சுத்திகரியுங்கள். பின்னர் அடுத்த வசந்த காலத்திற்கேற்ற விதமாக வளமாக்கிகள் இட்டு பண்படுத்தி வையுங்கள்.
- புல்வெட்டும் கருவிகளை உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி கூர்மையாக்கி, சுத்தப்படுத்தி எண்ணெயிட்டு பாதுகாப்பாக வையுங்கள்.
- கார்த்திகை ஆரம்பத்தில் பான்ஸி (Pansies) எனப்படும் ஊதாநிற பூக்கும் தாவரங்களை நாட்டுங்கள். இவை வசந்தகாலத்தில் பூப்பதற்கு தயாராகிவிடும்.
- மேலதிகமாக வளர்ந்த கொப்புகளையும் இவை கூரையைத் தொட்டு நிற்கின்றதா என்பதையும் அவதானித்து வெட்டி விடுங்கள்.
- கூரைகள், நீர் கூரையிலிருந்து கீழே வருவதற்கான குழாய்கள், பீலிகள் போன்றவற்றில் கசிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து சீர் செய்யுங்கள்.
- வீட்டைச் சுற்றி குளவிக்கூடுகள் காணப்படுகின்றதா என அவதானித்து இதனை அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு இவற்றை அகற்றி விடுங்கள்.
- கதவுவழிகள், யன்னலோரங்கள் மற்றும் நீர் வழிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் வாய்க்கால்களில் இலைகள் அல்லது வேறு ஏதாவது கழிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து அகற்றி விடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்
CTCC
Canadian Tamils' Chamber of Commerce
www.ctcc.ca
Established in 1991, the Canadian Tamils' Chamber of Commerce is a voluntary, non-political, and not-for profit organization aimed at developing successful businesses and entrepreneurship in the Tamil community in Canada, and at promoting charitableness and volunteerism in the community.
To become a member and to learn more about the Chamber, please call,
Sam Thiru 416-321-3333
Sritharan Thurairajah 416-918-9771
Ken Kirupa 416-294-9322

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



Insurance Broker

## Guna Selliah

## 416.371.7776

Assumption Life

IA

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# சிறிலங்காவில் போர்க்கால குற்றங்கள்! கருத்தரங்கு

**- சிவலிங்கம் -**

சிறிலங்காவில் அண்மைக்காலங்களில் இடம் பெற்ற போர்க்கால குற்றங்கள்பற்றி ஆராய் வதற்கான பகிரங்க கருத்தரங்கு ஒன்று CWVHR அமைப்பினால் அவர்களது தலைமையகத்தில் ஒக்டோபர் 15, 2009இல் இடம் பெற்றது. அத்தருணத்தில் பிரதம பேச்சாளர் களாக வழக்கறிஞர் திரு.யோன் வால்ட்மன், சர்வதேச மன்னிப்புச் சபையின் சிறிலங்காவின் இணைப்பாளராகிய திரு.யோன் ஆகுயி ஆகியோர் கலந்துகொண்டனர். திரு.வால்ட்மன் மனித உரிமைகள், அகதிகள் சம்பந்தமான சட்டவல்லுனர். அவருக்கு 30 வருடங்களுக்கு மேலாக அத்துறையில் அனுபவமிருப்பதுடன், அண்மைக் காலத்தில் அமெரிக்காவிலிருந்து சிரியாவிற்கு நாடுகடத்தப்பட்டு, பாரிய சித்திர வதைக்குள்ளான மகார் அரார் அவர்களுக்காக வாதிட்டமையும் குறிப்பிடத் தக்கதாகும். (http//www.lornewaldman.ca).

திரு.யோன் ஆகுயி அவர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை விவகாரங்களில் பெரும்பங்கு வகித்ததுடன், அண்மையில் லண்டனில் நடைபெற்ற சிறிலங்கா இணைப்பாளர்கள் மகாநாட்டில் பங்குவகித்தமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய நிகழ்ச்சிகள் CWVHR தலைவர் திரு. அன்டன் பிலிப் அவர்களின் பிரதான பேச்சாளர்கள் பற்றிய அறிமுக உரையுடன் ஆரம்பித்தது.

வழக்கறிஞர் திரு.வால்ட்மன் உரையின் ஆரம்பத்தில் சிறிலங்காவில் நடக்கும் அனர்த்தங்களையும் துன்பங்களையும் விபரித்து, பின்னர் பாகுபாடில்லாத குண்டுவீச்சுக்கள், சட்டத்துக்குப் புறம்பான ஆயுதங்களைப் பிரயோகித்தல், கூட்டுக்கொலைகள், அகதிகளை முகாம்களில் சிறைவைத்து கொடுமைப்படுத்துவது போன்ற சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்குப் புறம்பான அனர்த்தங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு, அவை போர்க் குற்றங்களாகக் கணிக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.



அண்மைக் காலங்களில் மற்றைய நாடுகளில் இடம்பெற்ற போர்க்கால அனர்த்தங்களுடன் சிறிலங்காவில் இடம்பெற்ற கொடுமைகளை ஒப்புநோக்கிய அவர், மற்றவர் செய்த தவறுகள் எமக்குப் படிப்பினையாக அமைய வேண்டுமென்று குறிப்பிட்டு, தமிழ் சமூகம் எதிர்காலத்தில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். எமது முதல் செயற்பாடு கனேடிய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்தால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களை வன்மையாக கண்டிக்கச் செய்ய வேண்டும். இக்குறிக்கோளை அடைவதற்கு சகல கட்சி அரசியல்வாதிகளுடைய கவனத்தையும் ஈர்ப்பது அவசியம் எனக் குறிப்பிட்டதுடன், மனித உரிமை மீறல்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டதாகையால் அதனை எல்லா அரசியல்வாதிகளும் ஏற்கக்கூடியதாயிருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில், ஆர்ஜென்டைனாவின் இராணுவ சர்வாதிகார அரசாங்கம் நாட்டு மக்களுக்கு இழைத்த கொடுமைகளைக் குறிப்பிட்டு, அவ்வாட்சிக் காலத்தில் எப்படி 30,000க்கும் அதிகமான குடிமக்களை, அவர்களின் தடயங்களைத் தவிர்ப்பதற்காக ஆகாய விமானத்தில் கொண்டு சென்று கடலில் கொட்டினார்கள் என்பதனைச் சுட்டிக்காட்டினார். எனினும், சர்வதேச மன்னிப்புச் சபையின் அயராத உழைப்பால் மனித உரிமை மீறல்கள் வெளிக்கொண்டுவரப்பட்டு, 20 வருடங்களுக்குப் பின் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், எமக்குச் சாதகமான உறவுகளான கனடா தொழிலாளர் சம்மேளனம், மாணவர் சங்கங்கள் போன்றவற்றுடன் உறவுகளை வலுப்படுத்துவது அவசியம். அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளும் வேளையில் எல்லோரும் ஒற்றுமையுடன் ஒரே கருத்தை முன்வைப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். பாராளுமன்றக் குழுக்களில் தமிழர்கள் பங்குகொள்வதுடன் கீழே தரப்பட்ட விடயங்களில் ஒரே கருத்தை முன்வைப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்:

- போர்க்குற்ற அட்டூழியங்களைப் புரிந்த சிறிலங்கா அரசாங்கத்தை கனடிய அரசாங்கம் வன்மையாக கண்டிப்பது.
- கனடாவில் வதியும் சிறிலங்கா பிரதிநிதியை அழைத்து, சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகளை மதிப்பதன் அவசியத்தை வலியுறுத்துவது.
- குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது.
- உதவிகள் வழங்கும்பொது சிறிலங்கா மனித உரிமைகளை மதிக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடிய அரசியல் அழுத்தத்தைக் கொடுப்பது.

மேலும், தமிழ் சமூகமும் சட்டரீதியான வழி வகைகளில் கவனம் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். உதாரணத்திற்கு,

- கனடா, சிறிலங்காவிற்கு உதவி கொடுப்பதை நிறுத்துவதற்கு வெளிநாட்டு உதவி வழங்குவதற்கான நிபந்தனைச் சட்டத்தை (Foreign aid accountability act) சுட்டிக்காட்டி, அந்த நாடு மனித உரிமை மீறல் செய்வதைக் குறிப்பிடலாம்.
- மனிதஉரிமை மீறினவர்கள் கனடாவிற்கு அல்லது மற்றைய மேற்கு நாடுகளுக்கு பயணிக்கும் வேளைகளிலும், புலம்பெயரும் வேளைகளிலும் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.
- பாராளுமன்ற குழுக்கள்மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

நடைபெற்ற அட்டூழியங்களை ஆவணப்படுத்துவதன் அவசியத்தையும், மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதன்மூலம் சர்வதேச சட்டங்களுக்கமைய வழக்கு பதிவுசெய்ய முடியும் என்பதையும், நேர்காணல்கள், திட்டவட்டமான நெறிப்படுத்தல்கள் முறையில் நடத்தவேண்டியதன் அவசியத்தையும், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றின் அனுசரணை பெறுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

இப்படியான மனித உரிமை மீறுவதை மேற்குலக நாடுகளில் மட்டும் ஆவணப்படுத்தினால் போதாது. முக்கியமாக பெருந்தொகையான அகதிகள் வதியும் இந்தியாவிலும் தகவல்கள் சேமிக்கப்பட வேண்டும். இத்தகைய தகவல் சேமிப்பது என்பது ஒரு நீண்டகால திட்டமென்பதை மறக்கலாகாது, இத்தகைய தகவல் சேமிப்பானது திட்டவட்டமான பயனைத் தரும் எனவும் தெரிவித்தார்.

அடுத்து, சர்வதேச மன்னிப்புச்சபையின் சிறிலங்காவின் இணைப்பாளராகிய திரு.யோன் ஆகியூ பேசுகையில், லண்டன் சம்மேளனத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அனைத்து இணைப்பாளர்கள் மத்தியிலும் சிறிலங்காவில் நடக்கும் அனர்த்தங்களால் சலிப்பும் கவலையும் அடைந்துள்ளதாகத் தெரிவித்ததுடன், தமிழர்கள் அனுபவித்த சில வன்முறைகள் கூடிய சீக்கிரத்தில் வேறு வடிவில் சிறிலங்கா அரசால் சிங்களவர்கள்மீதும் கட்டவிழ்த்து விடப்படலாமெனத் தெரிவித்தார். தான் லண்டன் மகாநாட்டில் CWVHR செய்துவரும் வன்முறைத் தகவல் சேமிப்பு பற்றி தெரிவித்ததாயும், அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் CWVHRஇன் செயற்பாட்டிற்குத் தாம் பெரிதும் அனுசரணையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் சர்வதேச மன்னிப்புச் சபையின் முகாம்களை களையவேண்டும் என்ற இயக்கத்திற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டுமெனத் தெரிவித்தார். வாக்குறுதி கொடுக்கப்பட்ட நாள் நெருங்க நெருங்க கூடிய அழுத்தம் தர வேண்டியதன் முக்கியத்துவத்தை தெரிவித்ததுடன் நவம்பர் 21,2009 தினம் தமிழர் உரிமைக்கான கற்றவர்கள் எடுக்கும் கருத்தரங்கில் பங்குகொள்ள வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து CWVHR அங்கத்தவர் திரு.கேசவன் அவர்கள் அமைப்பின் செயற்பாடுகளை ஒரு கணனித் திரைமூலம் விளக்கினார். செல்வி சிவாஜினியின் நன்றியுரையுடன் கருத்தரங்கு முடிவுபெற்றது.

CWVHR தொடர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளதாகவும், அவற்றில் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் பங்கெடுத்து பயனடையுமாறும் வேண்டிக் கொண்டார்கள். "ஆறின கஞ்சி பழங்கஞ்சி" என்பதை மறந்துவிடாது இத்தகைய விழிப்புடன் செயற்படும் இவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

sivalingam@thaiveedu.com

■ ■ ■



# HIGHRISE CONDOS / TOWNHOMES
AT METROGATE

TRIDEL®
BUILT FOR LIFE

## HWY 401 / KENNEDY - TORONTO, CANADA




## OPEN HOUSE

on Saturday **November 14**, 2009

from 11am to 5pm

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

1711 McCowan Road, Unit 206, Toronto, ON, M1S 2Y3

**For Your Early Booking or Information Please Call**

**416.321.6969**

*Independently owned and operated.


2009 FINAL DRIVE
SALES EVENT
Why buy a Honda?
• HIGH RESALE VALUE • LOW COST OF OWNERSHIP • AFFORDABLE
• RELIABLE • FUEL EFFICIENT • ADVANCED SAFETY • FUN TO DRIVE!
Why buy a Honda right now?
UNTIL NOVEMBER 2nd TAKE ADVANTAGE OF
ONE-TIME-ONLY HONDA GREAT NEW DEAL SAVINGS!
SAVE UP TO
$3,500¥
on select models
Civic EX-L Coupe
model FG1109JN
Accord EX Sedan
model CP2579J
Civic EX-L Sedan
model FA1509JNX
FINAL DRIVE SAVINGS
'09 Civic Coupe
MSRP for Civic DX Coupe $17,190
SAVE
$3,000¥
NOW $14,190
'09 Civic Sedan
MSRP for Civic DX Sedan $16,990
SAVE
$2,500¥
NOW $14,490
'09 Accord Sedan
MSRP for Accord LX Sedan $25,290
SAVE
$3,000¥
NOW $22,290
HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
HONDA

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

**Sun Life Financial**

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# கடந்த மாதத்தில்...



பிளமிங்டன் தமிழ்க்கல்வி நிலையம் நடாத்திய வாணிவிழாவில்(ஒக்ரோபர்-18-09)





மார்க்கம் தமிழ் முதியோரின் 7வது வருட ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் (ஒக்ரோபர்-24-09)





சர்வதேச மன்னிப்புச் சபையின் சிறிலங்காவின் இணைப்பாளருள்ஒருவராகிய திரு.யோன் ஆகுயி, வழக்கறிஞர் திரு.யோன் வால்ட்மன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'போரினால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்' (CWVHR) ஏற்பாடுசெய்திருந்த ''சிறிலங்காவில் போர்க்கால குற்றங்கள்'' கருத்தரங்கு நிகழ்வில். (ஒக்ரோபர்-15-09)



360 University Avenue முன்பாக 175வது நாள் தொடர் கவனயீர்ப்பின் 'விழி தூங்கோம்' நிகழ்வில் (ஒக்ரோபர்-17-09)



தமிழீழம் வெற்றிக்கிண்ண துடுப்பாட்டப் போட்டியில் (ஒக்ரோபர்-11-09)



ஸ்ரீமதி நிரா சந்துரு அவர்களின் கனடா கலைமன்றத்தின் நிருத்த நிறைஞர் பட்டமளிப்பு விழாவில் (ஒக்ரோபர்-03-09)



தமிழ் இலக்கியத்தோட்டத்தின் ஆதரவில் எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களின் ''ஒலிப்புத்தகம்'' வெளியீட்டு விழாவில். (ஒக்ரோபர் - 03 - 09)





கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன் ''கரையைத்தேடும் கட்டுமரங்கள்'' நூல் வெளியீட்டுவிழாவில் (ஒக்ரோபர் - 03 - 09)

இப் பகுதியில் உங்கள் விழாக்களின் படங்களும் இடம்பெறவேண்டுமாயின் விழா யாரால், எங்கு, எப்போது நடைபெற்றது என்னும் விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net**

# குறுகியகால முடிவுகளும் அதன் விளைவுகளும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

உதாரணமாக ஒருவர் படிப்பை முடித்துவிட்டு அமெரிக்காவில் இருந்து கனடா வந்து வாழ்வதற்குத் தீர்மானித்துவிட்டதாக எடுத்துக்கொள்வோம். அவர் கனடாவில் எவ்வளவு காலம் தங்க உள்ளார் என முடிவு செய்யாவிடிலும், அவரைப் பொறுத்தவரை ஒருவருடம் என்றாலும் கனடாவில் இருத்தல் வேண்டும் எனத் தீர்மானித்தார். அதனால் தனது வாழ்க்கையை இலகுவாக்குவதற்கு மோட்டார் வண்டி (Car) ஒன்று தேவை என உணர்ந்தார். ஆனால் ஒரு மோட்டார் வண்டி தேவை என யோசிக்கும் போது பலவகையான முறைகளில் அதைத் தேடிக்கொள்ளலாம். அதாவது புதிய வண்டி வாங்குவது, பழைய வண்டி வாங்குவது, இல்லாவிடில் ஒரு வண்டியை குத்தகைக்கு (Lease) எடுப்பதாகும். ஆனால், இவர் மூன்று வருடத்திற்கு ஒரு புதிய வண்டியை மாதாந்தக் கட்டணமாக 400 டொலர்களுக்குக் குத்தகைக்கு எடுக்கத் தீர்மானித்து விட்டார்.

அதன் பின்பு இரண்டு வருடங்களுக்குப் பின்பு அவர் தொடர்ந்தும் கனடாவில் இருக்கலாம் என முடிவு செய்த போது, அவர் ஒரு பழைய வண்டி ஒன்றை மாதாந்தக் கட்டணமாக $150 டொலர்களுக்கு வாங்க முடியும் என உணர்ந்தார். இருந்தாலும் அவர் குத்தகைக்கு வண்டி ஒன்றை ஏற்கனவே $9,600ஐக் கடந்த இரண்டு வருடங்களாகச் செலுத்தியது மட்டும் இல்லாது தற்போது எவ்வாறு அந்த குத்தகையை ரத்து செய்வது எனப் பிரச்சினைப்பட வேண்டி உள்ளது.

ஆகவே, இவர் இரண்டு வருடத்திற்கு முன்பு என்ன செய்திருக்கலாம் என்பது தான் தற்போதைய பிரச்சினை. புதிய வட்டியை வாங்குவதை ஒரு வாக்குவாதமாக எடுக்காமல் விடலாம். காரணம் புதிய மோட்டார் வண்டியின் பெறுமதி, மோட்டார் வண்டி விற்கும் இடத்தை விட்டு வெளியே எடுத்ததும் அதனது பெறுமதி உடனடியாகக் குறைந்துவிடும். புதிய வண்டியைக் குறைந்தது ஆறு வருடங்கள் என்றாலும் பாவித்தால் மட்டுமே அதனது பெறுமதியை அனுபவிக்க முடியும். ஆனால், பாவித்த வண்டியை குத்தகைக்கு எடுப்பதன் மூலம் அதனது மாதாந்தச் செலவும் புதிய வண்டியின் குத்தகைக்கு வரலாம். ஆகவே பழைய வண்டியை குத்தகைக்கு செய்வதன் நோக்கத்தைக் கைவிடலாம். ஆகவே இவருக்குப் புதிய குத்தகைக்கு எடுப்பதையோ அல்லது பழைய வண்டி ஒன்றை 10,000 டொலர்களுக்குத் தெரிவு செய்வது அதனது மாதாந்தக் கட்டணமாக நூற்றி ஐம்பது டொலர்கள் என எடுத்துக்கொண்டால்

புதிய வண்டி குத்தகைக்கான மாதாந்தச் செலவு $ 400.00
பழைய வண்டி வாங்குவதற்கான மாதாந்தச் செலவு $150.00
இரண்டு வருடங்களில் புதிய வண்டியின் குத்தகைச் செலவு 400X24 =9,600
ஆனால் இரண்டு வருடங்களில் பழைய வண்டியின் செலவு $3,600 அதேநேரத்தில் 10,000 டொலர்களுக்கு வண்டி கிடைக்காத நிலையில் இவர் 15,000 டொலர்களுக்கு வண்டி ஒன்றை வாங்கினார் என எடுத்துக்கொண்டாலும், அவர் இரண்டு வருடத்தின் பின்பு 7,500 டொலர்களுக்கு விற்க முடிந்ததாக இருந்தால் (அதாவது 50% தள்ளுபடி – ஆனால், கூடுதலாக 30% + 40% தான் குறைவது வழக்கம்) பாவிக்கப்பட்ட வண்டியின் செலவு $2100 டொலர்கள், புதிய குத்தகைக்கு வண்டி எடுப்பதை விடச் செலவு குறைவாக இருந்திருக்கும். ஆனால், மேலே குறிப்பிட்ட நண்பர், தனது தேர்வைச் சரியாக ஆராயாமல் செய்ததால் அவர் கூடிய பணத்தை இழக்க நேர்ந்தது.

ஆகவே நாம் மோட்டார் வண்டியையோ அல்லது வீட்டையோ தெரிவு செய்யும் போது எமக்கு எப்படியான வண்டி அல்லது வீடு அவசியம் எனப்பார்க்க வேண்டுமே தவிர எமக்கு என்ன விருப்பம் என்று தீர்மானிக்கக் கூடாது. நாம் சரியாக முடிவு எடுக்காத நிலையில் எமக்குச் செலவு அதிகரிப்பது மட்டும் அல்லாது எமது எதிர்காலத்திற்கு தேவையான பணத்தைச் சேகரிக்க முடியாத நிலை ஏற்படலாம்.

அத்துடன் மக்களில் சிலர் விலைகூடிய மோட்டார் வண்டிகளை வாங்குவதோ அல்லது மேற்கூறியபடி குத்தகைக்கு எடுப்பதோ வழக்கமாகும். சில தொழில்களில் இருப்பவர்கள் தங்களது தொழிலிற்குத் தேவையான நிலையில் விலை கூடிய வண்டியைக் குத்தகைக்கு எடுப்பார்கள். அதேநேரத்தில் அவர்கள் revenue canadaவினால் கொடுக்கப்படும் சலுகையை உபயோகிப்பதன் மூலம் அவர்களின் மாதாந்தச் செலவு குறைவதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு. அதைத் தவிர்ந்தவர்கள் விலைகூடிய புதிய வண்டியை வாங்குவதாலோ அல்லது குத்தகைக்கு எடுப்பதாலோ தங்களது சொந்தப் பணத்தை பெருமளவில் வீண் செலவாக்குவதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆகவே revenue Canadaவில் சலுகை கிடைக்க முடியாதவர்கள் இரண்டோ அல்லது மூன்று வருட பழைய விலை கூடிய வண்டியை வாங்குவதன் மூலம் பெரியளவில் பணத்தைச் சேமிப்பதோடு விலை கூடிய வண்டியை ஓடுகின்ற சந்தர்ப்பத்தையும் உருவாக்க முடியும்.

ஆகவே அடுத்த மோட்டார் வண்டி வாங்கும் போது பலவகையான வழிகளையும் ஆராந்த பின்பு வாங்குவது நன்று.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

COMPUTERIZED ACCOUNTING



EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
AND START A NEW CAREER
PROGRAM START DATE : SEPT.28,2009
SUBJECTS:
MS OFFICE
ACCOUNTING PRINCIPLES
FINANCIAL ACCOUNTING
QUICK BOOKS
SIMPLY ACCOUNTING
ACCPAC
100% INSTRUCTOR LED
HANDS ON TRAINING
HIGH EMPLOYMENT RATE
EI Recipients Welcome
ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
416-291-5155
TORONTO BUSINESS COLLEGE
4465 SHEPPARD AVE EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
E-Mail t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers
Men's clothing store
For sale
22yrs in Business
---
Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.
Inprobus Realty Corporation
Call : Alan 647-504-2536

# பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை

### பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை ஏன் அவசியம்?

உண்மையில் இது மிகவும் இளம் வயதிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டியதாகும். மரியாதையாக நடந்து மரியாதையாக பேசுவதற்கு பழக்கப்படாத பிள்ளைகள் தமது பெற்றோருடனும் மற்றையவர்களுடனும் பழகுவதில் பிரச்சனைகளை பிற்காலத்தில் எதிர்நோக்கு கிறார்கள்.

பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் பெற்றோரை விளையாட்டாக அடித்தாலும் அதை பெற்றோர் செல்லமாக ஏற்றுக் கொள்கிறார்கள். தவமிருந்து பெற்ற பிள்ளை என்றும் எனது ஒரே ஆண்பிள்ளை அல்லது ஒரே பெண் பிள்ளை என்றும் கூறி அவர்களது நடத்தைகளை கண்டிப்பதில்லை. ஆனால் இத்தகைய நடத்தைகள் வயது கூடிக் கொண்டு போகும் போது கண்டிக்கவே முடியாத அளவிற்கு விபரீதமாகி விடுகின்றது. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது முதுமொழி.

பிள்ளைகளுடன் அன்பாக இருக்க வேண்டியது அவசியமே. அத்துடன் கண்டிப்பாக இருக்க வேண்டியதும் சம அளவில் அவசியமானதேயாகும். பெற்றோரின் அல்லகில், தாம் மிக முக்கியமானவர் என்பதை அவர்கள் அறிய வேண்டியது அவசியமே. ஆனால் பெற்றோருக்கு மரியாதை கொடுக்கவும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

சில பிள்ளைகளை பெற்றோர் அன்பாக அழைத்தாலும் காது கொடுத்துக் கேட்காது அலட்சியம் செய்கிறார்கள். சிறிய வேலைகளைச் செய்யும் படி கேட்டாலும் அவற்றைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் தாம் இல்லை என்பது போல் அவர்கள் பதிலளிக்கிறார்கள்.

சிறு வயதில் பெற்றோருக்கு மரியாதை கொடுக்காது அலட்சியம் செய்யும் பிள்ளைகள் வளர்ந்து வரும் போது 'அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்' என்று கூற மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்'?. நாம் வாழும் நாட்டில் பிள்ளைகள் 18 வயதிற்கு பின்னர் பெற்றோருடன் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதுவும், வயது முதிர்ந்தோருக்கு 'முதிர் வயது பராமரிப்பு இல்லங்கள்' இருக்கிறது என்பதுவும் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைக் கொடுக்காது.

பிள்ளைகள் வீட்டில் மட்டுமன்றி, நாட்டின் நாளைய பிரஜைகளாக வாழ வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் வீட்டில் பழகும் பழக்கங்கள் தான் வெளியிலும் அவர்களுக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தரும்.

பிள்ளைகளை, சிறிய வேலைகளை உங்களுக்காக செய்வதற்கு பழக்கப்படுத்துங்கள். ஒரு கோப்பை தண்ணீர் கொண்டு வந்து தரும்படி அல்லது தொலைபேசி மணி அடித்தால் அதனை எடுத்துத் தரும்படி சிறிய வேலைகளைச் செய்வதற்கு தூண்டுங்கள். அவர்கள் அவ்வாறு செய்யும் போது அதனை பாராட்டுங்கள். இந்த அவசர யுகத்தில் பெற்றோர் காரியங்கள் விரைவாக முடிய வேண்டு மென்பதற்காக தாமே பிள்ளைகளது வேலைகள் எல்லாவற்றையும் செய்து விடுவதால், பெற்றோருக்கு வேலைகள் செய்து உதவ வேண்டும் என்ற எண்ணமோ அல்லது பெற்றோர் எவ்வாறு ஒவ்வொரு கடமையையும் செய்வதற்கு கஷ்டப்படுகிறார்கள் என்பதோ பிள்ளைகளுக்குத் தெரிய நியாயமில்லை.

பிள்ளைகள் உங்களுடன் முரண்படாதிருக்குமாறு அவர்களைப் பழக்குங்கள். பிள்ளை தனக்கு விருப்பமில்லாத காரியத்தையும் எவ்வாறு எடுத்துக் கூறுவது என்று பழக்குங்கள். நீங்கள் வேலை முடிந்து வீட்டிற்கு வரும் போது தாம் செய்கிற வேலைகளை விட்டு விட்டு உங்களை அன்பாக வரவேற்பதற்கும் கடைகளுக்கு சென்று விட்டு பொருட்களுடன் வரும்போது அப்பொருட்களை வாங்கி உங்கள் பாரத்தைக் குறைப்பதற்கும் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

எல்லாவற்றுள்ளும் மிக முக்கியமானது பெற்றோர், ஒருவரை ஒருவர் மதிப்பதை பிள்ளை பார்க்கக் கூடியதாக இருப்பதாகும். பெற்றோர் ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து, பிள்ளைகளுக்கு முன்பாக விவாதம் செய்யாதிருக்கும் போது பிள்ளைகளும் அதே மாதிரியான மதிப்பைக் கொடுப்பார்கள். உங்கள் கோபங்களையும் அபிப்பிராய வேறுபாடுகளையும் கூடியவரை அந்தரங்கமாக வைத்திருங்கள். அத்துடன் பிள்ளைகள் பெற்றோர் இருவருக்கும் மதிப்புக் கொடுக்க விரும்புவார்கள் என்பதையும், அவ்வாறு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் இன்னுமொரு முக்கியமான விடயம் நாம் எவ்வாறு எமது பெற்றோரையும், எமது சம்பந்திகளையும் நடத்துகின்றோம் என்பது.

அநேகமான சந்தர்ப்பங்களில் நாம், எமது பெற்றோர், எமது பிள்ளைகளை பராமரித்து (Baby sit) எமது வேலைகளை இலகுவாக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதைகளை கொடுக்கிறோமா? அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் பொருட்களை கொடுக்கிறோமா? அல்லது அவர்கள் தமக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கிறோமா? அவர்களை காரில் அழைத்துச் செல்வதற்குக் கூட சாட்டுக்களைக் கூறுகிறோமா? அவர்கள் வீட்டில் பிள்ளைகளைப் பராமரிக்குமாறு விட்டுவிட்டு நாம் ஊர் சுற்றுகிறோமா? உங்கள் பிள்ளைகளும் உங்களை அவ்வாறே நடத்துவார்கள் என்பதை எதிர்பார்த்திருங்கள்!

உங்கள் பிள்ளைகள் இன்னுமோர் அறையிலிருந்து உங்களை சத்தமிட்டு அழைப்பதற்கு அனுமதிக்க வேண்டாம். வளர்ந்த பிள்ளைகளாயிருந்தால், உங்களைத் தேவையாக இருந்தால் உங்களிடம் வந்து கதைப்பதற்கு பழக்குங்கள். அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிவதற்கு அவர்களுக்குப் பின்னால் ஓடாதிருங்கள். பலதடவை அவர்களுக்கு சொல்லியும் அவர்கள் கேளாதிருந்தால் அவர்களுக்குப் பதிலளியாதிருங்கள். அவர்களுக்கு கட்டாயமாக ஒன்று தேவையாக இருந்தால் அவர்கள் உங்களிடம் வருவார்கள்.

### வாதம் செய்வதற்கு அனுமதியாதிருங்கள்.

பிள்ளைகள் உங்களுடன் வாதம் செய்வதற்கு அனுமதியாதிருங்கள். உதாரணமாக:

**தாய்:** தயவுசெய்து உடுப்புக்களை சலவை இயந்திரத்திலிருந்து எடுத்து காயப்போடு மகனே.

**மகன்:** அக்கா செய்தால் என்ன? எப்போ பார்த்தாலும் என்னைத் தான் கேட்கிறீர்கள்.

**தாய்:** நான் எப்போதும் உங்களைக் கேட்பதில்லை. அக்காவும் எவ்வளவோ வேலைகள் செய்கிறா தான்.

**மகன்:** அது என்னுடைய உடுப்பில்லை. என்னால் முடியாது.

> **"உங்களது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்களை மரியாதையாக தெரிவிப்பதற்கு பிள்ளைகளை அனுமதியுங்கள். அவர்கள் நம்புவதை நல்லமுறையில் தெரிவிப்பதற்கு அவர்களைப் பழக்குங்கள். 'அதிகம் தெரிந்தவன்/ள் போல் கதைக்காதே' என்று கூறி அவர்களை சிறுமைப்படுத்தாதீர்கள்."**

இந்த வாதம் நல்லதல்ல. அதற்குப் பதிலாக மிகவும் சுருக்கமாக கதைத்து வாதாட்டம் இல்லாமல், மற்றவர்களைப்பற்றி அதிகம் கதைக்க விடாமல், பிள்ளைகள் வேலை செய்ய வேண்டும் என்பதை உணரவைக்க வேண்டும்.

பெருமாபாலான தாய் தந்தையர் மற்றவர்களைப் பற்றி பிள்ளைகளுக்கு முன்பாக வம்பு (Gossip) பேசி தங்களைத் தாங்களே குறைத்துக் கொள்கிறார்கள். பிள்ளைகளும், உங்களைப் பின்பற்றி அவ்வாறே மற்றவர்களைப்பற்றி தேவையில்லாத கதைகளைக் கதைக்கப் பழகுவார்கள். இது எதிர்காலத்தில் அவர்களுக்கு கெட்டபெயரை ஏற்படுத்திவிடும்.

### பிள்ளைகளிடமிருந்து மதிப்பை எதிர்பார்க்கும் அதே வேளை தேவையான நேரத்தில் பிள்ளைகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

பிள்ளைகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் போது காது கொடுத்துக் கேளுங்கள். இடையில் குறுக்கிட்டு உங்கள் கருத்துக்களைத் திணிக்காதீர்கள்.

பிள்ளைகளை நம்புங்கள். எதற்கெடுத்தாலும் பிள்ளை மீது சந்தேகப்பட்டு குற்றம் கூறாதீர்கள். அவ்வாறு செய்வீர்களாயின் பிள்ளை உங்களுக்கு மரியாதை கொடுக்காது பொய் சொல்வதற்கு நீங்களே தூண்டியவர்களாவீர்கள்.

தவறுகள் விடுவதற்கு பிள்ளையை அனுமதியுங்கள். தவறுகளே கற்பதற்கான கருவிகளாகும். இவை வாழ்நாள் முழுவதற்குமான அனுபவத்தைக் கொடுப்பதுடன் ஆபத்தைக் கண்டு பயப்படவோ, தோல்வியைக் கண்டு துவளவோ விடாது தைரியத்தைக் கொடுப்பனவாகும். தாங்களே தமக்குத் தேவையான ஒவ்வொன்றையும் தெரிவு செய்வதற்கு



**ஜீவா திசைராஜா**

அனுமதிப்பதன் மூலம் அவர்களது சுயமரியாதையை வளர்ப்பதற்கு நீங்கள் உதவுகிறீர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

உங்களது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்களை மரியாதையாக தெரிவிப்பதற்கு பிள்ளைகளை அனுமதியுங்கள். அவர்கள் நம்புவதை நல்லமுறையில் தெரிவிப்பதற்கு அவர்களைப் பழக்குங்கள். 'நீ இப்போது படிப்பது நான் அந்தக் காலத்தில் படித்ததை விட மேலானதல்ல. அதிகம் தெரிந்தவன் போல கதைக்காதே' என்று கூறி அவர்களை சிறுமைப்படுத்தாதீர்கள்.

### பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையிலான பரஸபர மதிப்பை வளர்ப்பதன் நன்மைகள்.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையிலான பரஸ்பர மதிப்பு ஓர் நெருக்கமான உணர்வுபூர்வமான உறவுக்கு வழிவகுக்கும்.

பரஸ்பர மதிப்பை ஊக்குவித்தலானது தொடர்பாடல் திறன்களை (Communication skills) விரிவுபடுத்த உதவும்.

பரஸ்பர மதிப்பை கற்றுக் கொடுப்பதன் மூலம் தம்மையும் பிறரையும் மதிக்க பிள்ளைகள் கற்றுக் கொள்வார்கள்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இருக்கும் மரியாதையானது, பிள்ளை தான் பெறுமதி மிக்கவள்/ன் என உணர்வதற்கு உதவுவதுடன் கஷ்டங்களை மேற்கொள்ளவும் சுயமரியாதை மற்றும் பாதுகாப்பாக உணர்வதற்கும் பிள்ளைக்கு உதவும்.

பரஸ்பர மரியாதை பரஸ்பர நம்பிக்கைக்கு வழிவகுக்கும்.

பரஸ்பர மரியாதை உள்ள ஒரு சூழலில் வளரும் பிள்ளை பிறரைச் சாராது வாழவும் பொறுப்போடு வாழவும் ஊக்குவிக்கப்படும்.

பிள்ளைகளின் உடலியல் மற்றும் உணர்வு ரீதியான நல்வாழ்விற்கு பொறுப்பாக இருக்கும் பெற்றோரே, சமுதாயத்தின் சிறந்த அங்கத்தவர்களாக பிள்ளைகளை உருவாக்குவதற்கு கடமைப்பட்டவர்களாவர். தமது அதிகாரத்தை வலுக்கட்டாயமாக திணிக்க முற்படும்போது பிள்ளைகட்கும் பெற்றோருக்குமிடையே முறுகல் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும். ஆனால் எமக்கும், பிள்ளைக்கும், மற்றவர்களும் மரியாதையை நாம் கொடுப்பதை செயல் முறையாக நாம் எடுத்துக்காட்டுவதன் மூலம் பிள்ளைகளும் அவ்வாறே செய்வதற்கு நாம் கற்பிக்க முடியும்.

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி

ஒரு கண்ணோட்டம்!

## மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதியின் உத்தரவாதமான சலுகை

1. உன்னதமான சேமிப்புடன் கூடிய காப்புறுதி
2. உங்கள் பாதுகாப்பு உடனடியாக உறுதிப்படுத்தப்படும்
3. ஒவ்வொரு வருடமும் காப்புறுதித் தொகை 3%ல் அதிகரிக்கும். ஆனால் மாதாந்தக் கட்டுப்பணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.
4. விபத்தினால் இழப்பு ஏற்படின் காப்புறுதித் தொகை இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு.
5. கொடிய நோய் *(Terminal Illness)* ஏற்படின் 50% மான காப்புறுதித் தொகை வாழும் போதே பெற்றுக் கொள்ள முடியும்.

**இக் காப்புறுதியை வயது 40 முதல் 85 வரை பெற்றுக் கொள்ளலாம்.**

**பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள அழையுங்கள்**



• Life, Critical, Disability, Mortgage Insurance

**Tel: 416•315•8100**

ROYAL BROKERS
Corporation

**Siva Kandiah**
*Managing General Agent,*
*RBC, IA, DFS, Assumption Life*

RBC Insurance · Canada Life

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4 Tel: 416•298•4722 Fax: 416•298•4664

**New Agents Welcome. Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)**

# CTR தகவல் பலகை

### ROOMS / BASEMENT RENT

**MORNINGSIDE & SHEPPARD**
Lingam: 905-472-6706 – 905-471-3058

**TAPSCOTT & CROW TRAIL**
1 B/R for rent
Balakrishnan: 416-609-9588

**MARKHAM & SHEPPARD**
Store for rent
Prema: 416-291-8050 – 647-830-2773

**MC COWAN & 14th**
Raj: 647-302-6930

**MORNINGSIDE & WELLS**
Siva: 416-258-8416

**BIRCHMOUNT & STEEL**
1 B/R Basement
Antony: 905-946-1744

### HOUSE FOR SALE

**JAFFNA**
sale for house
Raji: 416-909-9160

**YARL SUNDUKULIYIL**
2house to sell
Mrs. Bala: 416-283-1786

**WARDEN & LAWRENCE**
house for sale
Kanthan: 905-686-5472 – 647-295-5716

**MARKHAM & STEELS**
House for sale
Siva: 647-348-2542

**NEILSON & MC LEVIN**
Rooms for sale
Uma: 647-330-2855

### AUTO FOR SALE

**91 Toyota Corolla**
**95 Honda Civic**
MARKHAM & LAWRENCE
Suntharam: 647-219-4558

**2000 HONDA CIVIC**
Mary: 416-917-8336
647-884-8494

**99 TOYOTA COROLLA**
Selva: 647-998-2870

**2007 TOYOTA JARVIS**
Haran: 416-451-5211

**94 HONDA CIVIC**
Ratha: 647-338-7316

**2000 NISSAN ALTIMA**
Yoga: 416-451-6895

**7 PASS VAN**
Small Washing Machine Wanted
Kumar: 647-287-0731

**ACURA INTEGRA 1990**
For sale passed Emmons Test
Kanthan: 416-514-1661

**96 TOYOTA CAMERY**
Thiru: 416-320 5048

### OTHERS

**DINING TABLE & CHAIR**
For sale
Francisco: 416-289-1951

**MARKHAM & LAWRENCE**
Sony TV 62″
Suntharam: 647-219-4558

**FRIDEGE**
Yogaraja: 416 -451-6895

**MUSIC CLASSES**
Santhiran: 905-501-8198 416-659-8198

**TWIN STOOLLER**
Suresh:416-294-9764

**NEED JOB**
hair cutting
Joha: 647-241-3289

**MOVING SALE**
Anathan: 905-239-5201

**MUSIC AND YOGA CLASSES**
Pushpa: 647-278-8445

**PAINTING**
Varan: 416-994-9612

**PAINTING**
house / store
Sabesh: 647 887 8349

**TUTION**
gr 8 – gr 12
Yohankumar: 416 779 9460, 416 291 9460

**DUCT CLEANING**
electronic product for sale
siva: 416-897-8844

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**TRANSLATOR & TUITION**
Sabarimuthu: 416-520-6920
416-282-0951

BASMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD AVE**
Bedrooms: 2, Washroom: 1
Living Room & Sep. Laundry With an Eat-In Kitchen,
Close To Ttc & Schools. Mins.
To Hwy. 401, Mall, Hospital & Rec. Centre
5 appliances. One parking space.
**647.504.5474**
**416.893.2683**

**OFFICE PLACE FOR RENT**
**MARKHAM & EGLINTON**
Good location
பாலேஸ்
416 801 3219

# துயர் பகிர்வோம்



## திருமதி ஞானப்பூ இராமநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - நெடுந்தீவு, கொழும்புத்துறை)

நெடுந்தீவை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொழும்புத் துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பூ இராமநாதன் அவர்கள் 23.09.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து – சேதுப்பிள்ளை தம்ப திகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா (பொலிஸ் சார்ஜன்ட்) நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ் சென்ற இராமநாதன் (அதிபர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பு நாயகம் (அதிபர்), காலஞ்சென்ற செபரட்ணம் (தபால் திணைக்களம்), வித்துவான் அடைக்கல முத்து (இளைப்பாறிய அதிபர் - லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மயில்வாகனம் (கிராமசபை உறுப்பினர்) அவர்களின் மைத்துனியும், புஸ்பவதி முன்னாள் அதிபர்), சீவரட்ணம் (முன்னாள் தபாலதிபர், கனடா), பாக்கிய லீலா (விரிவுரையாளர், அவுஸ்திரேலியா), அமரர் ஜெயசிங்கம் (சட்டத்தரணி), ஜெயராசா (முன்னாள் ஆசிரியர், அவுஸ்தி-ரேலியா), அமரர் ஜெயபாலன் (நிர்வாக அதிகாரி), மற்றும் ஜெயசீலன் (முன்னாள் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்), அமரர் பத்மராணி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் அன்ரனி (கல்வி ஆசிரிய ஆலோசகர்) அரியமலர், செரூபிம் (பரிஸ்டர், சட்டத்தரணி), இராஜேஸ்வரி, நிர்மலா (ஆசிரியை) இரத்தினேஸ்வரி (பிரதேச செயலகம், உடுவில்), சர்வதாரணி, குணாளன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இறுதி வணக்க நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

சீவரத்தினம்- 905 495 5416, ஜெயசீலன்- 905 472 1394,
செருபீம்- 613 945 97357, ஜெயராசா- 613 945 83723.



## திருமதி நாகம்மா சுப்பிரமணியம்


(குப்பிழான்)

குப்பிழானை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு (முடமாவடி) பகுதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நாகம்மா சுப்பிரமணியம் அவர்கள் 06-10-2009 அன்று திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் சபாபதிபிள்ளை – சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மாலினிதேவி (கனடா), பாஸ்கரன் (கனடா), மஞ்சுளா (கனடா), சுகந்தினி (விரிவுரையாளர் - தே.க.கல்லூரி - கோப்பாய்), சுபாசினி (இலங்கை) ஆகியோாரின் அன்பு தாயாரும், கோபிநாத், தவசெல்வம், சிவகரன், சுகிர்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இறுதி வணக்க நிகழ்வு 7.10.2009இல் திருநெல்வேலியில் நடைபெற்றது.

திருமதி மாலினிதேவி கோபிநாத் 647 430 5658.



## ஞானப்பிரகாசம் ஞானமலர்

(நெடுந்தீவு, கிளிநொச்சி, நல்லூர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, மற்றும் மருதடி வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பிரகாசம் ஞானமலர் (புனிதமணி) அவர்கள் 05.10.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான கணபதிப்பிள்ளை அப்புத்துரை (தபாலதிபர்) அன்னமரியா முத்தம்மா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகளும், அமரர்களான அருளம்பலம், தங்கம் தம்பதிபளின் மருமகளும், அமரர் ஞானப்பிரகாசத்தின் (செபமாலை) அன்பு மனைவியும், அமரர் தெய்வேந்திரம் (கொழும்பு) மற்றும் மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சத்தியபால் (நோர்வே) மற்றும் கலாபூஷணம் புலவர் அரியநாயகம் (முன்னாள் பிரதேச சபைத் தலைவர்) ஆகியோரின் சசோதரியும் ஸ்ரெலா மனோகரி, நிக்கிலாஸ் மனோகரன் (ஆசிரியர் - தற்போது பிரான்ஸ்), அமரர் ஜெயா மாஸ்டர், மற்றும் ஏஞ்சலா கருணாகரி (ஜேர்மனி), ராஜசூரியர் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் நடராசா, ஜெயக்கொடி (பிரான்ஸ்), கூல்டிக்ஸன், டொறின்மீரா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், திருமதி பாக்கியவதி, காலஞ் சென்ற பொன்னுத்துரை (அதிபர்) மற்றும் திருமதி பராசக்தி, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

புலவர் அரியநாயகம்:
77 724 6835, 77 744 8394, 71 909 6556.

# நகரங்களும் சட்டங்களும்

## (City and by laws)



சொக்கலிங்கம் பிரபாகரன்

- வீடு விற்பனைப் பிரதிநிதி -

உங்கள் தலை விதியை நிர்ணயிப்பது உங்கள் வீடு. அதேபோல் உங்கள் வீட்டின் தலை விதியை நிர்ணயிப்பது அதன் சூழல் ஆகும். ஒவ்வொரு நகரச் சூழலுக்குமான தனியான நகரச் சட்டதிட்டங்கள் தனித்துவமாக உள்ளன. இச்சட்டங்கள் பலதரப்பட்ட காரணங்களுக்காக உருவாக்கப்படுகின்றன. மாநகர அரசால் வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் இச்சட்டதிட்டங்களுக்கமையவே ஒவ்வொரு நகரத்தினதும் கட்டமைப்புகளும் செயற்பாடுகளும் அமைகின்றன.

Municipal Governmentஇன் திட்டமிடல்களுக்கமைய Councilகள் நகரங்களின் வளர்ச்சி, போக்குவரத்து நெரிசல்களைக் கையாளல், நிலப்பகுதிகளைப் பயனுள்ளதாக்குதல் போன்ற நிர்வாகங்களைக் கையாளுகின்றது. Municipal Planning departmentஇன் திட்டங்களுக்கமைய Councilகள் சட்டதிட்டங்களை வடிவமைக்கின்றன.

எடுத்துக்காட்டாக, Zoning by Law என்னும் சட்டத்தைப் பார்ப்போம். இச்சட்டமானது நகரின் நிலப்பரப்பினை ஆரோக்கியமாக சரியாக மாநகர எல்லைகளுக்குள் (Municipal Boundaries) பயன்படுத்த வலியுறுத்துகின்றது.

புதிதாக வீடு கட்டுபவர்கள் முதலில் நகரத்திடம் அனுமதி கோரி விண்ணப்பிப்பர். அவ்வாறான விண்ணப்பங்களை ஆராய்ந்து City சில நிலங்களில் மட்டும் வீடுகட்ட அனுமதிக்கும். இதே போல் சில இடங்களில் மட்டுமே வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகளை கட்ட அனுமதிக்கும். உயர் மாடிக் கட்டிடங்களை கட்டுவதற்கென வேறு சில நிலங்களினை அனுமதிக்கும். அது மட்டுமன்றி, ஒரு கட்டத்தில் நீள உயர அகல எல்லைகளைக்கூட City வரையறுக்கின்றது. City யானது zoning by law சட்டத்தின் மூலம் தனது நகர நிலத்திட்டமிடலிற்கமைய அனுமதிகளை வழங்கியும் மறுத்தும் சட்டங்களை வரையறுக்கின்றது.

மீள விற்கும் வீடுகளை நீங்கள் வாங்குவதாக இருந்தால் Zoning by law போன்ற இதர சட்டங்களுக்கமைய நீங்கள் வாங்கும் வீடுகள் இருக்கின்றனவா இல்லை ஏதேனும் சட்டச் சிக்கல்கள் அவற்றுக்கு உள்ளனவா என ஆராய வேண்டும்.

சிலர் தங்கள் வீடுகளை தாம் நினைத்தபடி மாற்றியமைக்கலாம் என எண்ணுவர். குறிப்பாக பலர் வீட்டிற்கு பின்னால் தமது நிலத்தில் தானே என எண்ணி Cityயிடம் Building Permit எடுக்காமல் புனரமைத்துக் கட்டியிருப்பர். நீங்கள் மாற்றங்களைச் செய்தது உங்கள் நிலமேயானாலும் நகரின் சட்ட விதிகளுக்கமைய அனுமதி பெற்றே எத்தகைய மாற்றங்களையும் நீங்கள் செய்யலாம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. அங்ஙனம் விதிமுறைகளை மீறி மாற்றங்களைச் செய்வோமேயாயின் அவை சட்ட வரம்பு மீறிய தண்டனைக்குரிய அல்லது அபராதம் செலுத்த வேண்டிய குற்றங்களாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படுவோம் என்பதனை மனதில் நிறுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக வீட்டிற்கு பின்னால் Deck கட்டுவது அல்லது வீட்டையே நீட்டிக் கட்டுதல் போன்ற அனைத்து வகையான புனரமைப்புக்கும் சட்டப்படியாக Building Permit எடுத்தேயாக வேண்டும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

வீடுகளை, வீட்டு உரிமையாளர்கள் மீள் விற்பனை செய்யும் போது அவர்களிடமிருந்து அதனை வாங்குபவர்கள் இங்ஙனம் சட்டமீறல் மாற்றங்கள் வீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை தமது வழக்கறிஞர் மூலம் கண்டறிய வேண்டும். City நீங்கள் செய்யக்கூடியவற்றிற்கு Permit தந்துவிடும்.

வீடுகளை வாங்கும் போது செய்கின்ற Survey யில் இத்தகைய விடயங்கள் ஆராயப்படுகின்றன.

நீங்கள் வீடு வாங்கும் பொழுது குறிப்பாக Offer கையளிக்கும் போது அதில் current Survey, or Servey showing all structures on the property to be provided by vendor என offer பத்திரத்தில் உள்ளதா என சரி பார்த்து கையொப்பமிடவும்.

சிலர் "இவை யாவும் title insuranceஇல் Covered" எனக் கூறி சமாளிக்கக் கூடும். அங்ஙனம் முற்று முழுதாக title insuranceஐ நம்பி இருந்துவிடாதீர்கள். ஏனெனில் அது அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க மாட்டாது. Title Insurance பொருளாதார ரீதியாக சில பிரச்சினைகளுக்கு காப்புறுதி உத்தரவாதம் அளிக்கின்றது என்பது உண்மை. எனினும் அதனை உங்கள் வீட்டுப்பிரச்சனைகள் யாவற்றிற்கும் பாதுகாப்பாக இருக்கும் என நினைத்தால் அது தவறு. உதாரணமாக வீட்டின் பின் அனுமதியின்றி கட்டப்பட்ட Deck அல்லது additionக்கு காப்புறுதியாக பாவிக்க நினைத்தால் அது சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட மாட்டாது. சரியான Permits எடுக்காமல் கட்டிய கட்டடங்களுக்கு title insuranceஇல் காப்புறுதி உத்தரவாதம் பெற முடியாது. அங்ஙனம் கட்டப்பட்ட கட்டடத்தை உடைத்தகற்ற சட்டரீதியாக வலியுறுத்தப்படும் இக்கட்டான சட்டச்சிக்கலுள்ள சூழலுக்கு இதனால் முகம் கொடுக்க நேரிடும்.

பதிலாக Surveyஐ ஆராய்ந்து கட்டட வடிவமைப்பானது முழுமையாக Surveyயில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வது அவசியமாகும். அங்ஙனம் Surveyயில் இல்லாத சட்ட மாற்றங்கள் தென்படுமாயின் அவை சட்டரீதியாகத்தான் கட்டப்பட்டுள்ளனவா என ஆராய வேண்டும்.

அங்ஙனம் சிக்கல்கள் தென்பட்டால் அதன் பின் உங்கள் வழக்கறிஞர் உங்களோடு பேசி முடிவெடுத்து உங்களுக்காக வீடு விற்பவரின் வழக்கறிஞரோடு என்ன செய்யவேண்டும் என்பதை பேசி வீடு விற்பவரை அதற்கேற்றாற் போல் மாற்றங்களைச் செய்ய வைப்பார். இவ்வண்ணம் வீட்டை வாங்கு முன்பாக இவ்வாறான சட்டப்பிரச்சினைகள் எதிலும் மாட்டாதவாறு தெளிவுபடுத்திய பின்னர் Offerஇனை Finalize பண்ணுவார்கள்.

இதேபோன்றே வீடுகளில் சிறு தொழில் செய்பவர்கள் தமது தொழில்களை சட்டரீதியாக அனுமதி பெற்றுச் செய்யாவிடில் அவை வீட்டிற்கே பின் ஆபத்தானதாக மாறிவிடும்.

வீடு வாங்குபவர்கள் ஒரு வீட்டை வாங்குமுன்பாக Municipal zoning departmentக்குச் சென்று zoning by law சட்ட விளக்க விபரக் கோரிக்கையை பெறுவதன் மூலம் நீங்கள் வாழப்போகும் இடத்தின் சூழலில் எத்தகைய Zoning requirements நிலவுகின்றன என அறிய முடியும். குறிப்பாக நீங்கள் வாங்கப்போகவுள்ள வீட்டிற்கான Zoning requirmentsஐ உங்கள் வீடு நிறைவேற்றியுள்ளதா என அறிய முடியும்.

அது மட்டுமன்றி உங்கள் வீட்டைச் சுற்றிய சூழலில் எவற்றை செய்யலாம் எவற்றை செய்யக்கூடாது போன்றவற்றையும் அறியலாம். உங்கள் வரைபடத்தைப் (Mapஐப்) பார்த்து உங்கள் நகரத்தின் எதிர்காலத்திட்டமிடல்களை ஆராய்ந்து அதற்கமையவும் நகரச் சட்டதிட்டங்களுக்கமையவும் உங்கள் திட்டத்தினை சரியாக பயனுள்ளதாக ஆக்க முடியுமா என்று ஆராய்ந்து திட்டமிடலாம். அத்தோடு Official Plan என்று கேட்டுப் பெறுவதன் மூலம் உங்கள் municipalityயில் உள்ள வீடுகள் கட்டடங்களின் Master Blueprintஐப் பெற முடியும்.

தனியே மாநகரச் சட்டதிட்டங்களை மட்டும் அறிந்திருந்தால் போதாது மாகாண பிரதேச சட்டதிட்டங்களையும் அறிந்திருப்பது அவசியம். ஏனெனில் ஒன்றையொன்று மேவி மாற்றியமைக்கக்கூடியவையாக சிலசமயங்களில் அவை இருக்கும். உதாரணமாக Clarington பகுதிக்கென தனியான சட்டதிட்டங்கள் உள்ளன. ஆனால், அது Region of Durhamஇன் ஒரு பகுதியாதலால் regionஇன் சட்ட அமலாக்க முடிவுகள் Clarington பகுதியில் உள்ள ஒரு வீட்டு உரிமையாளரைப் பாதிக்கும். எனவே மொத்தத்தில் உங்கள் திட்டங்கள் சார்ந்த வட்டார சட்டதிட்டங்களை அறிந்திருப்பதும் அவசியமாகும்.

### ஒருவேளை Zoning issuesஇல் நீங்கள் மாட்டுப்பட்டு என்ன செய்யலாம் என தடுமாறி தவிக்கின்றவராக இருப்பின், அந்த சிக்கல்களில் இருந்து வெளிவர இதோ சில ஆலோசனைகள்:

பொதுவாக இத்தகைய சிக்கல்கள் சிறிதாக இருப்பின் சிறிய மாற்றங்களோடு தீர்க்கப்படலாம். Variation Minor in Nature என்னும் வகைக்கமைய இப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும். Local Committee of Adjustmentக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சிறிய மாற்றங்களை அனுமதிக்குமாறு கோர முடியும். இவ்வாறாக Local Committee of Adjustmentக்கு இத்தகைய மாற்றங்கள் அனுமதிக்கும்படி சட்ட அமுலாக்கம் செய்யும் சக்தியுண்டு. எனினும் அவர்களும் மறுத்தால் அதாவது அந்த விண்ணப்பக் கோரிக்கை தோற்றால் அதன்பின் நீங்கள் Ontario Municipal Boardக்கு விண்ணப்பிக்க வேண்டும். குறிப்பாக Local Committeeயிடம் தோற்றால் அல்லது அயலவர்களின் அதிருப்தியுடனான அனுமதி மறுப்பு குற்றச்சாட்டுக்களில் சட்டரீதியான நியாயம் வலுப்பெற்றிருந்தால் Ontario Municipal Boardக்கு apeal பண்ணி வழக்கில் போராட முயல முடியும்.

எது எவ்வாறாயினும் கண் கெட்டபின் சூரிய வெளிச்சம் என்பது போல் வந்தபின் வருந்தாமல் வருமுன்பே சரியாக சட்டதிட்டத்திற்கமைய செயற்பட்டு நடப்பதே நேர்த்தியான நிம்மதியான வழியாகும்.

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*



# மடையன்

- பொன் குலேந்திரன் -

சிங்களவர்களை "மடையர்கள்" என தமிழர்கள் வர்ணிப்பதுண்டு. காரணம், ஒரு காலத்தில் படிப்பில் சிங்களவர்கள் பின்தங்கியிருந்தனர். படிப்பு வசதிகள், நல்ல கல்லூரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தபடியால் படிப்பு வசதிகள் இருந்த தமிழர்கள் உயர்பதவிகள் வகித்தனர். அதனால் "சிங்களவர்கள் மோடையர்கள், கவன் என்ற உணவை சாப்பிடமட்டும் வீரர்கள்" என்று கேலிசெய்தார்கள். மடையர்களும் காலப்போக்கில் புத்திசாலியாகிவிட்டார்கள். இல்லாவிட்டால் பல நாடுகளுடன் கூட்டு சேர்ந்து, உதவிபெற்று யுத்தத்தில் வென்றிருப்பார்களா? நாம் ஒருவரையும் வெறுப்பு காரணமாக குறைத்து எடை போடக் கூடாது. அதோடு நம் தரத்தை உயர்வாக எண்ணவும் கூடாது.

இரு நண்பர்களின் உரையாடலின் போது "நீ ஒரு மடையன். நீ செய்தது தவறு. சிந்திக்காமல் நடந்து விட்டாய். நான் சொன்னபடி நடந்திருந்தால் உனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது." என்று வாக்குவாதத்தில் ஆரம்பித்து, அடிக்கடி "மடையன்" என்ற வார்த்தை பிரயோகத்தால் கைகலப்பில் போய் முடிந்து, நட்பு முறிந்தது. அவ்வளவுக்கு "மடையன்" என்ற வார்த்தை மனதை பாதித்திருக்கிறது.

தினமும் நாம் எத்தனையோ மடையர்களை வாழ்க்கையில் சந்திக்கிறோம். நாம் செய்வது நமக்கு புத்திசாலித்தனமாக இருந்தாலும் பிறருக்கு மடைத்தனமாக இருக்கும் என்பதை நாம் உணருவதில்லை. வீட்டில் இருக்கும் போது, வெளியே பாதையில் போகும் போது, வேலை செய்யும் இடத்தில், நண்பர்களுடன் கும்மாளம் போடும்போது "மடையன்" என்ற வார்த்தை எங்கிருந்தோ ஓடிவந்து, உரையாடும்போது ஒட்டிக்கொள்ளும். மலேசியாவில் உரையாடும் போது "லா" என்ற வார்த்தை ஒட்டிக்கொள்கிறது. தமிழ்நாட்டில் "சார்", கொழும்பில் ஆங்கிலம் பேசுபவர்களைடையே "பகர்" என்ற தூஷண வார்த்தை, வட அமெரிக்காவில் "ஹாய்", இங்கிலாந்தில் "ஹலோ". இப்படி நாட்டுக்கு நாடு சில வார்த்தைகள் உரையாடலின் போது தொற்றிக்கொள்கிறது. இந்த பேசும் கலாச்சாரம் எப்படி உருவாகியது என்பது புதிர்?

ஒருவர் எம்மை மடையன் என்று சொல்ல வேண்டியதில்லை. நாமே எம்மை மடையா என்று எம்மையறியாமலே சிலசமயம் திட்டிக்கொள்கிறோம் ஒரு தவறைச் செய்துவிட்டு, நண்பர்களோடு பேசும்போது மடையன் என்ற வார்த்தை எம்மையறியமலே அடிக்கடி வந்து விடும். "மடையா, அந்தப் பெண்ணுக்கு பின்னாலே சுத்தாதே என்று எத்தனை தடவை உனக்கு சொன்னனான்? அவளுக்கு ஒரு காதலன் இருக்கிறான்" என்று எச்சரிக்கை செய்வான் நண்பன்.

"அடேய் மடையா, அந்த கேள்வி இந்த முறை பரீட்சைக்கு வராது என்று எத்தனை தடவை உனக்குச் சொன்னான்" இது பரீட்சை எழுதிவிட்டு வந்த மாணவர்களிடையே உரையாடும் போது வரும் மடையன் வார்த்தை.

"மடையன். எத்தனை தடவை நான் சொன்னாலும் இவனுக்கு விளங்கிறதில்லை". இது பல வீடுகளில் தந்தை மகனை ஏசும் வசனம்.

"மடையா, நான் சொன்னபடி என் தம்பி மகளை கலியாணம் செய்திருந்தால் நீ இப்படி கஷ்டப்படவேண்டியதில்லை" இது அம்மாவிடம் இருந்து வரும் வார்த்தைகள். "மடையன், இந்த சின்னக் கணக்கைச் சரியாக போடத் தெரியாதா உனக்கு?" இது கணக்கு வாத்தியாரின் திட்டல். முதலில் வாத்தியார் மடையன் என்ற பட்டத்தை மாணவனுக்கு தான் சொன்னது விளங்காததிற்காக சூட்டினார். அவர் எடுத்துச் சொன்ன விதம் எவருக்கும் விளங்காமலிருந்தால் எல்லோரும் மடையர்களா அல்லது சரியாக எடுத்துச்சொல்லத் தெரியாதவர் மடையரா? வாத்தியார், தன் கணக்கு பிழை என்பதை அறிந்தவுடன், மடையன் பட்டத்தை தான் ஏற்றுக்கொள்வாரா? இல்லவே இல்லை. அது கௌரவப் பிரச்சனையாகிவிடுகிறது.

மடையன் என்ற வார்த்தை யாராவது பிழையாக ஒரு விஷயத்தை செய்தால் உடனே வந்து பேச்சில் சேர்ந்து விடுகிறது. அதைச் சொல்பவர் அதனால் தான் ஒரு புத்திசாலி என்பதில்லை கருத்து. சில சமயம் மடையன் என்ற பட்டம் வாங்கினவன் சரியாக செய்திருக்கலாம். அவனை மடையன் என்று அழைத்தவனுக்கு விளங்காமல் இருந்திருக்கலாம்.

வீதியில் வாகனம் ஓட்டிக் கொண்டு போகும் போது எத்தனை தடவை நாம் மடையன் என்ற சொல்லை ஆங்கிலத்தில் பாவித்துள்ளோம். எமக்கு முன் மெதுவாக செல்லும் சாரதியை நாம் திட்டும் போது "மடையன் புதுக்க கார் ஓட பழகுகிறான் போல இருக்கு" என்போம். ஆனால் அச்சாரதியை தாண்டி செல்லும் போதுதான் அச்சாரதி ஒரு வயது வந்த மூதாட்டி என்பது தெரியவருகிறது. "நான் மடையன். சாரதி ஒரு கிழவி என்பதை தெரியாமல் பிழையாக திட்டினோமே என்போம்.

வேகமாக எம்மையும் தாண்டி ஓட்டிச் செல்பவனைப் பார்த்து "மடையன் எங்கையோ அடிபட்டு சாகப்போகிறான்" என்போம். ஆனால் அவனுக்கு இருக்கிற அவசரம் சொன்னவனுக்கு புரியவா போகிறது? ஆனால் எம்மைத் தாண்டி சென்றவனை பொலீஸ் வேகமாக ஓட்டியதற்காக மறித்து ஒரு டிக்கட் கொடுத்தால் அவன் உடனே தனக்குள் நினைத்துக் கொள்வான்: "நான் ஒரு மடையன். எனது காப்புறுதி சந்தாப்பணத்தை கூட்டப்போகிறான்" என்று மனதுக்குள் குறைபட்டுக்கொள்வான்.

சந்தியில் சிவப்பு லைட் மாறி பச்சை லைட் வந்தும் முன்னால் நிற்பவன் வாகனத்தை ஓட்டாவிட்டால். "மடையன் என்ன நித்திரை தூங்குகிறான் போல இருக்கு" என்போம். உண்மையில் வாகனத்தில் பெட்ரோல் தீர்ந்து நிற்கிறான் என்பது பின்னால் நிற்பவனுக்கு தெரியவாபோகிறது!.

பாதை நடுவில் சைக்கில் ஓட்டுபவனைப் பார்த்து "மடையா, வீட்டிலை சொல்லிப்போட்டு வந்தியா" என்போம்.

வேலைத் தளங்களில் மடையன் என்ற வார்த்தை சர்வ சாதாரணம். அதிகாரி சொன்னபடி அறிக்கை தயாரிக்காவிடில், அவர் வாயில் இருந்து அவ்வார்த்தை வெளிவரும். ஏன் கணினியிலும்கூட அது புகுந்து, புத்தகங்களில் பெயர் ஆங்கிலத்தில் Idiot's Windows 2000 XP என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அதாவது விண்டோசைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களுக்காக எழுதப்பட்ட புத்தகம்.

ஆகவே பாதையில் நடந்து செல்பவர்கள், வாகனம் ஓட்டுபவர்கள் இவர்களில் பலர் மடையர்கள். புத்திசாலிகளே கிடையாது போலும். வாகனத்தை சரியாக சட்டப்படி ஓட்டும் ஒருவரைப் பார்த்து, "புத்திசாலி. இவன் சட்டப்படி வாகனம் ஓட்டுகிறான்" என்று சொல்பவர்கள் இருக்கிறார்களா?

மடையன் என்ற வார்த்தை சில சமயம் ஆத்திரத்தை உண்டு பண்ணக் கூடியது. அது சண்டையிலும் போய் முடியலாம். வாக்குவாதத்தின் போது மடையனுக்கு நல்ல குஷி. மடையனோடு முட்டாள் என்ற வார்த்தையும் சேர்ந்து கொள்கிறது. அன்பின் நிமித்தம் செல்லமாக மடையன் என்ற வார்த்தை கூறப்படுகிறது. அது கூறும் தொனிதான் முக்கியம்.

நண்பர்களிடையே மடையனுக்கு நல்ல மரியாதை. "மடக் கதை பேசாதே. மடையனைப் போல் நடவாதே. மடச்சாம்பிராணி". இப்படி வசனத்துக்கு ஒரு மடையன் சம்பாஷணையின் போது நண்பர்களிடையே வருவது சகஜம். மடையனுக்கும் சாம்பிராணிக்கும் உள்ள தொடர்புதான் என்ன? புத்திசாலிகளிலும் மடையர்களுண்டு. அதே போல் மடையர்களிலும் புத்திசாலிகளுண்டு. ஒருவனின் எண்ணத்தில் வேறு ஒருவன் செய்வது எப்படி மடைத்தனமாகப் படுகிறதோ அதே போன்று மற்றவன் எண்ணத்தில் எமது கருத்து மடைத்தனமாகத் தோன்றும். காரணம் சிந்தனைகள் வேறுபடுவதேயாம்.

மடையனோடு சோந்துகொள்ள பலர் தயங்குவார்கள், ஆனால் மடையன் என்ற வார்த்தையோடு சில வார்த்தைகள் சேர்ந்து, பேச்சுவாக்கில் வந்துவிடுகிறது. உதாரணத்துக்கு வாத்து மடையன், மாங்காய் மடையன், மடச்சாம்பிராணி, தேங்காய் மடையன் என்று கூடிக் குலாவும் வார்த்தைகள் உண்டு. மா மடையன் (பெரிய மடையன்), மாங்காய் மடையனாக காலப்போக்கில் மாறியுள்ளதாக விளக்கம் கொடுக்கப்படுகிறது. இன்னொரு விளக்கமுமுண்டு. ஒரு அர்ச்சகர் தனது உதவியாளரிடம் "பலாவும் வாழைப்பழமும் இருக்கிறது, மாங்காயோட இலையும் பறித்துக் கொண்டு வா" என்றார். அவனோ மாங்காய் மாத்திரம் கொண்டு வந்தானாம். "எங்கேடா இலை" என்று கேட்ட போது, "இலையோடு மாங்காயில்லை" என்றானாம். "அட மா மடையா நான் சொன்னது உனக்கு விளங்கவில்லையா" என்றார் அர்ச்சகர்.

கோழி, சேவல் ஆகியவற்றை மாலை நேரம் கூட்டுக்குள் அடைப்பது கடினம். எல்லா இடமும் ஓடித்திரியும். ஆனால் வாத்துக்கள் அப்படியில்லை. ஒரு வார்த்தை பிடித்து கோணிக்குள் போட்டுவிட்டால் மற்றவையும் ஓடித்திரியாமல் அடங்கிவிடும். அதில் இருந்து தோன்றியதே "வாத்து மடையன்". அடிக்கடி முட்டாளாக செயல்படுபவன் தேங்காய் மடையன். காரணம் தேங்காய் எப்போதும் கிடைக்கும், ஆனால் மாங்காய் சீசனில் அற்பமாக கிடைப்பதால் எப்போதாவது மடைத்தனமாக நடப்பவனை மாங்காய் மடையன் என்றழைப்பதற்கு ஒரு விளக்கம்!

ஒரு காலத்தில் மடங்களில் சனங்கள் வந்து தங்குவது வழக்கம். கிருமிகள் தொற்றாமல் இருப்பதற்காக, கட்டிகட்டியாக சாம்பிராணி எரிப்பார்கள். சாம்பிராணி உருகி, கட்டி மறைந்து விடும். அதுபோல் புத்தியும் உருகி தேய்ந்து விடுவதினால் மடச்சாம்பிராணி என்ற உவமை தோன்றியிருக்கலாம். இது இலங்கை ஜனாதிபதிக்கு பொருத்தமான வார்த்தை. காரணம், சாகித்திய மண்டல பரிசளிப்புக்கு போயிருந்த ஜனாதிபதி, கதிரையில் உட்காரும்போது, பின்னோக்கி சரிந்து விழுந்தார். அதற்கு காரணம் பாரம் கூடியதாலோ என்னவோ. அல்லது பதவி வெகு விரைவில் சரியப் போகுது என்பதன் சகுனமோ தெரியாது. அதற்கு காரணம், விழாவுக்கு பொறுப்பாக இருந்த செயலாளர் என்று குற்றம் சாட்டி அவரை இடமாற்றம் செய்து, தான் ஒரு மடைச்சாம்பிராணி என்பதை செயலில் காட்டினார் ஜனாதிபதி. அவரோடு இருந்து தாளம் போட்டவர்களும், அந்த மடைச்சாம்பிராணி கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். பரமார்த்தர் குருவும் சீடர்களும் என்ற கதை போல்.

"அவனுக்கு நாமம் போட்டு விட்டேன்" என்றால் அவனை மடையனாக்கிவிட்டேன் என்பதாகும். விஷ்ணுவின் இரு பாதங்கள்தான் நாமம் என்றால், நெற்றியில் ஏன் இருக்க வேண்டும்? இப்படியான கேள்வியை எழுப்பினார் ஈவேரா பெரியார். மக்களின் மடமையை நீக்கி பகுத்தறிவை வளர்ப்பதுதான் பெரியார் கொள்கை.

மறக்க வேண்டாம் - இலங்கையில் மட்டுமல்ல பல நாடுகளில் ஏப்பிரல் முதலாம் திகதியை முட்டாள் தினமாக கொண்டாடுகிறார்கள் இது 1562ல் இருந்து ஆரம்பமாகியது என்பார்கள். ஏன் அதற்கு முன்னர் உலகில் முட்டாள்கள் இருக்கவில்லையா?

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■


# ஆயுட்காப்புறுதி

**For all your Insurance needs...**
**Call: 416•522•3314**
**Sockalingam Prabaharan**
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி (Life Insurance)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
20% - 40% அரச மானியத்துடன்
15% அதிக போனஸ்



- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments

$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5

## நாம் அழகாய் இருக்க

# ஸ்கால்ப் மசாஜ் (Scalp Massage)

**தொடர் 03**

**சசி நரேன்**
Cosmetologist & Aestheticia



### ஸ்கால்ப் மசாஜ் (Scalp Massage)

இம்முறை தலையில் செய்து கொள்வது. தலையில் உள்ள பொடுகுகளை நீக்கவும், கூந்தல் உதிராமல் இருக்கவும், கூந்தல் வளரவும், சத்து இல்லாத கூந்தல் உடையவர்களுக்கும், நரை முடியைத் தடுப்பதற்கும் தலைவலியைப் போக்குவதற்கும், புத்துணர்வு கொடுப்பதற்கும். இந்தப் பயிற்சி உதவும். இப்பயிற்சி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோரும் செய்யலாம். இதைச் செய்வதனால் உடம்பிற்கு குளிர்மை கிடைக்கின்றது.

நம்முடைய முன்னோர்கள் செய்து கொண்டு வந்த முறையே தான் இது. ஒரு சில வேறுபாடுகள் மட்டும் இப்போது உண்டு.

தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெய் இம்மூன்றில் ஏதாவது இரண்டு எண்ணெய் இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி எடுத்து இலேசாகச் சூடக்கிக் கூந்தலில் அடிப்பாகத்தில் தடவவேண்டும். எண்ணெயை இலேசாகச் சூடாக்குவதனால் தலையில் உள்ள மயிர்க் கால் துவாரங்கள் திறந்து எண்ணெய் உள்ளே செல்லும்.

தலையில் எண்ணெய் தடவியவுடன் இரண்டு கைகளின் விரல்களினாலும் தலையை முழுவதும் சுற்றிச் சுற்றி மசாஜ் செய்ய வேண்டும். இப்படி 5 அல்லது 6 தரம் மசாஜ் செய்யவும்.

நடு உச்சியிலிருந்து காதுப்பக்கம் மட்டும் இரண்டு விரல்களினால் இரண்டு கைகளாலும் சுற்றிச் சுற்றி மசாஜ் செய்யவும்.

மேல் தலையிலிருந்து கீழ் கழுத்து மட்டும் விரலால் நீவ வேண்டும்.

இரண்டு பக்கமும் தோள்களில் கையால் மசாஜ் செய்ய வேண்டும்.



கையைக் குவித்து வைத்துக் கொண்டு விரல்களின் நுனிபாகம் தலையில் படும்படியாக மெதுவாக தலை முழுவதும் அடித்துக் கொள்ளவேண்டும்.

கூந்தலை கொஞ்சம் கொஞ்சமாக மடித்து மடித்து இழுக்க வேண்டும்.

நெற்றியில் ஒரு கையை பிடித்துக் கொண்டு மற்றக் கையை பின் தலையில் அமர்த்தி அமர்த்தி மசாஜ் செய்ய வேண்டும்.

எல்லா மயிரையும் கையால் பிடித்து லேசாக இழுக்க வேண்டும்.

இரு புறமும் காது ஓரத்தில் உள்ள கூந்தலுக்குள் விரல்களை கொடுத்து மசாஜ் செய்து, பின்கழுத்தில் உள்ள கூந்தலில் இருந்து கைகளை கொண்டு மசாஜ் செய்யவும்.

கைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டு தலை முழுவதும் மெதுவாக அடிக்க வேண்டும்.



தலைக்கு எண்ணெய் உள்ளங்கையால் தேயிக்கும்போது தலை முழுவதும் மசாஜ் செய்ய வேண்டும். இவைகளை எல்லாம் செய்யும் போது பின் கழுத்தில் குழியில் படாமலேதான் செய்யவேண்டும். மேற் கூறிய முறைகளை 15 அல்லது 20 நிமிடம் செய்து கொண்டால் போதுமானது.

இதைச் செய்த பிறகு டவலை வெநீரில் பிழிந்தெடுத்துத் தலை முழுவதும் சுற்றி கூந்தல் ஓரளவு சூடு வரும் வரை 10 அல்லது 15 நிமிடம் வைக்க வேண்டும் அல்லது 10 நிமிடம் கூந்தலைப் பரப்பிக் கொண்டு சூரிய வெப்பத்தில் நின்றால் நல்லது. ஏனெனில் சூரியனின் ஒளிக் கதிர்கள் மிகவும் சக்தி வாய்ந்தமையாதலால் கூந்தலை உறுதிப்படுத்தும்.

இவை எல்லாம் முடிந்த பிறகு வழக்கமாக எந்தப் பொருளை உபயோகித்துக் குளிப்பீர் களோ. அதை உபயோகித்துக் குளிக்க வேண்டும். ஷாம்பேவும் உபயோகிக்கலாம். ஷாம்பே உபயோகித்தால் கூந்தலை நன்கு கழுவிவிடவேண்டும். இதில் நுரை வருவதற் காகவும், அழுக்கை அகற்றுவதற்காகவும் சில இரசாயனப் பொருள்களைச் சேர்த்திருக்கலாம். ஷாம்போவோடு எலுமிச்சை ரசம் சேர்த்துக் கொண்டால் இன்னும் நல்லது. முலிகைகளால் தயாரிக்கப்பட்ட ஷாம்போக்களையும் அவரவர் கூந்தலுக்குத் தகுந்தபடி உபயோகிக்கலாம்.

இதற்குப் பிறகு தலை ஓரளவு உலர்ந்த பின் நன்கு சீவ வேண்டும். சீவும் போது முடிகள் இழுக்கப்படுவதால். இதுவும் கூந்தலுக்கு ஒரு பயிற்சி மாதிரி தான்.

மேலுள்ள Scalp Massage 2 கிழமைக்கு ஒரு தரம் செய்தால் உடலிற்கு நல்லது.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■



# படுவான்கரைப் பயணம்

## தொடர் 04

- குமார் புனிதவேல் -

தண்டர் பே நகரத்திலிருந்து எமது பயணத்தை தொடர்ந்து, ஒன்டாரியோ மாகாணத்தின் அண்டிய மாகாணமாகிய வின்னிபெக் நோக்கி, அதாவது மனிடோபாவின் தலைநகரமாகிய வின்னிபெக் நோக்கி பயணம் செய்தோம்.

நீங்கள் பாடசாலையில் படித்திருப்பீர்கள் - கனடாவின் பிரேரீஸ் புல்வெளி பற்றி. பிரேரீஸ் புல்வெளியை உலகத்தின் உணவுக்கூடை (World Food basket) என்று குறிப்பிடுவார்கள். அந்த பிரெயிரீஸ் புல்வெளியின் கிழக்குக் கரையோரமாக வின்னிபெக் நகரம் உள்ளது.

உலகில் உயிரினம் வாழ்வதற்கு இன்றியமையாதது நீர். இதனை அழகாக திருவள்ளுவர் வான் சிறப்பு அதிகாரத்தின் கடைசிக் குறளான இருபதாவது குறளில் கூறுகிறார்.

'நீரின்று அமையாது உலகு எனின்
யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு'

ஆம். நீர் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது. இதனால் தான் பண்டைய குடியேற்றங்கள் யாவையும் ஆற்றுப்படுக்கைகளுக்கு அண்மையில் அமைந்தன. உதாரணத்துக்கு சிந்து நதிச்சமவெளி நாகரீகம், யூபிரடீஸ் டைகிரிஸ் ஆகிய நதிகளுக்கிடைப்பட்ட சுமேரிய நாகரீகம், நைல் நதியோரம் வளர்ந்த எகிப்திய நாகரீகம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

இவைபோலவே Red River, Assiniboiner River ஆகிய ஆறுகள் கலக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகரத்திற்கு வின்னிபெக் எனும் பெயர் வருவதற்கு காரணமான வின்னிபெக் வாவி இந்நகரத்திலிருந்து 55km தொலைவில் அமைந்துள்ளது. இந்த வாவி உலகத்திலேயே பதினொராவது இடத்தில் இருக்கிறது. இவ்வாவி 380,001 சதுர மைல் பரப்பளவு இடத்தில் இருந்து நீர்சேமிக்கிறது. (இலங்கையின் பரப்பளவு 25,000 ச.மைல்) இந்த பெரிய வாவி 218 மைல் வடக்கு தெற்காக இருப்பினும் ஆழம் மிகக் குறைந்து 12 மீட்டர் சராசரி ஆழம் உடையதாயுள்ளது. இதனால் இங்கு வசித்த பூர்வீக குடிகள் இதனை வின்னிபெக் என அழைத்தனர். அவர்கள் மொழியில் இச்சொல்லின் கருத்து கலங்கல் நீர். ஆம்.



இங்கு நீர் ஆழம் குறைவாதலால் கலங்கிக் காணப்படுகின்றது.

இந்த நகரத்தில் முக்கியமான இடம் ரோயல் மின்ட் எனப்படும் நாணயம் செய்யுமிடமாகும். கனடாவில் நாணயம் 1858ல் இருந்து பாவிக்கப்பட்டாலும் 1905ம் ஆண்டுதான் முதன் முதல் ஒட்டாவாவில் நாணயம் தயாரிக்கப்பட்டது. வின்னிபெக் நகரில் 1976ம் ஆண்டுதான் செய்ய துவங்கினார்கள். இங்கு Tour எனும் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நெருங்கி நின்று பார்க்கும் சந்தர்ப்பம் இல்லை. காரணம் அங்கு நடைபெற்ற களவுகள் தாம். நாணயம் அடிப்பவர்களே நாணயத்தை அடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். உதாரணத்திற்கு நாணயம் தயாரிக்கும் இடத்தை சுத்திகரிக்கும் தொழிலாளி 30,000 டொலரிற்கும் 150,000 டொலருக்கும் இடைப்பட்ட



ஒரு தொகையை திருடிவிட்டார். இப்படி பல திருட்டுக்கள் நடந்துள்ளன. ஊரில் சொல்வதுபோல் 'சூடு மிதிக்கிற மாடு வைக்கல் சாப்பிடேக்க கொஞ்ச நெல்லும் சாப்பிடவே செய்யும்' என்பது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது...

கனடாவில் 74 நாடுகளுக்குமதிகமான நாடுகள் தமது நாணயத்தை செய்விக்கிறார்கள் என்றால் கனடாவுடைய நாணயத்திற்கு அது ஒரு பெருமைதான். உண்மையில் 74 நாடுகளுக்குமதிகமான நாடுகள் கனடாவில் தமது நாணயத்தை பெற்றுக்கொண்டாலும் மற்றைய நாடுகள் இந்த விடயத்தை இரகசியமாக வைத்துள்ளார்கள்.

இன்னும் ஒரு சுவையான தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதாவது நாணயம் செய்யப்படும் ஆலையின் முன் இந்த எழுபத்து நான்கு நாடுகளுடைய கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தது. அவற்றில் சிறிலங்காவின் கொடியுமிருந்தது. இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லையே என்று யோசிக்கிறீர்கள், என்றால் இதோ சுவையான தகவல்! ஒவ்வொரு கொடி மரத்திலும் அந்த நாட்டின் பெயர் ஆங்கிலத்திலும் சுதேச மொழியிலும் இருந்தது. இலங்கைக் கொடியில் ஆங்கிலத்தில் சிறிலங்கா எனவும் தமிழில் இலங்கை எனவும் இருந்தது. இக்கட்டுரையுடன் படத்தை இணைத்துள்ளோம் பார்த்துக் கொள்ளுங்கள்.

தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டவேளை மெடிசின் ஹட் (Medicine hat) எனும் இடத்தை கடந்து செல்லவேண்டியிருந்தது. இங்கு ஒருவித கட்டிடடத்தினைப் பற்றிய விளக்கம் தரவேண்டியுள்ளது. கனடாவில் வாழ்ந்த பூர்வீக குடிகள் அமைத்த வீடுகளை டீபீ (Tee pee) என கூறுவார்கள். இவை தேவையைபொறுத்து சிறிதாகவோ பெரிதாகவோ இருக்கலாம். பொதுவாக வெளிக்கவசமாக மிருகங்களின் தோல் பதனிடப்பட்டு பாவிப்பார்கள். இவை பார்ப்பதற்கு கூடாரம்போல் இருக்கும். இம்மக்கள் பெரிதும் நாடோடிகளாக இருந்தமையால் கூடாரத்தை எளிதில் கழற்றவும், பின் பூட்டவும் எடையில் குறைந்ததாயும் அமைக்க வேண்டியிருந்தது. நடுவில் புகைக்கூண்டு போல் ஒரு ஒட்டை இருக்கும். இது சமையல் புகையை வெளியே செலுத்துவதற்கும் சுத்தமான காற்று உள்வரவும் உதவியது.

1988ம் ஆண்டு பனிக்கால ஒலிம்பிக்ஸ் போட்டியின்போது கல்காரியில் காட்சிக்காக உலகிலேயே பெரிய டீபீ யை செய்தார்கள். அது இருபது மாடிக் கட்டிட உயரமும், 240 Km/h காற்றின் வேகத்தை தாங்கக் கூடியதாயுமிருந்தது. இருந்தும் ஜனவரி 2007ம் ஆண்டில் வீசிய சூறாவளியில் இது சேதமடைந்தது. இதைத் திருத்திய பின் இந்த டீபீ யை கனேடிய நெடுஞ்சாலைக்கு அண்மையில் மெடிசின் நாட்டில் கொண்டுவந்து நிறுவியுள்ளார்கள். இது முன்னையதிலும் 4.6 மீட்டர் உயரம் குறைந்திருந்தாலும் பார்ப்பவரை பிரமிக்கச் செய்யும்.

தொடரும்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

## துயர் பகிர்வோம்



**திரு. கனகலிங்கம் நமசிவாயம்**

(கொக்குவில், சுன்னாகம், கனடா)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் சுன்னாகம் சூராவத்தையை வதிவிடமாகவும் Bramptonனில் வசித்து வந்தவருமாகிய கனகலிங்கம் நமசிவாயம் அவர்கள் 13ம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தங்கம்மா ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து என அழைக்கப்படும் செல்லத்துரை - இராசம்மா ஆகியோரின் மருமகனும், சரஸ்வதியின் கணவரும், கவிதா (இலங்கை), பிரியதர்சன் (இலங்கை), செந்தூரன் (கனடா), சிவசுதன் (கனடா), காலஞ்சென்ற சனா, சிவாஜினி (இலங்கை), ஆரணி (இலங்கை) ஆகியோரின் தந்தையும். கனேசதாஸ், ஞானகலா, காமினி, காலஞ்சென்ற சௌந்தரராஜன், ஜோன்சன், பபா என அழைக்கப்படும் சில்வஸ்ரர் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தேவசகாயம், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் சத்தியசீலன், மகேஸ்வரன், சகுந்தலாதேவி, மகேந்திரன் ஆகியோரின் சகோதரனும், சுப்பிரமணியம், தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், சற்குணசிங்கம், கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதி வணக்க நிகழ்வு 18.10.2009 அன்று Bramptonனில் நடைபெற்றது.

தொடர்புகளுக்கு: 905-794-0205 - 416-754-4864

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

from the firm foundations of creative photos

la photographie est un art





digimedia creations

**karuna photography**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 04

K.S. பாலச்சந்திரன்

# உச்சி குளிரவைத்தல்

அப்போது நான் கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலம். யாழ்ப்பாணத்தில் ஒரு நாடகத்தில் நடிக்க அழைத்தார்கள். சில நாட்கள் முன்னதாகவே சென்று மற்ற நடிகர்களுடன் ஒத்திகை பார்க்கவேண்டும் என்றும் சொன்னார்கள். நாடகத்துக்கு பண முதலிட்டவர் ஒரு உள்ளூர் பணக்காரர். அவர் ஒவ்வொரு நாளும் ஒத்திகை முடிந்ததும், என்னை இனுவிலில் உள்ள வீட்டில் கொண்டு போய் விடுவதாக ஒப்பந்தம். ஆனால் முதல்நாளே நேர்மாறாக விஷயங்கள் நடந்தன. கடந்து போய்க்கொண்டிருக்கும் நேரத்தையும், கடுத்துப்போய் இருக்கும் என்னையும் பொருட்படுத்தாமல், தயாரிப்பாளர் இருந்தவர்களோடு வெட்டிப்பேச்சு பேசிக்கொண்டிருந்தார். பொறுமை இழந்த நான், நறுக்கென்று நாலு வார்த்தைகள் சொல்லவும், அவர் திருப்பிச்சொல்லவுமாக இருவருக்குமிடையே பெரிய தர்க்கமே நிகழ்ந்துவிட்டது. அதன் விளைவாக "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதுவோ" என்று கம்பன் சொன்னதுபோல, 'உம்முடைய ஓட்டைக்கார் இல்லாவிட்டால் போகமாட்டேனோ" என்று சொல்லிவிட்டு, வாடகைக்கார் பிடித்து வீடு போய்ச்சேர்ந்தேன்.

நாடகமேடையேற்றத்தின்போது, தயாரிப்பாளரை நானும், என்னை அவரும் நேருக்கு நேர் சந்திக்காமல் இயக்குனர் பார்த்துக்கொண்டார். இதனால் தயாரிப்பாளர் கறுவிக்கொண்டே திரிந்தார் என்று சொன்னார்கள். ஒரு மாதிரி நாடகமும் முடிவடைந்தது. நான் கொழும்பு திரும்பியபின்னர் நடந்ததையும் மறந்து விட்டேன்.

சிலமாதங்களின்பின்னர், யாழ் மாவட்டத்தின் ஒரு கிராமத்தில் நடந்த கலைவிழாவில், 'அண்ணை றைற்' என்ற தனிநபர் நடிப்பு நிகழ்ச்சி செய்ய அழைத்திருந்தார்கள். சீதளக்காற்று வீசும் ஒரு பின்னிரவு நேரத்தில் எனது ஸ்கூட்டரில் அந்த கிராமத்துக்கு போய்ச் சேர்ந்தேன். கூட்டம் நிரம்பி வழிந்தது. பலத்த ஆரவாரத்திடையே மேடையில் ஏறிய நான், உற்சாகமாகவே நிகழ்ச்சியை ஆரம்பித்து, எல்லாம் நல்லபடியாகவே நடந்து கொண்டிருந்தது. பரந்து விரிந்து நின்று சிரித்துக்கொண்டிருக்கும் பார்வையாளர்களை பார்த்துக்கொண்டு வந்த நான், அதன் ஒரு புள்ளியில் நின்ற மனிதரைக்கண்டதும், தடுமாறிப்போய் விட்டேன். முள்ளந்தண்டு விறைத்துபோனது போல இருந்தது. சரளமாக வரும் வார்த்தைகளும் தடைப்பட்டுப்போனது.

அவர் வேறு யாருமல்ல, யாழ்ப்பாணத்தில் நான் சண்டைபிடித்துக்கொண்ட அந்த பணக்காரர்தான். போதாதற்கு வேட்டியை 'சண்டிக்கட்டாக' மடித்துக் கட்டிக்கொண்டு அவர் நின்ற தோரணையும், பாரத்த பார்வையும் புறப்பட்டபோது சகுனம் பார்த்திருக்கவேண்டுமென்று என்னை நினைக்கவைத்தது. அடிக்கடி தமிழ்ப்பட வில்லனைப் போல 'கொலரை' தூக்கிவிட்டுக்கொண்டும், அருகில் நிற்கும் 'தொண்டரடிப்பொடிகளிடம்' ஏதோ சொல்வதுமாக நின்று கொண்டிருந்தார்.

நடக்கப்போவது எனக்கு தெரிந்து விட்டது. நானோ எனது ஸ்கூட்டரோ முழுசாக அந்த ஊரை விட்டுப்போகும் சாத்தியமில்லை. இத்தனைக்கும், விழாவுக்கு என்னை அழைத்தவர்கள் பாதுகாப்பு தரமாட்டார்களா என்று நம்பிக்கை சற்று மிஞ்சியிருந்தது. அதுவும் விழாக்காரரில் முக்கியமானவரே நேரே போய், எனது ஷவில்லன்' முன்னால் பவ்வியமாக கையைக்கட்டி நிற்பதைக் கண்டவுடன், அந்தப்பாதுகாப்பும் இல்லையென்றாகிவிட்டது.

பயத்தினால் தொண்டை காய்ந்து போனதினால், "சோடா" குடிக்கும் சாக்கில் மேடையின் கரைக்கு நான் போன நேரத்தில், அப்படியே மெதுவாக இறங்கி, பின்னுக்கு நிறுத்தியிருக்கிற 'ஸ்கூட்டரை' எடுத்துக்கொண்டு ஓடித் தப்பிவிடலாமென்றும் யோசித்தேன். கடைக்கண்ணால் பார்த்தபொழுது, அவர் தனது 'அடியாட்களை' (பெயரே ஒரு மாதிரியிருக்கிறது... என்ன?) அவசரமாக எங்கோ அனுப்புவது தெரிந்தது.



நான் ஸ்கூட்டரை எப்படியோ புழுதிக்குள்ளால் தள்ளிக்கொண்டு போய், அருகிலிருந்த பிரதானவீதியில் ஏறி, ஸ்ரார்ட் பண்ணி, ஓடுவதற்கிடையில், அவர்கள் ஓடிவந்து, இருட்டுக்குள் வைத்து, முதுகில் 'மொத்து மொத்தென்று மொத்தி' – வேண்டாம்..அந்த விஷப்பரீட்சை என்று அந்த யோசனையைக் கைவிட்டேன்.

மேடையின் அருகில் நின்ற ஒருவரிடம், மெதுவாக 'அவரை'ப்பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன விபரங்களைக்கேட்க, மேலும் என்னுடைய அக்கால மெல்லிய உடம்பு நடுங்கத் தொடங்கியது. அந்த ஊரில் அவர் வைச்சது தான் சட்டமாம். நாலைந்து மைல் தள்ளியிருக்கிற குட்டிநகரிலில் இருக்கிற பொலிஸ் ஸ்ரேசன் பொலிஸ்காரரும் அவரது கைக்குள்தானாம். கிராமத்தில் யாரும் அவருக்கு எதிராக விரலைக்கூடத் தூக்கமாட்டார்களாம். 'விரல்' கதையோடு, எனக்கு 'அடி'விழுந்தாலும் யாரும் தடுக்கமாட்டர்கள் என்று நன்றாகத் தெரிந்துவிட்டது.

இடைவெளிக்குப் பிறகு 'மைக்கை' கையில் எடுத்த எனக்கு 'பளிச்'சென்று ஒரு யோசனை வந்தது. "சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்' என்று தெரியாமலா சொல்லி வைத்தார்கள்.

'மைக்கில்' ஒரு பிடி பிடித்தேன். அவரைத்தான். இப்படி ஆரம்பித்தேன். "நான் இந்த ஊருக்கு நிகழ்ச்சி செய்ய வந்தபொழுது எங்கள் அண்ணன் (அவரது பெயரைச்சொன்னேன்.) இந்த ஊரைச்சேர்ந்தவர் என்று யாரும் சொல்லவில்லை. (இப்படிச்சொல்லும்போது அவர் தனது வேட்டியின் 'சண்டிக்கட்டை' அவிழ்த்து விட்டதை அவதானித்தேன்.) இங்கு வந்து அவரைக்கண்டதின் பின்னர்தான் இது அவர் பிறந்த ஊர் என்று அறிந்தேன். இன்று அவரது கிராமத்தில் நிகழ்ச்சி செய்யக்கிடைத்ததை பெருமையாக நினைக்கிறேன். (கையில் சோடாவுடன் அவர் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தார்.) யாரோ விசில் அடித்தார்கள். இந்த ரீதியில் பேச்சுத் தொடர்ந்தது.

நிகழ்ச்சி முடிந்து நான் மேடையை விட்டு இறங்க சுற்றி நின்றவர்களை புறங்கையால் விலக்கி, நின்று ஒரு கம்பீரப்பார்வை பார்த்து விட்டு எனக்கு அருகில் வந்தார். விழாக்காரர்கள் எனக்கு எவ்வளவு தொகை தருவதாகச்சொன்னார்கள் என்று என்னிடமே கேட்டு, தன் மடியில் இருந்து எடுத்து, சொன்ன தொகைக்கு மேலாக நூறு ரூபா வைத்து, என் கைக்குள் வைத்தார். தாங்கள் தரவேண்டியதை சம்பந்தமேயில்லாத அவர் தருகிறாரே என்ற சந்தோசத்தில், வாயெல்லாம் பல்லாக மகிழ்ச்சியுடன் நின்ற விழாக்காரரைப்பார்த்து, "எனக்கு பாலசந்திரனை எவ்வளவு காலமாகத்தெரியும்." என்று மிடுக்காகச்சொல்லி, தனது கையாட்களில் ஒருவனை அழைத்து எனது ஸ்கூட்டரை புழுதிக்குள்ளால் தள்ளிவரச்செய்தார். ஜனக்கூட்டத்தின் நடுவாக நான்செல்ல, அவர் அருகில் கம்பீரமாக நடந்து வர, யாரோ கைதட்டினார்கள். அவருக்கு கொள்ளை சந்தோசம். முகத்தில் தெரிந்தது.

றோட்டில் ஏறி, அவரிடம் விடைபெற்று, அந்த ஊரின் எல்லையைக்கடந்தபின்னர்தான் நான் சிரிக்கத்தொடங்கினேன். நினைக்க, நினைக்க சிரிப்பாக...

புகழுக்கு மயங்காத மனிதன் உண்டா?

ksbala@thaiveedu.com


www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!


முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

digi

# கரையைத் தேடும் கட்டுமரங்கள்



**எழுத்தாளர் K.S. பாலச்சந்திரனுடன்**

**ஒரு சந்திப்பு**

கரையைத்தேடும் கட்டுமரங்கள் நாவலாசிரியர் K.S.பாலச்சக்திரன் நூலை ஒப்பமிட்டு வழங்குவதுடன் ரசிகர்களையும், வாசகர்களையும் சந்திக்கவிருக்கிறார். அனைவரையும் அழைக்கிறோம்.

**முருகன் புத்தகசாலை**

GTA Square
5215 Finch Ave. East, Unit 109, Scarborough
(Middlefield & Finch)
t. 416.321.0285

நவம்பர் **08** ஞாயிறு
காலை 10மணி

# TAMILS' FOCUS

Tamils' Business Cards Directory

## இதுக்கு மேலேயும் இன்னுமொண்டா?

*கொஞ்சம் பொறுங்கோ*

***இது......***

- தன்னறிமுக அட்டையின் கோர்வை
- சுயகுறிப்பேடு
- கையில் எடுத்துச் செல்லக்கூடியது
- குறித்த நேரத்தில் உங்களை வந்தடைந்து விடும்
- தரமானதும் பாவனைக்குரியதும்
- மற்றவையுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டது



**Tel : 416.548.7235**
Email : tamilsfocus@gmail.com

# இருள் அசைந்து உள்ளே நகர்ந்தது

கலாபன் தன் விடுப்பு முடிந்து மறுபடி கப்பலுக்கு வந்தாகிவிட்டது. அது அவன் முன்பு வேலைசெய்த அதே கப்பல் அல்லவெனினும், எழுபதுகளில் ஜேர்மனியில் கட்டப்பெற்ற ஓரளவு நல்ல நிலையிலிருந்த கப்பல். அவன் ஏற்கனவே கப்பல் அனுபவம் வாய்த்திருப்பதறிந்த இரண்டாம் நிலைக் கப்பல் என்ஜினியர் காலை நான்கு-எட்டு மணிவரையான வேலை நேரத்துக்கு அவனை எடுத்துக்கொண்டான். என்ஜின் அறையிலுள்ள எந்திரங்களின் செயற்பாடுபற்றிய தொழில்நுட்ப அறிவினை ஓரளவு பெற்றிருந்த கலாபனுக்கு, புதிய கப்பலில் வேலைசெய்வது அப்படியொன்றும் கடினமானதாகத் தெரியவில்லை.

அவன் கப்பலில் சேர்ந்த மூன்றாவது நாள் கப்பல் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு பாகிஸ்தானில் கராச்சி துறைமுகத்தைநோக்கி தன் பயணத்தைத் தொடக்கியது.

எல்லோரும் நட்பாளர்களாக, பழக்கத்துக்கு இனியவர்களாக இருந்தாலும், கப்பலில் அவரவரும் பெரும்பாலும் தனித்தனி உலகம் தான். ஒரு மகிழ்ச்சி, ஒரு துக்கம் என்று எது விதமான குடும்பம் சார்ந்த காரியமும் உடனுக்குடன் அறிய வாய்ப்பில்லாத தொழில் அது. வெளிநாட்டு மண்ணில் வேலை செய்கிற ஒருவன், தன் தாய் அல்லது தந்தை அல்லது மனைவியரின் மரணத்துக்கு ஒருவேளை ஊர்வந்து கொள்ளி வைக்கமுடியாவிட்டாலும், ‘காடாத்’திலாவது சமுகமாகிப் போகமுடியும். ஆனால் கப்பலில் வேலை செய்கிறவர்களுக்கு, அதுமாதிரிக்கூட வாய்ப்பில்லை.

வீட்டிலிருந்து அனுப்பும் கடிதம் கொம்பனி முகவரிக்குச்சென்று, அந்தப் பெயருள்ளவர் வேலைபார்க்கும் கப்பல் அடுத்துச் செல்ல விருக்கும் துறைமுகம் அறிந்து அங்கேயுள்ள ஏஜன்ஸிக்கு அனுப்பப்படுகிறது. ஒன்று ஒன்றரை மாதத்துக்குள் ஒருவருக்கு ஒரு கடிதம் கிடைத்தால் அது அவரின் அதிர்ஷ்டம். அதனால் குடும்பம், உறவுகளின் துக்க நிலைமைகள் மாறியிருக்கக்கூடுமாயினும், ஒருவர் மனம் அதையே எண்ணி அவத்தைப்பட்டுக்கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. கலாபனது உலகமும் கப்பலில் தனியானதுதான், அங்கேயுள்ள எவரினதும்போல.

வீட்டைவிட்டுப் புறப்பட்டபோதிருந்த இறுக்கமான மனநிலை கலாபனுக்கு கப்பலில் சேர்ந்த பின்னரும் மாறவேயில்லை.

இரண்டு நாட்கள் புதிய சூழலிலும் மிதமான குடியிலும் மனஅவசம் ஓரளவு அடங்கியிருந்ததாயினும், கப்பல் பயணத்தைத் தொடக்கிய பின் அதிகரிக்கவே செய்திருந்தது அவனிடத்தில். அதனால் முந்திய கப்பல்களில் போல் மிக உற்சாகமாக வேலைசெய்யும் மனநிலை அற்றுப்போயிருந்தான் கலாபன்.

ஏறக்குறைய இரண்டரை மாதங்கள் ஊரிலே தங்கியிருந்தான் அவன். காலம் றப்பர்போல இழுபட்டபடி நகர்ந்துகொண்டிருந்தது. அவன் எதிர்பார்த்திருந்ததுபோல அவனது கப்பல் கொம்பனி ஒரு மாதத்தில் அவனது பயணத்துக்கான விமானச் சீட்டை அனுப்பாதது மட்டுமல்ல, இரண்டு மாதங்களாகியும் அவனது இரண்டு தொலைதூர தந்திகளுக்குக்கூட பதிலனுப்பாமல் இருந்துவிட்டது. கொம்பனி தன்னை வேலைக்கு மறுபடி கூப்பிடுமா என்ற சந்தேகமே தலையெடுக்க ஆரம்பித்து, அது வீட்டின் முறுகல் நிலையாக முதிர்கிறவேளையில், ஒரு மாலைநேரத்தில் அவனது பயணத்துக்கான விமானச் சீட்டை கொம்பனியின் மக்லறென்ஸ் ஏஜன்ஸியில் பெறுமாறும், கப்பல் அடுத்த மூன்று நான்கு நாட்களில் சிங்கப்பூர் வருவதாகவும் தெரிவித்த தந்தி வந்தது.


இதோ ரிக்கற் வந்துவிட்டது என்றும், பின் எப்படியும் வந்துவிடும் என்றும் எதிர்பார்த்திருந்தானானாலும், பயணத்தை உறுதிசெய்த தந்தி வந்தபோது, கலாபன் அவகாசம் அற்றவன்போல் தடுமாறவே நேர்ந்திருந்தான்.

மனோவுக்குச் சொல்லமுடியாத மகிழ்ச்சி. வீட்டுக்கு நிலயம் எடுத்து, நல்ல நாள்

## கலாபன் கதை - 5

பார்த்து மூலைக்கல் வைத்து, விறுவிறுவென மாளிகைக் கணக்கான ஒரு வீட்டுக்கு அத்திபாரமட்டும் போட்டுள்ள நிலையில், கலாபன் கப்பலுக்குப் போகாது இருப்பானானால், வீட்டு வேலையை எப்படி முடிப்பது என்ற பெருங் கவலையில் இருந்தவள் அவள். ‘இந்தமாதிரி வளவு முழுக்க அத்திவாரம் வாற அளவுக்கு வீட்டுப் பிளானைப் போட்டு வைச்சிருக்கிறியே, எப்பிடி முடிக்கப் போறாய்?’ என்று அவள் சந்திக்கிற உறவினர்கள் கேட்காத வேளையில்லை. அதனால் கப்பல்வேலை மீண்டும் கலாபனுக்குச் சாத்தியமான மகிழ்ச்சியிலேயே அவன் தேடும் உடுப்புகளை எடுத்துக்கொடுத்து மனோ மிக உற்சாகமான மனநிலையில் இருந்தாள்.

தன்னை அனுப்புவதில் அவள்பட்ட அந்தப் பரபரப்பு கொஞ்சம் அசூயையாகவே இருந்தது



கலாபனுக்கு. ‘என்னைக் கப்பலுக்கு அனுப்புகிறதில் உனக்குள்ள ஆர்வத்தைப் பார்க்கிறபோது எனக்கு எதையெதையோ எண்ண வேண்டும்போல் இருக்கிறதடி.’

ஆனாலும் எதையும் சொல்லாமல் மனத்துள் அடக்கிக்கொண்டான்.

சூட்கேஸ் அதிகாலையில் எழுந்து எடுத்துச் செல்லத் தயாரானதும் கலாபன் கிணற்றடி போய்வந்தான். போத்தலில் மீதமாயிருந்த சாராயத்தை கிளாஸில் ஊற்றி மெதுமெதுவாகக் குடித்துக்கொண்டிருந்தான். நாளைக்குக் குடிக்க அங்கே யாரிருக்கப் போகிறார்கள்? போத்தல் முடிந்துகொண்டிருந்தது.

மனோ ஏதோ பொரித்தது போலிருந்தது. முட்டையாக இருக்கும். நேரமாக ஆக அவளிலான அவனது எதிர்பார்ப்பு ஏறுமுகத்தை அடைந்தது.

அவள் சாப்பாட்டினை எடுத்துவைத்து குசினியை ஒழுங்குபண்ணும் முயற்சியில் இருந்தாள்.

இலங்கை வானொலி அடங்கி இரவு பத்தரை மணியென்பதை அறிவித்தது. ஏற்கனவே குழந்தை தூக்கம். இந்தத் தனிமைதானே அவர்களது இறுதி! இறுதி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓர் இறுதி அதற்குண்டு. அந்த இரவை மனோ குசினிச் சாமான்களை ஒதுங்கவைப்பதில் செலவழித்துக்கொண்டிருப்பது கண்ட கலாபன் மனத்தில் மெல்லிய எரிவு.

சிறிதுநேரத்தில் மனோவின் குரல் எழுந்தது. ‘சாப்பிட வாறியளா?’

சாப்பாடா? என்ன சாப்பாடு இதுக்குள்ளை? அவன் தன் கோபம் தணித்து, ‘பிறகு சாப்பிடுறன். நீ முதலல்ல கிணத்தடிக்குப் போட்டு வாவன்’ என்றான்.

அவளிடமிருந்து பதிலில்லை. அவனது வார்த்தைகளின் பூடகத்தை உணர்வதற்கான கணங்களாயிருந்திருக்கலாம் அவை. ஓர் ஏணாப்பான கிணுகிணுப்பைச் செய்தாள். பின் சொன்னாள்: ‘அதெல்லாம் இண்டைக்கு வேண்டாம். காலமை நாலு மணிக்கு எழும்பவேணுமெல்லே, பேசாமல் வந்து சாப்பிட்டுட்டுப் போய்ப் படுங்கோ.’

அதெல்லாம் வேண்டாமா? அது இறுதி இரவு என்பதற்கு எந்தப் பெறுமானமும் இல்லையா அவளிடத்தில்?

அவன் எரிந்தான். சாராயமும் சேர்த்து எரித்தது.

ஒவ்வொரு நினைப்பிலும் அவன் எரிந்தான். தன் தேவையொன்று உதாசீனப்படுத்தப்பட்டது என்பதல்ல அங்கே இருந்தது. அவளிடத்தில் இருந்த அவன்மீதான காதலின் அளவு தெரிய வந்திருந்ததுதான் முக்கியம். அவள் தன்போல என்றுமே, என்றுமேதான், தன்னைக் காதலித்திருக்கவில்லை.

இந்த நினைப்பு எந்தவொரு கடலோடிக்கும் தான் இனிய நிலைமைகளை அனுபவிக்க வைத்துவிடாது. கப்பல் இன்னும் நான்கு நாட்களில் கராச்சியை அடையப்போகிறது என்பதோ, முதல்நாள் நள்ளிரவில்தான் கப்பல் தென்னிலங்கையின் காலி வெளிச்சவீட்டைத் தாண்டியது என்ற தகவலோ அவனுள் ஓர் சைவையும் ஏற்படுத்தவில்லை. நீலச் சேலை விரித்துவிட்டதுபோல் அசைவற்றுக் கிடந்த கடலின் அழகோ அல்லது இரவின் மெல்லிய உப்புக் காற்றின் இனிய உலவுகையோ அல்லது வானத்தில் கொட்டிக் கிடந்த நட்சத்திர அழகோ அல்லது கூடவரத் தயாராகப்போல் மிகச் சமீபமாக இரவில் விகசித்த பெருநிலவோ காணாதவனாகிப்போனான் கலாபன்.

அவன் தன் துக்கத்தின் பிம்பமாக ஒரு சோகமாய் ஆகிக்கொண்டிருக்கவில்லை. குரோதமாய் ஆகிக்கொண்டிருந்தான்.

ஒரு மாலைப் போழுதில் கராச்சி சேர்ந்தது கப்பல்.

அழகாக இருந்தது துறைமுகம். கூட இருந்த வெளி இன்னும் மன உவகை செய்தது.

மறுநாள் ஏஜன்ற் வந்தபோது கடிதமெதுவும் வந்திருக்கவில்லை கலாபனுக்கு. வெளியே செல்லும் மனநிலையும் இருக்கவில்லை. மனைவியை வெறுக்கலாம். குழந்தையை...? அதனால் மனோவுக்குக் கடிதமொன்று எழுதினான். காதல், அன்பு, பிரியம் என்ற வார்த்தைகளை நிர்த்தாட்சண்யமாகத் தவிர்த்த கடிதமாயிருந்தது அது.


தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

கப்பல் மறுபடி புறப்பட்டது. அதன் அடுத்த இலக்கு ஐரோப்பா என்பது தெரிந்திருந்தாயினும், அச் சில நாடுகளுள்ளும் முதல் இலக்கு சுவீடன் என்று தெரியவந்தது. சுவீடன் துறைமுகத்துக்கு முன்னரே சென்றிருந்த கபாலி சொன்னான், ‘அதிர்ஷ்டமிருந்தால் அங்கே உச்ச இன்பம்’ என்று. கோபாலரத்தினம் கோபாலியாகி, கப்பலில் கபாலியாகியிருந்த செய்தியை கலாபன் அறிந்தது அன்றுதான்.

உச்ச இன்பங்களின் கனவுகளோடு கலாபனின் ஓய்வுப் பொழுதுகள் கழிந்துகொண்டிருந்தன. தன்னை இழத்தலில் ஒரு வஞ்சத்தை அவள் மீது நிறைவேற்றுவதாக அவன் தன்னுள்ளேயே ஒரு மெல்லிய திருப்தியை அடைந்துகொண்டிருந்தான். ஐக்கிய அமெரிக்கா சென்றிருந்த போது கண்டும் அடையாது விட்டுவிட்ட இன்பங்களின் ஞாபகங்கள் அவனில் நாள்தோறும் கிளர்ந்துகொண்டிருந்தன.

மறுபடியும் கப்பல் தென்னாபிரிக்காவைச் சுற்றியே அத்திலாந்திக் சமுத்திரத்தை அடையப்போகிறது என்ற தகவல் காலதாமதமாகும் மனவுளைச்சலை ஏற்படுத்தியிருந்தாலும் சுவீடனை கப்பல் அடைவது நிச்சயம்தானே என வேலையும், அதிகமான மெஸ் உரையாடலும் என நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தான் கலாபன்.

ஒருநாள் தூங்கச் செல்ல வெகுநேரமாகியிருந்ததால், எழும்பத் தாமதமாகி நாலு மணி பத்து நிமிடமளவில் அவசர அவசரமாக என்ஜின் அறைக்குள் நுழைந்தவன், வழக்கம் போல செல்லும்பொழுதிலேயே எந்திரங்களின் பாகங்களது வெப்பம், எண்ணெயின் அமுக்கம், நீராவிக் கொதிகலனின் நிலைகளைப் பார்க்கத் தவறியிருந்ததால், கீழே சென்ற சிறிதுநேரத்தில் என்ஜின் அறையில் கப்பலை உந்திச் செலுத்தும் பிரதான எந்திரத்தினைச் சுற்றியுள்ள நான்கு தளங்களிலும் மெதுவாக நடந்தபடி எல்லாவற்றையும் கவனித்துவரத் தொடங்கினான். என்ஜின் அறையின் கட்டுப்பாட்டு மேடையின் முன்னால் அமர்ந்து கோப்பி அருந்திக்கொண்டிருந்தான் இரண்டாவது என்ஜினியர். கப்பல் பயணம் வெகு சீராக இருக்கும் சமயங்களில் அதுதான் நிலைமை. இன்னும் சிறிதுநேரத்தில் அவன் தூங்கக்கூடச் செய்யலாம். கலாபனுக்கு அது ஏதுமில்லை.

கலாபன் மெதுமெதுவாக என்ஜின் அறையின் மூன்றாம் தளத்துக்கு வந்தான். அது அநேகமாக மெயின் என்ஜினின் சிலிண்டர் ஹெட் எனப்படும் பகுதிகளுக்குச் சமாந்திரமான தளமாகும். அங்கிருந்துதான் கப்பல் எந்திரத்துக்குத் தேவையான காற்றை உள்ளே அனுப்புவதற்கான காற்று எந்திரமும், எண்ணெயைச் சக்தியாக எரித்து எச்சமாகும் காரிய வெப்ப வாயுவை வெளியேற்றும் எந்திரமும் இருக்கின்றன. அவற்றிலிருந்தான குழாய்கள் சென்று முடிவடையவும், தொடங்கவுமான ஸ்தானம் அதன் உச்சியில் இருக்கிறது. அதற்குள் ஏறிச்செல்வதற்கான கம்பி ஏணி இருக்கிறது. அதன் ஓரமாக மசகு எண்ணெயைச் சூடாக்கவும், கடலோடிகளுக்கு அன்றாடத் தேவைகளுக்கான தண்ணீரைச் சூடாக்கவும், குளிர்வலய நாடுகளின் பிரவேசத்தின்போது கபின்களுக்குத் தேவையான வெப்பமளிப்பதற்கான காற்றலைகளுக்கு சூடேற்றவும் அக் கப்பலில் நீராவியே பயன்படுத்தப்படுகிறது. அதற்கான கொதிகலன் இருக்கிற இடமும் அதுதான்.

பொதுவாகவும் அடிக்கடியும் கொதிகலனின் சமாந்திரத்துக்கு ஏறி யாரும் அதன் சூட்டு-

83ம் பக்கம் பார்க்க...

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

## We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY

**BLUETOOTH HEADSET**

Starting From: $9.99






- Car charger
- Leather case
- Head sets
- Home charger
- Clear case
- Bluetooth headset
- Bluetooth dongle
- Data cables
- Batteries
- Belt clip/Holder
- Antenna booster
- Flashing antenna
- Flashing light










**Call Toll free:- 1.877.312.5123** *SHOP ONLINE* @ www.celltelmobility.com


## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG HTC, BLACKBERRY, iPHONE.

***Display, Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

| | | |
|---|---|---|
| 2637 Eglinton Ave. East, Eglinton Ave/Midland Rd **416.266.6818** | 5C - 2950 Birchmount Rd Birchmount / Finch Ave **416.495.7776** | 5A - 1162 Morningside Ave Morningside Ave/ Sheppard Ave **416.281.2355** |


தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு
மூலாதாரமானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.
– தமிழீழ தேசியத்தலைவர்
தமிழர்
வணிகம்
TAMILAR VANIKAM
2010
We
connect
to
the world
நம் பொருளாதாரம் நமக்குள் பலம் பெற எமக்குள் நாமாவோம்!
ஒன்றுபட்டு நின்று உயர்ந்து உலகாள்வோம்!
எம் உறவுகளை பலப்படுத்தி ஓர் இனமாய் எழுவோம்!
நம் தேவைகள் அனைத்தையும் நமக்குள்ளே நிறைவு செய்வோம்!
2010ஆம் ஆண்டுக்கான தமிழர் வணிகத்தில் தங்களது விளம்பரம் இடம்பெறுவதை நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் உறுதிசெய்து, அதற்கான கட்டணத்தை செலுத்தி
15% கழிவினை பெற்றுக்கொள்ளுங்கள்
மேலதிக தொடர்புகளுக்கு: 416 897 4573 info@tamilarvanikam.com

# இருள் அசைந்து உள்...

80ம் பக்கத் தொடர்ச்சி...

நிலை, அமுக்க நிலைகளைக் கண்டறிவதில்லை. நின்ற இடத்திலிருந்து மின்கல விளக்கின் சுடரின்மூலமே அவற்றினைக் கண்டுகொள்ளமுடியும். அன்றைக்கு ஏனோ கலாபன் அதன் படிகளில் ஏறி கொதிகலனின் கிட்ட வந்தான். நீராவியின் அமுக்கம் சரியாக இருந்தது. அதனுள்ளிருக்கும் தீயுலையை மூட்டவேண்டிய தேவையிருக்கவில்லை. நீரின் அளவும் சரியாக இருந்தது. அவற்றையெல்லாம் குறிப்பேட்டில் குறித்துக்கொண்டு கீழே இறங்கத் தயாரான கலாபன் கொதியுலையின் பின்புறம் எதேச்சையாகப் பார்வையை ஓட்டினான்.

எவ்வளவு மின்குமிழ்களைப் பொருத்தி வெளிச்சம் ஏற்றினாலும் எந்திர அறையில் எப்போதும் பிரகாசம் குறைவாக இருப்பது போல்படும். குறிப்பாக அந்த கொதியுலையின் பின்னால் இருள் உறைந்ததுபோல் அடைந்திருக்கும். கலாபன் பார்வையை வீசிய தருணத்திலும் அந்த வழமையான இருள் அங்கே இருக்கவே செய்தது. என்ஜின் அறையில் நடுப்பகுதியிலும், மின்சார சக்தியை உருவாக்கும் எந்திரங்களின் பகுதியிலும் தான் சத்தம் அதிகமாக இருக்கும். மேலே மிகக்குறைந்த அளவு சத்தத்தைப் பிறப்பிக்கும் எந்திரங்களே இருக்கின்றன. ஆனால் ஓர் ஊமை இரைச்சல் அந்த இடத்தில் கிளர்ந்துகொண்டிருக்கும். அந்த இருளையும், மிதமான ம்ம் என்ற இரைச்சலையும்விட இன்னொரு அம்சமும் அந்த இடத்திலுண்டு.

நாய்க்கு எங்கே அடித்தாலும் காலிலேதான் முடம் என்பார்கள். அதுபோல கப்பலிலே எந்திரத்தின் அசைவு அல்லது கப்பலின் அசைவுதானும் மாறுபடுகிற நேரத்தில் அதிர்வெழுகிற இடமும் அதுதான். Critical speed என்று ஒரு வேகநிலையைக் குறித்திருப்பார்கள் கப்பலில். மேலே, கீழே எந்த வேகத்திலும் செல்லலாம், ஆனால் இந்த குறிப்பிட்டளவு வேகத்தில் சென்றால் கப்பல் நடுங்கும். பழைய கட்டுமானக் கப்பலானால் குலுங்கும். கப்பலே நொருங்கிப்போகுமோவென மனம் துண்ணுறும்.

இருளை சும்மா ஊடறுத்துப் பார்த்துக்கொண்டு நின்றிருந்த கலாபன் திரும்ப முனைந்த வேளையில் அந்த இருளிலிருந்து ஓர் அசைவு தெரிந்தது. தெரிந்ததல்ல, தெரிந்தது போலிருந்தது. இருளாவது அசைவதாவது! ஆனாலும் ஏனோ அந்த அசைவு போன்ற மயக்கம் அதுவரை ஏற்படாதினால் கலாபனும் உடனடியாகத் திரும்பாமல் ஒரு மெல்லிய குழப்பமான நிலையில் அந்த இடத்திலேயே நின்றிருந்தான். அவன் பார்த்துக்கொண்டிருக்கவே ஓர் இருள் உள்நகர்வது தெரிந்தது. கலாபன் அப்படியே உறைந்துபோனான். திறந்த வாயிலிருந்து சத்தம் தான் வரவில்லையே தவிர, பெரும்பாலும் அவன் கத்தி விட்டான் என்றே சொல்லவேண்டும்.

கையில் மின்கல விளக்கிருந்தது. ஒளியைப் பாய்ச்சிப் பார்க்கலாமே என்ற எண்ணம்கூடத் தோன்றவில்லை. அப்படியானாலும் இருளில் எதைப் பார்ப்பது? இருளில் ஒரு பொருளிருக்குமானால் விளக்கின் ஒளிகொண்டு அதைப் பார்க்கலாம்தான். ஆனால் இருளையே பார்க்கமுடியுமா?

சிறிதுநேரத்தில் அந்த இருட்டு பரிச்சயமாகியதில் உள்ளே ஒரு இருள் தெரிந்தது. அந்த இருளுருவத்தின் முகமாகக் கூடிய இடத்தில் இரண்டு வெண்மைகள் தெரிந்தன.

இப்போது நிலைமை நன்கு விளங்கிவிட்டது கலாபனுக்கு. யாரோ ஓர் ஆபிரிக்கன் பாகிஸ்தானில் கப்பல் நின்றிருந்த வேளையில் கப்பலில் களவாகச் சென்று வேறு ஒரு நாட்டில் களவாக இறங்குவதற்காக ஏறிக்கொண்டிருக்கிறான்.

அது கப்பல் போக்குவரத்தினதும், அந்தந்த நாடுகளினதும் சட்டவிதிகளுக்குப் புறம்பானது. அதை ஒரு கடலோடி உடனடியாக கப்ரினுக்கு அறிவிக்கவேண்டும். கப்ரின் அவனைக் கைதுசெய்து கரையொதுங்கும் நாட்டில் காவலதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

கலாபன் கீழே இறங்கத் தயாரானான்.

இருளின் ஏதோ அவயவங்கள் அசைந்தனபோல் தெரிந்தன. கைகளாயிருக்கும். நெஞ்சில் கூம்பிக் கிடந்தன.

கீழே வந்த கலாபன் இரண்டாவது என்ஜினியரிடம் சொல்ல பலமுறையும்தான் முயன்றான். வாய் வரவில்லை. இருளின் கூம்பிய கரங்களா, அதன் வெண்ணிறக் கோளங்களில் கிடந்த பரிதாபமா எது அதைச் செய்தது?

மறுநாள் கொதிகலனின் பின்னால் அவன் கூர்ந்து பார்க்க முயலவேயில்லை. மூன்றாம் நாள் அவன் என்ன சாப்பிடுவான், எதையாவது கொண்டுவந்திருந்து வைத்துச் சாப்பிடுவானா, தண்ணீராவது குடித்திருப்பானோ, அந்தக் கொதிகலனின் பின்னால் குளிர்காலத்திலும் நா வரண்டுபோகுமே என நினைத்து இரண்டு பாண் துண்டுகளும், ஒரு விஸ்கி போத்தலில் நீரும் கொண்டுபோய் மறைப்பாக வைத்துவிட்டு கொதிகலனைப் பார்க்கச் சென்ற வேளையில் எடுத்துக்கொண்டு சென்றான்.

இருள் அசைவு தெரியவில்லை. மேலே ஏறி பின்புறம் எட்டி நோக்கினான். இருள் உள்ளே சரிந்து கிடந்துகொண்டிருந்தது. கொண்டு சென்றிருந்த தண்ணீர்ப் போத்தலைக் கீழே வைத்துவிட்டு பாண் துண்டுகளைத் திரும்ப கொண்டு வந்துவிட்டான். பாண்துண்டுகள் Stow-away செய்யக்கூடிய ஒரு மனிதனைக் காட்டிக்கொடுத்து விடக் கூடியவை.

மறுநாள் பலபலவென்று வெய்யில் எறித்துக்கொண்டிருந்த இரவு பதினொரு மணியளவில் சுவீடனின் துறைமுகத்தை நெருங்கியது கலாபன் வேலை செய்துகொண்டிருந்த எம்.வி.கிற்சாயி கப்பல். உடனடியாக துறைமுக மேடையிலும் கொண்டுசென்று கட்டப்பட்டது.

மறுநாள் காலைவேலை முடிந்து எட்டு மணிபோல் மேலே சென்ற கலாபன் நேரே பிரதம என்ஜினியர் அறைசென்று கொதிகலனின் பின்னால் மலவாடை வீசுவதாகப் புகார் செய்தான்.

கலாபனின் கடிதத்தை வாசித்த வேளையில் எனக்கும் சிரிப்பாகத்தான் இருந்தது. ஆனால் அது குறுணியளவான விதையிலிருந்து முளைத்த ஆலமரமாக என்னுள் படர்ந்து வளரத் தொடங்கியது. திருமலைத் துறைமுகத்துக்கும் இல்மனைட் மண் ஏற்றுவதற்காக ஜேர்மானியக் கப்பல்கள் வந்துபோகின்றன. நான் கனவு காணத் தொடங்கினேன்.

devakanthan@thaiveedu.com

■ ■ ■




# பெற்றோர் தெரிந்திருக்கவேண்டிய இணைய சங்கேத வார்த்தைகள்

இளையவர்கள் Chatஇல் உரையாடும்போது அல்லது SMS மூலம் தங்களுக்குள் உரையாடிக்கொண்டிருக்கும் போது பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் தட்டச்சு செய்யும் வேகத்தைப் பார்த்து அதிசயத்திருப்பீர்கள். அவர்கள் அப்படி என்னதான் பேசிக்கொள்கிறார்கள் என்று அறிய ஆவலாகி கணணித்திரையையோ அல்லது தொலைபேசித்திரையையோ பார்த்திருந்தீர்களானால் உங்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கும். பல சொற்கள் சுருக்கப்பட்டிருக்கும், இன்னும் பல சங்கேதச் சொற்களாகவே இருக்கும். அதிலிருந்து உங்ளால் எவற்றையுமே புரிந்து கொள்ள முடியாமலிருக்கும். இந்த சங்கேத வார்த்தைகளும், பெரியவர்களுக்கு அவை புரியாமலிருப்பதும் சில இளையோருக்கு உற்சாகத்தை தருவதுடன் தவறான தடங்களுக்கு செல்லவும் தூண்டிவிடுகின்றன. பல பாலியல் முறைகேடுகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் இது ஒரு ஆரம்பப் புள்ளியாக அமைந்துவிடுவதாயும் கூறப்படுகிறது. இளையோர் எதைப் பற்றி பேசிக்கொள்கிறார்கள் என்பதை பெற்றோர் அறிந்திருப்பது அவசியம். www.netlingo.com என்ற இணையத்தளம் இந்த சந்தேகச் சொற்களுக்கான ஒரு அகராதியையும் அது சார்ந்த விடயங்களையும் இணையத்தில் தருகிறது. உதாரணமாக MOS என்ற குறியீடு தாய் எனக்குப் பின்னாலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார் (மோசமாக ஏதாவது சொல்லிடாதே) என்பதைக் குறிக்கிறது(Mom Over Shoulder). இந்த இணையத்தளம் பெற்றோர் தெரிந்திருக்கவேணடிய 50 சங்கேதச் சொற்களை வெளியிட்டிருக்கிறது. இவற்றில் சில உங்களுக்கு அருவருப்பூட்டுவனவாக இருக்கலாம். ஆனால் பெற்றார் இவற்றைக் கண்டிப்பாகத் தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்பதால் அவற்றை அப்படியே இங்கு தருகிறோம்.


1. **8** - Oral sex
2. **1337** - Elite -or- leet -or- L337
3. **143** - I love you
4. **182** - I hate you
5. **1174** - Nude club
6. **420** - Marijuana
7. **459** - I love you
8. **ADR** - Address
9. **AEAP** - As Early As Possible
10. **ALAP** - As Late As Possible
11. **ASL** - Age/Sex/Location
12. **CD9 - Code 9** - it means parents are around
13. **C-P** - Sleepy
14. **F2F** - Face-to-Face
15. **GNOC** - Get Naked On Cam
16. **GYPO** - Get Your Pants Off
17. **HAK** - Hugs And Kisses
18. **ILU** - I Love You
19. **IWSN** - I Want Sex Now
20. **J/O** - Jerking Off
21. **KOTL** - Kiss On The Lips
22. **KFY-or-K4Y** - Kiss For You
23. **KPC** - Keeping Parents Clueless
24. **LMIRL** - Let's Meet In Real Life
25. **MOOS** - Member Of The Opposite Sex
26. **MOSS** - Member(s) Of The Same Sex
27. **MorF** - Male or Female
28. **MOS** - Mom Over Shoulder
29. **MPFB** - My Personal F*** Buddy
30. **NALOPKT** - Not A Lot Of People Know That
31. **NIFOC** - Nude In Front Of The Computer
32. **NMU** - Not Much, You?
33. **P911** - Parent Alert
34. **PAL** - Parents Are Listening
35. **PAW** - Parents Are Watching
36. **PIR** - Parent In Room
37. **POS** - Parent Over Shoulder -or- Piece Of Sh**
38. **pron** - porn
39. **Q2C** - Quick To Cum
40. **RU/18** - Are You Over 18?
41. **RUMORF** - Are You Male OR Female?
42. **RUH** - Are You Horny?
43. **S2R** - Send To Receive
44. **SorG** - Straight or Gay
45. **TDTM** - Talk Dirty To Me
46. **WTF** - What The F***
47. **WUF** - Where You From
48. **WYCM** - Will You Call Me?
49. **WYRN** - What's Your Real Name?
50. **zerg** - To gang up on someone

விவேகநாதன்


S.P. IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P. IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


The Rich get Richer
$500,000 Life Insurance
லைவ் இன்சூரன்ஸ்
புகை பிடிக்காத 30 வயது ஆணுக்கு
Only $201.60 Monthly
புகை பிடிக்காத 30 வயது பெண்ணுக்கு மாதம் $172.35 மட்டுமே
Whole Life Insurance - Level Premium
Call me to get the rate for your age.
KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON
www.familyprotection.ca
CELL 416-294-9322
OFFICE 416-759-5453
INDUSTRIAL ALLIANCE
Assumption Life
Canada Protection Plan
E&OE

# *Canada Sri Ayyapan Hindu Temple*



2009

*To Honour the Faithful*

**Consult Ranjan**

Project Management & Construction Services

**At Consult Ranjan,**
**IMPOSSIBLE is just a word,**
**with a welcome challenge!**

Tel.: 416.627.5664 E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

**KNOWLEDGE THAT GETS RESULTS**


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு 50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# தமிழ் மொழியும் தமிழன் தாயகமும்

### அமுதே தமிழே அழகிய மொழியே எனதுயிரே

இந்தியாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட மூன்றாவது செம்மொழியாகும். முன்னரே சமஸ்கிருதம் அத்தோடு பாளி ஆகிய இரண்டு ஆரிய மொழிகளும் செம்மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. பல இந்திய, வெளிநாட்டு மொழியியல் ஆராச்சியாளர்களாலும் மற்றும் தமிழ்நாட்டு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுதல்களை அடுத்து இந்திய அரசினால் பல ஆண்டுகளின் பின்பாவது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது பன்னெடுங்காலத்திற்கு முன்பே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருந்தும் பல பல அரசிற் காரணங்களினால் அது பிற்போடப்பட்டே வந்தது என்று அமெரிக்க கலிபோணியா பல்கலைக் கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர். ஜோச் எல் ஹாட் (Prof George L Hart) அவர்கள் 2000ஆம் ஆண்டில் குறிப்பிடுகின்றார். இந்தியாவில் இவைகள் அரசியல் சார்ந்தே நடக்கின்றது.

### செம்மொழியென்றால் என்றால் என்ன? அது எவ்வாறு வகைப் படுத்தப்படுகிறது? உலகில் ஏற்கப்பட்ட செம்மொழிகள் யாவை?

செம்மொழி எனும்போது அம்மொழித் தோற்றம், அதில் இருக்கக்கூடிய இலக்கியங்கள் செழுமையாக, அநாதியானதாக, அந்த மொழியின் மூலத் தோற்றுவாயில் தனித் தன்மையான பாரம்பரியம் கொண்டதாக, வேறுறெரு மொழின் தாக்கம் அற்றதாக அத்தோடு பரந்த, ஆழமான, செழிப்பான, பழமையான இலக்கிய வளம் கொண்டதாக இருக்க வேண்டும் என்று பேராசிரியர் ஜோச் எல் ஹாட் குறிப்பிடுகின்றார்.

ஒரு மொழியானது காலத்தால் தொன்மையானதாகவும், பழமையான இலக்கிய, இலக்கணத்தினைக் கொண்டவையாகவும், மொழித் தோற்றத்தின் போது எந்த மொழிகளின் வழித்தோன்றல்களாக அல்லாமல் தனியே தனித் தன்மையுடன் தோன்றிய மொழியாக அமைய வேண்டும். அத்தோடு பன்நெடுங்காலமாக செழுமையாகவும் வளமுடன் வாழும் அல்லது வாழ்ந்த மொழியாக இருக்க வேண்டும் என்பதே இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட செம்மொழிக்குரிய வரைவிலக்கணமாகும்.

இன்று உலகினால் செம்மொழியாக ஏற்கப் பட்டு அறிவிக்ப்பட்ட மொழிகளை நோக்குவேமாயின்

கிரேக்கம், சமஸ்கிருதம், பாளி, லத்தீன, பாரசீக மொழி, சீன திபெத்திய மொழி, சீன மொழி, தமிழ் (திராவிடக்குடும்பத் தலை மொழி), அரபு, ஹீப்புறு, ஸ்லாவாக்கிய (மசிடோனிய மற்றும் பலகேரிய) மொழிகள். இதில் பாவனையில் உள்ள வாழும் மொழி களாக தமிழ், பாரசீகம் (ஈரான்) சீனம், கிரேக்கம், எகிப்திய மொழி, சீன – தீபெத்திய மொழி, ஹீப்புறு, அரபு ஆகியன அடங்கும். அத்தோடு வழக்கிழந்து இறந்த மொழிகளாக சமஸ்கிருதம், பாளி, லத்தீன், ஆகிய மொழிகள் அடங்கும். இவை பேச்சு வழக்கில் இல்லாது விடினும் பல நூல்கள் இன்றும் பிரயோசனமான புழக்கத்தில் உள்ளன. அத்தோடு பல மொழிகளின் தோற்றத்திற்கு இம்மொழிகள் மூலமாக இருந்துள்ளன.

கிமு 2ம் நூற்றாண்டிலேயே தமிழ் நூல் உருப்பெற்றதற்கும் அதில் படைக்கப்பட்ட செய்யுள்கள் இலக்கண வரம்பிற்குட்பட்டும் இருந்தற்குச் சான்றே தொல்காப்பியம் ஆகும். அத்தோடு மொழிக்குமட்டுமல்லாது இதில் தமிழ் இசைக்கும் நாடகத்திற்கும்கூட இலக்கணம் வகுக்கப்பட்டிருப்பதனால் அதன் மொழி வளம் எப்படியாக கிமு 2ம் ஆண்டுகளிலேயே எவ்வளவு செழிப்புடனும் வளர்ச்சி பெற்ற மொழியாகவும் வாழ்ந்துள்ளதனை இலகுவில் ஊகிக்க முடியும். சமஸ்கிருதத்திலே இந்து சமய வேதங்களான இருக்கு, யசுர், யாமம் அதர்வம் ஆகியன படைக்கப் பட்டிருந்தன ஆனால் தமிழிலே சமயத்தினை விட்டு அதன் மொழிக்கே முக்கியத்துவம் கொடுத்து அம்மொழிக்கு இலக்கண நூல் படைக்கப்பட்டது. ஆகவே தமிழர்கள் மொழியின்பால் எவ்வளவு பற்றுக் கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. தொடர்ந்து வந்த முதல், இடை, கடைச்சங்க படைப்புக்களும் பெரும்பாலானவை வாழக்கை முறை, அகம், புறம், தர்மம், காதல், போர், இறைவன், இசை, நாடகம், இல்வாழ்கை, தத்துவம் வைத்தியம் போன்றவற்றைப் புகட்டும் நூலகளாகவேயிருந்தன.

> “ செம்மொழி எனும்போது
> அம்மொழித் தோற்றம்,
> அதில் இருக்கக்கூடிய இலக்கியங்கள்
> செழுமையாக, அநாதியானதாக, அந்த மொழியின்
> மூலத் தோற்றுவாயில்
> தனித் தன்மையான பாரம்பரியம் கொண்டதாக,
> வேறுறெரு மொழின் தாக்கம் அற்றதாக
> அத்தோடு
> பரந்த, ஆழமான, செழிப்பான, பழமையான
> இலக்கிய வளம் கொண்டதாக இருக்கவேண்டும். ”

உதாரணமாக இவற்றினை அகநானூறு, புறநானூறு, அகத்தியம், தொல்காப்பியம், திருக்குறள், பதினெண்கீழ் கணக்கு நூல்கள், பதினெண்மேல் கணக்கு நூல்கள், பத்துப் பாட்டு இன்னும் பலப்பல சங்க கால நூல்களில் காணலாம். பல்லவ அரசர் காலமே பத்தியிலக்கிய வடிவமெடுக்கிறது.

தமிழின் மொழி வளம் அதன் இலக்கிய வளம் ஆகியனவற்றை ஏனைய செம்மொழி காளாகிய சமஸ்கிருதம், லத்தின், சீனம், பரசீகம், அரபு மொழிகள் அதன் பழங்கால இலக்கியங்களுடன் ஒப்பிடுகையில் மிக மிக உயர்ந்ததாகவும் எதுவிதத்திலும் குறைவடையாததுமாய் உள்ளது. அத்தோடு தமிழ் நீண்டதொரு செம்மொழிப் பாரம்பரியத்தையும் இலக்கிய வளத்தினையும் கொண்டுள்ளதாக குறிப்பிடும் பேராசிரியர் ஜோச் எல் ஹாட் ( Prof George L Hart ) மேலும் உலகின் தலை சிறந்த படைப்பாகிய திருக்குறள் பலப்பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் மிகச் செழிப்பான உயர் நாகரீக வாழ்கையினை அது எழுதப்பட்ட காலத்தில் தமிழன் எப்படியாக வாழ்ந்தான் என்பதைப் படம்பிடித்துக் காட்டுவதாகக் கூறுகின்றார். உலகில் இன்று காணப்படும் இந்திய வேற்று மொழிகளின் ஆரம்பகால நூல்களுடன் ஒப்பு நோக்கும் போது தமிழ்ப் படைப்புகளே முதலில் தோன்றியதாக பல மொழியியல் ஆராச்சியாளர்கள் குறிப்பிடுவர்.

இந்திய மொழிகளிலும் அதன் பாரம்பரியத்திலும் தமிழ் ஒரு முதன்மையான நவீன மொழியாகும். இது சமஸ்கிருத்தத்தின் செய்யுள் பாரம்பரியத்திற்கூட தமிழ் இலக்கண ஆதிக்கம் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார் பேராசிரியர் ஜோச் எல் ஹாட். இந்திய செம்மொழிகளில் சமஸ்கிருதம், பாளி ஆகியனவை இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை ஆனால் தமிழ் மட்டுமே தனி இந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். இப்படியான ஒரு மொழி ஏன் முன்பே செம்மொழியாக அங்கீகரிக்கப்படவில்லையெனில் அதற்கு முழுக்க முழுக்க அரசியற் காரணமும் அது சார்ந்த இந்திய நடுவன் அரசுமே காரணம் என்று கூறமுடியும்.

உலகிலே கிரேக்கம் செம்மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ஆனால் ஐரோப்பிய மொழிகாளாகிய பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தமிழ் மொழியானது திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாகவும் தோற்றுவாயாகவும் இருக்கின்றது. தமிழ் இனமானது மிகவும் தொன்மையான இனமாக ஆசியாவின் நாகரீகத்திற்கே தோற்றுவாயாக அமைந்த சிந்து வெளி மொஹஞ்சதாரோ ஹறப்பா நாகரீத்தின் பிதாமகனாகத் திகழ்ந்த திராவிடரின் மூல வேராகவும் இருந்தது. இந்த இனம் கிறிஸ்துவுக்கு முன்பு 6,000 ஆண்டுகளுக்கு முன்பு செழுமையுடன் வாழ்ந்த ஒரு இனமாகும். தமிழ் மொழியின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்ப மொழி வரிவடிவாகிய பிராமியின் வழிவந்ததே தமிழ் மொழியாகும். இன்று உள்ள மொழித் தோற்ற வரிவடிவம் அப்போது இல்லாதிருந்தாலும் அப்போது அறியப்பட்ட திராவிடர் பாவித்த மொழியின் பரிணாம வளர்ச்சியே தற்போது பாவனையில் உள்ள தமிழ் மொழியாகும். சிந்து நாகரீகத்தின் மொஹஞ்சதாரோ ஹறப்பா நாகரீகங்களில் வாழ்ந்த மக்கள் திரவிடர்கள்தான் அவர்கள் பாவித்த மொழி திராவிட தமிழ் மொழியென பலவித ஆராச்சிகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. அந்த ஆராச்சியின் போது பெறப்பட்ட சில உலோக முத்திரைகளில் பதிக்கப் பெற்ற பெயர்கள் இன்றும் தமிழில் வழங்கப்படும் தமிழ் பெயராக இருப்பது குறிப்பிடக்கூடியது. உதாரணமாக கூத்தன், தக்கன், அண்ணி,



முருகேசு பாக்கியநாதன்

அரட்டன், அப்பன், ஐயன், சாத்தன், ஐயாவு, கக்கன், கந்தன் - கந்தப்பன், குப்பன் ஆகிய பெயர்கள் சிந்துவெளி நாகரீக புதைபொருள் ஆராச்சியாளர்களின் முறையே 232, 3762, 2190, 157, 2626, 6074, 4195, 7513, 4323, 6120, 2719, 2025 இலக்கங்கள் கொண்ட உலோக முத்திரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழின் தற்போதைய வரிவடிவம் கி.மு 500 ஆம் ஆண்டளவினதாகும். கி.மு 200 ஆண்டில் தமிழ் இலக்கண நூலாகிய தொல்பாப்பியம் எழுதப்பட்டது. முன்பே தோன்றி வளர்ச்சியடைந்த ஒரு மொழிக்கே இலக்கணம் வகுக்க முடியும். இலக்கணத்திற்கு மொழியினைப் படைக்கமுடியாது. தமிழானது செந்தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் அக்காலத்தே அழைக்கப்பட்டன. இலக்கண மரபுடன் எழுதப்படும் பேசப்படும் மொழியானது செந்தமிழ் என்றும் நாட்டு நடப்பில் பேசப்படும் அல்லது எழுதப்படும் மொழி வழக்கானது கொடுந்தமிழ் என்று வழங்கிற்று. கொடுந்தமிழ் என்பது கொடுமையான மொழியென்று கொள்ளக் கூடாது. இதனை இப்படியே மொழியியல் வல்லுனர்கள் அழைத்தனர்.

தமிழின் மூல வரிவடிவம் பிராமி வரிவடிவத்தின் ஒரு பரிணாம வளர்ச்சியே இதனை பல ஆராச்சியாளர்கள் நிறுவியுள்ளார்கள். தமிழ் என்பது வட்டெழுத்து வரிவடிவமாகும். இதன் ஆரம்பம் பிராமி வரிவடிவமாகும். இவ்வெழுத்துக்கள் ஆரம்ப காலங்களில் கல்லிலேயே செதுக்கப்பட்டு வந்தது. கி மு 5ம் நூற்றாண்டில் வட்டெழுத்து வடிவம் தோன்றி புழக்கத்தில் வந்தது. நேர்கோட்டு வடிவங்கள் பனை ஓலையில் எழுத்தாணியினால் எழுதும் போது ஓலை கிழியாமல் இருப்பதற்காகவே நேர் வரிவடிவில் இருந்த பிராமியின் தோற்றம் வட்ட உருப்பெற்றது. அத்தோடு இக்காரணத்தினால் எழுத்த்துக்களுக்கு புள்ளியும் போடப்படுவதில்லை.

உலக மொழிகளும் அவை தோன்றிய காலங்களும்.

- பிராமி - கிமு.6000ஆண்டு,
- பிராமி தமிழ் - கிமு.2000ஆண்டு
- சமஸ்கிருதம் - கிமு.2000ஆண்டு
- சீனம் - கிமு.1600ஆண்டு
- ஹீப்புறு - கிமு.1000ஆண்டு
- அரபு - கிமு.800ஆண்டு.
- லத்தின் - கிமு.600ஆண்டு
- நவீனகால தமிழ் - கிமு.500ஆண்டு
- பாளி - கிமு.100ஆண்டு
- ஹிந்தி - கி.பி.400ஆண்டு
- ஆங்கிலம் - கி.பி.500ஆண்டு
- கிரந்தம் - கி.பி.500ஆண்டு
- தெலுங்கு - கி.பி.600ஆண்டு
- கன்னடம் - கி.பி.700ஆண்டு
- மலயாளம் - கி.பி.900ஆண்டு
- சிங்களம் - கி.பி.900ஆண்டு
- தாய்லந்து - கி.பி.1300ஆண்டு
- குஜராத்தி - கி.பி.1600ஆண்டு

தமிழின் எழுத்துரு தோன்றிய வரலாறு பற்றி பின்னர் வேறொரு கட்டுரையில் நோக்குவோம்.

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

www.imayam.net

# என் குதிரை நல்லது



அ.முத்துலிங்கம்



அமெரிக்காவின் மொன்ரானா மாநிலம் எனக்குப் பிடிக்கும். கனடாவைத் தொட்டுக் கொண்டு இது வாஷிங்டனுக்கு பக்கத்தில் இருந்தது. ஏப்ரஹாம் லிங்கன் காலத்தில் இருந்தது போலவே இயற்கை வளங்கள் இன்றும் மனிதக் குறுக்கீடுகளில் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. நிறைய மலைத் தொடர்களும், ஆறுகளும். நேரம் தப்பாமல் சீறியடிக்கும் சுடுநீர்க் கிணறுகள் வனவிலங்கு சரணாலயங்கள். இவை எல்லாவற்றையும் மீறி நட்பான மனிதர்கள் அங்கே நிறைந்திருந்தார்கள்.

ஆனால் அங்கே போவதற்கு பிடிக்காத காரணம் ஒன்றும் இருந்தது. கணிதம். மொன்ரானாவுக்கு சேமமாகப் போய்ச் சேர்வதற்கு கணித அறிவு தேவை. நீங்கள் கணிதத்தில் வல்லவராக இருக்கவேண்டும். ரொறொன்ரோவில் இருந்து மொன்ரானாவுக்கு நேராக விமானத்தில் பறக்க முடியாது. முதலில் வாஷிங்டனுக்கு போகவேண்டும். கைக்கடிகாரத்தில் மூன்று மணி நேரத்தை பின்னுக்கு தள்ளி வைக்க வேண்டும். பிறகு மொன்ரானா போய்ச் சேர்ந்ததும் ஒரு மணித்தியாலம் முன்னுக்கு தள்ளி வைக்கவேண்டும். அல்லது முதலில் வடக்கு டகோட்டாவுக்கு போய் அங்கிருந்து மொன்ரானா போய்ச் சேரலாம். அப்படி என்றால் முதலில் ஒரு மணித்தியாலத்தை பின்னுக்கு தள்ளி வைத்து மொன்ரானா போனதும் மேலும் ஒரு மணித்தியாலத்தை பின்னுக்கு தள்ளவேண்டும். இந்த கணிதப் போராட்டம் நடக்கும்போது அநேகமாக உங்களுக்கு பிளேன் தவறிவிடும்.

மொன்ரானாவின் ஒடுக்கமான வீதிகளின் வழியாக காற்று சீறியடித்துக்கொண்டு வந்து என்னை முந்திச் சென்றது. அங்கே தனியார் விடுதிகள் பிரபலம். ஒரு வீட்டிலே மூன்று அல்லது நாலு அறைகள் இருக்கும். காலை உணவும் தருவார்கள். நான் தெரிவுசெய்த விடுதியில் அந்தச் சமயம் ஆறுபேர் தங்கியிருந்தார்கள். அதை ரோஸ் என்ற பெண்மணி நடத்தினார். முன்னால் எவ்வளவு அழகாக இருந்தாரோ அதே அளவுக்கு பின்னாலும் அழகாக இருந்தார். காலை உணவு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையாக இருந்தது. ஒரு நாள் அருந்திய உணவு இன்னொரு நாள் கிடைக்காது. உணவு பரிமாறிய பின்னர் ரோஸ் ஏப்ரனைக் கழற்றிவிட்டு மேசையின் முன்பாக வந்து கைகளைக் குவித்தபடி நிற்பார். நான் நினைத்தேன் இறைவணக்கம் கூறப் போகிறார் என்று. அப்படி இல்லை. அன்று நாம் உண்ணப் போகும் உணவு யாரால், எப்போது கண்டுபிடிக்கப் பட்டது, அதனுடைய பெயர் என்ன, அதன் செய்முறை என்ன, எப்படி அதை உண்ணவேண்டும் என்பதை எல்லாம் விளக்குவார். உங்கள் போசனம் நல்லாக அமையட்டும் என்று வாழ்த்திவிட்டு போய்விடுவார்.

19ம் நூற்றாண்டில் மொன்ரானாவில் வாழ்ந்த ஆனி சார்ள்ஸ் என்பவர் கண்டுபிடித்த விசேஷமான waffle அப்பத்தையும், வேகவைத்த அப்பிளையும் அன்று நாங்கள் சாப்பிட்டோம். அதன் சுவையை நான் வேறெங்கும் அனுபவித்தது கிடையாது. எனக்கு முன்னால் ஒடு சைஸ் ஸ்வெட்டரை முழுக்க நிறைத்தபடி ஒரு பெண் உட்கார்ந்து, பிளேட்டில் இருந்து கண் எடுக்காமல் சாப்பிட்டார். விடுதிப் பெண்ணின் கணவர்போல தோற்றமளித்த ஒருவரும் எங்களுடன் அமர்ந்து உணவருந்தினார். அவர் cowboy தொப்பி அணிந்திருந்தார். நான் தங்கியிருந்த ஏழு நாட்களும் அவர் எக்காரணத்தைக் கொண்டும் தொப்பியை கழற்றவில்லை. அவர் பேச்சு சுவாரஸ்யமாக இருந்தது. அதில் 'நல்லது' என்ற வார்த்தை அடிக்கடி வரும். மொன்ரானாவைப் பற்றி நிறைய அறிந்து வைத்திருந்தார். கால நிலைகள், வரைபடங்கள், பார்க்கவேண்டிய இடங்கள். பனிக்காலங்களில் கையுறை, பூட்ஸ் போன்றவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவற்றின் தரம் பற்றி பேசியவர் மொன்ரானாவின் cowboy கதை தெரியுமா என்று கேட்டார். யாரும் பதில் கூற முன்னரே அவர் கதையை சொல்ல ஆரம்பித்தார்.

அவர் சொன்ன கதை அமெரிக்க பேச்சு வழக்கில், மொன்ரானா உச்சரிப்பில், இருந்தது. இன்னும் சில வார்த்தைகள் அகராதியில் இல்லாதவை. அவர் கூறியதில் எனக்கு புரிந்ததை, என்னுடைய மொழியில், 'நல்லது' என்ற வார்த்தைகளை அகற்றிவிட்டு, கீழே தருகிறேன்.

அமெரிக்காவில் 1886ம் ஆண்டு பனிக்காலம் கொடுமையாக இருந்தது. எந்தச் சரித்திர புத்தகமும் அதைச் சொல்லும். கால்நடைகள் தீவனம் இல்லாமல் இறந்தன. மூஞ்சியால் பனிக்கட்டிகளை அகற்றியும் தரையில் உள்ள புல்லை அவற்றால் அடைய முடியவில்லை. பனிக்காலம் வழக்கத்திலும் பார்க்க முன்பாகவே இறங்கியிருந்தது. கண்களை மூடினால் இமையும் இமையும் சந்திக்கும் இடத்தில் நோவெடுத்தது. மாடுகள் நின்றபடியே இறந்து விழுந்தன அல்லது விழுந்து இறந்தன.

மொன்ரானா மாநிலத்தைச் சேர்ந்த ஓர் இளம் மாட்டுக் காவலன் (cowboy) அந்த வருடம் முழுக்க பனிக்காலத்துக்காக பணத்தை சேமித்திருந்தான். குளிரிலிருந்து தப்புவதற்கான கோட்டிலோ, கையுறைகளிலோ அவன் பணத்தை செலவழிக்கவில்லை. அதில் மிச்சம் பிடித்த காசை எல்லாம் கொடுத்து கையினால் செய்யப்பட்ட ஒரு பூட்ஸை நல்ல விலைக்கு வாங்கினான். அது பளபளவென்று விளிம்பிலே செய்த வேலைப்பாடுகளுடன், கொடுத்த ஒவ்வொரு சதத்துக்கும் பெறுமதியானதாக இருந்தது. அதைக் காலிலே அணிவதற்கு அவனுக்கு தயக்கமாக இருந்தது. அவ்வளவு அழகு.

பக்கத்து வயோமிங் மாநிலத்தில் பனிக்குளிர் குறைவு என்று யாரோ சொன்ன வார்த்தைகளை நம்பி எல்லைக் கோட்டை கடந்து அந்த மாநிலத்துக்குள் நுழைந்தான். அவன் தரித்திருந்த மேலங்கியோ, உடைகளோ, கையுறைகளோ அவனுடைய பூட்ஸ் அளவிற்கு உயர்ந்ததாக இல்லை. வயோமிங் குளிர் உண்மையில் மிகவும் அதிகமாக இருந்தது. அவன் அணிந்திருந்த உடை போதுமானதாக இல்லை. இரண்டு கால்கள் மாத்திரம் கதப்பாக இருந்தன. பவுடர் ஆற்றைக் கடந்த போது அவன் குளிரினால் விறைத்துப்போய் அந்த இடத்திலேயே விழுந்து இறந்து போனான்.

அடுத்த நாள் நண்பகல் குதிரையில் ஆற்றைக் கடந்த மூன்று பேர் மரக்கட்டைபோல கிடந்த அந்தப் பிணத்தைக் கண்டார்கள். அதில் இருவர் சகோதரர்கள். அவர்கள் இருவரும் அருகருகே பயணம் செய்தார்கள். பனிக்குளிருக்கு பொருத்தமான ஆடைகளை அணிந்திருந்தார்கள். சற்று பின்னால் வந்தவன் பஞ்சத்தில் அடிபட்டவன்போல இருந்தான். தரித்திரமான ஆடைகள். அவன் அணிந்திருந்த பூட்ஸ் முன் பக்கம் பிளந்துபோய் உள் காலை பார்க்கக்கூடிய விதமாக இருந்தது.

மூவரும் பிணத்தின் அருகே வந்து குதிரையில் அமர்ந்தபடியே அதைப் பார்த்தார்கள். பிணம் அரைவாசி பனியில் புதையுண்டு போய்க் கிடந்தது. அதனுடைய முகம் நீலமாக மாறியிருந்ததால் அந்த முகத்தின் சொந்தக்காரனின் உண்மையான நிறம் என்ன என்பது ஊகிக்கக்கூடிய விதத்தில் இல்லை.

தரித்திரம் பிடித்தவனுடைய பெயர் சீட்ஸ். இறந்தவனுடைய பூட்ஸையே நெடுநேரம் உற்றுப் பார்த்த அவன் திடீரென்று கத்தினான். 'அவனுடைய கால் அளவும், என்னுடையதும் ஒன்றுபோல இருக்கிறது' என்று சொல்லிவிட்டுக் குதித்தான். அந்தப் பிணத்தின் காலில் இருந்த பூட்ஸை கழட்டுவதற்கு எவ்வளவோ முயன்றான். முடியவில்லை. அது உறைந்து போய்க் கிடந்தது. எங்கே பூட்ஸ் முடிகிறது, எங்கே சதை தொடங்குகிறது என்பது தெரியவில்லை.

அவனுக்கு அதை விட்டுவிட்டு வர விருப்பமும் இல்லை. மற்ற இருவரும் குதிரையின் மேலேயே இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் போல தோன்றியவன் 'ஏ சீட்ஸ், காலை வெட்டி எடு. பிறகு பூட்ஸை உருவிக் கொள்ளலாம்' என்றபடியே தன் கத்தியை நீட்டினான். சீட்ஸ் இரண்டு கால்களையும் பூட்க்கு ஒரு சேதமும் ஏற்படாமல் வெட்டி எடுத்துக்கொண்டான். எலும்பு பகுதியை வெட்டுவது சிரமமாக இருந்ததால் முறிக்கவேண்டி இருந்தது. இரண்டு சோடியையும் கயிற்றிலே கட்டி கழுத்திலே மாலைபோல அணிந்து கொண்டு குதிரையில் ஏறினான். குதிரையில் பயணித்த அவ்வளவு நேரமும் அந்த பூட்ஸ் விளிம்பில் காணப்பட்ட அற்புதமான இலை, பூ வேலைப்பாட்டை நினைத்தபடியே வந்தான்.

மாலை நெருங்கிக்கொண்டு வந்தது. சகோதரர்களில் மூத்தவன் சொன்னான், 'இன்று நாங்கள் வழக்கமாக இளைப்பாறும் தங்கு மடத்துக்கு போக முடியாது. இருட்டியபின் வழி தவறிவிடும். பக்கத்தில் கிழவன் கிரைஸின் விடுதி இருக்கிறது. இன்றிரவு அங்கே சமாளிப்போம்.' மற்றவன் 'கிழவனிடம் ஏதாவது சாப்பிடக் கிடைக்கும். ஒரு சிறு கணப்பு அடுப்பு இருந்தாலும் போதும். தேகம் முறிகிறது' என்றான்.

குளிர் சரசரவென்று கீழே இறங்கியபடியே இருந்தது. துப்பினால் அது படீர் என்று வெடித்தது. சிறுநீர் கழிப்பதற்கு அஞ்சினார்கள். குதிரையில் இருந்து கீழே இறங்கி அந்த முயற்சியை தொடங்கினால் அப்படியே தரையுடன் ஒட்டிக் கொண்டு விடுவோமோ என்ற பயந்தார்கள். வயோமிங்கின் மோசமான குளிர் காற்று அடிக்கும் ஒவ்வொரு முறையும் அவர்களின் எலும்புகள் கூசின.

நல்ல காலமாக கிழவன் கிரைஸ் வீட்டிலே இருந்தான். 'வாருங்கள், வாருங்கள்' என்று உபசரித்தான்.

'குதிரைகளை எங்கே கட்டலாம்?"

'உள்ளே குதிரைக்கு இடமில்லை. அங்கே வெளியே ஒரு தடுப்பு இருக்கிறது. அதற்குள் கட்டுங்கள். என்னுடைய இரண்டு குதிரைகள் உள்ளே இருக்கின்றன. நீங்கள் குதிரைகளுடன்தான் படுக்கவேண்டும். ஒன்று சாதுவானது. மற்றது கொஞ்சம் கடிக்கும் அல்லது துப்பும். பயமே இல்லை'

அது ஒடுக்கமான அறை. அதில் பாதியை குதிரைகள் பிடித்துவிட்டன. அறை முழுக்க குதிரைகளின் மணமே நிறைந்திருந்தது. உண்மையில் அவர்கள் குதிரையின் அறையையே வாடகைக்கு பிடித்திருந்தார்கள். 'உங்கள் இடங்களை நீங்களே தேடிப் படுங்கள்' என்றான் கிழவன்.

சிறிது நேரத்தில் சுடச் சுட ரொட்டியும், சூப்பும் வந்தது. கணப்பில் சூடு கிளம்பிவர, மது அருந்தியபடி நாலு பேரும் பழைய கதைகள் பேசினார்கள். கிழவன் ஒரு பொய் சொல்ல இவர்கள் ஒரு பொய் சொல்ல காலம் சுகமாகப் போனது. குதிரைகளின் மூச்சுக் காற்றும் கதகதப்பை கூட்டியது.

இவர்களுடைய அந்த இரவு சந்தோசத்தைக் கெடுத்த ஒரே விடயம் கிழவன் இவர்களிடம் அறவிட்ட பணம்தான். நாலு டொலர் எழுபது காசு. அதை நினைத்து கொஞ்ச நேரம் அமைதி இழந்து கிடந்தார்கள். கடைசியில் நடு நிசி அளவில் கிழவன் விளக்கை அணைத்தான். சகோதரர்கள் இருவரும் வழக்கம் போல அருகருகே படுத்து தூங்கினார்கள். சீட்ஸ் சற்று தள்ளி குதிரைகளுக்கு பக்கத்தில் படுத்துக் கொண்டான். அவற்றின் குளம்பு மாறும் சத்தம் அவனுக்கு தாலாட்டுவதுபோல இருந்தது. கடைசித் தடவையாக தான் வெட்டி வந்த பூட்ஸை இருட்டில் தடவிப் பார்த்து, தலை மாட்டில் வைத்தபடி உறங்கிப் போனான்.

அதிகாலையில் விழித்தது சீட்ஸ்தான். முதல் வேலையாக தலைமாட்டில் இருந்த பூட்ஸை தொட்டுப் பார்த்தான். அது சூட்டுக்கு உலர்ந்து போய் இருந்தது. மெள்ள ஆட்ட உள்ளே

89ம் பக்கம் பார்க்க...

கால் அசைந்தது. தலைகீழாகப் பிடித்து கால்கள் இரண்டையும் வெளியே இழுத்தான். பூட்சுக்குள் தன் கால்களை நுழைத்தான். அது கச்சிதமாகப் பொருந்தியது. தன்னுடைய பழைய பூட்சுகளையும், கால் துண்டுகளையும் அந்த இடத்தில் விட்டுவிட்டு புறப்பட்டான்.

சகோதரர்களை அவன் எழுப்பவில்லை. விடுதிக்கார கிழவனையும் எழுப்பவில்லை. அவனுடைய அம்மாவுக்கு ஒரு தந்தி கொடுக்கவேண்டும். அன்று அவளுடைய பிறந்த நாள் அவள் காத்துக்கொண்டு இருப்பாள். இப்பொழுதே புறப்பட்டு போனால்தான் தந்தி அலுவலகம் மூடமுன் போய்ச் சேரலாம்.

கிரைஸ் கிழவன் கோப்பியை வறுத்து, பிறகு அரைக்கும் சத்தம் கேட்டது. மூன்று கோப்பி தயாரித்துக்கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தான். அவன் கண்ணில் முதலில் பட்டது இரண்டு கால் துண்டுகளும், பூட்சும் தான். குதிரை பூட்சை நக்கிக்கொண்டு நின்றது. ஆட்களை எண்ணிப் பார்த்தான். இரண்டு பேர்தான் இருந்தார்கள்.

‘ஐயோ மோசம் போயிட்டேனே, ஐயோ மோசம் போயிட்டேனே’ என்று அலறத் தொடங்கினான்.

சகோதரர்கள் இருவரும் பதறியடித்துக்கொண்டு எழும்பினார்கள்.
‘என்ன? என்ன?’
‘என்னுடைய குதிரை நல்லது. அது கடிக்குமே ஒழிய சாப்பிடாது. உங்கள் நண்பரை அது முழுக்க சாப்பிட்டுவிட்டது. இரண்டு கால்கள் தான் மிச்சம். அதைச் சாப்பிடமுன் நான் வந்துவிட்டேன். இந்தக் குதிரை இதற்குமுன் இப்படி செய்ததே கிடையாது.’ என்று தலையிலடித்தபடி அரற்றினான்.

சகோதரர்கள் இருவரும் வெளியே வந்த புன்னகையை மறைத்தபடி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

கிழவன் அந்தக் குதிரையை பிடித்து இழுத்து அடி அடியென்று அடித்தான். அப்படியும் போதாமல் உதைத்து அதை வெளியே துரத்திவிட்டு சகோதரர்களின் காலில் வந்து விழுந்தான்.

‘இதோ பாருங்கள். நான் வேண்டுமென்று செய்யவில்லை. என்னை மாட்டி விடாதீர்கள். என் வாழ்நாள் முழுக்க சேமித்த காசு நாப்பது டொலர் இங்கே இருக்கிறது. நேற்று உங்களிடம் அறவிட்டது நாலு டொலர் எழுபது காசு. இதையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். யாரிடமும் இது பற்றி மூச்சு விட வேண்டாம். கெஞ்சிக் கேட்கிறேன். என் குதிரை நல்லது.’ என்றான்.

சகோதரர் இருவரும் காலை உணவை முடித்துக்கொண்டு (இலவசம்தான்) குதிரைகளில் ஏறி தங்குமடத்தை நோக்கி புறப்பட்டார்கள். மெல்லிய சூரியன் சிரித்துக்கொண்டு வெளியே வந்தான். காது எட்டாத தூரத்துக்கு வந்ததும் இருவரும் பலமாக சத்தம் போட்டு சிரிக்கத் தொடங்கினார்கள்.

சிறிது தூரம் அப்படியே போனதும் தம்பிக்காரன் கேட்டான், ‘அண்ணா, நீதான் கணிதத்தில் விண்ணனாச்சே. எனக்கு பள்ளிக்கூடத்தில் கணிதமே வராது. 40 டொலர். இன்னும் 4 டொலர் 70 காசு. உனக்கு எவ்வளவு, எனக்கு எவ்வளவு’ என்றான். ‘பொறுத்துக்கொள், தம்பி’ என்றான் அண்ணன்காரன்.

ஒரு குளம் பனியில் கட்டியாகிப்போய் இருந்தது. அதைத் தாண்டி அடுத்த கரைக்கு போய்ச் சேர்ந்தார்கள். தங்குமடம் வருவதற்கிடையில் இன்னொரு முறை தம்பிக்காரன் அதே கேள்வியைக் கேட்டான். ‘அண்ணா, எனக்கு சேரவேண்டிய பாதி எவ்வளவு?’ அண்ணன் பதில் சொல்லவில்லை. அந்தக் கணிதம் தம்பிக்காரன் மூளைக்கு எட்டாத தொலைவில் இருந்தது.

அன்று இரவு தங்குமடத்துக்கு சீட்சும் வந்து சேர்ந்தான். அவனுடைய காலில் புது பூட்ஸ் மினுமினுத்தது. ‘உன்னுடைய அம்மாவுக்கு தந்தி அனுப்பினாயா?’ என்று சகோதர்கள் கேட்டார்கள். அவன் அதற்கு ம் என்று பதில் சொன்னான். ‘வாழ்த்துக்கள்’ என்றார்கள். 40 டொலர்கள் பற்றி அவனிடம் அவர்கள் மூச்சு விடவில்லை.

அவர்களுக்கு ஒரு வசதியான அறை அன்றிரவு கிடைத்தது. குதிரைகளோடு அறையை பகிர்ந்து கொள்ளத் தேவையில்லை. கணப்பு அடுப்பும் அளவான சூடு கொடுத்தது. முதல் நாள் இரவு போல சீட்ஸ் சற்று தள்ளிப் படுத்துக் கொண்டான். அவன் தலை மாட்டில் புது பூட்ஸ் இருந்தது. அதை தொட்டுப் பார்த்தபடி தூங்கிப்போனான்.

வழக்கம்போல் சகோதரர்கள் இருவரும் பக்கத்துப் பக்கத்தில் படுத்துக் கொண்டார்கள். ஒரு வித்தியாசம். அவர்களுக்கு நடுவில் கணிதமும் படுத்திருந்தது.

கடந்த பதினைந்து மாதங்களாக இந்தக் கதையை நான் என் மூளையிலே காவியபடி திரிந்தேன். இது ஒரு நாட்டுப்புறக் கதை. மொன்ரானா மாநிலத்தில் பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வந்திருக்கலாம். ஆனால் எங்கோ, ஏதோ இடித்தது. கதையின் முடிவு ஒரு நாட்டுப்புறக் கதை போலவே இல்லை. அதில் இலக்கியம் இருந்தது.

சமீபத்தில்தான் இந்த புதிர் உடைந்து போனது. இது அனி புரூலிக்ஸ் என்பவருடைய கதை. அவருடைய கதையைப் படித்துவிட்டு அந்த மனிதர் சொன்னாரோ அல்லது அவர் சொன்ன கதையை அனி புரூலிக்ஸ் எழுதினாரோ தெரியவில்லை.

அனி புரூலிக்ஸ் என்பவர் அமெரிக்காவின் சிறந்த படைப்பாளி. நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள் என்று நிறைய எழுதியிருக்கிறார். இவருடைய Shipping News நாவல் புலிட்ஸர் பரிசைப் பெற்றது. பல சிறுகதைகளுக்கு ஓ ஹென்றி பரிசு கிடைத்திருக்கிறது. சமீபத்தில் இவருடைய Brokeback Mountain சிறுகதையை திரைப்படமாக எடுத்திருந்தார்கள். அது பல பரிசுகளையும் மூன்று ஒஸ்கார் விருதுகளையும் வென்றிருக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்தபோது எனக்கு பிரமிப்பு ஏற்பட்டது. இரண்டு ஆண்களின் காதலை இவ்வளவு நுட்பமாக ஒரு பெண்ணால் எப்படி சொல்லமுடிந்தது?

பழந் தமிழ் பாடல்களில் இடைச் செருகல் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இடைச் செருகல் செய்பவர் மூலப் பாடலை தான் மேம்படுத்துவதாகத்தான் நினைக்கிறார். இந்த மனிதரும் கதை சொல்லும்போது தன் கற்பனையை நிறைய விரித்திருக்கிறார் என்பது தெரிந்தது. யோசித்துப் பார்க்கும்போது இவர் சொன்ன கதை அனி புரூலிக்சின் கதையை விட சிறந்ததாகத்தான் எனக்கு பட்டது.

muththulingam.a@thaiveedu.com

■ ■ ■


**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium

Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**Tel: 647 262 9430**



**இலவசப் பயிற்சி நெறிகள்**



**Co-op Placement**

உங்களுக்கான பயிற்சி நெறிகள் முடிவடைந்ததும் Co-op Placement மூலம் Canadian Work Experience ஐப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்

**New Diploma**
- Accounting and Payroll Administration

பயிற்சி முடிந்ததும் Canadian Payroll Association (CPA) Licence க்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும்

**Other Diplomas**
- Computerized Accounting
- Office Assistant

**FREE**
**Free Computer Basic Classes**
starts Oct. 18th @ Scarborough
Oct. 24th @ Etobicoke

**JRS COLLEGE**
OUR COMMITMENT IS QUALITY TRAINING

**Scarborough Campus**
(Midland & Finch)
PH 16 -4168 Finch Ave. E,
Scarborough, ON M1S 5H6
Tel: **416.292.2455**

**Etobicoke Campus**
(Kipling & Dundas)
300-5359 Dundas St. West
Etobicoke, ON M9B 1B1
Tel: **416.207.9975**

# நிரந்தர வதிவிட உரிமையும் அடையாள அட்டையும்


### நிரந்தர வதிவிட உரிமை உள்ளவர்களுக்கான அடையாள அட்டைகள்.

கனடாவில் குடியுரிமை பெற்றவர்களுக்குப் புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களும் அதை நிரூபிப்பதற்கு அடையாள அட்டை (PR CARD) வைத்திருப்பார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று வருபவர்களுக்கு, எல்லையைக் கடப்பதற்கு இப்படியான அட்டைகள் பெரிதும் உதவியாக இருக்கும். கனடாவில் நிரந்தர வதிவிட உரிமைக்குரிய காலம் வந்ததும் நீங்கள் அதற்காக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப பத்திரம் நிரப்பும்போது சில விடையங்களில் முக்கிய கவனம் செலுத்துவது நல்லது.

குறிப்பாக நிரந்தர வதிவிட உரிமை அடையாள அட்டை பெறுவதற்கு,

- நீங்கள் கனடாவின் நிரந்தர வதிவிட உரிமை பெற்றவராக இருக்க வேண்டும்.
- கனடாவில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- நாடு கடத்துவது சம்பந்தமான, நீதிமன்றத் தீர்ப்பால் பாதிக்கப்படாதவராக இருக்க வேண்டும்.
- கனடியக் குடியுரிமை கொண்டவராக இருக்கக்கூடாது.
- இந்தியச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட இந்தியனாக இருக்கக்கூடாது.

மேற்கூறிய தகுதிகளைக் கொண்ட, இப்படியான நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களுக்குப் புகைப்படங்களோடு கூடிய அறிமுக அட்டைகள் யூன் மாதம் 2002ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டன. அத்தகைய அட்டைகளில் சில குறைபாடுகள் இருந்ததால் அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு 2007ம் ஆண்டு புதிய அடையாள அட்டைகள் சில திருத்தங்களுடன் வழங்கப்பட்டன. இந்த அட்டைகள் நவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டு அமைக்கப் பட்டதாகவும் அதிக விபரங்களைத் தன்னகத்தே கொண்டதாகவும், ஓரளவு பாதுகாப்பானதானவும் இருக்கின்றன. இத்தகைய அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பத்தோடு இணைப்பதற்காக எடுக்கப்படும் புகைப்படங்களில் சிறிது மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.




### புகைப்படங்களின் முக அளவு பற்றிய புதிய மாற்றங்கள்.

நிரந்தர வதிவிட உரிமைக்குரியவர்கள் இத்தகைய அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பப் பத்திரங்களில் சில புதிய மாற்றங்கள் இடம் பெற்றுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும். பலர் இந்தப் புதிய மாற்றங்களைக் கவனிக்காமலே புகைப்படம் எடுத்து நேரத்தையும், பணத்தையும் விரையம் செய்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாகப் புதிய முறையில் புகைப்படங்களின் அளவில் எந்தவித மாற்றமும் இல்லா விட்டாலும் முக அளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அடையாள அட்டைக்குரிய புகைப்படங்கள் 35 மி.மீ (1.375) 45 மி.மீ (1.75) அளவுள்ளதாகவே தொடர்ந்தும் இருக்கும், ஆனால் புகைப்படம் எடுக்கும் போது முகத்தின் அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தலையில் இருந்து நாடிவரையில் உள்ள பகுதி 25 மி.மீ (1அங்குலம்) 30 மி.மீ (1.181) வரையில் அமையவேண்டும். பழைய புகைப்படங்களில் 25 மி.மீ க்கும் 35 மி.மீ க்கும் இடைப்பட்டதாக அமைந்திருந்தன. எனவே நீங்கள் புகைப்படம் எடுக்கும்போது என்ன தேவைக்காகப் புகைப்படம் எடுக்கிறீர்கள் என்பதைப் புகைப்படப் பிடிப்பாளரிடம் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

### புகைப்படத்திற்கு உரிய முக்கிய கவனிப்புகள்.

நிரந்தர வதிவிட உரிமை அடையாள அட்டைக்குரிய புகைப்படங்கள் பாஸ்போட் புகைப்பட அளவை விட வித்தியாசமானவை.

- நீங்கள் விரும்பினால் கண்ணாடி அணிந்திருக்கலாம் ஆனால் உங்கள் கண்கள் தெளிவாகத் தெரியவேண்டும். எந்தக் காரணம் கொண்டும் கண்கள் மறைக்கப் படக்கூடாது. இத்தகைய புகைப்படங்களுக்குக் கறுப்புக் கண்ணாடி அணிவது அனுமதிக்கப்படமாட்டாது.
- புகைப்படம் எடுக்கும்போது உங்கள் தலை முடியின் அமைப்பு வழமையான தோற்றத்தில் இருந்து மாறுபடுக்கக்கூடாது.
- புகைப்படம் உங்கள் முகத்தைத் தெளிவாகக் காட்டுவதாக அமையவேண்டும். மதக் கோற்பாடுகள் காரணமாகத் தலையை மூடிமறைத்திருந்தாலும் முகம் தெளிவாகப் புகைப்படத்தில் காட்டப்பட வேண்டும்.


குரு அரவிந்தன்

- விண்ணப்பப் பத்திரத்தோடு இணைக்கப் படும் புகைப்படங்கள் சமீபத்தில் எடுத்ததற்கான அத்தாட்சி இருக்க வேண்டும்.
- புகைப்படங்கள் கறுப்பு வெள்ளையாகவோ அல்லது வண்ணமாகவோ இருக்கலாம்.

### புகைப்படப் பிடிப்பாளர்களுக்கான முக்கிய குறிப்பு:

- இரண்டு பிரதிகள் எடுக்கப்படவேண்டும். இரண்டு படங்களிலும் முன்பக்க முகம் தெரியக்கூடியதாகவும், படத்தின் மத்தியில் முகம் வரக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- மிகவும் தெளிவானதாகவும், நிழல் படாததாகவும், வெள்ளை நிறப் பின்னனி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.
- இரண்டு புகைப்படங்களும் ஒரே மாதிரியானவையாக இருக்க வேண்டும்.
- புகைப்படங்கள் இரண்டும் மூலப் பிரதியாக இருக்க வேண்டும். பழைய படங்களில் இருந்து எடுத்த பிரதியாக அவை இருக்கக் கூடாது.
- தலைக்கும் நாடிக்கும் இடையே உள்ள பகுதி 25 மி.மீ தொடக்கம் 30 மி.மீ வரையிலான புகைப்படமாக இருக்க வேண்டும்.
- முழுப்படத்தின் அளவு 35 மி.மீ அகலமும் 45 மி.மீ நீளமும் கொண்டதாக இருக்க வேண்டும்.
- புகைப்படத்தின் பின் பக்கத்தில் புகைப்படம் எடுக்கப்பட்ட திகதி தெளிவாகக் குறிப்பிடபடவேண்டும். அது புகைப்படம் பிரதி செய்யப்பட்ட திகதி அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒட்டக்கூடிய காகிதத் துண்டுகளில் முத்திரை குத்தி, பின் பகுதியில் ஒட்டுவது அனுமதிக்கப்படமாட்டாது.

எனவே அடையாள அட்டைகளுக்காகப் புகைப்படம் எடுக்கும்போது புகைப்படப் பிடிப்பாளரிடம் உங்கள் தேவை என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டால், சரியான புகைப்படத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் நேரத்தையும் பணத்தையும் மிச்சம் பிடித்துக் கொள்ள முடியும்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420


Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9




# மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்


**Great Deals For Buyers**

**Eglinton/Bathurst**

**$34,300**
Sale Of Business, Demand Location!! Newly Renovated,Opportunity To Own Style Restaurant.

**Torbram/Sandalwood**

**$269,900**
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Morningside/Hwy 401**

**$349,900**
Detached 2-Storey, 3+3 Bedrooms, 4 Washrooms

**Gore Rd/Tyler**

**$374,800**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Cottrelle And The Gore Road**


**$429,900**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Taunton/Salem**

**$449,000**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**The Gore/Ebenezer**

**$729,000**
Detached 2 Storey, 4 Washrooms, 4 Bedrooms, Lots Of Upgrades

**Sale of Business - Brampton**

**$39,000**+ Stock
Sandalwood / Vankirk
Price Reduced!!!!
3 Years New

**Warden / Lawrence**


Sold for 102% of asking Price
**I Need More Listings!!!!**

**For Sale - Toronto**


Sold for 109% of asking Price
Yonge/Finch

**For Sale - Brampton**



**$289,900**
North Park/Nuffield
3+1 Bdrm, 3 Wrm,
Great Location,
Basement Fin.

**For Sale - Brampton**



Sold for 100% of asking Price
Willms Pkwy/Royal Orchard

**Keele/Finch**



**$179,000**
Condo Apt.

**Kennedy/Eglinton**


**$179,000**
Condo Apt.

**Hwy 10/Bovaird**


**$279,000**
Semi-Detached 2-Storey

**Centennial/Lawrence**


**$403,200**
Detached 2-Storey

**Bovaird/Worthington**


**$439,000**
Detached 2-Storey

**The Gore/Ebenezer**


**$548,000**
Detached Bungalow

**Markham Rd/Bur Oak**


**$564,000**
Detached 2-Storey

-digi Media-

## Call before you list, See the Difference!!!



## Sathy Sivasubramaniam
Sales Representative
Dir: **416-624-5044**
homelifesathy@gmail.com
www.homelifesathy.com

HomeLife Higher Standards

## Ruby Thambiah
Sales Representative
Dir: **416-999-5337**
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com



**HomeLife**/Future Realty Inc. Brokerage | Independently Owned and Operated | 205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8 | Tel: 905-201-9977 Fax: 905-201-9229



## ONE STOP SOLUTION FOR ALL YOUR **MORTGAGE** NEEDS

## Nithy Sathyakumar, AMP
Mortgage consultant, Lic #M08008999
**BonaFide Mortgage Solutions**
Direct: **416 728 2454**
E-mail: nithy.s@bmsic.com
Fax: 416 548 7496

BonaFide Mortgage Solutions Inc.

## காதல் வாழ்க்கை - 11

# கணவனைப் பேணும் மனைவி



வி. கந்தவனம்

தலைவன் அறிவும் ஆற்றலும் மிகுந்தவன், அருஞ் செயல்களால் புகழ் பெற்றவன், குண நலமும் கொடைவளமும் உள்ளவன், பழி பாவங்களுக்கு அஞ்சுபவன், கொண்ட குறிக்கோளை மறவாதவன், துணிவு மிகுந்தவன்.

தலைவி அன்புள்ளவள், சொல் திறம்பாத மனத்திட்பம் மிகுந்தவள், நற்பால் ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலியவற்றில் சிறந்தவள்.

இருவரும் காதல் வயப்பட்டுக் கற்பு மணம் செய்துகொண்டனர்.

திருமணத்தைத் தொடர்ந்து அவள் அவனுடன் தனிக்குடித்தனம் நடத்தச் சென்று விட்டாள். சென்றநாள் முதலாக அவளின் தாய்க்கு நிம்மதி இல்லை. ‘மகளைச் செல்லமாக வளர்த்துவிட்டேன். சரியாகச் சமைக்கக்கூடத் தெரியாது. எப்படித்தான் கணவனுக்குச் சமைத்துப் போடுகிறாளோ’ என்றெல்லாம் தாய் கவலை கொள்ளத் தொடங்கினாள்.

தாயின் கவலையைப் போக்க நினைத்தாள் செவிலி. செவிலி என்பவள் அவளது தோழி. தலைவியின் வளர்ப்புத்தாய். செவிலி தலைவியிடம் மிகுந்த அன்பு கொண்டவள், தலைவி தலைவன் காதலுக்கு உதவியாக இருந்தவள். தலைவி தனது தாயிடம் கூறிகொள்ள முடியாத அந்தரங்கமான பல விடயங்களைச் செவிலியிடமே கூறுவது வழக்கம். தலைவியின் காதல்பற்றிப் பெற்றோருக்குக் கூறித் திருமணத்துக்கு வழிவகுத்தவளும் செவிலி தான்.

தனது தோழியின் கவலையைக் குறிப்பால் உணர்ந்து கொண்டாள் செவிலி. எனினும் அவள் அதுபற்றிப் பெரிதும் கவலைப்படவில்லை. தலைவியை வளர்த்தவள் என்ற வகையில் அவளின் திறமைகளைச் செவிலி நன்கு அறிவாள். தலைவிக்கு ஓரளவு உணவு சமைக்கத் தெரியும் என்பதும் அவளுக்குத் தெரியும். சமைக்கப் பழக்கியவளும் அவள்-தானே!

இருந்தாலும் உணவு ஆக்கத் தெரியும் என்பது வேறு, கொண்ட கணவன் விரும்பி உண்ணும் வகையில் சமைப்பது என்பது வேறு. சுவை என்பது நாவுக்கு நா வேறு பட்டதல்லவா? ‘போய்த்தான் நேரிலே பார்த்து வருவோமே’ என்று புறப்பட்டுவிட்டாள் செவிலி.



தலைவியும் தலைவனும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று அங்கு தலைவி அதி கவனத்துடன் சமைத்துத் தன் கணவன் உவக்கும்படி உணவிட்டதையும் பிற சிறப்புகளையும் கண்டு அவள் மகிழ்ச்சியுற்றாள். திரும்பிவந்து தான் நேரிலே கண்டதைத் தன் தோழிக்கு (தலைவியின் தாய்க்கு)க் கூறுகின்றாள்.

‘தோழி, உன் மகளுக்குச் சமைக்கத் தெரியாது என்றா கவலைப்படுகிறாய்? அவள் புளிக் குழம்பு சமைத்து அன்போடு தன் கணவனுக்கு உணவு பரிமாறியதைப் பார்த்தேனே. கணவன் சமையல் பிரமாதம் என்று சொல்லிச் சாப்பிட்டான். அவள் நாணத்தால் எதுவுமே பேசாது உள்ளார மகிழ்ந்தது மெல்லிதாக முகத்தில் தெரிந்தது. எப்படிச் சமையல் செய்தாள் என்று கேட்கிறாயா?

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்(து) அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே
(குறுந்தொகை 167)

‘அவள் நன்கு திரண்டு பதமுற்ற தயிரை எடுத்தாள். அதனைத் தனது காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் நன்றாகப் பிசைந்து புளிக்குழம்பு காய்ச்சத் தொடங்கினாள். அப்பொழுது அவளது சேலை அவிழ்ந்து தொங்கியது. கை கழுவிக் காலம் தாழ்த்தினாற் குழம்பு பதம் கெட்டுவிடுமோ எனக் கருதித் தயிர் பிசைந்த கையாலேயே சேலையை உடுத்தாள். புளிக் குழம்புக்குச் சுவை சேர்க்கத் தாளிதம் செய்யலானாள். அப்பொழுது தாளிதப் புகை அவளது மையுண்ட கண்களை வருத்துவதைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. எனினும், அதனை அவள் பொருட்படுத்தாது துழாவித் துழாவி இதமாகச் சமைத்தாள்.

‘கணவன் வந்ததும் உணவை அன்போடு பரிமாறினாள். அவன் புளிக் குழம்பு நல்ல சுவையாக இருக்கிறது என்று சொல்லி உண்டான். அவள் அகம் குளிர்ந்தாள். மகிழ்ச்சியை நாணத்தால் அவள் மறைக்க முயன்றபோதும் அது அவளது ஒளிபொருந்திய முகத்திலே நுண்ணியதாக வெளிப்பட்டது’ என்று கூறித் தாயின் கவலையைப் போக்கினாள் செவிலி.

இல்லறத்தின் சிறப்புகள் பலவகை. அவற்றில் மனைவி அன்புடன் கணவனைப் பேணுதல் என்பது முக்கியமானது. பேணும் முறைகளும் பலவிதம். கணவனுக்கு உகந்த வகையில் சமையல் செய்வது அவற்றுள் ஒன்று. அதனைச் சிறப்பாகத் தலைவி செய்தாள் என்று கூறுகின்றாள் செவிலி.

அவ்விதம் கூறுகையில், விலை உயர்ந்த சேலையை அவள் அசட்டை செய்த விதத்தால் அவளது செல்வச் சிறப்பையும், கை கழுவாது சேலை உடுத்தும் தலை நிமிராது குழம்பைக் காய்ச்சியும் அவள் சமயலிற் காட்டிய அக்கறையையும், கணவன் இனிதென உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தாள் என்று கூறிப் பெண்களுக்கு இருக்கவேண்டிய அடக்கமும் அவளிடத்தில் நிறையவே இருந்தது என்பதையும், அத்தகைய காரணங்களினால் அவள் தனது கணவனைப் பேணுதற்குரிய தகைமைகளை உடையாள் என்பதையும் குறிப்பாக உணர்த்திய செவிலியின் திறமை மிக அருமை.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

**Tutoring**
Grade 1-7: English, Math, Science & Social science
Grade 8- 11: English & Math
அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா
B.A (Hons), M.Sc, Ph.D
(Kennedy & Ellesmere அருகாமையில்)
(647) 291 1357

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops
15 years experience
100% satisfaction guaranteed
For
free estimates and design
Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com
இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை

# BUY,..SELL HOMES , BUSINESS,LANDS..

## PAT Pushpakanthan 416.490 7653 (SOLD

Real Estate BROKER

#1 Agent for 7 Years

EXPERIENCE! COMMITMENT! RESULTS!



அனுபவம்! திறமை! நேர்மை!

CENTURION AWARDS '03 -'08
Top producer 7 years
Masters Hall of Fame Award

**MARKHAM /Denison**




New Retail & Professional Location In Markham
•Strategic Location For Businesses In High Traffic Location * Centre Of Markham's Retail Shopping & Dining * Ideal For Users & Investors * Next To Costco With Markham Road Exposure
•3 units to choose



**Markham/steels**
$251000
New Plaza At A Busy Intersection (Markham & Steeles). Own Your Own Retail And Office Space At An Affordable Price. Corner Unit Exposure To Markham Road. Fast Developing Area. Close To Walmart And Other Retail Stores. Suitable For Office, Retail, Showroom, Etc. Plenty Of Parking. Close To Ttc And Markham Transit.



**Business**
Supermarket south asian ,video rental ete..... more $59 000/- busy location


Warden/hwy 7



nielson/finch
வியாபாரம்
Convinience64 9… more $59 000/- scarborough

**Business**
Excellent Bar fr sale

Brimley/ steeles



Century 21 Affiliate Realty Inc.
BROKERAGE
80 Corporate Dr. Suite 208, Toronto
Off 416-290 1200
visit...WWW.PATPUSH.COM
email: rpushpakanthan@trebnet.com

Kennedy/ 16 th ave



Dream House In Famous School Area, 3200 Sq.Ft. Overlooking Community Park & Pond, 9Ft. G/F Ceiling, Main Floor Library

Markham




Scarborough/kennedy




Just Move In! Clean, Bright And Very Private End Unit, 3 Big Bedrooms Plus 2 Full Baths

MARKHAM/DENISON
வியாபாரம்
Pizza & takeout
busy locn
Start your bus. today

**Scarborough**
3 bdrm condo apt. fr Sale Price :$159 800

**Mccowan Ellesmere**
2/3 bdrm condo apt. frSale Price :frm $179000

Richmond hill



4 Bedroom Home With 9' Ceilings On Main Floor, Walk Out Balcony From 2nd Floor, Potlights

## MORTGAGE ! ! MORTGAGE ! !

PURCHASE YOUR HOME WITH
0% & 5% DOWN PAYMENT ALSO

- 1 ST & 2ND RESIDENTIAL & COMMERCIAL MORTGAGE
- NEW IMMIGRANT PROGRAM
- RENEWALS & REFINANCE UPTO 90%
- CREDIT CARDS & CREDIT CONSOLIDATION
- SECURED LINE OF CREDIT MORTGAGE
- BAD CREDIT, BANKRUPTCY & NO CREDIT NO PROBLEM
- PERSONAL LOANS & VISA/ MASTER CARD

FROM 2.39%

CENTUM
ABSOLUTE MORTGAGE INC.
GUARANTEED lowest rate!!
80 Corporate Dr. Suite 208. TORONTO, ONT. M1H 3G5 416- 894-1187

Excellent Family Business brigton ontario

COTTAGE / CAMPGROUND
**BUSINESS**
With APPX 6 acres with 10 cottages,and 20 trailor homes
1-2-3 Bedroom fully equipped Comfortable Housekeeping Cottages, Cable TV , 3 & 4 Pce. Bathrooms, Decks & Lawn chairs, Propane B.B.Q ... Bedding Provided and fully supplied kitchens, Elect heat, Municipal Water Boating,exclusive water front, Large storag D.grages

119 houses available
**Power of sale**

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 4

# ஆழத்து முத்துக்கள்

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S.* பாலச்சந்திரன்

## கலைப்பரிதி அரியாலை ச. உருத்திரேஸ்வரன்




யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள அழகிய கிராமம் அரியாலை. அது சகல கலைகளுக்கும் குறிப்பாக நாடகக் கலைக்குப் பெயர் போன ஊர். அரியாலையில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது நாடகத் துறையில் சம்பந்தப்பட்டிருப்பர் என்பது பொதுவான கூற்று. அந்த வகையில் அரியாலையைச் சேர்ந்த சதாசிவம் உருத்திரேஸ்வரன் அவர்கள் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை இங்கு பதிவு செய்கிறேன்.

நாடகம் என்ற உறவு எனக்கும் இவருக்கும் இடையேயான பிணைப்பை இறுக்கமாக இணைத்திருந்தது. எனக்கு நாடகம் மீது 'பனி' என்றால் இவர் 'பைத்தியமாக' இருந்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நானும் இவரும் சேர்ந்து, எமது பழம்பெரும் நாடகக் கலைஞர்களின் வீடுகளுக்குச் சென்று 1919ல் இருந்தான அரியாலையின் நாடக வரலாற்றுக் குறிப்புக்களைச் சேர்த்தது இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளன.

உருத்தி என்று பலராலும் அழைக்கப்படும் இக்கலைஞனின் சிந்தையும், செயற்பாடும், தொடர்புகளும் நாடகம் சம்பந்தமாகவே இருந்தன. அவரது உருவம், நிமிர்ந்த நடை, சிகையலங்காரம் எல்லாம் ஒரு நடிகனை எப்போதும் நினைவுபடுத்தும். எமது ஊரில் ஒரே காலகட்டத்தில் பல முன்னணிக் கலைஞர்கள் இருந்ததால் பாத்திரத் தெரிவு என்பது பெரும் சிக்கலாகவே இருந்துவந்தது. ஆயினும், உருத்தி அண்ணன் தனக்குக் கொடுத்த பாத்திரத்தை மறுப்பின்றி ஏற்று, அதைத் திறம்படச் செய்வதில் வல்லவராக இருந்தார். ஒரு வசனத்தை மாற்றிச் சொல்வதற்குக் கூட நெறியாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பண்பாளராக இருந்தார். ஒரு பாத்திரத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் நாடகம் முடியும் நாள்வரை அலங்காரம், ஒப்பனை, உடை என்று அது பற்றிய சிந்தையுடனேயே சைக்கிளில் சுழன்றுகொண்டு இருப்பார்.

தற்போது வாழ்ந்துவரும் எனது ஊர் நாடகக் கலைஞர்களில் குறிப்பாக மூவர் ஊர் எல்லை கடந்து வெளி இடங்களிலும் எமக்குப் பெருமை சேர்த்தனர். ஒருவர் நவீன நாடக உலகம் அறிந்த க.பாலேந்திரா அவர்கள். இன்னொருவர், நடிகமணி வைரமுத்து அவர்களுடன் இணைந்து மயான காண்டம், ஞானசௌந்தரி, நல்லதங்காள் போன்ற இசை நாடகங்களில் நடித்த செல்வம் அவர்கள். மற்றவர், யாழ்.



நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டுவரும் எமது உருத்திரேஸ்வரன் அவர்கள்.

"இதுதான் கதை, இது சீன், நீ இப்படிச் சொல்லு" என்று திடீர் திடீரென நாடகம் போடுகிற ஒருவித அலை அடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் நாடகம் என்பது ஒரு கலை, அதற்குப் பிரதி, பயிற்சி, காட்சி அமைப்பு என்பன அவசியம் என்பதை வலியுறுத்தி நின்றவர் உருத்தி அண்ணன். பின்னாட்களில் நாடக அரங்கக் கல்லூரியில் தன்னை இணைத்துக்கொண்டதும் இதன் ஒரு வெளிப்பாடே.

கமநலசேவைகள் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர் தனது 15வது வயதில் எழுத்தாளர் டொமினிக் ஜீவாவின் 'யார் கதாநாயகி" என்ற பரிசு பெற்ற நாடகத்தில் மரிக்கொழுந்து என்ற தாய் பாத்திரத்தில் நடித்ததன் மூலம் நாடகத் துறையில் கால் பதித்தார். 1968ம் ஆண்டு குண்டகசாலை விவசாயக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் 'பேசாத தெய்வம்' என்ற நாடகத்தின் மூலம் ஆண் பாத்திரங்கள் ஏற்று நடிக்கத் தொடங்கினார்.

உருத்திரேஸ்வரன் அவர்களது ஆரம்பகால நாடக வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைந்தவை அரியாலையில் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் சுதேசிய விழா நாடகங்களும், அரியாலை சனசமூக நிலைய நாடகங்களும் ஆகும். ஆயினும் பின் நாட்களில் யாழ் நாடக அரங்கக் கல்லூரியுடனான அவரது ஈடுபாடு பிற இடங்களுக்கும் அவரது புகழ் பரவக் காரணமாயிற்று.

அரியாலை சுதேசிய திருநாள் விழா நாடகங்களான
நாகவல்லி (வீரமாத்தாண்டன்), மருது பாண்டியர் (கேணல் வேல்ஸ்), ராணி சம்யுக்தா (ஜெயச்சந்திரன்), மாலிக்கபூர் (பாதுஷா), உயிரோவியம் (அலெக்சான்டர்), பாதுகை (தசரதன்), சகுந்தலை (துர்வாச முனிவர்), இராஜராஜசோழன் (இராஜராஜசோழன்), ஓதல்லோ (கேசியோன்) என்பன இவருக்குப் புகழ் சேர்த்த நாடகங்களாகும்.

அரியாலை சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாக்களில் மேடையேறிய ப.ஸ்ரீஸ்கந்தனின் ஆத்மாவின் ராகங்கள் (இன்ஸ்பெக்டர்) அபஸ்வர கீதங்கள் (புரட்சியாளன்) இவரது நடிப்புக்குச் சாட்சியங்களாக அமைந்தன.

1980இல் யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் 'அவள் ஏன் கலங்குகின்றாள்', மௌன குருவின் சங்காரம் - வடமோடி நாடகங்களில் நடித்ததன் மூலம் இவரது நாடகத்துறை சார்ந்த அனுபவங்கள் வேறு பரிமாணத்தைத் தொட்டன.

யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் மகாகவியின் புதியதொரு வீடு (மறைக்காடர்), நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம் (புரொபசர்), மௌனகுருவின் குருஷேத்திரோபதேசம் (கிருஷ்ணன்) பாஞ்சாலி சபதம் (துரியோதனன்), முருகையனின் வெறியாட்டு, ம.குழந்தை சண்முகலிங்கத்தின் தியாகத் திருமணம் போன்ற நாடகங்களிலும் நடித்திருந்தார்.

இவை தவிர, நாவலர் நூற்றாண்டை முன்னிட்டு மேடையேற்றப்பட்ட நல்லைநகர் நாவலர் (சேர் கேம்ஸ் போஸ்டன்), அகில இலங்கை சேக்கிழார் மன்றம் தயாரித்த சொக்கனின் தெய்வப்பாவை (நெடுமாறன்) போன்ற சமய நாடகங்களிலும் பங்கேற்றிருந்தார்.

இவர் நடிப்பதோடு மட்டும் நில்லாது பல நாடகங்களை இயக்கியும் உள்ளார். இவற்றில் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலாமன்றத்திற்காக குழந்தை சண்முகலிங்கத்தின் 'புழுவாகி மரமாகி', 'தியாகத் திருமணம்' மற்றும் சென்.பொஸ்கோ பாடசாலை மாணவர்களுக்காக 'வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.

நாடகமும் அரங்கியலும் பாடத்தை உள்ளடக்கிய கலைமாணிப் பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்ற இவர் அண்மைக் காலங்களில் நாடகங்கள் சம்பந்தப்பட்ட கருத்தமர்வுகளில் வள ஆளுநராக கலந்து கொண்டு வருகிறார்.

2008ம் ஆண்டு ச.உருத்திரேஸ்வரன் அவர்கள் யாழ் அரச அதிபரால் கலைப்பரிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

sriskanthan.p@thaiveedu.com

■ ■ ■

## மெல்லிசைப் பாடகர் எஸ்.கே.பரராஜசிங்கம்




எங்கள் திணைக்களத்தில் நடந்த கலைமகள் விழாவில் கர்நாடக கச்சேரி செய்வதற்காக இரண்டு சகோதரர்கள் வந்தார்கள். மூத்தவர் டாக்டர் எஸ்.கே.மகேஸ்வரன், இளையவர் எஸ்.கே.பரராஜசிங்கம் என்று அறிவிப்பு செய்தார்கள். இனிமையாகப் பாடியதோடு, எங்களோடெல்லாம் மிகுந்த அன்பாக நடந்து கொண்டார்கள்.

எஸ். கே. பரராஜசிங்கம் யாழ்ப்பாணத்தில் கட்டுவன் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இலங்கை வானொலியின் மூத்த அறிவிப்பாளர்களில் ஒருவரும், மெல்லிசை, கர்நாடக இசைப் பாடகருமாவார். இலங்கை மெல்லிசை பிதா என்றறியப்படுபவர். சர்வதேச "உண்டா" விருதினைத் தம் வானொலிப் பணிக்காகப் பெற்றுக் கொண்டவர். தனது சகோதரரான வைத்தியகலாநிதி எஸ். கே. மகேஸ்வரன் உடன் இணைந்து கர்நாடக கச்சேரிகள் செய்திருக்கிறார். வானொலியில் "விவேகச் சக்கரம்" என்ற பொது அறிவு நிகழ்ச்சியை நடத்தியவர்.

இவரைப்பற்றி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ் பணிப்பாளர்



வி.ஏ.திருஞானசுந்தரம் இவ்வாறு கூறியிருக்கிறார்


"அக்காலக் கல்வி ஒலிபரப்பில் இடம்பெற்று வந்த வெண்பா வாசிப்புப் போட்டிகளில் பெரும்பாலும் பெண்களே பரிசுகளைத் தட்டிக்கொள்ளும் பாக்கியம் பெற்றிருந்தனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் அந்த மரபை மாற்றியமைக்கக் காரணம், "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்" என்ற வெண்பாவை பொருள் தெளிவுற இனிய குரலில் அமைவாக அதிக ஆலாபனையின்றிப் பாடியதே. பாடிய அம்மாணவர் பராவே தான்,".

இளமையிலேயே இசையில் தேர்ச்சிபெற்றதுடன், விஞ்ஞானப் பட்டதாரியாகி ஹற்றனில் உள்ள கல்லூரி ஒன்றில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியை மேற்கொண்டிருந்த போது, 1961ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரராஜசிங்கம் வானொலியில் இணைந்தார். வர்த்தக சேவையில் தன் பணியை ஆரம்பித்த போது வெறும் சினிமாப்பாடல்களையே ஒலிபரப்பும் ஒரு சேவை தானே என்று இளக்காரமாக இருந்த போது "திரை தந்த இசை", ஒலி மஞ்சரி ஆகிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்.

எங்களுக்கு மிகவும் பிடித்த மெல்லிசைப் பாடல்களான "சந்தன மேடை என் இதயத்திலே", "அழகான ஒரு சோடி கண்கள்" போன்றவற்றை பாடியவர் என்பதோடு, எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்களுடைய இனிய சுபாவம், அவரை எனது ஆதர்சத்துக்கு உரியவராக்கியது.

"சந்தன மேடை எம் இதயத்திலே" பாடலுக்கு இசையமைத்ததோடு பராவுடன் இணைந்து பாடியவர் - பிரான்ஸ், பாரிஸ் நகரில் வாழ்ந்து, மறைந்த எம். ஏ.குலசீலநாதன். பாடலை இயற்றியவர்- பராவின் நெருங்கிய உறவினரும், தற்போது யாழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவுள்ள பேராசிரியர் என். சண்முகலிங்கன்.

97ம் பக்கம் பார்க்க...


THINKING OF BUYING / SELLING
Mccowan/N. Denison
$449,900
3 Bed Room, 3 Wash Room
Mccowan/Lawrence
$369,000
4+2 Bed Room, 3 Wash Room
Derry / 10th Line
$359,000
3 Bed Room, 4 Wash Room
Warden/Finch
$247,900
3+2 Bed Room, 3 Wash Room
Kennedy/Sheppard
$195,900
2 Bed Room, 2 Wash Room
Neilson/Mclevin
$159,800
2 Bed Room, 2 Wash Room
Jane/Sheppard
$139,900
3 Bed Room, 2 Wash Room
Sheppard/East Of Brimley
$89,000
Sale Of Business
Eglinton/Bathurst
$34,300
Sale Of Business
IS THIS WHAT YOU'R LOOKING FOR?
FOR SALE
Total Selling Commission As low as
3%*
Some condition may apply
SOLD
* Complimentary Evaluation of Your Home
* Written cancellation guarantee
* Professional Home Staging
* Guarantee advertising
* Public Open House
"LET ME SHOW YOU HOW MY STRATEGIC MARKETING PLAN GETS RESULTS"
Negotiating the Right Price for your home can be tricky Call Raja for professional advice.
Design : Apex 416 297 0707
HomeLife/Future Realty Inc.,
Brokerage*
205-7 Eastvale Drive, Markham Road, Ontario L3S 4N8
Bus.: 905.201.9977 | Fax : 905.201.9229
*Independently Owned and Operated, REALTOR
Raja V.S. Rajagopal
Sales Representative
Dir : 416.727.8647
Email : sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com
சகலவிதமான வீட்டுக்கடன் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும்
1st & 2nd Mortgages
Re-Financing / Debth Consolidation
Self Employed, New Immigrant, Pre Approval
Mortgages
Access to 16 Lenders

**வீடு, காணி** (Residential Properties and Land)

**வர்த்தகவியல்** (Commercial, Corporate and Business)

**சகல வங்கிகளுடைய பலவிதமான ஈடு** (Mortgages) **மற்றும்**

**சமரசத் தீர்வுகள்** (Dispute Resolution)

**சம்பந்தப்பட்ட துல்லியமான சட்ட தேவைகளுக்கு**
**நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சட்ட நிலையம்.**

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி

**மூன்று சகாப்தத்திற்கு மேலான சட்ட அனுபவம்**
**கனடாவில் 16 வருடங்கள் ஆழ்ந்த அனுபவம் நிறைந்த சேவை.**

The Law Offices of:

# Yaso Sinnadurai

Barrister and Solicitor, Notary Public

**OVER 16 YEARS OF CANADIAN EXPERIENCE**
in the areas of Residential and Commercial Real Estate Law
and Business and Corporate Law.

- **Real Estate Law Residential and Commercial**
  - Purchase and Sale of Properties
  - Title Transfers
  - Mortgages, Refinancing and Mortgage Enforcements Issues
- **Business and Corporate Law**
  - Purchase, Sale, Transfer of Business Assets/Shares
  - Lease Review and Representation
  - Incorporation, Partnership and Shareholders Agreements
- **Alternative Dispute Resolution (ADR)**
  - Conflict resolution by ADR on all civil matters

Please call for appointments:

**416.265.3456**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough

**POSITIONS AVAILABLE:**
**For Junior Secretary, Senior Legal Secretary and/or Law Clerk positions, experienced in Real Estate Law.** Interested applicants are invited to mail or fax your resume with handwritten cover letter to 416.265.-2770. (We thank all applicants and shall contact

**OUR MISSISSAUGA CONSULTATION OFFICE IS NOW RELOCATED TO**
**3024 HURONTARIO ST., SUITE 216**
**Consultation always by appointment; call 416-265-3456. If late for appt. pl. call 905-306-1100**

எமது மிசிசாகா அலுவலகம் முன்பு இருந்த நிலையத்திற்கு
அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு
மாற்றப்பட்டு உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

# ஆழத்து முத்துக்கள்...

94ம் பக்கத் தொடர்ச்சி...

அக்காலத்தில் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்றங்களில் அனேகமாக பராவின் குரல் பின்னணியில் ஒலிக்கும். எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்கள் இந்திய திரை இசைப்பாடல்களின் ஆரம்பகாலத்தைப்பற்றி நிறையச் சொல்லுவார். தியாகராஜ பாகவதர் நடித்த முதல் படமான "பவளக்கொடி"(1934)யில் 50க்கு மேற்பட்ட பாடல்கள் இடம்பெற்றதிலிருந்து தொடங்கி, அப்பாடல்கள் அமைந்த கர்நாடக ராகங்களை சொல்லி, பாடிக்காட்டுவார். தியாகராஜ பாகவதர், ஹொன்னப்ப பாகவதர், தண்டபாணி தேசிகர், பாபநாசம் சிவன் போன்றோரை எல்லாம் எனக்கு பரிச்சியமாக்கினார். கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று ஈடுபாடு கொண்டவராக இருந்த போதிலும், இசையில் பரீட்சார்த்தம் செய்யப்படுவதை அவர் விரும்பினார். பிரபல கர்நாடக இசைப் பாடகர் மகாராஜபுரம் சந்தானம் அவர்களும், மெல்லிசை மன்னர் எம்.எஸ் விஸ்வநாதன் அவர்களும் இணைந்து வழங்கிய இசைவடிவத்தைப்பற்றி மிகவும் சிலாகித்துக் கூறி, அதன் நுணுக்கங்களை எனக்கு உணர்த்தியிருக்கிறார்.

பரராஜசிங்கம் அவர்களை எங்கள் நாட்டு மெல்லிசையின் பிதாமகன் என்று அழைப்பார்கள். காவலூர் ராசதுரை அவர்களின் தயாரிப்பில் ஒரு வர்த்தகசேவை நிகழ்ச்சியொன்றில்தான் மெல்லிசைப்பாடல்கள் ஆரம்பத்தில் ஒலிபரப்பாகி வந்தன. ஆனால் இவை வானொலியில் ஒலித்து, காற்றோடு கலந்து போயின. வானொலியை விட்டால் இதன் ஒலிப்பதிவுகள் யாரிடமும் இருக்கவில்லை. காலப்போக்கில், மாறிவரும் சூழ்நிலையில் வானொலி நிலையத்தில் இருந்துகூட அவை காணாமல் போய்விடலாம் என்றும் எனக்கு தெரிந்திருந்தது. சில்லையூரர் எழுதிய "தணியாத தாகம்" ஒலிப்பதிவு நாடாக்கள் தொலைந்து போகவில்லையா?

இந்த நேரத்தில் வெளிநாடுகளில் இருந்து, தெரிந்தவர்கள் "இந்த பாடல் பதிவு பெற்றுத்தரமுடியுமா." "அந்தப் பாடல் வேண்டும்" என்று தாங்கள் விரும்புகின்ற பாடல் பட்டியல்களை அனுப்பத் தொடங்கினார்கள். அப்படி பாடல்களை வானொலி நிலையத்தில் இருந்து அனுமதி பெற்றோ, பெறாமலோ வெளியே எடுப்பது சாத்தியமாக இருக்கவில்லை. எனவே "உங்கள் மெல்லிசைப்பாடல்களை ஒரு தொகுப்பாக வெளியிட்டால் என்ன" என்று பரராஜசிங்கம் அவர்களை நச்சரிக்கத் தொடங்கினேன்.

இதன் நடைமுறைச்சிக்கலை நினைத்தோ என்னவோ அவர் நீண்ட நாட்களாக ஒத்திப் போட்டு வந்து, கடைசியில் சம்மதித்தார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கு அதற்கான தொகை செலுத்தி பாடல்களைப் பெற்றுக் கொண்டோம். சில பாடல்களில் பின்னணியில் ஒலிக்கும் இரைச்சலை நீக்க முயன்றால் பாடல் வரிகளே சேதப்பட்டுவிடும் என்பதினால் அவற்றை அப்படியே விட்டோம். சற்று இசை சேர்த்து மெருகு படுத்தினால் பழமைச்சிறப்பு இல்லாமற் போய்விடும் என்பதினால் அந்த யோசனையும் கை விடப்பட்டது.

இடையில் எனக்கு வந்த சோதனைகளையும் தாண்டி, நண்பர் அப்துல் ஹமீட்டின் துணையுடன் நான் கோலாகமாக, கொள்ளுப்பிட்டி சசகாவா மண்டபத்தில் "ஒலி ஓவியம்" ஒலிநாடாவை வெளியிட்டு வைத்தேன். அணை கட்டிய அணிலின் கதைதான்.

கனடாவில் அருவி வெளியீட்டகம் இந்த மெல்லிசைப்பாடல்களை அவருடைய அனுமதியுடன் இறுவட்டாக "குளிரும் நிலவு" என்ற பெயரில் வெளியிட்டார்கள். தனது பாடல்கள் இறுவட்டாக வெளிவரும்போது எஸ்.கே. பரராஜசிங்கம் காலமாகி விட்டார்.

இன்று உலகளாவிய ரீதியில் அவரது பாடல்களை ஏராளமானோர் கேட்பதற்கு நானும் ஒரு வகையில் காரணமானதையிட்டு பெருத்த மகிழ்ச்சியடைகிறேன்.

சந்தன மேடை எம் இதயத்திலே...
உன்
சதங்கையின் நாதம் தான் கேட்குதடி
மந்திரமில்லாத மயக்கமடி...
மாமயில் நீ எம் தேவியடி...

ksbala@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■


**SP Electronics**

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

**உங்களுக்குத்தேவையான**

**அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும்,**

**திருத்த வேலைகளுக்கும்**

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**

**( Brimley & Eglinton)**

வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

Home Life
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE
HIGHER STANDARDS

Baskaran Sinnadurai
Commercial & Residential Sales Representative
416-880-8585





FOR BANQUET HALL
OR
TEMPLE
30000 SQUARE FEET
IN PRIME LOCATION
SCARBOROUGH
4ACRE LAND
AND PLENTY OF PARKING

ASKING
3MILLION

# நிதித் திட்டமிடலும் ஆயுட் காப்புறுதியும்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட் காப்புறுதியானது ஒருவரின் எதிர்பாராத உயிர் இழப்பால் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடு செய்வதற்கான ஒரு நிதித்திட்டம் என்பதிலும் பார்க்க ஒவ்வொருவரின் நிதித் திட்டமிடலுக்கும் அத்திவாரமாக ஆயுட்காப்புறுதி அமைகின்றது. ஆயுட் காப்புறுதித்திட்டங்களை சரியான நேரத்தில், தரமான திட்டங்களை தெரிவு செய்வதன் மூலம், மிகச் சிறந்த ஒரு நிதித்திட்டமிடல் சாதனமாகப் பாவிக்க முடியும்.

### ஒவ்வொருவரின் நிதித் திட்டமிடலுக்கும் அத்திவாரமாக ஆயுட்காப்புறுதி அமைகின்றது

ஒவ்வொரு மனிதனும் எல்லா விடயங்களையும் ஒவ்வொருவருக்கும் தேவையான அளவிற்கு அறிந்திருந்தாலும், நாமே எங்களிடம் சில கேள்விகளை கேட்டுப் பார்ப்பதன் மூலம் மேலும் பல விடயங்களை தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல் பல விடயங்கள் பற்றி சிந்திப்பதற்கும் தூண்டப்படுகின்றோம்.

எல்லோருடைய வாழ்விலும் நிதித்திட்டமிடல் என்பது எவ்வளவு அவசியமென்பதை அறிந்து கொள்வதற்கான சில கேள்விகள்.

- உங்கள் பணம் சம்பாதிக்கும் காலம் அல்லது வேலை செய்யும் காலத்தை எவ்வாறு பயனுள்ளதாக உபயோகிக்கப் போகின்றீர்கள்?
- உங்கள் வேலை செய்யும் காலம் முடிவடைந்து ஓய்வு பெறும் காலத்தை எப்படி அனுபவிக்கப் போகின்றீர்கள்.
- உங்கள் குடும்பத்துக்காக நிதி ரீதியாக எவ்வளவை விட்டுவிட்டு போகப் போகிறீர்கள்.

இப்படியான சில கேள்விகளுக்கு உடடினயாக பதில் சொல்ல முடியாது.

இவற்றில் மிக முக்கியமானது உங்கள் குடும்பத்துக்கான நிதித்திட்டமிடலை நீண்ட காலத்துக்கான திட்டங்கள் பல இருப்பினும் எதிர்பாராத விதமாக நாங்கள் இறந்து போனால் எங்கள் குடும்பத்தின் நிதி நிலைமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இப்போதே நாங்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொருவரின் நிதித்திட்டமிடலும் எதிர்காலத்திற்கான திட்டங்களும் பல்வேறுபட்டு இருப்பினும் மிகவும் இலகுவான நிதித்திட்டமிடல் ஆயுட்காப்புறுதியாகும். அதற்கான சில காரணங்கள்.

- கனடாவைப் பொறுத்தவரையில் ஆயுட் காப்புறுதியும், ஓய்வூதிய சேமிப்புத் திட்டமும் (RRSP) வருமான வரியில் இருந்து இலாபமடையகூடிய (Tax Sheltered). திட்டங்கள் ஓய்வூதிய சேமிப்புத்திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் வருமான வரி செலுத்தப்பட்டாலும் மரணத்தின் போது மிகுதியாக இருக்கும் பணத்திற்கு வரி கட்ட வேண்டி இருக்கும். ஆனால், ஆயுட் காப்புறுதிக்கு ஒருபோதும் வரிகட்ட வேண்டியதில்லை.

> “ஒரு மில்லியன் டொலருக்கான நிரந்தர ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்டால் அவரின் குடும்பத்துக்கு ஒரு மில்லியன் டொலர் கிடைப்பது உறுதியாகின்றது. அதற்கான மாதக் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது. ஒருபோதும் ஒரு மில்லியன் டொலர் செலுத்த வேண்டியதில்லை.”

நாங்கள் ஒவ்வொருவரும் பல வழிகளில் பணத்தை சம்பாதிக்க முடியும்.

உதாரணமாக ஒருவர் பங்குச்சந்தையில் (Stock Market) முதலீடு செய்வதானால் அதற்கான அதிகதொகை பணம் உடனடியாகத் தேவைப்படும். ஆனால், ஆயுட்காப்புறுதிக்கு ஒரு மாதக்கட்டுப்பணம் மட்டுமே. அதேவேளை உங்கள் பங்குச்சந்தை முதலீட்டின் தொகையோ பன்மடங்கு. அத்துடன் உங்கள் கட்டுப்பணத்துக்கும் உங்கள் குடும்பத்திற்கு கிடைக்கப்போகும் பணத்திற்கும் உத்தரவாதமும் வழங்கப்படுகின்றது.

- ஒருவர் ஒரு மில்லியன் டொலருக்கான நிரந்தர ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்டால் அவரின் குடும்பத்துக்கு ஒரு மில்லியன் டொலர் கிடைப்பது உறுதியாகின்றது. அதற்கான மாதக் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது. ஒருபோதும் ஒரு மில்லியன் டொலர் செலுத்த வேண்டியதில்லை. மிகவும் குறைவாகவே இருக்கும். அத்துடன் தற்போதுள்ள திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடிக்கும் உத்தரவாதத்துடன் இருப்பதால் நாங்கள் எவ்வளவு பணம் செலவு செய்யப்போகின்றோம் என்பதை இப்போதே தீர்மானிக்க முடியும். உதாரணமாக 30 வயதுள்ள ஆண் ஒருவர் ஒரு மில்லியன் டொலருக்கான காப்புறுதியை 20 வருடத்தில் கட்டி முடிப்பதற்கான மாதாந்தக் கட்டணம் எவ்வளவு என்பதையும் அதற்காக செலவு செய்யப்போகும் பணத்திற்கும் உத்தரவாதம் வழங்கப்படுகின்றது. .

- ஒருவர் இளமையில் இறக்க நேரிட்டால் ஆயுட்காப்புறுதி மூலம் மட்டுமே அந்தக் குடும்பத்தில் நிதித்தேவையை இலகுவாகத் தீர்க்க முடியும்.

உதாரணமாக பார்த்தால் மாதம் 3,000 டொலர் செலவில் வாழ்க்கை நடத்தும் ஒரு குடும்பத்திற்கு வருடம் 36,000 (3000x12) டொலர்கள் தேவைப்படும். மாதாந்தம் 3,000 டொலர்கள் வருமானம் பெறுபவர் மரணமடைந்தால் எப்படி இந்தக் குடும்பத்திற்கு மாதாந்தப் 3,000 டொலர்கள் கிடைக்கச் செய்ய முடியும்.

ஆயுட்காப்புறுதி மூலம் 600,000 டொலர்கள் கிடைத்து அதை முதலிட்டால் அதிலிருந்து மாதாந்தம் குறைந்தது 3,000 டொலர்கள் பெற முடியும். அதேவேளையில் 600,000 டொலர்களுக்கு மாதாந்த காப்புறுதிக் கட்டுப்பணம் உங்கள் வயதைப் பொறுத்து மாறுபடும்.

கடந்தகாலங்களில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களின்படி பெரும்பான்மையானவர்கள் தங்கள் வாழ்நாளில் 5 தொடக்கம் 7 தடவைகள் தங்கள் ஆயுட் காப்புறுதித் திட்டங்களை மாற்றம் செய்துள்ளார்கள். அதற்கான காரணங்கள் பல இருப்பினும் முக்கியமான காரணங்களில் ஒன்று சரியான நேரத்தில் தரமான காப்புறுதித் திட்டத்தை பெற்றுக் கொள்ளத் தவறுவதும் காப்புறுதி முகவர்கள் பலரும் மக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை கூறுவதும் ஆகும்.

ஒரு தரமான நிதித்திட்டமிடலும் ஆயுட்காப்புறுதி பற்றிய சரியான தகவல்களும் தெரிந்து கொண்டால் அடிக்கடி ஆயுட்காப்புறுதித் திட்டங்களை மாற்றம் செய்வதை தவிர்க்க முடியும்.

ஒவ்வொரு தடவையும் நாம் ஆயுட்காப்புறுதித் திட்டங்களை ஒரு நிறுவனத்தில் இருந்து இன்னொரு நிறுவனத்திற்கு மாற்றும் போது கட்டிய பணம் அவ்வளவும் விரயமாகின்றது.

காப்புறுதி பெற்றுக்கொள்ளும் போது உங்கள் நிதி நிலைமைக்கு ஏற்றவாறும், உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதுமான திட்டங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மிகவும் கட்டணம் குறைந்த திட்டங்கள் சிறந்த திட்டங்களாக இருக்க முடியாது. அதேவேளை அதிக விலை கூடிய திட்டங்களும் சிறந்தவை அல்ல.

தவணைக் காப்புறுதித் திட்டங்கள் மிகவும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், அவை அந்தக் குறிப்பிட்ட கால எல்லைக்கு மட்டுமே சிறந்தது. அதன் பின்பு வெறும் பணவிரயமாகிப்போகும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
- RRSP • RESP

RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
Canada Life

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

# 85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் ஆயுட்காப்புறுதி

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்

| | Age 30 Male | Age 30 Female | Age 40 Male | Age 40 Female | Age 50 Male | Age 50 Female |
|---|---|---|---|---|---|---|
| Term 10 (R & C) $100,000 | $11.25 | $9.00 | $13.77 | $12.33 | $24.48 | $19.77 |
| Whole Life $100,000 | $38.17 | $33.63 | $57.16 | $47.36 | $106.64 | $81.75 |

**Critical Illness Insurance**
25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்

•

**Universal Life Insurance**
ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

**Term Insurance**
குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

•

**RESP**
குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்

- digi Media -

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life | RBC Financial Group | LILAND INSURANCE INC.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ❤ Referrals
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**உதயன் அலெக்ஸ் சிவசம்பு**

கனடா ஒட்டாவாவில் வீடு விற்பனைப் பிரதிநிதியாகக் கடமையாற்றும் இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi